வெளியீடு 21-1-2008

Issued 21-1-2008

தமிழ்நாடு ... 0.6 ... 2008
சென்னை-600 008
எழும்பூர்

1278
26.08.2008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, அக்டோபர் 18, 2007—தொகுதி 37—எண் 2**

**Thursday the 18th October, 2007—Volume 37—No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat, Chennai-600 009**

D
V211,31'P07
F01.37.2
228091.

[Price Rs. [illegible]

**53-293**

**18–10–2007**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 21-63 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1, 2, 3 மற்றும் 4) | 64-331 |
| **2. உரிமைப் பிரச்சினை—** | |
| எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெ ஜெயலலிதா, மக்கள் குரல், நமது எம்.ஜி.ஆர். நாளிதழ்கள் மற்றும் ஜெயா டி.வி. மீது | 331-336 |
| *மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 332-334 |
| **3. அரசினர் தீர்மானம்—** | |
| அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவைப் பணிகளினின்றும் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு நீக்கிவைத்தல் | 336-340 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 336-337 |
| திரு. டி. சுதர்சனம் | 338 |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 339-340 |
| **4. தகவல் கோரல்—** | |
| (அ) அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவையிலிருந்து வெளியேற்றும்போது பேரவைக் காவலரின் தொப்பியைப் பேரவைத் தலைவரை நோக்கி வீசிய உறுப்பினர்மீது நடவடிக்கை | 340-342,352 |
| *மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி | 340 |
| மாண்புமிகு திரு. துரைமுருகன் | 341-342 |

| | பக்கங்கள் |
|---|---|
| **4. தகவல் கோரல்**—தொடர்ச்சி | |
| (ஆ) புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் | 348-359 |
| திரு. சி. ஞானசேகரன் | 349-350, 358 |
| திரு. தி. வேல்முருகன் | 351-352 |
| மாண்புமிகு திரு. எ.வ. வேலு | 352-359 |
| (இ) நெல்லிக்குப்பம் தொகுதி, அக்கடவள்ளியிலுள்ள சண்முகாநந்தா அரசு உதவி பெறும் துவக்கப் பள்ளியை அரசே ஏற்று நடத்துதல் | 359-361, 365-366 |
| திரு. சபா. இராஜேந்திரன் | 360,365-366 |
| *மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு | 360-361,366 |
| (ஈ) கடலூர் அருகே தனியார் மின் உற்பத்தி நிலையத்திற்கு நிலங்களை வழங்குதல் குறித்த அரசாணை | 361-365, 366-370 |
| திரு. தி. வேல்முருகன் | 361-364, 367-368 |
| திரு. து. ரவிக்குமார் | 369 |
| மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 364-365, 368-370 |
| (உ) வேலூரிலே மின் தடையைப் போக்குதல் | 370-371 |
| திரு. சி. ஞானசேகரன் | 370-371 |
| மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 371 |
| **5. எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு—முதலமைச்சரின் விளக்கம்** | 342-348 |
| **6. அறிக்கைகள் அளித்தல்—** | |
| பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 372 |
| **7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 372-373 |
| (ஆ) தமிழ்நாடு கல்வி நிறுவனங்களில் (கட்டாய நன்கொடை வசூலித்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2007 | 373-374 |
| (இ) தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 374 |
| (ஈ) தமிழ்நாடு நகர்-ஊர் அமைப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 375 |
| **8. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2007–2008, அளித்தல்—** | 375-381 |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 376-377 |
| **9. அறிவிப்பு—** | |
| முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2007-2008—மானியக் கோரிக்கைகளின்மீது வெட்டுத் தீர்மானங்கள் அளித்தல் | 381 |
| **10. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)—** | |
| தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 2007 | 382-389 |
| *மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 382,386-387, 388 |
| திரு. அ. தமிழரசு | 382-383 |
| *திரு. கே. மகேந்திரன் | 383-384 |
| *திரு. மா. ராஜசேகரன் | 384-385 |
| திரு. தி. இராமசாமி | 385-386 |
| **11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 389-390 |

D
V211,31 P07
P07 . 37.2
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228091
சென்னை-600 008
நூலகம்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஐப்பசி 1, சர்வஜித் - திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 அக்டோபர் 18, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு".

உழைப்போர் உள்ளம் வாடாமல் இருக்கும்வரையில் உலகின் செழிப்பும் வாடாமல் இருக்கும். எனவே, உழைப்போர் நிலையை ஒவ்வொரு நாளும் அரசினர் ஆய்ந்தறிந்து ஆவன செய்யவேண்டும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

1—

**புதிய கட்டடம்**

***11229—திரு. இரா. மாணிக்கம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளித்தலை காவல் நிலையத்திற்கு நவீன புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

[2007 அக்டோபர் 18

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குளித்தலை காவல் நிலையம் அரசுக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் புதிய கட்டடம் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

**திரு. இரா. மாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய நவீனக் கட்டடம் கட்டித்தர ஆணையிட்டிருக்கின்ற நமது முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்திலே ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகின்றேன். குளித்தலையில் காவல் நிலையம், வட்டாட்சியர் அலுவலகம், சார்பு நீதிமன்றம், கிளை சிறைச்சாலை, பொதுப் பணித் துறை அலுவலகம், சார்நிலைக் கருவூலம், கோட்டாட்சியர் அலுவலகம், வருவாய்த் துறை சுற்றுலா மாளிகை ஆகிய கட்டடங்கள் ஒரே வளாகத்திலே அமைந்துள்ளன. மேலும், புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு நம்முடைய முதல்வர் கலைஞர் அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்தப் புதிய கட்டடம் தற்பொழுதுள்ள வட்டாட்சியர் அலுவலகத்திற்கும், காவல் நிலையத்திற்கும் இடையேயுள்ள காலியிடத்தில் அமையவுள்ளது. இப்படி ஒரே வளாகத்தில் மிகுந்த நெருக்கடியான நிலையில் பல்வேறு அரசு அலுவலகங்கள் உள்ளதால், துறை அதிகாரிகளும், பொதுமக்களும் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர். அன்றாட அலுவலகப் பணிகள் தடைபடுகின்றன.

ஆகவே, மிகுந்த இடநெருக்கடியான நிலையிலுள்ள அந்தக் குளித்தலை காவல் நிலையத்தை, வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு அருகிலுள்ள காலியிடத்திற்கு மாற்றி புதிய நவீனக் கட்டடமாகக் கட்டித்தர வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இது[illegible] ஒரே வளாகத்திலே அமைவதால் [illegible] உண்டு. ஒரே [illegible]கத்திலே இத்தகைய அலுவலகங்கள்

சென்னை-600 008
நூலகம்



2007 அக்டோபர் 18]

இருக்கும்பொழுது ஒரு அலுவலகத்திலிருந்து இன்னோர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்வதற்கு எளிதாக இருக்கும். அப்படித் தொடர்புகொள்ள முடியாத நிலை ஏற்படுமேயானால், அதுபற்றி அரசு சிந்திக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைச் சுற்றி புதிதாகக் காவல் நிலையங்கள் தோன்றிக்கொண்டிருக்கின்றன. அந்தக் காவல் நிலையங்களுக்கெல்லாம் காவல் நிலைய அலுவலகம், குறிப்பாகப் பூவிருந்தவல்லி, அம்பத்தூர் D.C. office, அம்பத்தூர் A.C. office, ஆவடி A.C. office போன்றவற்றுக்கெல்லாம் புதிய கட்டடமே கட்டப்படவில்லை. அவற்றை வெகு விரைவிலே கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இந்தக் கேள்வியின் அடிப்படையில், அதுபற்றிப் பரிசீலித்து, ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே என்னுடைய மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட திருமக்கோட்டையிலே புதிய காவல் நிலையம் தொடங்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட தலையாமங்கலம் காவல் நிலையம் தொடர்ந்து செயல்படுகிறது. இப்படித் தமிழகத்திலே பல்வேறு காவல் நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலேயே இயங்கி வருகின்றன. அப்படி வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வருகின்ற காவல் நிலையங்களையெல்லாம் அரசுக் கட்டடங்களாக மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிற திட்டம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலையினுடைய வளத்திற்கேற்றவாறு இவை பரிசீலிக்கப்படும்; படிப்படியாக நிறைவேற்றப்படும்.

[2007 அக்டோபர் 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் பகுதியில் ஏழு காவல் நிலையங்கள் தற்பொழுது செயல்பட்டு வருகின்றன. அவற்றில், மூன்று காவல் நிலையங்கள் வாடகைக் கட்டடங்களில் இருக்கின்றன. அவற்றுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும். முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 9–35*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இப்பொழுதே ஏழில் நான்கு அரசுக் கட்டடத்தில் இருக்கிற காரணத்தால், பெரும்பான்மைக்கு மதிப்பளித்து, சிறுபான்மை பற்றிப் பிறகு கவனிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் நிலையங்களுக்கு வரக்கூடிய பொதுமக்களுக்கும் காவலர்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்த வேண்டும். காவலர்கள் பொதுமக்களுடைய நண்பன் என்றெல்லாம் நாம் கருத்துகளைச் சொல்லிக்கொண்டிருக்கிற நேரத்தில், இந்தக் காவல் நிலையங்களிலே ஒரு வரவேற்பு அறையைக் கட்டிக் கொடுத்து புகார் அளிக்க வரக்கூடியவர்களையெல்லாம் அமர வைக்க வேண்டும். அவர்களைச் சரியாக விசாரித்து நடவடிக்கை எடுப்பதற்காக ஒவ்வொரு காவல் நிலையத்திலும் வரவேற்பு அறையைக் கட்ட வேண்டும். அதேபோல, காவலர்கள் காலையில் வந்தால் சில நேரங்களில் 24 மணி நேரமும் பணியாற்றிக் கொண்டிருக்கிற நிலையில், அவர்களுக்குச் சரியான கழிப்பிட வசதிகூட இல்லாத கட்டடங்கள் பல இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, ஒவ்வொரு காவல் நிலையத்திலும் வரவேற்பு அறை, அதேபோல காவலர்களுக்கு குளியல் அறை வசதி போன்றவற்றையெல்லாம் செய்து தருவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா?



2007 அக்டோபர் 18]

எங்களுடைய மாவட்டத்தில் மாவட்டத் தலைநகரமாக விளங்கக்கூடிய பகுதியில் சத்துவாச்சாரி காவல் நிலையம் இன்னும் வாடகைக் கட்டடத்தில் இருந்துகொண்டிருக்கிறது. அதேபோல, ஜவ்வாது மலையிலே, காவலூரில் காவல் நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. அவற்றிற்கெல்லாம் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிடுவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துவாச்சாரியை நம்முடைய ஞானசேகரன் அவர்கள் மறக்கின்ற நாளே கிடையாது. இன்றைக்கு சத்துவாச்சாரியை அவருடைய கேள்வியிலே இணைத்து என்னிடத்திலே ஒரு தகவலைக் கூறியிருக்கிறார். ஒன்று சொன்னார், காவல் நிலையங்களில் வரவேற்பறைகள் சரியாக இல்லை, அவற்றையெல்லாம் செம்மைப்படுத்த வேண்டுமென்று சொன்னார். காவல் நிலையங்களுக்கு வருகிறவர்கள் ஒரு வகை; அழைத்துவரப்படுகிறவர்கள் ஒரு வகை. ஆகவே, வருகிறவர்களுக்கும், அழைத்துவரப்படுகிறவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை இப்போது போக்க முடியாது. அதுபற்றி யோசிக்கப்படும். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூரிலே இருக்கிற காவல் நிலையம் ஓட்டுக் கொட்டகையிலே இயங்கி வருகிறது. அதை இந்த ஆண்டு மாற்றி, புதிய காவல் நிலையமாகக் கட்டித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தினுடைய விவாதத்தின்போது மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் அவர்களுடைய தொகுதி காவல் நிலையத்தைப் பற்றி எடுத்துச் சொல்லி, அவற்றைப் பற்றியெல்லாம் பரிசீலிக்கப்படும் என்று வாக்குறுதி வழங்கப்பட்டிருக்கிறது. அந்த

அடிப்படையில் அவையெல்லாம் கவனிக்கப்படும். அந்தப் பட்டியலிலே உள்ள காவல் நிலையங்கள் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருகிவரும் மக்கள்தொகைக்கேற்ப புதிதாகக் காவல் நிலையங்கள் அமைக்கப்பெற்றாலும்கூட, பழங்காலத்தில் அமைக்கப்பட்ட சில காவல் நிலையங்கள் பெரிய பரப்பு எல்லைகள் கொண்ட, பெரிய மக்கள்தொகை கொண்ட இடத்தில் இருக்கின்ற ஒரு சூழ்நிலையில், ஆய்வாளர்கள் தங்கள் பணிகளைச் செய்வதற்கு மிகவும் சிரமமாக இருக்கின்ற நிலையில், அப்படிப்பட்ட காவல் நிலையங்களைக் கண்டறிந்து அவற்றைப் பிரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானி காவல் நிலையம் பழுதடைந்து இடிந்து, இப்போது அந்தக் காவல் நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அந்தக் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** ஏற்கெனவே இதற்கு விரிவான பதில் அளித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.





**2—**

## அனல் மின் நிலையம்

***2259—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடசென்னையில் புதியதாக அனல் மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். வடசென்னையில் புதியதாக 500 மெகாவாட் திறன்கொண்ட அனல் மின் நிலையம் அமைக்கும் திட்டத்தின் ஆரம்ப கட்ட வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டு, இப்புதிய மின் நிலையம் 2010–2011–ல் செயல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முற்பகல் 9–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு மத்திய மின் தொகுப்பிலிருந்து எவ்வளவு மின்சாரம் வழங்கப்படுகின்றது? செய்யூர் அனல் மின் நிலையத் திட்டம், நிலம் விலை உயர்ந்த காரணத்தினால் கைவிடப்பட்டது என்று அண்மையில் பத்திரிகையில் செய்தி வந்தது. அதனால் வேறு பகுதியில் இந்த மின் நிலையத்தை அமைக்க அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

[2007 அக்டோபர் 18

மேற்கு வங்கம் போன்ற வடமாநிலங்களிலிருந்துதான் நிலக்கரி கொண்டுவர வேண்டியிருக்கிறது. அதை இரயில் மூலமாகச் சென்னைக்குக் கொண்டு வந்து, மறுபடியும் மேட்டூருக்குக் கொண்டு போவதற்கு ஆகின்ற செலவு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், கடலோரப் பகுதிகளிலே மின் உற்பத்தி நிலையங்களை அமைத்தால், கப்பல்மூலமாக நிலக்கரி கொண்டு வரலாம் என்று எண்ணித்தான் இப்போது அரசு திட்டங்களைத் தீட்டி வருகிறது.

முற்பகல் 9—45

செய்யூரைப் பற்றிச் சொன்னார்கள், 1,000 ஏக்கர் அரசுக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது என்று. Ultra Mega Power Project என்பது 4,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு திட்டம். அதற்கு 4,400 ஏக்கர் நிலம் வேண்டும். 1,000 ஏக்கர் அரசு நிலம் இருந்தால்கூட, மீதி 3,400 ஏக்கர் நிலத்தை வாங்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முயற்சித்தால் அங்கே குறைந்த விலைக்கு கிடைக்கும் என்று சொல்கிறார். ஒரு ஏக்கர் 5 இலட்சம் ரூபாய் வரையிலே நிலம் கிடைப்பதற்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களேயானால், அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, augmentation of generation— உற்பத்தியைப் பெருக்குவதிலே நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தொடர்ந்து முயற்சி எடுத்து வெற்றி பெற்று வருகிறார்கள். இந்த நிலையிலே, தமிழ்நாடு மின்சார வாரியத்திலே அதிகாரிகள் சொல்கின்ற கருத்துகள் மட்டுமல்லாமல், நுகர்வோர் சார்பில் சொல்லப்படுகின்ற கருத்துகள் கேட்கப்படவேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன். அந்த வகையிலே, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நுகர்வோர் சார்பிலே உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்திலே அதிகாரிகள் மட்டும் இல்லாமல் ஆலோசனைக் குழு ஒன்றும் நியமிப்பதற்கு இந்த அரசாங்கம்



2007 அக்டோபர் 18]

முடிவு செய்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி யார் யாரை அந்தக் குழுவிலே நியமிப்பது என்று முடிவு செய்து விரைவிலே அறிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்றாலைமூலம் மின் உற்பத்தி உலகத்திலேயே தமிழகத்தில்தான் மிக அதிகமாகச் செய்யப்படுகிறது. அதிலும் குறிப்பாக, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களில் மிக அதிகமாக உற்பத்திச் செய்கின்ற அந்த மின்சாரத்தைக் கொண்டுசெல்கின்ற மின் கடத்தி—grid ஆனது மிகக் குறைவாக இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குச் சொன்னபோது, மத்திய மின் ஆணையத்தின்மூலம் 5 ஆயிரம் கோடி ரூபாயும், காற்றாலை மின் உற்பத்தியாளர்களிடம் இருந்து 5 ஆயிரம் கோடி ரூபாயும் பெற்று மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அனுமதியோடு மிக விரைவிலேயே அந்தப் பணி ஆரம்பிக்கப்படும் என்று அவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியளித்தீர்கள். அது எந்த நிலையில் இருக்கின்றது? ஏற்கெனவே காற்றாலை அமைத்தவர்கள், உதாரணத்திற்கு, ஆண்டு ஒன்றுக்கு ஒரு மெகா வாட் மின் உற்பத்திச் செய்கின்றவர்கள், இந்த grid இல்லாத காரணத்தால் அரை மெகா வாட், கால் மெகா வாட் என்ற அளவிற்குத்தான் உற்பத்திச் செய்கின்றார்கள். ஆகவே, அதைச் சரி செய்வதற்கு விரைவாக அந்தப் பணியைச் செய்து முடிப்பீர்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு இங்கே தெரிவித்ததைப்போல காற்றாலைகள்மூலம் மின்சாரத்தை உற்பத்திச் செய்கின்றவர்களுக்கு grid connection கொடுப்பதிலே பிரச்சினைகள் இருந்தன. மத்திய மின் துறை அமைச்சரோடும் Power Grid Corporation தலைவரோடும் கலந்து பேசி மின்சார வாரியத் தலைவர் ஆகியோர் அடங்கிய ஒரு குழு அதுபற்றிப் பரிசீலித்து, மத்திய அரசாங்கம் 15 ஆயிரம் கோடி ரூபாய் தமிழகத்திற்கு தந்து, grid facilities செய்வதற்கு ஒப்புதல் தந்திருக்கிறார்கள். இப்போது, காற்றாலைகள்மூலம் உற்பத்திச் செய்கின்ற மின்சாரத்தை grid connection கொடுப்பதிலே பிரச்சினை

[2007 அக்டோபர் 18

இல்லை. அக்டோபர் மாதம் காற்றாலைகள் இயங்குவதில்லை. ஏனென்றால், காற்று வீசுவது இல்லை. ஒரு ஆண்டிற்கு அக்டோபர் மாதத்திலேயும், மார்ச், ஏப்ரல் ஆகிய மாதங்களிலேயும், மொத்தத்திலே மூன்று மாதங்கள் காற்று வீசாத காரணத்தாலே காற்றாலைகள்மூலம் நமக்குக் கிடைக்கக்கூடிய மின்சாரம் குறைந்துவிடுகிறது. அதுகுறித்து நாம் ஒன்றும் நடவடிக்கை எடுக்கமுடியாது. இயற்கையாக காற்று வீசவேண்டும். அப்படிக் காற்று வீசி, மின்சாரம் அதிகம் உற்பத்திச் செய்வார்களானால் தேவையான அளவிற்கு grid வசதி செய்துதரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய அனல் மின் நிலையங்கள் அமைக்கப்படுவதாக இங்கே அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் பகுதியிலே புதியதாக ஒரு Super Thermal Power Project அமைக்கப்படுவதாக பத்திரிகைகளின் வாயிலாகச் செய்திகள் கேள்விப்பட்டுக் கொண்டிருக்கிறோம். கிட்டத்தட்ட 5 ஆயிரம் ஏக்கர் நிலம் தேவைப்படுவதாக சொல்லப்படுகிறது. அரசாங்கத்திலே அதற்காக ஏற்கெனவே நிலம் தேர்வு செய்யப்பட்டுவிட்டதாகவும், விவசாய நிலங்கள் தேர்வுசெய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாய மக்கள் மிகப் பெரிய போராட்டத்திலே, கொந்தளிப்பிலே இருக்கின்றார்கள். அரசாங்கம் ஒரு திட்டத்தை நிறைவேற்றுகின்றபோது முறையாக மக்களிடம் கருத்து கேட்கவேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை.

*முற்பகல் 9—50*

அப்படி அந்தத் திட்டம் அமையவேண்டுமென்றால் விவசாய நிலங்களுக்குப் பாதிப்பு இல்லாமல் அந்த கந்தாடு மரக்காணம் பகுதியிலே செய்ய வேண்டும். நீங்கள் ஒரு காரணத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். Cheyyur Thermal Power Project கைவிடப்படுகிறது, அதற்குக் காரணம் நில மதிப்பு அதிகமாக உயர்ந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் சொல்கிற அந்த மரக்காணம் பகுதியும் செய்யூரிலிருந்து 10 கிலோ மீட்டர் சுற்றளவிலே வருகிறது. இந்தப் பகுதியிலும் அதே நில மதிப்பீட்டில்தான் விவசாய



2007 அக்டோபர் 18]

நிலங்கள் விலை போகின்றது. அதே பகுதியிலே, கிட்டத்தட்ட 10 ஆயிரம் ஏக்கருக்கு மேலே அரசுப் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அந்த இடங்களைத் தேர்வு செய்யாமல், மத்திய அரசாங்கத்தில் N.T.P.C.–யிலே Feasibility Report–லே விவசாய நிலங்கள் தேர்வு கொடுத்திருக்கின்ற செய்யப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இதன் உண்மை நிலை என்ன என்பதை மக்களுக்கு அறிவித்து இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். விவசாய நிலங்களுக்குப் பாதிப்பு இல்லாமல் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல எந்த விவசாயி இடத்திலேயும் கட்டாயப்படுத்தி அவருடைய இடத்தை இந்த அரசாங்கம் எடுக்கவில்லை. கடந்த வாரம் விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் கோட்டைக்கு வந்து மரக்காணம் பகுதியிலே எந்தெந்த நிலத்தை எடுப்பதற்கு விவசாயிகள் ஒப்புதல் தந்திருக்கிறார்கள் என்ற விவரங்களையெல்லாம் தெரிவித்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அங்கே 10 ஆயிரம் ஏக்கர் அரசுக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது, அங்கே அந்தத் திட்டத்தை அமைக்கலாம் என்று தெரிவிக்கிறார். அரசாங்க நிலம் எங்கே இருந்தாலும், அங்கேயெல்லாம் மின் திட்டத்தைத் தொடங்க முடியாது. ஏனென்றால், நாம் Mini Port ஒன்று கட்டுகிறோம். மரக்காணம் அருகிலே ஒரு சிறு துறைமுகம் கட்டும்போது அங்கிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்திலேதான் நாம் நிலக்கரியைக் கொண்டுசெல்ல முடியும். அதிக தூரமாக இருந்தால், transport charges அதிகமாகும். ஆகவேதான், குறைந்தது 10 அல்லது 15 கிலோ மீட்டருக்கு அருகில் கடற்கரையையொட்டி நிலம் இருக்க வேண்டும் என்று முடிவு செய்திருக்கின்றோம். அந்த அடிப்படையிலே, எந்த விவசாயியும் பாதிக்கப்படாதவாறு, விவசாயிகள் கேட்கின்ற நிலத்தினுடைய விலையையும் கொடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் சுமுகமாக அனைவரையும் அழைத்துப் பேசி, அந்த நிலத்தை வாங்கிக் கொடுப்பதற்கு முன் வந்திருக்கிறார். அந்தத் திட்டம் அமல்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

[2007 அக்டோபர் 18

3—

பாலம்

***5005—திரு. இ. மகேந்திரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டியிலிருந்து ஜோதிமாணிக்கம் செல்லும் சாலையில் பாலத்தை மீண்டும் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை மாவட்டம், செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், செல்லம்பட்டி—ஜோதிமாணிக்கம்—கொசவம்பட்டி வரையிலுள்ள சாலையில் 600—வது மீட்டரில் வெள்ளத்தால் சேதமடைந்துள்ள பாலத்தை ரூபாய் 17 இலட்சத்து 80 ஆயிரம் மதிப்பீட்டில் நபார்டு திட்டத்தின்கீழ் புதுப்பித்துக் கட்டுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டியிலிருந்து ஜோதிமாணிக்கம், கொசவம்பட்டி வழியாகச் செல்லும் சாலையில் கி.மீ. 0/6—ல் அமைந்துள்ள அந்தப் பாலம் மழையிலே அடித்துச் சென்றிருக்கிறது. அந்தப் பாலத்தைப் புதிதாகக் கட்டுவதற்கு அமைச்சரவர்கள் ஒப்புதல் அளித்தது வரவேற்கத்தக்கது. இருந்தபோதிலும், அந்தப் பகுதியைச் சூழ்ந்துள்ள சுமார் 20—க்கும் மேற்பட்ட கிராமச் சாலைகள் அந்த வழியாகச் செல்கின்றன. அந்தப் பாலப் பணிக்கு உடனடியாக ஒப்பந்தப்புள்ளி கோரி, அதை வருகின்ற மழைக் காலத்திற்குள் நிறைவேற்றிக் கொடுத்தால் மக்களுக்குப் பயனுடையதாக இருக்கும். அதை உடனடியாக நிறைவேற்றுவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



2007 அக்டோபர் 18]

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அடிப்படையிலே ஏறத்தாழ 3.4 கிலோ மீட்டர் நீளம் உடையது அந்தச் சாலை. அதிலே 600—வது மீட்டரில் ஜோதிமாணிக்கம் அருகிலுள்ள சாலையில் வெள்ளத்தால் பாலம் சேதமடைந்திருக்கிறது. இந்தப் பாலத்தை ரூபாய் 17 இலட்சத்து 80 ஆயிரம் மதிப்பீட்டில் நபார்டு திட்டத்தின்கீழ் புதுப்பித்துக் கட்டுவதற்கு மதுரை திட்ட அலுவலர், கூடுதல் ஆட்சியர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைமூலம் ஊரக வளர்ச்சி இயக்குநருக்குக் கருத்துரு 19—7—2007—ல் அனுப்பப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களில் ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மொத்தம் ரூபாய் 38 இலட்சத்து 56 ஆயிரம் மதிப்பீட்டில் தார்ச் சாலையாக மேம்படுத்த நபார்டு வங்கிக்கு அனுப்பப்பட்ட கருத்துருவில் ரூபாய் 17 இலட்சத்து 80 ஆயிரம் மதிப்பீட்டில் இந்தப் பாலமும் மேம்படுத்தப்பட இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

*முற்பகல் 9—55*

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை எண் 7—ல், நாமக்கல் மாவட்டத்தையும் கரூர் மாவட்டத்தையும் இணைக்கின்றவகையிலே பரமத்திவேலூருக்கும் புஞ்சைப்புளூர் ஊராட்சிக்கும் இடைப்பட்ட காவிரி ஆற்றின் குறுக்கே உள்ள பாலத்தில் கடந்த ஆட்சிக் காலத்திலே 21 சோடியம் விளக்குகள் பொருத்தப்பட்டு இருந்தன. அந்த சோடியம் விளக்குகளுக்கான மின்சாரக் கட்டணத்தை தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனம் அளித்து வருகிறது. இந்த நிலையிலே 21 விளக்குகளிலே 4 விளக்குகள்தான். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்கும், நீங்கள் கேட்பதற்கும் சம்பந்தம் இல்லை. உட்காருங்கள்.

வினா எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. விசுவநாதன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

[2007 அக்டோபர் 18

4—

## கட்டட வசதி

***10558—திரு. இரா. விசுவநாதன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் நகரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நத்தம் தொகுதி, நத்தம் நகரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிலம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் தேர்வு செய்யப்பட்ட பின்பு கட்டடம் கட்டுவது சம்பந்தமாகப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. விசுவநாதன் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தொகுதியில் உள்ள நன்னிலம் நகரில், நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கின்ற, வாடகைக் கட்டடத்தில் இயங்கிவருகின்ற நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் அமைக்கும் கோரிக்கையை நிறைவேற்ற அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 19 இடங்களில், நீதிமன்றங்கள் தொடங்குவதற்கும் கட்டடங்கள் கட்டுவதற்கும் இந்த அவையிலே நான் ஒரு பட்டியலைப் படித்து இருக்கிறேன். புதிதாக, உறுப்பினர் அளித்த கோரிக்கை முறைப்படி



2007 அக்டோபர் 18]

உயர் நீதிமன்றத்திலிருந்து எங்களுக்கு வருமானால், அதுகுறித்து அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஆ. அங்கையற்கண்ணி.

**செல்வி ஆ. அங்கையற்கண்ணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் தொகுதியில் 1996–2001-ல் குற்றவியல் நீதிமன்றம் நமது கழக ஆட்சியில்தான் அமைக்கப்பட்டுள்ளது. இப்போது வாடகைக் கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது. நீதிமன்றத்திற்குத் தேவையான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அங்கு அரசு புதிய கட்டடம் கட்டித்தர முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பொதுவாக நாம் சென்ற முறை நிதிநிலை அறிக்கையிலே சொன்னோம்; இப்படி கட்டடங்கள் இல்லாமல் இருக்கின்ற நீதிமன்றங்களுக்கெல்லாம் கட்டடம் கட்டுவதற்கு, ஒரு திட்டத்தைத் தயாரித்து அதற்காக அரசு ரூ.300 கோடி வழங்கும் என்று தெரிவித்தோம். அதன் அடிப்படையில், ஒவ்வோர் ஆண்டும் இவ்வளவு பணம் ஒதுக்கப்படும், என்ற வகையில், 2007–2008-ல் நீதிமன்றங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ.100 கோடி ஒதுக்கி இருக்கிறோம். அந்த 19 இடங்களில் கட்டடங்கள் கட்டப்படும். அடுத்தடுத்த ஆண்டுகளில் வருகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கோரிக்கைகளையெல்லாம் நாங்கள் எடுத்துக்கொள்வோம்.

அதுமட்டுமல்லாமல், மத்திய அரசு மாநில அரசிடம் ஒரு Prospective Plan (தொலைநோக்குத் திட்டம்) தயாரித்து நீதிமன்றங்களுக்குக் கட்டடம் கட்டுவது குறித்து ஓர் அறிக்கை அனுப்பும்படி கேட்டது. தமிழக அரசு அதையும் சிந்தித்து, எந்தெந்த இடங்களில் நீதிமன்றங்களுக்குக் கட்டடம் கட்ட வேண்டும் என்றெல்லாம் திட்டம் தீட்டி, ரூ.213.15 கோடியில் ஒரு திட்டத்தைத் தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறோம். அதற்கும் விரைவில் நாங்கள் அனுமதி எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இங்கே ரூ.300 கோடி ஒதுக்குவதாக வாக்களித்திருக்கிறார்கள். அப்படி அனுமதி வருமானால், மத்திய அரசு தருகின்ற அந்த

ரூ. 213.15 கோடியும் சேர்த்தால், கிட்டத்தட்ட ரூ.500 கோடியில், வருகிற 4 ஆண்டுகளுக்குள்ளாக, தமிழ்நாட்டில் இருக்கின்ற எல்லா நீதிமன்றங்களுக்கும் கட்டடம் கட்டி முடிக்கப்படும் ஒன்றை நான் உறுதியாகத் தெரிவிக்கிறேன் இந்த மன்றத்தில். எத்தனையோ ஆண்டு காலமாக நீதிமன்றங்களுக்குக் கட்டடங்கள் இல்லை. ஆனால், கலைஞருடைய காலத்திலேதான் தமிழ்நாட்டில் இருக்கிற அவ்வளவு நீதிமன்றங்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) புதிய கட்டடங்கள் வரப்போகின்றன என்பதைப் பெருமையோடு தெரிவிக்கிறேன். முடியும் என்ற நம்பிக்கையோடு தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**5—**

## எரிவாயுப் பேருந்து

***17019—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மற்றும் கோயம்புத்தூரில் இயங்கும் பேருந்துகளை எரிவாயுமூலம் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) எரிவாயு நிரப்பும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டவுடன் எரிவாயுமூலம் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

*முற்பகல் 10–00*

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் நான் வால்பாறைக்கும், கோவை மாவட்டத்திற்கும் புதிய பேருந்துகளை அதிகமாக வழங்கிய நம்முடைய மாண்புமிகு தமிழக



முதல்வர் கலைஞர் ஐயா அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வால்பாறையில் 40 வளைவுகள் ஏறுகின்றபோது சில பேருந்துகளில் அதிகமான கூட்ட நெரிசல் காரணமாகவும் பழைய இன்ஜின்கள் காரணமாகவும் அந்தப் பேருந்துகளில் இருந்து அதிகப் புகை வெளி வருகின்றது. அப்படி வருகின்றபோது பொதுமக்களுக்கு உடல்நிலை பாதிக்கப்படும். அதைப்போல கோவை மாவட்டத்தில் திருப்பூர், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, மேட்டுப்பாளையம், கோவை மாநகர் போன்ற இடங்களிலும் காலையிலும், மாலையிலும் மாணவ, மாணவிகள் அதிகமாகப் பேருந்துகளில் செல்கின்றபோதும், பொதுமக்கள் அதிகமாகப் பேருந்துகளில் ஏறுகின்றபோதும், பேருந்துகளிலிருந்து அதிகப் புகை வெளிவருகின்றது. அப்படி வருகின்றபோது சுற்றுச்சூழல் மிகவும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் எரிவாயுமூலமாகப் பேருந்துகளை இயக்குவதற்கு முன்வருவாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்ற ஆணைப்படி இந்தியாவிலே தலைநகர் டெல்லியிலே மட்டும்தான் C.N.G.–யைக்கொண்டு இப்போது பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. பம்பாய் நகரில் இருக்கின்ற அந்த வாயுவை சென்னைக்குக் கொண்டு வந்து சென்னையிலே பேருந்துகளில் நிரப்பி பேருந்துகள் ஓட்டப்படுமானால் இப்போது போடுகின்ற டீசல் விலையைவிடக் கூடுதலான செலவு ஏற்படும். எரிவாயுவை அங்கேயிருந்து நேரடியாகச் சென்னைக்கு இணைக்க வேண்டுமென்று சொன்னால் பல ஆயிரம் கோடி ரூபாய் செலவு ஆகும். எரிவாயுவிலே வண்டி ஓட்ட வேண்டுமென்று சொன்னால், இப்போது வாங்குகின்ற Chassis-ஏ மாற்றியமைக்கப்பட வேண்டும். இப்படிப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. உரிய முறையிலே, நாளாவட்டத்திலே மத்திய அரசாங்கம் எரிவாயுவைக் கொண்டுவந்து சென்னையிலே கொடுக்கின்றபோதுதான் இதுபோன்ற திட்டங்களை நிறைவேற்ற முடியும். இப்போது சென்னையைப் பொறுத்தவரையில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மானியம் தந்து சுற்றுச்சூழலைப் பாதுகாக்கின்ற முறையிலே 40,000 ஆட்டோக்களையும் எரிவாயு வண்டிகளாக மாற்ற வேண்டுமென்று உத்தரவு தந்து, அவை இப்போது

[2007 அக்டோபர் 18

மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போலவே சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டுமென்று இந்த அரசுக்கு அக்கறை இருந்தாலும்கூட ஏற்படுகின்ற செலவினத்தைக் கருத்தில் கொண்டு இதற்குக் கொஞ்ச காலதாமதம் ஏற்பட வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல டெல்லியில் பேருந்துகள் எரிவாயுமூலமாக இயக்கப்படுகின்றன. கார்கள், வாகனங்கள் அனைத்தும் பெருவாரியாக டெல்லியில் எரிவாயுமூலம் இயக்கப்படுவதால் அங்கே சுற்றுச்சூழல் பிரச்சினை அறவே நீக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் ஐயா அவர்கள் புதிய தொழிற்சாலைகளை அமைத்து, இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதல் மாநிலமாகக் கொண்டுவர வேண்டுமென்று பெரு முயற்சி எடுத்து வருகின்ற இந்தக் காலகட்டத்தில், ஏன் தமிழகத்திலும் அனைத்துப் பேருந்துகளையும் எரிவாயுமூலமாக இயக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஐயா அவர்கள் முன்வரக் கூடாது என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிப்படியாக மத்திய அரசாங்கம் அந்தத் திட்டங்களை ஒவ்வொரு மாநிலத்திற்காகவும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. சென்னைக்கு வருகின்றபோது அந்தத் திட்டம் இந்த அரசின் சார்பாக நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கிராமங்களிலே போக்குவரத்துக்கு பஸ் தேவை என்கின்ற கோரிக்கை வருகிறது. Commercial–ஆக work out ஆகாது என்பதால், முடியாது என்கின்ற பதில் வந்துகொண்டிருக்கிறது. எனவே கடந்த சட்டமன்றக் கூட்டத்தின்போது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல அறிவிப்பை அறிவித்தார்கள்.



2007 அக்டோபர் 18]

விரைவில் மினி பஸ் புதிய திட்டம் கொண்டுவரப்படும் என்று சொல்லியிருந்தார்கள். தமிழகத்திலே மினி பஸ்களை கிராமங்கள்தோறும் கொண்டுவருவதற்கான அந்தப் புதிய திட்டம் எந்த நிலையில் உள்ளது? விரைவில், பஸ் போக்குவரத்து வேண்டுமென்கிற கிராமங்களுக்கு எல்லாம் மினி பஸ் திட்டம் கொண்டு வரப்படுமா எனத் தங்களின் வாயிலாக அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி எரிவாயு சம்பந்தப்பட்டது. நீங்கள் என்ன கேட்கிறீர்கள்? மினி பஸ் பற்றிக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல பல இடங்களிலே பேருந்து வசதிகள் வேண்டுமென்று கேட்டு, அந்த இடங்களில் எல்லாம் பேருந்துகளை இயக்குகிற அளவுக்கு, வசூல் இல்லையென்ற காரணம் காட்டிப் பேருந்துகள் எல்லாம் தரவில்லை என்ற காரணத்தைச் சொன்னார்கள்.

*முற்பகல் 10–05*

கடந்த கால ஆட்சியில் கிராமங்களில் ஓடிக்கொண்டிருந்த 900 பேருந்துகள், நீதிமன்றத் தீர்ப்புமூலமாக நகரங்களுக்கு வந்துவிட்ட காரணத்தால், இந்த ஆட்சி பொறுப்பேற்ற பின்னர், நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அத்தனை கிராமங்களுக்கும் பேருந்து வசதி செய்துதர வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். இதுவரை ஆயிரம் புதிய வழித் தடங்களிலே பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. 1,200 வழித் தடங்கள் நீட்டிக்கப்பட்டிருக்கின்றன. இப்போதுகூட சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தெந்த இடங்களில் பேருந்து வசதி வேண்டும் என்று கேட்டார்களோ, கிட்டத்தட்ட கேட்ட இடங்களில் எல்லாம் பேருந்து வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னால், அந்தப் பகுதிக்கும் தேவையான பேருந்து வசதியை நிச்சயமாக செய்துதர முடியும்.

மேலும், மினி பஸ் திட்டம் பற்றி, நீதிமன்றத்திலே ஓர் ஆணை தந்திருக்கிறார்கள். குறிப்பாக, நீதிபதி இப்ராகிம் கலிபுல்லா அவர்களுடைய தீர்ப்பிலே ஒரு பேருந்து ஒரு வழித்தடத்திலே இயங்கிவிட்டால், அதையே ஓட்டுகின்ற வழித்தடமாகக் கருதி, அந்த வழித்தடத்தில் மற்ற பேருந்துகளை விடக்கூடாது என்ற தீர்ப்பைத்

[2007 அக்டோபர் 18

தந்திருக்கிறார்கள். நாமும் உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீட்டுக்குச் சென்றிருக்கிறோம். அதற்கிடையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் விரைவிலே மினி பேருந்துகள் எல்லாம் வழங்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். புதிய Ordinance கொண்டு வரலாமா என்பதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். விரைவில் அதைப்பற்றி முடிவெடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் தொகுதி மக்களின் நீண்டநாள் கனவு ஒரு போக்குவரத்துப் பணிமனையை அங்கே அமைப்பது. ஏற்கெனவே அதற்காக ஏறத்தாழ 10 ஏக்கர் நிலம் அரசால் கையகப்படுத்தப்பட்டு உபயோகப்படுத்தப்படாமல் உள்ளது. சோளிங்கர் ஒன்றியத்தில் உள்ள. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள் அன்பரசு, மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லை. உட்காருங்கள். திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பெருகி வருகின்ற மக்கள்தொகையின் காரணத்தால் மருங்காபுரி தொகுதியிலே, மணப்பாறையிலிருந்து துவரங்குறிச்சிக்கு பள்ளி மாணவ, மாணவிகள் செல்வதற்கு மிகக் கடினமான சூழல் இருக்கிறது. 20 தினங்களுக்கு முன்பாக, படியிலே பயணம் செய்த மாணவி விழுந்து, கால் நொறுங்கி மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார். எனவே, அந்த மாணவ, மாணவிகளுடைய நலன் கருதி காலையிலும், மாலையிலும் மாணவ, மாணவிகளுக்கென்று தனிப் பேருந்தை இந்த அரசு இயக்க முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லை. உட்காருங்கள்.

*வினா எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*



2007 அக்டோபர் 18]

**6—**

## கட்டட வசதி

***21782—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேட்டூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு 2007–2008 ஆம் ஆண்டில் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், மேட்டூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு 2007–2008 ஆம் ஆண்டில் சொந்தமாகக் கட்டடம் கட்டும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திற்கு உட்பட்ட மேட்டூர் நகரம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நகரம். தினந்தோறும் பத்திரப் பதிவுகள் அதிகமாக நடந்து கொண்டிருக்கிற பகுதியான காரணத்தினாலே, இல்லை என்று சொல்லாமல் வாரி வழங்கிக் கொண்டிருக்கிற முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய அரசு, அவசியத் தேவையைக் கருதி நடப்பாண்டிலே அந்த சார்பதிவாளர் அலுவலகக் கட்டடத்தை மேட்டூர் அணைப் பகுதியிலே கட்டுவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

[2007 அக்டோபர் 18

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். பரிசீலித்து நிறைவேற்ற ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிற அதேவேளையில், மேட்டூரை அடுத்திருக்கிற கொளத்தூர் பகுதியும் பத்திரப் பதிவு அதிகமாக இருக்கிற பகுதி. அங்கே வாரத்தில் செவ்வாய், வியாழன் என்று இரண்டு நாட்கள் மட்டுமே பத்திரப் பதிவு செய்யப்பட்டு வருகிறது. வாடகைக் கட்டடத்தில் அந்த அலுவலகம் இயங்கி வருகிறது. அங்கே வாடகைக் கட்டடத்தில் இயங்கினாலும்கூட, அந்த இரண்டு நாட்கள் பத்திரப் பதிவு என்பதை தினமும் செய்யக்கூடிய அளவிலே அரசு ஆவன செய்ய வேண்டுமென்ற பொதுமக்களின் வேண்டுகோளை முன்வைத்து, அரசு அதை நிறைவேற்றித் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகைக் கட்டடம் குறித்துக் கேட்டார்கள். இப்போது பத்திரப் பதிவு சம்பந்தமாக துணைக் கேள்வி கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரடியாக எழுத்துமூலமாகத் தெரிவித்தால் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

**திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்திலும், கடவூர் ஒன்றியம், தரங்கம்பட்டியிலும் சார்பதிவாளர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில்தான் இயங்கி வருகின்றன. இந்த இரண்டு இடங்களிலும் சொந்தக் கட்டடம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10—10*

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 20 சார்பதிவாளர் அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதுசம்பந்தமாக, கட்டடங்கள் கட்டுவதற்குரிய



2007 அக்டோபர் 18]

நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கிணங்க அவருடைய கோரிக்கை, வரும் நிதியாண்டில் நிதிநிலைக்கேற்பப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *7*, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**7—**

### தொழிற்சாலை

***25947—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் பகுதியில் தொழிற்பூங்கா மற்றும் தொழிற்சாலைகளை சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்மூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் பகுதியில் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்மூலம் தொழிற்பூங்கா போன்ற தொழிற்சாலைகளை அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் பகுதியில் இப்போது நிறைய படித்த இளைஞர்கள் இருக்கிறார்கள். வேலைவாய்ப்பு இல்லாமல் எல்லோருமே (குறுக்கீடு) நம்முடைய வேலூரிலே அதிகமாக இருப்பதற்குக் காரணம் அங்கே பொறியியல் கல்லூரிகள் நிறைய உள்ளன, வி.ஐ.டி.—யிலே மட்டும் *15,000* இளைஞர்கள் படிக்கிறார்கள். இப்படிப் பல பேர் படித்துவிட்டிருக்கிற காரணத்தினாலே, அவர்களுக்கெல்லாம் இன்று அரசாங்க வேலை கொடுக்க முடியவில்லை. அரசாங்க வேலை இல்லாத ஒரு சூழலில், அவர்கள் சொந்தமாக ஒரு தொழிலைத் தொடங்க

தொழிற்சாலைகள் அமைத்து அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்ள வேண்டிய சூழ்நிலையை உருவாக்குகின்றவகையில், அரசு, வேலூர் பகுதியிலே ஒரு தொழிற்பூங்காவை அமைத்துக் கொடுத்தால்தான், அவர்கள் அப்படிப்பட்ட அரசாங்கச் சலுகைகளையெல்லாம் பெற்று தொழிற்சாலைகளை இயக்க இயலும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து, ஒரு வேளை நீங்கள் சிட்கோமூலம் செய்ய முடியவில்லை என்று சொன்னால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் டிட்கோமூலம் பெரிய தொழிற்சாலை ஏதாவது ஆரம்பித்து, அங்கே பெரிய அளவிலே ஒரு ஐடி. பார்க்கை ஆரம்பிக்கலாம்; வளர்ச்சியை உருவாக்குகின்ற வகையில், டிட்கோமூலமோ அல்லது சிட்கோமூலமோ எங்களுடைய வேலூர் பகுதியிலே ஒரு தொழிற்பூங்காவை அமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வேலூர் மாவட்டத்தில் காட்பாடி, அரக்கோணம், இராணிப்பேட்டை, முகுந்தராயபுரம், வன்னிமேடு ஆகிய பகுதிகளில் தொழிற்சாலைகள் நிறைய இருக்கின்றன. தொழிற் பேட்டைகளிலே தொழிற்சாலைகளும் உள்ளன. போதுமான நிதி ஆதாரங்களுடன் தொழில் துவங்க ஆர்வமுள்ள இருபதுக்கும் மேற்பட்ட தொழில் முனைவோர்கள், திரும்பப்பெறப்படாத 10,000 ரூபாய் காசோலையுடன் முன்வந்தால், புதிதாகத் தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம், தொழில் முனைவோர், தேவை ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்தாலோசித்து, மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டிய இடங்களில் காட்பாடியைச் சொன்னார்கள். காட்பாடியிலே பல யூனிட்டுகளை மூடிவிட்டார்கள். அதேபோல, முகுந்தராயபுரம், அரக்கோணம் போன்ற பகுதிகளிலே சிட்கோமூலம் தொடங்கப்பட்ட நிறைய தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டுவிட்டன. அவையெல்லாம் பழைய காலத்துத் தொழில் முறைகள். இப்போது நவீன



காலத்திற்கேற்றாற்போல, மாவட்டத் தொழில் மையம்மூலம் ஒரு கருத்தரங்கை நடத்தி, இன்றைய இந்தியாவினுடைய வளர்ச்சிக்கு, தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கு ஏற்றாற்போல் புதிய தொழில்களை, இன்றைய மார்க்கெட்டில் எந்தெந்தப் பொருள்களை நாம் தயாரித்தால், அவற்றை விற்று பெரிய அளவில் இலாபம் ஈட்ட முடியும் என்கிற ஒரு நல்ல கருத்துருவைத் தந்து, ஒரு நல்ல தொழிற்பூங்காவை வேலூரிலே அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் A.C.A.S. - Additional Central Assistance Scheme என்ற திட்டத்தின்கீழ் ஒரு கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் இராணிப்பேட்டையிலுள்ள தொழிற்பேட்டையில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள இருக்கின்றோம். அதேபோல, சிறுதொழில் குழும மேம்பாடுமூலம் வேலூர் மாவட்டத்தில் அகர்பத்தித் தொழில் குழுமத்திற்கான மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வதற்கான ஆய்வுகள் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை தவிர, வேலூர் மாவட்டத்தில் கயிறு சிறுதொழில் குழுமத்திற்கான மேம்பாட்டுப் பணிகளைச் செய்திட 117 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் SFURTI என்று சொல்லப்படும் Scheme of Funds for Re-generation of Traditional Industries என்ற மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் தொழிற்சாலைகள் வேண்டுமென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நிலங்களைக் கையகப்படுத்துவதற்குப் பதிலாக, நில உரிமையாளர்களிடம் நிலம் பெற ஏற்பாடு செய்து தருவார்களேயானால், உறுதியாக சிட்கோவின் மூலமாகத் தொழிற்பேட்டைகள் தொடங்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு supplementary கேள்விகள்தான். ஏன் திரும்பத் திரும்ப எழுந்திருக்கிறீர்கள்? உட்காருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலேயே காஞ்சிபுரம் பகுதியிலேதான் அதிகமான சுய உதவிக் குழுக்கள் இருக்கின்றன. அதிலும், பெண்கள் பொருளாதாரத்தில்

முன்னேற வேண்டுமானால், அவர்களுக்கு சிறு சிறு தொழிற்சாலைகளை அமைத்து, பெண்களுக்குப் பயிற்சியும் கொடுத்து சிறு தொழிலைச் செய்து கொடுத்தால் அவர்கள் முன்னேறுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று கூறிக்கொண்டு, அங்கே தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10—15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதுமான நிலங்கள் கிடைக்குமேயானால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரை செய்வார்களேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**8—**

## இலவச மனைப் பட்டா

***10964—திரு. தி. வேல்முருகன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சேமக்கோட்டை காலனியில் உள்ள மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், சேமக்கோட்டை கிராமத்திலே ஆதி திராவிட மக்கள் 25 பேர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு இருக்கிறது. இதனுடைய மொத்த விஸ்தீரணம் 27,736 சதுர மீட்டர். இதனுடைய மதிப்பு ரூ.86,750 ஆகும். மேற்படி கிராமத்தில் 10 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து



வருகின்ற மக்கள் 44 பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பண்ருட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சேமக்கோட்டையில் ஆதி திராவிட மக்கள் வாழ்கின்ற பகுதியில் நூற்றுக்கணக்கான மக்கள் வீட்டுமனைப் பட்டா வேண்டும் என்று மனு செய்ததன் அடிப்படையில் அங்கு வட்டாட்சியர் அவர்களால், சம்பந்தப்பட்ட துறையினரால், ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் 25 பட்டாக்கள்தான் அங்கு வழங்கப்பட்டு இருக்கின்றன. இரண்டு ஆண்டுகள் நிறைவை நெருங்கப்போகின்ற நம்முடைய முத்தமிழ் அறிஞர் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசில் என்னுடைய தொகுதியின் சார்பாக நான் என்னுடைய மக்களுக்கு வெறும் 25 பட்டாக்களை வழங்கிவிட்டு இன்னும் பல கிராமங்களுக்குப் பட்டா கேட்டு மனு கொடுத்துக்கொண்டு இருக்கிறேன். அங்கு அதிகாரிகள் பட்டா வழங்குவதற்கு முன்வரவில்லை. மேலும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு பத்து ஆண்டுகளுக்கு மேல் நிரந்தரமாகக் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்கப்படும் என்று அறிவித்ததன் அடிப்படையில்—அங்கு பல்வேறு மக்கள் ஏரி, குட்டைப் புறம்போக்கு, குளம் போன்ற பகுதிகளில் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் நாற்பது ஆண்டு காலம், ஐம்பது ஆண்டு காலம் என்று வாழ்ந்து வருகிறார்கள். அங்கு நீர் வரத்துக்கான வாய்ப்புகளே இல்லை. ஏரி, குளங்களும் அங்கு இல்லை. ஆனால் பல பணக்கார முதலாளிகள் எல்லாம் அதுபோன்ற இடங்களைப் பயன்படுத்தி apartments கட்டி, அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டி வாழ்ந்து வருகின்ற இந்தச் சூழ்நிலையில், அன்றாடக் கூலிகளாக இருக்கின்ற ஏழையெளிய விவசாய மக்களுக்கு, ஆதி திராவிட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கெல்லாம் நிலப் பட்டா வேண்டுமென்று அவர்கள் மனு கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் சிறப்பு நேர்வாகக் கருதி, அதுபோன்று தற்போது மக்களுக்குப் பயன்படாது இருக்கின்ற நீர்நிலைகளில் எல்லாம் நாற்பது ஆண்டு காலம், முப்பது ஆண்டு காலம் குடியிருப்பவர்களுக்கு உடனடியாக இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2007 அக்டோபர் 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பண்ருட்டி வட்டத்தில் 25 பட்டா கொடுத்தால் போதுமா என்ற கேள்வியை எழுப்பி இருக்கின்றார்கள். நான் ஒரு விவரத்தினை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். பண்ருட்டி வட்டத்தில் 30–9–2007 வரையிலான காலத்தில் இலவசமாகப் பட்டா வழங்குகின்ற திட்டத்தில் மட்டும் 657 நபர்களுக்கு 17.55 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட இடத்திற்கு இலவசமாகப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல், மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கின்ற* one time special scheme—*அதாவது சிறப்புத் திட்டத்தின்கீழ், ஏற்கெனவே குடியிருந்து வருகின்றவர்களுக்கு குடியுரிமைப் பட்டா வழங்குகின்ற திட்டத்தில், பண்ருட்டி வட்டத்தில் மட்டும் இதுவரை 642 நபர்களுக்கு 16.47 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள இடத்திற்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட, குடியிருந்து வருகின்ற வீடுகளை பட்டா கொடுத்து உரிமையாக்குகின்ற திட்டத்தில், ஏற்கெனவே அறிவித்தபடி இதுவரை 90 ஆயிரம் பட்டாக்கள் தமிழகம் முழுக்க மூன்று மாத காலத்தில் வழங்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே இருந்த முறைப்படி, கிராமத்தில் 16 ஆயிரம் ரூபாய் வருமானம் இருந்தால் அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கலாம். சிறப்புத் திட்டமாக, அதை ரூபாய் 30 ஆயிரமாக உயர்த்தி இருக்கிறார்கள். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இந்த நிலை இல்லை. கிராமத்தில் ரூபாய் 16 ஆயிரத்திலிருந்து 30 ஆயிரம் ஆகவும், நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளில் ரூபாய் 24 ஆயிரத்தை 50 ஆயிாம் ஆகவும் வருமான வரம்பை, உயர்த்தி இருக்கிறார்கள். இது தமிழகத்தில் மட்டும்தான் செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தச் சிறப்புத் திட்டத்திற்காக சிறப்பு அனுமதி வழங்கியிருக்கிறார்கள்.*

*முற்பகல் 10–20*

*மாண்புமிகு முதல்வர் அவர்கள், அறிவித்துள்ளபடி 3 இலட்சம் பட்டாக்கள், வருகின்ற 2008, மார்ச் திங்கள் 31–க்குள் வழங்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அதற்கு முன்னதாகவே இது கண்டிப்பாக நிறைவேற்றித் தரப்படும். அந்த 3 இலட்சம் போக இன்னும் பல இலட்சம் பட்டாக்களை தலைவர் கலைஞர் அரசு வழங்கும் என்பதை இந்த அவையிலே தெரிவிக்க விரும்புகிறேன்.*



2007 அக்டோபர் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.*

**திரு. தி. வேல்முருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 657 பட்டாக்கள் என்னுடைய தொகுதியிலே வழங்கப்பட்டிருப்பதாக இங்கு புள்ளிவிவரத்தோடு தெரிவித்திருக்கின்றார்கள். ஆனால், நான் வழங்கியது, ஒரு அரசினுடைய பள்ளி விழாவில், வெறும் 25 பட்டாக்கள். அமைச்சர் பெருமக்கள் மூலமாகக்கூட அங்கு வேறு பட்டாக்கள் வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்து அந்தப் பட்டாக்களை வழங்குவதற்கு அதிகாரி பெருமக்களுக்கு என்ன தடை இருக்கிறது என்பது தெரியவில்லை. அதிலே சில தவறுகள் நடப்பதற்கு, சில கீழ்மட்ட அதிகாரிகள் அந்தப் பட்டா பெறுகின்ற மக்களிடத்தில் ஏதாவது எதிர்ப்பார்க்கின்ற காரணத்தினால் அமைச்சரையோ, சட்டமன்ற உறுப்பினர்களையோ அழைத்து வழங்கினால் அதில் தங்களுக்கு அந்தப் பலன் கிடைக்காது என்ற காரணத்தினாலே சிலர் அவர்களாகவே அந்தச் செயல்களில் ஈடுபடுவதாகவும் எனக்குத் தகவல் வருகிறது.*

*இப்போதுகூட என்னுடைய தொகுதியில் அம்பேத்கர் நகர், அங்குசெட்டிப்பாளையம் ஆதி திராவிட மக்கள், காந்தி நகர் காலனி ஆதி திராவிட மக்கள் என்று பல மக்கள் பட்டாக்கள் கோரி மனு செய்துவிட்டு, அவர்கள் 30 ஆண்டு காலம், 40 ஆண்டு காலம் காத்திருப்பதாகத் தகவல் தெரிவிக்கின்றார்கள். பட்டா கொடுப்பதிலே சிறு சிறு குளறுபடிகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நிவர்த்தி செய்து என்னுடைய தொகுதியில் ஆதி திராவிட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பட்டாக்கள் வேண்டும் என்று மனு செய்கின்றவர்கள்—நான் சொன்னதுபோல அந்த நீர்நிலைகளில், பண்ருட்டி நகரத்திலே ஆற்றோரமாகக் குடியிருக்கின்றார்கள். அந்த இடத்திலே நீர் வருவதற்கு சாத்தியக்கூறுகளே இல்லை. அந்த மக்கள் இத்தனை ஆண்டு காலம் வாழ்கின்றார்கள். மின்சாரக் கட்டணம் கட்டுகின்றார்கள். வீட்டு வசதிக்கான பணம் கட்டுகின்றார்கள். சாக்கடை வசதி செய்யப்பட்டிருக்கின்றது. குடிநீர் வசதி செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால், பட்டாக்கள் மட்டும் இல்லாத நிலை இருக்கின்றது. சிறப்பு நேர்வாகக் கருதி, அந்த இடங்களுக்கெல்லாம் பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வருடைய அரசு முன்வர வேண்டும்.*

அதேபோல, என்.எல்.சி.—க்கு, நிலம் கொடுத்தவர்களுக்கு மாற்றுக் குடியிருப்புகளுக்கு இடம் தருகின்றார்கள். நம்முடைய துறையின் சார்பாகத்தான் அவர்களுக்கு நிலமெடுப்பு செய்து தரப்படுகின்றது. ஆனால், இத்தனை ஆண்டு காலம் கழித்தும் மாற்று இடங்களைத் தந்தவர்களுக்கு அந்த இடத்தில் வாழ்வதற்கான பட்டா தருவதற்கு வருவாய்த் துறை இதுவரையில் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. அவர்களுக்கும் பட்டா வழங்குவதற்கு நம்முடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் இத்தனை பட்டா கொடுத்திருக்கிறீர்கள்; எங்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். பட்டா வழங்கும்போது, நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர்களையும் பாகுபாடின்றி அழைக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு நாங்களும் ஆணை வழங்கி இருக்கின்றோம்.

குறிப்பாகத் தடை இருப்பதைப் பற்றி உறுப்பினர் சொன்னார்கள். அந்தத் தடையையும் நீக்கி இருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தளவில் பாதைப் புறம்போக்கு, பாட்டைப் புறம்போக்கு, வேறு எந்த வகைப் புறம்போக்காக இருந்தாலும் அதை வகைமாற்றம் செய்து பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள், சிறப்பாக இந்தத் திட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கே அனுமதி வழங்கி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் மாவட்ட ஆட்சித் தலைவரைப் பார்த்து நீங்கள் எந்த வகைப்பாட்டிலே இருக்கக்கூடிய அரசுப் புறம்போக்கு நிலத்திலே குடியிருக்கின்றவர்களுக்கும் பட்டா கேட்கலாம். அரசுக்குத் தேவைப்பட்டால் வழங்க முடியாது. அரசுக்குத் தேவைப்படாத நிலம் எது இருந்தாலும் நிச்சயம் வழங்குவோம். அதிலும் குறிப்பாக நீங்கள் சொன்னது தண்ணீர் வரக்கூடிய வரத்து வாய்க்கால்கள் பற்றி. நிரந்தாமாக இருக்கக்கூடிய பெரிய பெரிய குளங்களுக்கு, ஏரிகளுக்கு வரக்கூடிய வரத்து வாய்க்கால்களிலே குடியிருந்தார்கள் என்றால் அதற்குப் பட்டா வழங்க முடியாது. ஏற்கெனவே பாசனத்திற்கு இருக்கின்ற பெரிய ஏரிகளிலே வீடு கட்டிக் குடியிருந்தார்கள் என்றால் அதற்கு வழங்க முடியாது. ஆனால், அதே சமயத்தில், land on record— அந்த இடத்திலே போய் பார்க்கையில் குளம் என்று இருந்து அந்த இடத்திலே வீடு கட்டிப் பல ஆண்டுகாலமாகக் குடியிருக்கிறார்கள்





என்றால் அங்கு பட்டா வழங்குவதற்கு உத்தாவு போட்டாகிவிட்டது. எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அனுமதி கொடுத்திருக்கிறோம். அதனால்தான் இப்போது ஒரு இலட்சம் பட்டா வரைக்கும் கொடுத்திருக்கிறோம். இல்லாவிட்டால் கொடுக்கவே முடியாது. இதிலேயும் பணம் கட்டி வாங்க முடியாது என்று சொன்னதனாலேதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்கும் ஒரு அனுமதி கொடுத்தார்கள். தமிழ்நாட்டிலே இருக்கின்ற மக்கள் அனைவருக்குமே ஒரு வீடு வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எல்லா விதிமுறைகளையும் எல்லா வகையிலேயும் இப்போது தளர்த்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல தமிழகம் எங்கும் இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு, குடியிருப்பு மனைப் பட்டாக்களை வழங்குவதற்காக நம்முடைய வருவாய்த் துறையினுடைய நிர்வாகம் முடுக்கிவிடப்பட்டு பல்வேறு பணிகள் நடந்து வருகின்ற சூழ்நிலை இருக்கிறது. அதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். அதிலே மாற்றுக் கருத்து இல்லை. நான் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு என்னுடைய சட்டமன்றத் தொகுதி கடையநல்லூரில் நகர்ப்புறங்களிலே வாழ்கின்ற ஏழை எளிய மக்களுக்குக் குடியிருப்பு மனைப் பட்டா வழங்கப்படுகின்றபோது, 1½ சென்டுக்கு அதிகமாக அவர்களிடம் ¼ சென்டோ ½ சென்டோ இருந்தால், அதற்கு கால மதிப்பீட்டின்படி பணம் வழங்க வேண்டும் என்ற உத்தரவு வழங்கப்பட்டு, வறுமைக்கோடு எல்லைக்குக்கீழ் இருக்கின்றவர்கள்கூட 90,000 ரூபாய், 1½ இலட்சம் ரூபாய் பணம் கட்ட வேண்டுமென அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தபோது அவர் அதற்காக ஒரு சிறப்பு அனுமதியினைத் தந்து, அதன்பேரில், நகர்ப்புறங்களிலே 15,000 ரூபாய்க்கு மேலே கட்டத் தேவையில்லையென்ற உத்தாவினையும் அரசாங்கம் பிறப்பித்திருக்கிறது. ஆனால், இந்த உத்தாவு வருவதற்கு முன்னாலேயே 50 விழுக்காடு மக்கள் மிகக் கஷ்டப்பட்டு, கடன் வாங்கி 90 ஆயிரம் ரூபாய், ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் ரூபாய் என்று ஒரு சென்டுக்கு, ஒன்றரை சென்டுக்கு பணம் கட்டியிருக்கிறார்கள். இந்த

அரசாணையின்படி, வழங்கப்பட்ட பலனை, ஏற்கெனவே பணம் கட்டியவர்களுக்குத் தர, அந்தப் பணத்தைத் திரும்ப் வழங்க, அரசு முன்வருமா என்று நான் அறிய ஆசைப்படுகிறேன்.

*முற்பகல் 10–25*

அதுமட்டுமல்லாமல், தீர்வை ஏற்படாத தரிசு நிலங்கள் என்று வகைப்படுத்தப்பட்ட நிலங்கள் 20 ஆண்டுகளுக்கு முன்னால், 25 ஆண்டுகளுக்கு முன்னால் வருவாய்த் துறையால் சமூக வளர்ப்புக் காடுகளுக்காக ஒதுக்கப்பட்டு, இப்பொழுது சமூக வளர்ப்புக் காடுகளாய் மரம் வளர்த்திருக்கிறது. ஆனால், கிராமங்களிலே அந்த நிலங்களைத் தவிர வேறு நிலங்கள் குடியிருப்பு மனைப் பட்டாக்கள் வழங்குவதற்காக இல்லை. வனத் துறையினர் அந்த நிலத்தினை வருவாய்த் துறையிடம் ஒப்படைக்க மறுக்கின்றனர். அது வருவாய்த் துறைக்குச் சொந்தமான இடம். அது தீர்வை ஏற்படாத தரிசு நிலமாக கிராமத்தில் இருக்கின்ற, பஞ்சாயத்தில் இருக்கின்ற வருவாய் ஆவணங்களிலே வகைப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த நிலங்களை வனத் துறையினர் வருவாய்த் துறைக்கு ஒப்படைப்பதற்காக வருவாய்த் துறை உரிய நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டு, இந்த இரண்டு கேள்விகளுக்கும் பதில் அறிய ஆசைப்படுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே பணம் கட்டியவர்களுக்கு அது திரும்ப வழங்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். இப்பொழுது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த உத்தரவைப் போடும்போது, ஏற்கெனவே நோட்டீஸ் கொடுத்தவர்களுக்கு அதையெல்லாம் இரத்து செய்துவிட்டுத்தான், அந்த வருமான வரம்பை உயர்த்தியதன் அடிப்படையில் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். ஆனால், அந்தப் பணத்தைத் திரும்பக் கொடுக்க வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய்தான் தமிழ்நாடு முழுவதும் அந்தப் பணம் செலுத்தப்பட்டிருக்கிறது. அதுசம்பந்தமாக மாண்புமிகு முதல்வரோடு கலந்து முடிவு எடுக்கலாம். ஆனால், அதேசமயத்தில், நாங்கள் ஏற்கெனவே கொடுத்த demand notice–க்கே பணம் வசூல் பண்ண வேண்டாம் என்று இப்பொழுது சொல்லிவிட்டோம். காரணம் என்னவென்றால், தலைவர் அவர்கள் அறிவிப்பில் மூன்று சென்ட்





கிராமத்தில் இருந்தால், மேலே ஒரு சென்ட்டு கூட வைத்து இருந்தார்கள் என்றால், மேலே 5 ஆயிரம் ரூபாய் கொடுக்கலாம். அதேமாதிரி நகராட்சிப் பகுதியிலே அவர்களுக்கு ஒன்றரை சென்ட் இலவசமாகக் கொடுக்கிறோம். அதற்கு மேலே ஒரு சென்ட் கூட வைத்திருந்தார்கள் என்றால், அவர்கள் 15 ஆயிரம் செலுத்திவிட்டால் நாம் பட்டா கொடுத்துவிடலாம். ஏனென்றால் அதற்கு guideline value போட்டோம் என்றால் இலட்சக் கணக்கில் வருகிறது. மாநகராட்சியில் நாம் ஒரு சென்ட் இலவசமாகக் கொடுக்கிறோம். அதற்கு மேலே ஒரு சென்ட் வைத்திருந்தால் 25 ஆயிரம் அரசாங்கம் வசூல் பண்ணுகிறோம். இரண்டு சென்ட்டுக்கு மேல் இருந்தால்தான் நாம் guideline value–க்கே போகிறோம். அதனால், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தைப் பொறுத்தவரை நான் ஏற்கெனவே சொன்னமாதிரி ஒரு கோடி ரூபாய்தான் இதுவரைக்கும் வசூலாகி இருக்கிறது. இந்தத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்த முடியவில்லை என்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே தெரிவித்த பின்னால்தான் இந்த வருமான வரம்பை உயர்த்தினார்கள். இப்போது பட்டா எண்ணிக்கை ரொம்ப வேகமாக உயர்ந்து விட்டது, ஒரு இலட்சம் வரைக்கும் போய்விட்டது. ஒரு கோடி ரூபாய் வசூலித்த பணத்தை நாம் திரும்பக் கொடுக்க வேண்டும் என்றால், மாண்புமிகு முதலமைச்சரோடு கலந்து அதுபற்றி அரசு முடிவு எடுக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொன்றைத் தெரிவித்தார்கள், தீர்வை ஏற்படாத தரிசு நிலங்கள் ஏற்கெனவே வனத் துறைக்கு தரைப் பகுதியிலே வழங்கப்பட்டு, அவை மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாவுக்கு தேவைப்பட்டது என்றால், நாம் வருவாய்த் துறையிலிருந்து மாற்று நிலம் கொடுத்துவிட்டு பட்டா கொடுக்கலாம். வனத் துறைக்கு நாம் வகைமாற்றம் செய்யமுடியாது. இப்போது ஏற்கெனவே விழுப்புரம் மாவட்டத்தில் அணைக்கட்டு கட்டுவதற்குக் கொடுத்த நிலம்கூட, மாற்று நிலம் வருவாய்த் துறைமூலம் கொடுத்துவிட்டுத்தான், அந்த நிலத்தைக் குடியிருப்பவர்களுக்குப் பட்டா கொடுக்கப் போகிறோம். அதேமாதிரி, நீங்கள் சொன்னதுமாதிரி அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்க வேண்டுமென்றால் நம்முடைய வருவாய்த் துறையின்மூலமாக இருக்கின்ற நிலத்தை மாற்றாகக் கொடுத்துவிட்டு அந்த நிலத்தை வேண்டுமானால் நாம் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழ்கின்ற மக்களுக்கு இலவசமாக நில ஒப்படைவும், இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதும் எந்த அரசாக இருந்தாலும் அது நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஒரு செயலாகத்தான் இருந்துகொண்டிருக்கின்றது. அந்தவகையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய 5 ஆண்டு ஆட்சிக் காலத்தில் 3 இலட்சத்து, 65 ஆயிரம் குடியிருப்புகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. இன்றைக்கு இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதிலிருந்து நில ஒப்படைவும், இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்களும் வழங்குவதாக மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் இங்கே பட்டியலிட்டுச் சொன்னார்கள். கடந்த காலங்களில் சாதனை நிகழ்வாகக்கூட 90 ஆயிரம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டதாகவும் சொன்னார்கள். ஆனால், நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிகழ்வுகளை நாங்கள் கேள்விப்படுகின்றபொழுது அந்த மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும்பொழுது வருவாய்ப் பதிவேடுகளில், 'அ' பதிவேட்டில் அந்தப் பதிவினை பதிவு செய்யவேண்டும்.

முற்பகல் 10–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அப்பொழுதுதான் வழங்கப்படுகின்ற வீட்டுமனைப் பட்டாவோ, இலவச வீட்டுமனைப் பட்டாவோ, நில ஒப்படை பட்டாவோ அவர்களுக்குச் சொந்தமாகின்றது. அந்த விவரம் அடங்கலில் ஏற்றப்படாதவரை, அதை அரசு நிலமாகத்தான் கருதமுடியும். இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதிலிருந்து வழங்கப்பட்டிருக்கின்ற நில ஒப்படைப் பட்டாவோ, இலவச வீட்டுமனைப் பட்டாவோ, 'A' பதிவேட்டில், அதாவது 'அ' பதிவேட்டில் இதுவரை பதியப்படாத ஒரு சூழ்நிலைதான் இருக்கின்றது. ஆகவே இந்த அரசும், அதற்குப் பொறுப்பேற்றிருக்கின்ற வருவாய்த் துறை அமைச்சரும் அதற்கு ஆவன செய்ய வேண்டும். 'அ' பதிவேட்டில் பதிவு செய்தால்தான் அது அதிகாரபூர்வமான அத்தாட்சிப் பத்திரமாக விளங்குமேயொழிய, அதுவரை வெற்றுக் காகிதங்களாகத்தான் அந்த இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் விளங்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.



**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் 'A' Register–இலே நாம் பதிவு செய்யாமல் பட்டா கொடுத்தோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதில் இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. இலவச வீட்டுமனைப் பட்டா என்பது ஆண்டாண்டு காலமாக நடைபெற்று வருகின்ற முறை. அந்த முறையிலேகூட நாங்கள் எங்கள் ஆட்சியிலே் சாதனைப் படைத்திருக்கிறோம் என்று அவர் சொன்னார். நான் ஏற்கெனவே இதே அவையிலே பட்டியலையே படித்துக் காண்பித்திருக்கிறேன். 1991–இலேயிருந்து 1996 வரைக்கும் எவ்வளவு பட்டாக்கள் அ.தி.மு.க ஆட்சிக் காலத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்றன; 1996–இலேயிருந்து 2001 வரைக்கும் தலைவர் கலைஞர் ஆட்சியிலே ஏறத்தாழ இரண்டு மடங்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுத்த ஆட்சி தலைவர் கலைஞர் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர் வருவாய்த் துறை அமைச்சராக இருந்தார்கள். இப்போது கொடுப்பதில் இரண்டு விதம் இருக்கிறது. கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே குடியிருக்கின்ற வீட்டிற்கு ஒரு பட்டாகூட கொடுக்கவில்லை. மாண்புமிகு முன்னாள் வருவாய்த் துறை அமைச்சருக்குத் தெரியும். தலைவர் கலைஞர் ஏற்கெனவே குடியிருக்கின்றவர்களுக்கு குடியுரிமைப் பட்டா என்கின்ற இந்தத் திட்டத்தினை 2000 ஆம் ஆண்டு புதிதாகக் கொண்டு வந்தார்கள். ஆனால் பின்பு வந்த அ.தி.மு.க. ஆட்சி பட்டாவே கொடுக்கவில்லை. ஐந்தாண்டுக் காலத்திலே, குடியிருக்கின்ற வீட்டினை, யாருக்கும், ஒருவருக்குக்கூட, அவர்கள் உரிமையாக்கவில்லை. இது ஒரு திட்டம். இந்தத் திட்டத்தில்தான் இப்போது 90,000 கொடுத்திருக்கிறோம். இலவசமாக வீட்டுமனைப் பட்டா கொடுக்கின்ற திட்டத்தின்கீழ் ஏறத்தாழ இதுவரைக்கும் 60,000 கொடுத்திருக்கிறோம். 1,54,000 பேர்களுக்கு பட்டா வழங்கப்பட்டு இருக்கின்றது. இப்போது கொடுக்கிற முறையிலே ஒருவேளை தாமதமாகும் என்று 'வேண்டுமானால் சொல்லலாம். ஆனால், கொடுக்கிறபோது sketch போட்டு, survey செய்து எல்லா land record -களிலும் record செய்து, அப்படித்தான் நாம் இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறோம். நான் prove செய்ய முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 9, மாண்புமிகு உறுப்பினர், திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2007 அக்டோபர் 18

**9—**

**மருத்துவமனை**

***4433—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மன்னார்குடி தொகுதி, வடபாதிமங்கலம் கிராமத்தில் அரசு மருத்துவமனை ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* மற்றும் *(ஆ)* திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், வடபாதிமங்கலம் கிராமம் 2,000 மக்கள்தொகை கொண்ட சிறிய கிராமமாகும். இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று உள்ளது. இக்கிராமம் சாத்தனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய எல்லைக்குட்பட்டது. இக்கிராமத்திற்கு மிக அருகில், 5 கிலோ மீட்டர் தொலைவில் சாத்தனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைந்துள்ளது. மேலும் 10 கிலோ மீட்டர் தொலைவில் கூத்தாநல்லூர் அரசு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனைக்கு 3 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு மருத்துவர்கள் பணியாற்றி வருகின்றனர். மேலும் இக்கிராமத்திற்கு அருகிலுள்ள உள்ளிக்கோட்டை முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமானது சென்ற நிதியாண்டில் 30 படுக்கை வசதி கொண்டதாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மிக அருகில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் ஒரு வட்டம்சாரா மருத்துவமனை அமையப் பெற்றிருப்பதாலும் தற்போது வடபாதிமங்கலம் கிராமத்தில் அரசு மருத்துவமனை அமைப்பதற்கு நிருவாகரீதியாக சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவான ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, வடபாதிமங்கலத்தினைச் சுற்றியிருக்கிற கிராமங்கள் புள்ளமங்கலம், மணக்கரை, சித்திரையூர்,



2007 அக்டோபர் 18]

பாரதிமூலங்குடி, பூந்தாலங்குடி, கீழமணலி, சித்தனக்குடி, வேலுக்குடி, குலமாணிக்கம், திருநெல்லிக்காவல், செருவாமணி, சேந்தங்குடி, மாவட்டக்குடி, ஓச்சேரி போன்ற ஊராட்சிகளில், அதை உள்ளடக்கிய 100 கிராமங்கள் இருக்கின்றன. இதைச் சுற்றி மருத்துவ வசதி என்பதே இல்லாத சூழ்நிலை அந்தப் பகுதியிலே தொடர்ந்து நிலவுகிறது. அருகிலே ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்த இடத்திற்குச் சென்று வருவதற்கான வாய்ப்புகள் இல்லாத பகுதிகள் இவை.

*முற்பகல் 10–35*

அதைப்போலவே, அருகிலே கூத்தாநல்லூர் மருத்துவமனை உள்ளது என்று சொன்னார்கள். அதற்கும் போக்குவரத்து வசதிக்குரிய வாய்ப்புகள் இல்லை. கிட்டத்தட்ட 20, 25 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய அவசியத்திலே பல கிராம மக்கள் அந்தப் பகுதியிலே இருக்கிற காரணத்தினாலேதான் அந்தப் பகுதியை மையப்படுத்தி ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கப்பட வேண்டும் என்பது நீண்டநாள் கோரிக்கை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி திரும்பவும் பரிசீலித்து, ஒரு சிறப்பு நேர்வாக எடுத்து அந்தப் பகுதியிலே ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி 174 புதிய P.H.C. வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திற்கு நாங்கள் கோரிக்கை விட்டிருக்கிறோம். அங்கே பரிசீலனை நடந்துகொண்டிருக்கிறது. விரைவிலே அதற்குரிய அனுமதி வருகிற நேரத்தில், இதை ஒரு தனி நேர்வாகக் கருதி நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. அதைப்போலவே, எனது தொகுதிக்குட்பட்ட உள்ளிக்கோட்டை, திருமக்கோட்டை பகுதிகளிலே இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதை இங்கே

குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**10—**

### சாலைப் பராமரிப்பு

***383—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரம் மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள நெடுஞ்சாலைகளைப் பராமரிக்கவும், பழுதுபார்க்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை மாவட்டம், திருப்பூர் தொகுதியில் சுமார் 83 கோடி ரூபாய் திருப்பூர் தொகுதிக்குட்பட்ட சாலைகள் மற்றும் பாலங்கள் அமைப்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டு அந்தப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினராக நான் இந்த முறை தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் இந்தக் கேள்வியை எழுப்பினேன். அன்றைக்கு அந்தப் பாதைகள் எல்லாம் மிக மோசமான நிலையில் பழுதடைந்திருந்த நிலையில் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்று, முதல் வரவு—செலவுத் திட்டத்திலேயே திருப்பூருடைய ரோடுகளைப் பராமரிக்கவும், பாலங்கள் கட்டுவதற்காகவும் 70 கோடி ரூபாய் நிதி அன்றைக்கு முதல் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டு, அநேகமாக





நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான ரோடுகள் அனைத்தும் புதுப்பிக்கக்கூடிய பணிகள் நடைபெற்று முடிந்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) நான் எழுப்பிய கேள்வி சபைக்கு வருவதற்கு முன்னாலேயே, அந்தப் பணிகளையெல்லாம் நிறைவேற்றித் தந்தமைக்காக (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், நம்முடைய நிதியமைச்சர் அவர்களுக்கும், இதற்கான பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உதவி செய்த உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்தப் பணியை மிகச் சிறப்பாகச் செய்து முடித்திருக்கிற நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பிலே என்னுடைய மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த 70 கோடி ரூபாயில் அறிவிக்கப்பட்ட திட்டத்தில் பாதைகள் புதுப்பிக்கப்படுவதோடு பாலங்கள் கட்டுகிற பணி இன்னும் தொடங்கப்படாமல் இருக்கின்றது. ஆகவே, நொய்யல் ஆற்றுப் பாலம், இரயில்வே மேம்பாலங்கள் கட்டுகிற அந்தப் பணி, தற்போது என்ன நிலையில் உள்ளது என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு நன்றி தெரிவித்ததற்காக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கு நானும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய கடந்த நிதி ஆண்டில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் திருப்பூர் நகரைச் சுற்றியுள்ள சுற்றுச் சாலைகளையும், திருப்பூர் நகரத்தை இணைக்கக்கூடிய ஆரச் சாலைகளையும் செப்பனிடுவதற்காகவும், அங்குள்ள நீர்வழியிலுள்ள தரைப் பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக, குறுகிய பாலங்களை அகலமுள்ள பாலங்களாகக் கட்டுவதற்காகவும், 70 கோடி ரூபாயும், அதற்குப்பிறகு சுமார் 13 கோடி ரூபாய், அந்தத் தொகுதியின் சாலைப் பணிகளுக்காக வழங்கப்பட்டது. ஏறத்தாழ 155 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் புனரமைப்புப் பணிகளுக்காக எடுக்கப்பட்டு அதில் 100 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைப் பணிகள் முடிவுற்றுள்ளன. மீதமுள்ள சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பாலப் பணிகளைப் பொறுத்த அளவில் 9 நீர்வழிப் பாதைகளில் புதிய பாலங்களைக் கட்டுவதற்காகவும், அகலப்படுத்திக் கட்டுவதற்காகவும் பணிகள் எடுக்கப்பட்டு, இதில் பகுதி 2 திட்டத்தின்கீழ் திருப்பூர் – படியூர் சாலையில், அதாவது காங்கேயம் செல்லும் சாலையில் சுமார்

8.5 இலட்சம் ரூபாய் மதிப்பில் பாலம் கட்டப்பட்டு பணி நிறைவேற்றப்பட்டு, நானும் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர், தொகுதியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் எல்லோரும் கலந்துகொண்டு அந்தப் பாலத்தைத் திறந்து வைத்திருக்கின்றோம்.

மீதமிருக்கிற பாலங்கள் எல்லாம் அமைப்பதற்காக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கின்றது. குறிப்பாக, திருப்பூரிலிருந்து தாராபுரம் செல்லக்கூடிய சாலையில் ஆவாரம்பாளையம் என்ற இடத்திலே ஒரு பாலமும், திருப்பூரிலிருந்து சோமனூர் செல்லக்கூடிய பாதையில் இருக்கக்கூடிய கரட்டாங்காடு பாலமும் கட்டுவதற்காக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. அந்தப் பணியும் விரைவில் நடைபெறவிருக்கின்றது. நொய்யல் பகுதியில் மீதமுள்ள பாலங்களையெல்லாம் கட்டுவதற்கு, ஒப்பந்தப்புள்ளி கோரும் நிலையில் உள்ளது. அந்தப் பாலப் பணிகளையும் விரைவில் முடிக்கவிருக்கின்றோம்.

முற்பகல் 10–40

இவை இல்லாமல், ஏற்கெனவே எடுக்கப்பட்டிருக்கின்ற இரயில்வே மேம்பாலங்கள் இரண்டு; அதாவது, கூலிபாளையம் பகுதியிலும், வேலம்பாளையம் நகராட்சிப் பகுதியிலும் இரண்டு இரயில்வே மேம்பாலங்கள் கடந்த நிதியாண்டிலே எடுக்கப்பட்டன. நடப்பு 2007–2008 ஆம் நிதியாண்டிலே, போக்குவரத்து நெரிசல் மிகவும் இருக்கக்கூடிய கொங்கு நகர்ப் பகுதியிலே இரண்டு இரயில்வே மேம்பாலங்கள் அமைப்பதற்காக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இதுபோன்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும், நான் கோவை மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டு, இந்தப் பணிகள் குறித்து ஆய்வு செய்தேன். மேலும், நேற்றைக்குக்கூட, இந்தக் கேள்வி வருவதற்கு முன்புகூட, இன்னும் சொல்லப்போனால், கடந்த வாரம் திருப்பூர் சட்டமன்ற உறுப்பினரோடு தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, திருப்பூர் பகுதியிலே நடைபெற்று வருகின்ற நெடுஞ்சாலைத் துறைப் பணிகள் குறித்து ஆய்வு செய்வதற்காக நேரம் கேட்டபோது, அவரும் வெளியூரில் இருந்த காரணத்தினால், ஆய்வு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இந்த மாத இறுதியில், சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவுற்றபிறகு, நேரடியாகத் திருப்பூருக்குச் சென்று, முழுக்க முழுக்கத் திருப்பூரில் நடைபெறுகின்ற





பணிகள் குறித்து ஆய்வு செய்ய இருக்கின்றோம். எனவே, விரைவாக, இந்தப் பணிகள் முடிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. ஏற்கெனவே, திருப்பூர் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கிற சுற்றுச்சாலை, நம்முடைய நெடுஞ்சாலைத் துறையினுடைய ஏழு பாதைகளைக் கடந்து செல்கிறது. ஆனால், பல்வேறு நகரங்களில் நெடுஞ்சாலைத் துறையின் மெயின் ரோட்டைச் சந்திக்கிறபோது, ரவுண்டானா அமைக்கப்பட்டு, வெளியூரிலிருந்து வரக்கூடியவர்கள், அடுத்த பாதைக்குச் செல்வதற்கு உரிய முறையில், மற்ற பகுதியில் எல்லாம் சுற்றுச்சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்; அந்தப் பாதை முழுவதையும் பார்த்திருக்கிறார்கள். ஆனால், திருப்பூரிலே ஏற்கெனவே இருக்கிற ஒரு சிறிய பாதையைக் கொஞ்சம் அகலப்படுத்தி, சுற்றுச்சாலையாக மாற்றியிருப்பதால், மற்ற ஊர்களிலிருந்து வரக்கூடியவர்களுக்கு அந்தச் சுற்றுச்சாலை என்பதே தெரியாத ஒரு நிலைமையிருக்கிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் திருப்பூர் நகரம் விரைவிலே மாநகராட்சியாகத் தரமுயர இருக்கக்கூடிய சூழ்நிலையில், மாண்புமிகு முதல்வர் அவர்களால் ஒரு தனி மாவட்டமாக உருவாகக்கூடிய முதனிலை இருக்கிற காரணத்தினால், அந்தத் திருப்பூரினுடைய சூழ்நிலை இருக்கிற காரணத்தினால், அந்தத் திருப்பூரினுடைய சுற்றுச்சாலையைப் புனரமைக்கக்கூடிய வகையில், எல்லா நெடுஞ்சாலைகளும் சந்திக்கிற இடங்களில், ரவுண்டானா அமைக்கப்பட்டு, வெளியூர்க்காரர்கள் உள்ளூருக்குள் வருகிறபோது, அந்தப் பாதையை அறிந்து, மாற்று இடத்திற்குச் செல்வதற்கு உதவி செய்யக்கூடிய வகையில், அந்தச் சுற்றுச்சாலை சீரமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

[2007 அக்டோபர் 18

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல்கள் 1, 2, 3 மற்றும் 4)@

பட்டியல் 1

**1—**

### தொழில்நுட்பப் பூங்கா

**வினா எண் 9448—திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்தியாவில் மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாக விளங்கும் உதகையில் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இந்தியாவில் மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாக விளங்கும் உதகையில் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கும் திட்டம் எதுவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை. வனம் மற்றும் சுற்றுச்சூழல் வளம் பாதிக்காத அளவில் தொழில்களைத் துவங்குவதற்கு போதிய அளவு தொழில் முனைவோர்கள் உதகையில் இருந்தால் தமிழக அரசு தகுந்த அளவில் சிறிய தொழில்நுட்பப் பூங்காவை அமைக்க பரிசீலனை செய்யும்.

**2—**

### குடிநீர் வசதி

**வினா எண் 4191—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள புண்ணப்பட்டு கிராமத்திற்கு குடிதண்ணீர் வசதியும், பள்ளவீரக்குப்பம் கிராமத்தில் புதிய சிறு மின் விசைப் பம்பும் அமைக்க அரசு முன்வருமா?

---

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள புண்ணப்பட்டு கிராமத்திற்கு குடிதண்ணீர் வசதியும், பள்ளவீரக்குப்பம் கிராமத்தில் புதிய சிறு மின் விசைப் பம்பும் அமைக்க தற்போது திட்டம் ஏதும் இல்லை.

**3—**

### தெரு விளக்கு வசதி

**வினா எண் 4823—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உரல்பட்டி ஊராட்சி, ஜக்கம்பாளையம் கிராமத்தில் பிரதான சாலை மற்றும் கொடிங்கியம் ஊராட்சியிலுள்ள கிராமத்தில் ஏழை ஆதி திராவிட மக்கள் வசிக்கும் பகுதி, விளாமரத்துப்பட்டி கிராமத்திலுள்ள முக்கிய வீதிகளில் தெரு விளக்கு வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடும்லைப்பேட்டை தொகுதியில் உள்ள ஆண்டியகவுண்டனூர் ஊராட்சி ஜக்கம்பாளையம் கிராமத்தில் பிரதான சாலை, கொடிங்கியம் ஊராட்சி ஆதி திராவிடர் காலனி, விளாமரத்துப்பட்டி முக்கிய வீதிகள் ஆகிய இடங்களில் தெரு விளக்கு வசதி ஊராட்சியின்மூலம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2007 அக்டோபர் 18

4—

## தெரு விளக்கு வசதி

**வினா எண் 4827—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, தேவனூர்புதூர் ஊராட்சி, ஆதி திராவிடர் காலனி, இராவணாபுரம் ஊராட்சியிலுள்ள இராவணாபுரம் நெசவாளர் காலனி, உடுக்கம்பாளையம் கிராமத்தில் ஆதி திராவிடர் காலனி ஆகிய பகுதிகளில் தெரு விளக்கு வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதிக்குட்பட்ட தேவனூர்புதூர் ஊராட்சி ஆதி திராவிடர் காலனி, இராவணாபுரம் ஊராட்சி நெசவாளர் காலனி, உடுக்கம்பாளையம் ஊராட்சி ஆதி திராவிடர் காலனி ஆகிய இடங்களில் தெரு விளக்குகள் அமைக்க ஊராட்சியின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

5—

## தெரு விளக்குகள்

**வினா எண் 6002—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திடுமல் ஊராட்சிக்குட்பட்ட தாசம்பாளையம் கிராமத்தில் மின் கம்பங்களுக்கும் வாழவந்தி, பாலப்பட்டி, மணியனூர் ஆதி திராவிடர் தெருவிற்கும் மின் விளக்கு பொருத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், திடுமல் ஊராட்சிக்குட்பட்ட தாசம்பாளையம் கிராமத்தில் 10 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகின்றன. மேலும் கூடுதலாக 2 சோடியம் விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பாலப்பட்டி, மணியனூர் ஆதி திராவிடர் தெருவிற்கு, தற்சமயம் ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கண்ட பணிகள் செய்யப்படும்.

6—

## தூர் வாருதல்

**வினா எண் 6049—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியம், அமரகுந்தி ஊராட்சி மாங்குட்டப்பட்டியிலுள்ள தெப்பக்குளத்தைத் தூர் வாரி சுத்தம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அமரகுந்தி ஊராட்சி, மாங்குட்டப்பட்டியில் உள்ள குளம், கோவில் குளமாகும். மேற்படி குளத்தைத் தூர் வாரி சரி செய்ய ரூ.3,00,000/- (மூன்று இலட்சம் மட்டும்) மதிப்பீடாகும். எனவே, வரும் 2007-2008 ஆம் நிதியாண்டில் முன்னுரிமை வழங்கப்பட்டு இப்பணி மேற்கொள்ளப்படும்.

7—

## தெரு விளக்கு

**வினா எண் 6099—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, சிந்துப்பட்டி பஞ்சாயத்து, குமரன்பட்டி, தாழையூத்துப்பட்டி, பாப்பாப்பட்டி காளியம்மன் கோயில் அருகே தெரு விளக்கு அமைத்துத்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, சிந்துப்பட்டி பஞ்சாயத்து, குமரன்பட்டியில் தெரு விளக்கு அமைத்துத்தர சிந்துப்பட்டி ஊராட்சியில் போதுமான நிதி வசதி இல்லாததால் ஊராட்சிக்கு 3 குழல் விளக்குகள் வழங்கக் கோரி தேவைப் பட்டியல், உதவி இயக்குநர் (ஊராட்சி), மதுரை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. குழல் விளக்குகள் பெறப்பட்டவுடன் தெரு விளக்குகள் அமைத்துத் தரப்படும். பொறுப்பு மேட்டுப்பட்டி ஊராட்சி, தாழையூத்துப்பட்டியில் 2 சோடியம் விளக்குகளும், பாப்பாப்பட்டி ஊராட்சி, பாப்பாப்பட்டி காளியம்மன் கோயில் அருகில் ஒரு சோடியம் ஆவி விளக்கு அமைப்பதற்கும் உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் வளர்ச்சி நிதிமூலம் பணிகள் செய்ய, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு சோடியம் விளக்குகள் அமைக்கும் பணி நடவடிக்கையில் உள்ளது.

8—

## மயானத்திற்கு விளக்கு வசதி

**வினா எண் 6104—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, வாடிப்பட்டி மயானத்திற்கு விளக்கு வசதி செய்துதர அரசு முன்வருமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, வாடிப்பட்டி மயானத்திற்கு விளக்கு வசதி செய்துதர உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு 2006-2007 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கிட கேட்கப்பட்டுள்ளது. நிதி பெறப்பட்டதும், மயானத்திற்கு விளக்கு வசதி செய்து தரப்படும்.

9—

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 6600—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, தண்ணீர்ப்பந்தல்பாளையம் மற்றும் ஏழுதிங்கள் பட்டி ஆகிய கிராமங்களில் குடிநீர்த் தொட்டி, சாலை வசதி மற்றும் கழிவுநீர் வசதி ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், ஈங்கூர் ஊராட்சியைச் சேர்ந்த தண்ணீர்ப்பந்தல்பாளையம் மற்றும் ஏழுதிங்கள்பட்டியில் தற்போது 2006-2007 ஆம் ஆண்டுக்கான சம்பூர்ண கிராம ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் சாலை வசதி செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ளும்போது இப்பகுதியில் குடிநீர்த் தொட்டி மற்றும் கழிவுநீர் வசதி ஆகியவை செய்து கொடுக்கப்படும்.

[2007 அக்டோபர் 18

10—

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 7865—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, மழவராயநல்லூர் ஊராட்சி, உச்சிமேடு கிராமத்தில் தொகுப்பு வீடுகள் மற்றும் கச்சா வீடுகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதியில், கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மழவராயநல்லூர் ஊராட்சி, உச்சிமேடு கிராமத்தில் தொகுப்பு வீடுகள் கட்ட அரசு விதிமுறைப்படி வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் பட்டியலில் 0 முதல் 5 வரை மதிப்பெண்கள் உள்ள குடும்பங்களுக்கான முன்னுரிமைப் பட்டியலில் உச்சிமேடு கிராமக் குடும்பங்கள் இடம்பெறவில்லை. மேலும், நடப்பாண்டில் இவர்களுக்கு புதிய தொகுப்பு வீடு கட்டித்தர மற்றும் பழைய வீட்டினை புதுப்பிக்க கருத்துரு இல்லை.

11—

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 7873—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழக்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதியில் விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு தொகுப்பு வீடு கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதியில், அரசின் காட்டுதல் நெறிமுறைகளின்படி 2006-2007 ஆம் ஆண்டுக்கு வறுமைக்



2007 அக்டோபர் 18]

கோட்டுப் பட்டியலின் அடிப்படையில் மிகவும் ஏழ்மையான பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு கிராம சபா ஒப்புதலுடன் தொகுப்பு வீடுகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் விவசாயக் கூலித் தொழிலாளர்களும் அடங்கியுள்ளனர். தொகுப்பு வீடுகள் கட்டுவதில் கணவனை இழந்த கைம்பெண்கள், தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடும்பம், முன்னாள் இராணுவத்தினர், இராணுவத்தில் பணியில் இருக்கும்போது இறந்த இராணுவத்தினரின் குடும்பம், உடல் ஊனமுற்றோர் போன்ற குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

12—

## மகளிர் சுகாதார வளாகம்

**வினா எண் 9701—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கூரம் கிராமத்திற்கு மகளிர் சுகாதார வளாகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கூரம் கிராமத்தில் மகளிர் சுகாதார வளாகம் 2003-2004 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு நல்ல நிலையில் பயன்பாட்டில் உள்ளது.

13—

## குடிநீர்த் தொட்டி

**வினா எண் 9703—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 அக்டோபர் 18

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, கரடிஹள்ளி ஊராட்சி, ஆதி திராவிடர் காலனி, ஜெயனூர், சின்னேகண்டனஹள்ளி, சாப்பந்தி ஊராட்சி, வெங்கட்ராமன் கொட்டாய், மோட்டுப்பட்டு, தாமோதர ஹள்ளி ஊராட்சி, கீழூர், எருமாம்பட்டி ஊராட்சி, தேனேரடை நகர் ஆகிய கிராமங்களுக்கு சிறிய குடிநீர்த் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதி, கரடிஹள்ளி ஊராட்சி, ஆதி திராவிடர் காலனி, ஜெயனூர், சின்னேகண்டனஹள்ளி, சாப்பந்தி ஊராட்சி, வெங்கட்ராமன் கொட்டாய், மோட்டுப்பட்டு, தாமோதரஹள்ளி ஊராட்சி, கீழூர், எருமாம்பட்டி ஊராட்சி, தேனேரடை நகர் ஆகிய கிராமங்களுக்கு சிறிய குடிநீர்த் தொட்டி அமைத்துத்தர தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணி மேற்கொள்ள ஆவன செய்யப்படும். மேலும் இந்த நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி பெற்றுப் பணிகள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**14—**

## குடிநீர்த் தொட்டி

**வினா எண் 9710—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, எருமாம்பட்டி ஊராட்சி, போல்பாறை கொட்டாய், சந்தாபுரம் ஊராட்சி, சாலிக்கொட்டாய், ஊடேதுர்கம் ஊராட்சி, வன்னியபுரம், சந்தாபுரம் ஊராட்சி, பாரதி நகர் ஆகிய கிராமங்களுக்கு சிறிய குடிநீர்த் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதி, எருமாம்பட்டி ஊராட்சி, போல்பாறை கொட்டாய், சந்தாபுரம் ஊராட்சி, சாலிக்கொட்டாய், ஊடேதுர்கம் ஊராட்சி, வன்னியபுரம், சந்தாபுரம் ஊராட்சி, பாரதி நகர் ஆகிய கிராமங்களுக்கு சிறிய குடிநீர்த் தொட்டி அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**15—**

## அடிகுழாய் அமைத்தல்

**வினா எண் 9714—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, கண்டேகுப்பம், ஜகதரம் ஊராட்சி, மோட்டூர், திம்மாபுரம் ஊராட்சி, பூங்காவனம் நகர், நீலஞ்சனூர் ஆகிய கிராமங்களுக்கு அடிகுழாய் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதி, கண்டேகுப்பம், ஜகதரம் ஊராட்சி, மோட்டூர், திம்மாபுரம் ஊராட்சி, பூங்காவனம் நகர், நீலஞ்சனூர் ஆகிய கிராமங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் நடப்பாண்டில் அடிகுழாய் அமைத்துத்தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

16—

## குடிநீர் வசதி

**வினா எண் 9718—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, மிட்டஹள்ளி ஊராட்சி, கதிரிபுரம் காலனி, தட்ரஹள்ளி ஊராட்சி, கோப்பனூர் காலனி, கண்டேகுப்பம் ஊராட்சி, வேங்கன் கொட்டாய், நரிமேடு, நாகதேரணை ஆகிய கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, மிட்டஹள்ளி ஊராட்சி, கதிரிபுரம் காலனி, தட்ரஹள்ளி ஊராட்சி, கோப்பனூர் காலனி, கண்டேகுப்பம் ஊராட்சி, வேங்கன் கொட்டாய், நரிமேடு, நாகதேரணை ஆகிய கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்துதர தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டத்தில் குடிநீர் வழங்கும் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

17—

## குடிநீர் வசதி

**வினா எண் 9723—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, தாமோதரஹள்ளி ஊராட்சி, சந்தனூர், சாதிநாயக்கன்பட்டி, பண்ணந்தூர் ஊராட்சி, கிங்காம்பள்ளம், சூடானூர், பெண்டரஹள்ளி, கிருஷ்ணன் கொட்டாய், மிட்டஹள்ளி ஊராட்சி, பெருமாள் கோயில் ஆகிய கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?





**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, தாமோதரஹள்ளி ஊராட்சி, சந்தனூர், சாதிநாயக்கன்பட்டி, பண்ணந்தூர் ஊராட்சி, கிங்காம்பள்ளம், சூடானூர், பெண்டரஹள்ளி, கிருஷ்ணன் கொட்டாய், மிட்டஹள்ளி ஊராட்சி, பெருமாள் கோயில் ஆகிய கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்துதர தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் கூட்டுக் குடிநீர் வழங்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

18—

## குடிநீர் வசதி

**வினா எண் 9730—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, திம்ஜேம்பள்ளி ஊராட்சி, குட்டூர் கிராமத்திற்குக் குடிநீர் தேக்கத் தொட்டி அமைக்கவும், வீரமலை ஊராட்சி, போயர் நகர் கிராமத்திற்கு குடிநீர்க் குழாய் அமைக்கவும் மற்றும் நாகமங்கலம் ஊராட்சி, யு. புரம் கிராமத்திற்குக் குடிநீர்த் தொட்டி அமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, திம்ஜேம்பள்ளி ஊராட்சி, குட்டூர் கிராமத்திற்குக் குடிநீர் தேக்கத் தொட்டி அமைக்கவும், வீரமலை ஊராட்சி, போயர் நகர் கிராமத்திற்கும் மற்றும் நாகமங்கலம் ஊராட்சி, யு. புரம் கிராமத்திற்கும் குடிநீர் வழங்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டத்தில் குடிநீர் வழங்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

[2007 அக்டோபர் 18

**19—**

## ஆழ்துளைக் கிணறு

**வினா எண் 9733—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, செல்லகுட்டப்பட்டி ஊராட்சி, இராஜீவ் நகர் கிராமத்திற்கு இரண்டு ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, செல்லகுட்டப்பட்டி ஊராட்சி, இராஜீவ் நகர் கிராமத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் உரிய நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு கைப் பம்பு அமைத்துத் தரப்படும்.

**20—**

## குடிநீர் வசதி

**வினா எண் 9791—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோயில் ஒன்றியம், பழையூர், குளவாய்ப்பட்டி, பிரியங்கா நகர், சத்திரப்பட்டி, கோட்டுக்காரன்பட்டி ஆகிய பகுதிகளில் குடிநீர் வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோயில் ஒன்றியம், பழையூர் கிராமத்தின் ஜனத்தொகை 132 ஆகும். தற்போது இங்கு ஒரு கையிறைப்பான் நல்ல நிலையில் இயங்குகிறது. மேலும் 12-வது நிதிக் குழு மானிய நிதி நிலையின்மூலம் ரூ.40,000/- மதிப்பீட்டில் புதிய கையிறைப்பான் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

குளவாய்ப்பட்டி கிராமத்தில் 745 பேர் உள்ளனர். இங்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் 6 கையிறைப்பான்கள் உள்ளன. இதனால் குடிநீர், மக்களுக்குப் போதுமான அளவில் உள்ளது.

சத்திரப்பட்டி கிராமத்தின் ஜனத்தொகை 300 ஆகும். இங்கு 4 கையிறைப்பான்கள் நல்ல நிலையில் இயங்குகின்றன. மேலும் 2005-2006 ஆம் ஆண்டுத் திட்டத்தில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் நடைபெற்று வருகிறது.

கோட்டுக்காரன்பட்டி கிராமத்தின் ஜனத்தொகை 125 ஆகும். இங்கு ஒரு கையிறைப்பான் மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் குடிநீர் வசதி மக்களுக்குப் போதுமான அளவில் உள்ளது.

**21—**

## ஆழ்குழாய்க் கிணறு

**வினா எண் 9795—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோயில் ஒன்றியம், பழையூர் கிராமத்தில் புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2007 அக்டோபர் 18

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோயில் ஒன்றியம், பழையூர் கிராமத்தின் ஜனத்தொகை 132 ஆகும். இப்பகுதியில் 12-வது நிதிக் குழு மானிய நிதிமூலம் ரூ. 40,000/- மதிப்பீட்டில் ஆழ்குழாய்க் கிணற்றுடன் கைபிறைப்பான் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

**22—**

## குடிநீர் வசதி

**வினா எண் 9796—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோயில் ஒன்றியம், சின்ன ஊரணிப்பட்டி, வீரப்பட்டி, பொன்னங்குடிபட்டி ஆகிய இடங்களில் சிறிய குடிநீர்த் தொட்டி கட்டி குடிநீர் வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோயில் ஊராட்சி ஒன்றியம், சின்ன ஊரணிப்பட்டியின் ஜனத்தொகை 145 ஆகும். இங்கு ஒரு கையிறைப்பான் மற்றும் சிறு மின் விசையிறைப்பான் அமைக்கப்பட்டு போதுமான அளவில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

வீரப்பட்டி கிராமத்தின் ஜனத்தொகை 736 ஆகும். இங்கு 30,000 லிட்டர் கொள்ளளவு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் கையிறைப்பான்கள் 4 அமைக்கப்பட்டு குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.



2007 அக்டோபர் 18]

பொன்னங்குடிபட்டி கிராமத்தின் ஜனத்தொகை 297 ஆகும். இங்கு ஒரு கையிறைப்பான் மற்றும் சிறு மின் விசையிறைப்பான் அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**23—**

## அடிபம்பு வசதி

**வினா எண் 9799—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோயில் ஒன்றியம், ஒடுக்கம்பட்டி, ஒத்தப்பட்டி, கலைக்குடிப்பட்டி, நண்பம்பட்டி ஆகிய பகுதிகளில் அடிபம்பு வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோயில் ஊராட்சி ஒன்றியம், ஒடுக்கம்பட்டி கிராமத்தின் ஜனத்தொகை 1,524 ஆகும். இங்கு வடக்கு மற்றும் தெற்குத் தெரு பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் கையிறைப்பான்கள் நல்ல நிலையில் உள்ளன.

ஒத்தப்பட்டி கிராமத்தின் ஜனத்தொகை 100 ஆகும். இங்கு ஒரு சிறு மின் விசையிறைப்பான் நல்ல நிலையில் இயங்குகிறது.

கலைக்குடிப்பட்டி கிராமத்தின் ஜனத்தொகை 95 ஆகும். இங்கு 10,000 லிட்டர் கொள்ளளவு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் ஒரு கையிறைப்பான் உள்ளது. நண்பம்பட்டி கிராமத்தின் ஜனத்தொகை 120 ஆகும். இங்கு ஒரு கையிறைப்பான் நல்ல நிலையில் இயங்குகிறது. மேலும் இக்கிராமம் தஞ்சை மாவட்ட எல்லையில் உள்ளதால் அப்பகுதியில் இருந்தும் குடிநீர்க் குழாய்மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

[2007 அக்டோபர் 18

24—

**ஊராட்சியாக மாற்றுதல்**

**வினா எண் 12038—திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கம்பம் தொகுதி, கூடலூர் 21-வது வார்டு, லோயர் கேம்ப் கிராமத்தை ஊராட்சியாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உள்ளாட்சி அமைப்புகளை நிலை உயர்த்துவதற்கும், அவற்றின் எல்லைகளை மாற்றியமைப்பதற்கும், அவற்றைப் பிரித்தல் மற்றும் சேர்த்தல் தொடர்பாகப் பரிந்துரை செய்ய அரசு ஆணை (ப) எண் 131, ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சித் துறை, நாள் 16-3-2007-ல் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சில நடைமுறைகளையும், அரசின் முடிவினையும் தெரிவித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதனடிப்படையில் கம்பம் தொகுதி, கூடலூர் 21-வது வார்டு, லோயர் கேம்ப் கிராமத்தை ஊராட்சியாக மாற்ற தற்போது வாய்ப்பு இல்லை.

25—

**கழிவுநீர் வாய்க்கால்**

**வினா எண் 12708—திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, கவுந்தம்பாடிபுதூர், அறிஞர் அண்ணா வீதி, நல்லாகவுண்டன்பாளையம், வேலம்பாளையம், மருத்துவமனைமேடு பகுதி பொம்மன்பட்டி, அய்யன் தோட்டம் ஆகிய பகுதிகளில் புதிய கழிவுநீர் வாய்க்கால் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி ஊராட்சி ஒன்றியம், அய்யன் தோட்டம் (அய்யன்காடு) பகுதியில் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம் 2006-2007 (மாவட்ட ஊராட்சி) ஒதுக்கீட்டின்கீழ் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் வாய்க்கால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதிகளில் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப கழிவுநீர் வாய்க்கால் வரும் நிதி ஆண்டில் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

26 —

**ஊராட்சிகள் பிரித்தல்**

**வினா எண் 12744—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் ஒன்றியம், தும்பிப்பாடி ஊராட்சியை 2006 மக்கள் தொகை அடிப்படையில் இரண்டு ஊராட்சிகளாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) உள்ளாட்சி அமைப்புகளை நிலை உயர்த்துவதற்கும், அவற்றின் எல்லைகளை மாற்றியமைப்பதற்கும், அவற்றைப் பிரிப்பது மற்றும் சேர்ப்பது தொடர்பாகப் பரிந்துரை செய்ய அரசு ஆணை (ப) எண்131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16-3-2007-ல் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சில நடைமுறைகளையும், அரசின் முடிவினையும் தெரிவித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதனடிப்படையில் ஓமலூர் ஒன்றியம், தும்பிப்பாடி ஊராட்சியை 2006 மக்கள் தொகை அடிப்படையில் இரண்டு ஊராட்சிகளாகப் பிரிக்க தற்போது வாய்ப்பு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

27—

## குடிநீர் வசதி

**வினா எண் 13064—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, திடுமல் ஊராட்சி, டி. ராசாம்பாளையம் கிராம மக்களுக்கு ஆழ்துளைக் கிணறுமூலம் குடிநீர் வசதி செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், தி. ர்ர்சாம்பாளையம் கிர்ர்ம மக்களுக்கு 12-வது நிதிக் குழு மானியத்தில் குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

28—

## ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்தல்

**வினா எண் 13374—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதிக்குட்பட்ட தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்தை நிர்வாக வசதிக்காக இரண்டாகப் பிரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உள்ளாட்சி அமைப்புகளை நிலை உயர்த்துவதற்கும், அவற்றின் எல்லைகளை மாற்றியமைப்பதற்கும், அவற்றைப் பிரிப்பது மற்றும்





சேர்ப்பது தொடர்பாகப் பரிந்துரை செய்ய அரசு ஆணை (ப) எண் 131, ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சித் துறை, நாள் 16-3-2007-ல் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சில நடைமுறைகளையும், அரசின் முடிவினையும் தெரிவித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதனடிப்படையில் திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதிக்குட்பட்ட தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்தை நிர்வாக வசதிக்காக இரண்டாகப் பிரிக்க தற்போது வாய்ப்பு இல்லை.

29—

## கதிர் அடிக்கும் களம்

**வினா எண் 21959—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மல்லியகுந்தம் ஊராட்சி, கானங்காடு பகுதிக்குக் கதிர் அடிக்கும் களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, மல்லியகுந்தம் ஊராட்சி, கானங்காடு பகுதிக்குக் கதிர் அடிக்கும் களம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

30—

## ஏரிக்குத் தண்ணீர் வழங்கல்

**வினா எண் 13491—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, பொதியம்பள்ளம் அணையிலிருந்து சந்தப்பட்டி பெரிய ஏரிக்குத் தண்ணீர் விட அரசு ஆவன செய்யுமா?

[2007 அக்டோபர் 18

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

பொதியம்பள்ளம் அணையிலிருந்து, சிந்தல்பாடி ஏரிக்குப் போதிய நீர் வரத்து கிடைக்கப் பெறவில்லை என ஆய்வின்மூலம் அறியப்பட்டுள்ளது. எனவே, சிந்தல்பாடி ஏரியில் இருந்து சந்தப்பட்டி பெரிய ஏரிக்குத் தண்ணீர் வழங்கும் திட்டம் அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

**31—**

## ஆக்கிரமிப்பை அகற்றுதல்

**வினா எண் 13767—திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதியில் உள்ள அனைத்துக் கண்மாய்களிலும் ஆக்கிரமிப்புகள் உடனடியாக அகற்றப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நிலக்கோட்டை தொகுதியில், மஞ்சளாறு வடிநிலக் கோட்டம், பெரியகுளத்தின் ஆளுகைக்கு உட்பட்ட 17 கண்மாய்களில் பயிர் வகை ஆக்கிரமிப்புகள் மற்றும் கொங்கர்குளத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டிய கட்டடங்கள் மற்றும் குடிசைகள் முதலியவை கண்டறியப்பட்டதில், 139 கட்டடங்களுக்கான ஆக்கிரமிப்புகளில் 134 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன. மீதமுள்ள 5 ஆக்கிரமிப்புகள் நீதிமன்ற வழக்கில் உள்ளதால், அவை அகற்றப்படவில்லை. மேலும், கண்மாய் அனைத்திலும் உள்ள பயிர் வகை ஆக்கிரமிப்புகளை அகற்ற வருவாய்த் துறையினருடன் கூட்டாய்வு நடத்தி வருவாய்த் துறை, காவல் துறை ஒத்துழைப்போடு அகற்றப்படும். கண்மாய் ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆக்கிரமிப்பை அகற்ற தாக்கீது அனுப்ப உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2007 அக்டோபர் 18]

**32—**

## தூர் வாரும் பணி

**வினா எண் 14604—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, அரசகுளம் கண்மாய் மற்றும் கால்வாயைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், அரசகுளம் கிராமக் கண்மாய், மழைநீர் வடிகால் கண்மாயாகும். இக்கண்மாய் 508 ஏக்கர் பாசனப் பரப்புடையது. வரும் நிதியாண்டில் பெறப்படும் வருடாந்திர பராமரிப்பு நிதியில் முன்னுரிமை அடிப்படையில் தூர் வாரும் பணி மேற்கொள்ளப்படும்.

**33 —**

## ஏரி அமைத்தல்

**வினா எண் 14635—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, பெட்டமுகிளாலம் அருகில் மாதேஸ்வரன் பள்ளம் குறுக்கே ஏரி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், பெட்டமுகிளாலம் கிராமத்தில் மாதேஸ்வரன் பள்ளம் குறுக்கே ஏரி

அமைக்கும் திட்டத்திற்கு ரூ.99.40 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பொதுப் பணித் துறை நீர்வள ஆதார அமைப்புத் திட்ட உருவாக்க தலைமைப் பொறியாளர் அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

**34—**

**ஏரி அமைத்தல்**

**வினா எண் 14637—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, முழுவனஹள்ளி கிராமம் நீரஹல்லா என்ற இடத்தில் ஏரி கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

தேன்கனிக்கோட்டை வட்டம், முழுவனஹள்ளி கிராமத்தில் நீரஹல்லா குறுக்கே ஏரி அமைக்க ரூ.95.50 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பொதுப் பணித் துறை, நீர்வள ஆதார அமைப்புத் திட்ட உருவாக்க தலைமைப் பொறியாளர் அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

**35—**

**கால்வாய் அமைத்தல்**

**வினா எண் 18755—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, தருமபுரி சனத்குமார் ஆற்றிலிருந்து ஆழக்கரை ஏரிக்குக் கால்வாய் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

தருமபுரி தொகுதியில், சனத்குமார் ஆறு மற்றும் ஆழக்கரை ஏரி தள ஆய்வு செய்யப்பட்டதில், சனத்குமார் ஆற்றின் குறுக்கே காமாட்சி





அம்மன் கோயில் அருகே உள்ள தடுப்பணையின் மட்டத்தைவிட ஆழக்கரை ஏரி சுமார் 2 மீட்டர் உயரமாக இருப்பதால், ஆழக்கரை ஏரிக்கு புதிய வாய்க்கால் அமைக்க தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமில்லை.

**36—**

**ஆக்கிரமிப்பை அகற்றுதல்**

**வினா எண் 20673—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஒன்றியம், ஆனைகுளத்தின் கால்வாயில் ஆக்கிரமிப்பை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஒன்றியம், ஆனைகுளம் கால்வாயில் ஆக்கிரமிப்புகள் ஏதுமில்லை. ஆனைகுளத்தில் மட்டும் புல எண் 79-ல் 0.08.0 ஹெக்டேர் நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்றுவதற்கு காவல் துறை மற்றும் வருவாய்த் துறை உதவியுடன் பொதுப் பணித் துறை நீர்வள ஆதார அமைப்புத் தலைமைப் பொறியாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**37—**

**வாகனம் வழங்குதல்**

**வினா எண் 23723—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு சட்டக் கல்லூரிக்கு நிர்வாக உதவிக்காக வாகனம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**38—**

**கல்விக் கடன்**

**வினா எண் 23724—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு கல்விக் கடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**39—**

**கூடுதல் பேருந்து**

**வினா எண் 1268—திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், திருமானூர்-தூத்தூர் வரை கூடுதல் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சி மண்டலத்தில் இருந்து ஒரு புறநகர் பேருந்து மூலம் தஞ்சாவூரிலிருந்து, தூத்தூர், திருமானூர் வழியாக காமரசவல்லி தொட்டு 2 நடைகளும், திருமானூர்-தூத்தூர் (வழி) ஏலாக்குறிச்சி வழித்தடத்தில் 6 நடைகளுமாக ஆக மொத்தம் 8 நடைகள் இயக்கப்படுகிறது. மேலும் அரியலூரில் இருந்து ஒரு நகரப் பேருந்து வி.கைகாட்டி, கடம்பூர் வழியாக குருவாடிக்கு 4 நடைகளும், கும்பகோணம் மண்டலப் பேருந்து, தஞ்சாவூரில் இருந்து திருமானூர் வழியாக ஏலாக்குறிச்சிக்கு 2 நகரப் பேருந்துகள்மூலம் 24 நடைகளும், மற்றொரு நகரப் பேருந்தின்மூலம் தஞ்சாவூரில் இருந்து திருமானூர் வழியாக கீழகுளத்தூருக்கு 10 நடைகளும் இயக்கப்படுகிறது.

**40—**

**பேருந்து வசதி**

**வினா எண் 6378—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து செக்கானூரணி, செல்லம்பட்டி, வாலாந்தூர், நாட்டாபட்டி வழியாக குறவக்குடி, ஒத்தப்பாறைப்பட்டிக்கு உசிலம்பட்டியிலிருந்து செல்லும் பேருந்தை காலை, மாலை நேரங்களில் மேலும் கூடுதல் நடைகள் விட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மதுரை பெரியார் நிலையத்திலிருந்து செக்கானூரணி, செல்லம்பட்டி, வாலாந்தூர், நாட்டாபட்டி வழியாக குறவக்குடிக்கு 4 தனி நடைகள் பேருந்து இயக்கப்படுகிறது. மேலும், குறவக்குடிக்கு 1.3 கி.மீ தூரத்திற்கு முன்பாகவுள்ள நாட்டாபட்டிக்கு மதுரை பெரியார் நிலையத்திலிருந்து 16 தனி நடைகள் பேருந்து இயக்கப்படுகிறது. திருமங்கலத்திலிருந்து குறவக்குடிக்கு 6 தனி நடைகள் பேருந்து வசதியுள்ளது. எனவே, குறவக்குடி கிராம மக்களின் தற்போதைய தேவைக்கேற்ப போதுமான பேருந்து வசதிகள் உள்ளன. உசிலம்பட்டி-வகுரணி வழித்தடத்தில் பிரதானச் சாலையிலிருந்து 1.6 கி.மீ. தூரத்தில் ஒத்தப்பாறைப்பட்டி

கிராமம் உள்ளது. ஊருக்குள் திரும்புவதற்கு இட வசதியில்லை. தற்போது ஒத்தப்பாறைப்பட்டி கிராம மக்கள் ஒத்தப்பாறைப்பட்டி பிரிவு வழியாக இயக்கப்படும் உசிலம்பட்டி-வகுரணி தடப் பேருந்தின் 8 தனி நடைகளையும் உசிலம்பட்டியிலிருந்து ஒத்தப்பாறைப்பட்டி வழியாக பழனிப்பட்டிக்கு இயக்கப்படும் மினி பேருந்தினையும் பயன்படுத்தி வருகிறார்கள். 150 மக்கள் தொகை மட்டுமே கொண்ட இக்கிராமத்திற்கு தற்போதுள்ள பேருந்து வசதிகள் போதுமானதாகும்.

**41—**

## பேருந்து நிறுத்தம்

**வினா எண் 6390—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, திருமங்கலம்-உசிலம்பட்டி பிரதான சாலையிலுள்ள எம்.ஜி.ஆர். நகருக்கு பேருந்து நிறுத்தம் செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி-திருமங்கலம் சாலையில் தும்மக்குண்டு இ.பி. அலுவலக பேருந்து நிறுத்தத்திலிருந்து 0.5 கி.மீ தூரத்திலும் காங்கேயநத்தம் பிரிவு நிறுத்தத்திற்கு 1.0 கி.மீ. தூரத்திற்கு முன்பாகவும் எம்.ஜி.ஆர். நகர் அமைந்துள்ளது. இங்கு குறைவான குடியிருப்புகளே உள்ளன. தற்போது இப்பகுதியில் உள்ள பயணிகள் தும்மக்குண்டு அலுவலக நிறுத்தத்தினையே பயன்படுத்துகின்றனர். தற்போதுள்ள பேருந்து நிறுத்தத்திற்கு மிக அருகிலேயே எம்.ஜி.ஆர். நகர் அமைந்துள்ளதாலும் தனிப் பேருந்து நிறுத்தம் அளிக்கும் அளவிற்கு பயணிகள் ஏறி இறங்க வாய்ப்பில்லை என்பதாலும் இந்த இடத்தில் புதிய பேருந்து நிறுத்தம் அளிக்கத் தேவை எழவில்லை.

**42—**

## பேருந்து வசதி

**வினா எண் 8103—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், ஜமனப்புதூர் ஊராட்சி குமரன் நகருக்கு இயக்கி வந்த பேருந்துகள் 102பி, 300 ஆகிய பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

102பி தடத்தில் திருப்பத்தூரிலிருந்து குமரன் நகருக்கு 14.30 மணிக்கு புறப்படும் நடை டி27 நகரத் தடத்தில் 2 நடைகள் 15.30 மணிக்கு இயக்கப்படுகின்றன. 300 தடத்தில் திருப்பத்தூரிலிருந்து 8.00 மணிக்கு புறப்பட்டு குமரன் நகர் செல்லும் நடை டி6 நகரத் தடத்தில் 2 நடைகள் அதே 8.00 மணிக்கு இயக்கப்படுகின்றன. மேலும் டி4 நகரத் தடப் பேருந்தில் 4 நடைகளும் டி27 நகரப் பேருந்தில் 2 நடைகளும் திருப்பத்தூர்-குமரன் நகர் எனக் கூடுதலாக இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, கோரிக்கை தடத்தில் போதிய பேருந்து நடைகள் இயக்கப்படுவதால், 102பி மற்றும் 300 தடப் பேருந்துகளை திருப்பத்தூர்-குமரன் நகர் என இயக்கும் அவசியம் எழவில்லை.

**43—**

## பேருந்து வசதி

**வினா எண் 9140—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி இரயில் நிலையத்திலிருந்து வேய்ந்தான்குளம் பேருந்து நிலையத்திற்கு பேருந்து வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி இரயில் நிலையம், நகரப் பேருந்துகள் செயல்பட்டு வரும் சந்திப்புப் பேருந்து நிலையத்திற்கு மிக அருகில் உள்ளது. சந்திப்புப் பேருந்து நிலையத்திலிருந்து வேய்ந்தான்குளம் பேருந்து நிலையத்திற்கு நகர் மற்றும் புறநகர் பேருந்துகள்மூலம் ஏராளமான பேருந்து வசதிகள் உள்ளன. இருப்பினும் 22-11-2006 முதல் அதிகாலை வேளையில் சென்னை-கன்னியாகுமரி இரயில் திருநெல்வேலி வந்து சேரும்

[2007 அக்டோபர் 18

நேரத்தினை கருத்திற்கொண்டு இரயில் நிலையத்திலிருந்து சந்திப்புப் பேருந்து நிலையம் வழியாக வேய்ந்தான்குளம் பேருந்து நிலையத்திற்கு பரீட்சார்த்தமாக ஒரு நடை இயக்கப்பட்டு வருகிறது.

**44—**

## பேருந்து வசதி

**வினா எண் 9403—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, இடிந்தகரையிலிருந்து தில்லைவனந்தோப்பு, ஆவுடையாள்புரம், கூத்தன்குழி, நவ்வலடி வழியாக திசையன்விளைக்குப் பேருந்து இயக்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக நாகர்கோவில் வட்டாரம் மூலம் தடம் எண் 560, 570, 572 மற்றும் 573 ஆகிய வழித்தடப் பேருந்துகள் தற்போது கூடங்குளம், வைராவிகிணறு, இடிந்தகரை, விஜயாபதி, தில்லைநகர், ஆவுடையாள்புரம், கூத்தன்குழி மற்றும் திசையன்விளை வழியாக இயக்கப்பட்டு வருகிறது. தில்லைவனந்தோப்பு தில்லைநகரில் இருந்து 1 கி.மீ. தூரத்திலேயே அமைந்துள்ளதாலும், இச்சாலை பேருந்து இயக்க உகந்ததாக இல்லாதிருப்பதாலும் தில்லைவனந்தோப்பிற்கு பேருந்து இயக்க இயலவில்லை.

**45—**

## பேருந்து வசதி

**வினா எண் 9662—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், மதுரை கோட்டம்–3, நாகர்கோவில், நாகர்கோவில்–செட்டிகுளம் அணுமின் நிலையக் குடியிருப்பு வரை இயக்கப்பட்டு வரும் நகரப் பேருந்து 3பி கூடங்குளம் அணுமின் நிலைய நுழைவாயில் வரை வந்து செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

நாகர்கோவிலிலிருந்து கூடங்குளம் அணுமின் நிலைய குடியிருப்புக்கு, தடம் எண் 3பி/வி ஆகிய பேருந்துகள்மூலம் தினசரி 28 தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இரு நடைகளை கூடங்குளம் அணுமின் நிலைய நுழைவு வாயில்வரை நீட்டித்து இயக்கும்போது நடை ஒன்றிற்கு 10 கி.மீ. தூரம்வரை அதிகரிக்கும். இதனால் இவ்வழித்தடங்களின் நடைகள் குறைவு ஏற்படவும், பயன்பெறும் பயணிகள் பயண நேரம் பாதிக்கப்படவும் வாய்ப்புகள் உள்ளன. இருப்பினும் 19-9-2006 முதல் நாகர்கோவிலிலிருந்து கூடங்குளம் அணுமின் நிலைய நுழைவு வாயில்வரை 3வி என்ற வழித்தடப் பேருந்து மூலம் தினசரி 10 தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

**46—**

## பேருந்து வசதி

**வினா எண் 9664—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், மதுரை கோட்டம்–3, நாகர்கோவிலிலிருந்து அஞ்சுகிராமம், செட்டிகுளம், பெருமணல் விலக்கு, இருக்கன்துறை, பொன்னார்குளம், கூடங்குளம், வைராவிகிணறு, இடிந்தகரை, விஜயாபதி, ஆவுடையாள்புரம் வழியாக கூத்தன்குளிக்குப் பேருந்து இயக்கிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அஞ்சுகிராமம், செட்டிகுளம், பெருமணல் விலக்கு, இருக்கன்துறை, பொன்னார்குளம், கூடங்குளம், வைராவிகிணறு, இடிந்தகரை, விஜயாபதி, ஆவுடையாள்புரம், கூத்தன்குழி ஆகிய அனைத்துப் பகுதிகளையும் இணைத்து 15-9-2006 முதல் தடம் எண் 560, 570எஸ், 572, 573, 574, 570சி வாயிலாக 22 நடைகளில் பேருந்துகள் கூடுதலாக இயக்கப்பட்டு வருகின்றன.

[2007 அக்டோபர் 18

**47—**

## பேருந்து வசதி

**வினா எண் 9665—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், மதுரை கோட்டம்–2, திருநெல்வேலி முதல் ஆத்தங்கரை பள்ளிவாசல் வழியாக கூடங்குளம் அணுமின் நிலைய நுழைவாயில்வரை வந்த பேருந்தை மீண்டும் அணுமின் நிலைய நுழைவாயில் வரை வந்து செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலியிலிருந்து முனைஞ்சிப்பட்டி, சாத்தான்குளம், இட்டமொழி, திசையன்விளை, நவலடி, ஆத்தங்கரை, பள்ளிவாசல் வழியாக கூடங்குளத்திற்கு தடம் எண் 65 எனும் புறநகர்ப் பேருந்து மூலம் தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று 10-12-2006 முதல் இவ்வழித்தடப் பேருந்தை கூடங்குளம் அணுமின் நிலைய நுழைவு வாயில்வரை நீட்டித்து இயக்கப்பட்டு வருகிறது.

**48—**

## பேருந்து வசதி

**வினா எண் 9765—திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதி, கவியரசு கண்ணதாசன் நகர், முத்தமிழ் நகரில் தடம் எண் 116, 33 பேருந்துகள் குறைந்த அளவில் இயக்கப்படுவதால் பொதுமக்கள் சிரமப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது மாநகரப் போக்குவரத்துக் கழகம், கவியரசு கண்ணதாசன் நகர் மற்றும் முத்தமிழ் நகர் பயணிகள் பயன்பாட்டிற்காக கீழ்க்கண்டவாறு பேருந்துகளை இயக்கி வருகிறது:

**1. கவியரசு கண்ணதாசன் நகரிலிருந்து இயக்கப்படும் பேருந்துகளின் விவரம்:**

| வ. எண் | தடம் எண் | புறப்படும்/சேருமிடம் | பேருந்து எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 2ஏ நீட்டிப்பு எல்.எஸ்.எஸ் | அண்ணாசதுக்கம்—கவியரசு கண்ணதாசன் நகர் | 6 |
| 2 | 7ஜி | பிராட்வே-கவியரசு கண்ணதாசன் நகர் | 10 |
| 3 | 37ஈ | வடபழனி-கவியரசு கண்ணதாசன் நகர் | 2 |
| 4 | 116 எல்.எஸ்.எஸ் | பிராட்வே-கவியரசு கண்ணதாசன் நகர் | 5 |
| 5 | 170டி விரைவு | உயிரியல் பூங்கா-கவியரசு கண்ணதாசன் நகர் | 4 |
| | | மொத்தம் | 27 |

**2. முத்தமிழ் நகரிலிருந்து இயக்கப்படும் பேருந்துகளின் விவரம்:**

| வ. எண் | தடம் எண் | புறப்படும்/சேருமிடம் | பேருந்து எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | எம்116 | பிராட்வே-முத்தமிழ் நகர் | 4 |
| 2 | 46ஜி நீட்டிப்பு | கோயம்பேடு மார்க்கெட்-முத்தமிழ் நகர் | 1 |
| 3 | 138 | எண்ணூர்-முத்தமிழ் நகர் | 1 |
| | | மொத்தம் | 6 |

[2007 அக்டோபர் 18

3. மேற்கண்ட தடப் பேருந்துகள் தவிர, கவியரசு கண்ணதாசன் நகர் வழியாக கீழ்க்கண்ட தடப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன:

| வ. எண் | தடம் எண் | புறப்படும்/சேருமிடம் | பேருந்து எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 170ஈ விரைவு | ஐ.ஓ.சி.-தாம்பரம் | 2 |
| 2 | சி44 | பிராட்வே-கொடுங்கையூர் பார்வதி நகர் | 2 |
| | | மொத்தம் | 4 |

மேலே குறிப்பிட்டுள்ள பேருந்து வசதிகளே அப்பகுதி மக்களுக்குப் போதுமானதாகும்.

**49—**

## சொகுசுப் பேருந்து

**வினா எண் 12012—திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பத்மநாபபுரம் தொகுதி, தக்கலை பேருந்து நிலையத்திலிருந்து சென்னை மற்றும் பெங்களூருக்கு அரசு சொகுசுப் பேருந்து விட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட் மூலமாக தடம் எண் 288-ல் தக்கலையிலிருந்து சென்னைக்கு தினசரி 2 சொகுசுப் பேருந்துகள் 2 நடைகள் வீதம் 13-9-2006 முதல் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் தக்கலை-பெங்களூர் தடம் தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால் இத்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து அடுத்து நடக்கும் இரு



2007 அக்டோபர் 18]

மாநில ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின்போதுதான் பரிசீலித்து முடிவு செய்ய இயலும். மேலும் தக்கலையிலிருந்து பெங்களூர் செல்லும் பயணிகள் தக்கலை வழியாக இயக்கப்படும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக தடம் எண் 687 திருவனந்தபுரம்-பெங்களூர் தடப் பேருந்து வசதியை பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக உள்ளது. மேலும் தக்கலை பயணிகள் அருகிலுள்ள நாகர்கோவில் சென்று அங்கிருந்தும், அதன் வழியாக பெங்களூருக்கு இயக்கப்படும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக தடப் பேருந்துகளையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**50—**

## பணிமனை அமைத்தல்

**வினா எண் 12013—திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*பத்மநாபபுரம் தொகுதி, மருந்துக்கோட்டை பகுதியில் புதிய போக்குவரத்துப் பணிமனை அமைப்பதற்கு அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

நாகர்கோவில் வட்டாரத்துடன் இணைந்து செயல்பட்டுவரும் மார்த்தாண்டம் பணிமனை, மருந்துக்கோட்டை பகுதியிலிருந்து 9 கி.மீ. குறுகிய தூரத்திலும், திருவட்டாறு பணிமனை 17 கி.மீ. தூரத்திலும் அமைந்திருப்பதால், மருந்துக்கோட்டை பகுதியில் புதியதாக ஒரு பணிமனை அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

**51—**

## பேருந்து வசதி

**வினா எண் 12033—திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நிலக்கோட்டை தொகுதி, வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றியம், கோம்பைபட்டி, ரெட்டியபட்டி கிராமம், விராலிப்பட்டி*

ஊராட்சியிலுள்ள கருப்பமூப்பன்பட்டி, சாமியார்மூப்பனூர் ஆகிய கிராமங்களுக்கு வத்தலகுண்டிலிருந்து பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திண்டுக்கல் வட்டாரம்மூலம் வத்தலகுண்டு–நிலக்கோட்டை (வழி) கோம்பைபட்டி, குள்ளசெட்டிப்பட்டி தடத்தில் 3 பேருந்துகள் மூலம் 12 தனி நடைகளும், வத்தலகுண்டு–பூவம்பட்டி (வழி) விராலிப்பட்டி, கருப்பமூப்பன்பட்டி தடத்தில் 2 தனி நடைகளும், வத்தலகுண்டு–சின்னுபட்டி வழி ரெட்டியபட்டி தடத்தில் 4 தனி நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், வத்தலகுண்டு–வி.கரும்பப்பட்டி (வழி) பழைய வத்தலகுண்டு தடத்தில் 4 தனி நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்து வசதியினை வி.குரும்பப்பட்டியிலிருந்து 1.0 கி.மீ. தூரத்திலுள்ள சாமியார்மூப்பனூர் கிராமப் பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**52—**

## பேருந்து வசதி

**வினா எண் 12069—திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிர்லா சிமெண்ட் ஆலை உள்ள வி.கைகாட்டியிலிருந்து சென்னைக்கு பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிட்., விழுப்புரம் மண்டலத்திலிருந்து நேரடியாக அரியலூர்–சென்னை (வழி) பிர்லா சிமெண்ட் ஆலை உள்ள வி.கைகாட்டி, ஜெயங்கொண்டம் வழியாக சென்னைக்கு 3 பேருந்துகள்மூலம் தினசரி 6 நடைகளும்,



திருச்சி மண்டலம்மூலம் வி.கைகாட்டிக்கு அருகில் உள்ள அரியலூரிலிருந்து சென்னைக்கு 4 பேருந்துகள்மூலம் தினசரி 8 நடைகள் இயக்கப்படுகின்றன. இதுதவிர, விழுப்புரம் போக்குவரத்துக் கழகத்தால் ஜெயங்கொண்டம்–சென்னை (வழி) ஆண்டிமடம், விருத்தாச்சலம் வழித்தடத்தில் 5 பேருந்துகள்மூலம் 10 நடைகளும், செந்துரை–ஜெயங்கொண்டம்–சென்னை வழித்தடத்தில் 2 பேருந்துகள் மூலம் தினசரி 4 நடைகளும் இயக்கப்படுகின்றன. கும்பகோணம் போக்குவரத்துக் கழகத்தால் தா.பழூர்–சென்னை (வழி) ஜெயங்கொண்டம் மற்றும் செந்துரை–சென்னை (வழி) ஜெயங்கொண்டம் வழித்தடத்தில் 2 பேருந்துகள்மூலம் தினசரி 4 நடைகளும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்மூலம் திருமழப்பாடி—சென்னை (வழி) அரியலூர் வழித்தடத்தில் பேருந்தும் இயக்கப்படுகின்றன.

**53—**

## பேருந்து வசதி

**வினா எண் 12549—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கல்லூரணி கிராமத்திற்கு சிவகங்கையிலிருந்து நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை–திருப்பாச்சேத்தி வழித்தடத்தில் கல்லூரணிவிலக்கு வழியாக நாள் ஒன்றுக்கு 14 நடைகள் அரசுப் பேருந்தினால் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் கல்லூரணிவிலக்கிலிருந்து கல்லூரணி 0.7 கி.மீ. தூரமே உள்ளது. மேலும் கல்லூரணிவிலக்கிலிருந்து கல்லூரணி செல்லும் சாலை பேருந்து இயக்கத் தகுதியற்ற நிலையில் உள்ளது.

[2007 அக்டோபர் 18

**54—**

## பேருந்து வசதி

**வினா எண் 13402—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம்—சென்னைக்கும், போளூரில் இருந்து கலசப்பாக்கம், செங்கம் வழியாக பெங்களூருக்கும், போளூரில் இருந்து கலசப்பாக்கம் தென்பள்ளிப்பட்டு, பில்லூர், பழங்கோயில், கீழ்ப்பொத்தரை வழியாக காஞ்சிக்கும், திருவண்ணாமலையில் இருந்து துரிஞ்சாபுரம் வழியாக காலனிக்கும் பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தடம் எண் 241 செங்கம்—சென்னை (வழி) போளூர், கலசப்பாக்கம் என தினசரி 2 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது. இதுவல்லாமல் கலசப்பாக்கத்திலிருந்து 1.0 கி.மீ. தூரத்திலுள்ள கலசப்பாக்கம் கூட்டுச்சாலை வழியாக சென்னைக்கு 10 பேருந்துகள் தினசரி 20 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. கோரிக்கைத் தடம் போளூர்—காஞ்சி (வழி) கலசப்பாக்கம், தென்பள்ளிப்பட்டு, பில்லூர், பழங்கோயில், கீழ்ப்பொத்தரை ஒரு புதிய வழித்தடமாதலால் புதிய வழித்தடங்கள் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளும்போது இத்தடத்தில் இயக்குவது குறித்தும் பரிசீலிக்கப்படும். நகரத் தடம் டி16 திருவண்ணாமலையிலிருந்து துரிஞ்சாபுரம், துரிஞ்சாபுரம் காலனி வழியாக கார்குணம் வரை தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. போளூர்—பெங்களூர் (வழி) கலசப்பாக்கம், செங்கம் ஒரு புதிய அண்டை மாநிலத் தடமாகும். அண்டை மாநில ஒப்பந்தத்தில் 2006-2007 ஆம் ஆண்டில் புதிய தடம் இயக்க வழிவகை செய்யப்படவில்லை.

**55—**

## பேருந்து வசதி

**வினா எண் 14052—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 அக்டோபர் 18]

திருவண்ணாமலை மாவட்டம் பெரணமல்லூர் தொகுதி போளூர்—இராயங்குப்பம், ஆரணி—அரியாத்தூர், போளூர்—தெற்குமேடு ஆகிய கிராமங்களுக்கும், திருமலை—ஆரணிக்கும் அரசுப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஆரணி—அரியாத்தூர் எண் எ7 நகரத் தடப் பேருந்துமூலம் தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஆரணி—திருமலை (வழி) கீழப்பட்டு நகரப் பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. போளூர்—தெற்குமேடு, போளூர்—இராயங்குப்பம் ஒரு புதிய வழித்தடமாகும். வருங்காலத்தில் புதிய வழித்தடங்கள் இயக்க அரசு அனுமதிக்கும்போது இத்தடம் இயக்கப்படுவது குறித்துப் பரிசீலிக்கப்படும். ஆனால் இராயங்குப்பம், தெற்குமேடு கிராமங்களுக்கு தற்போது ஆரணியிலிருந்து இயக்கப்பட்டு வரும் எ7 நகரத் தடப் பேருந்துமூலம் தினசரி 4 நடைகள் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

V 211, 31 P07 P07.37.2

**56—**

## பேருந்து வசதி

**வினா எண் 14058—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர், திண்டிவனம், ஆரணி, பெரணமல்லூர் தொகுதி வழியாக பெரணமல்லூர், மழையூர், தேசூர், தெள்ளார் வழித்தடத்தில் அரசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்போது வேலூர்—திண்டிவனம் (வழி) ஆரணி, வந்தவாசி என பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இத்தடத்தின் பயண நேரம் 3.30 மணியாகும். ஆனால் கோரிக்கைத் தடத்தில் பயண நேரம் 4.15 மணி நேரமாகும். ஆகவே இத்தடத்தில் நேரடிப் பயணிகள் விரும்பிப் பயணம் செய்யமாட்டார்கள். ஆகவே, கோரிக்கைத்தட இயக்கம் உரிய பயனளிக்காது.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 228091.

[2007 அக்டோபர் 18

**57—**

## பத்திரப் பதிவு

**வினா எண் 18788—திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராம ஊராட்சிகளில் ஊரமைப்புத் துறைமூலம் அனுமதி பெற்ற மனைப் பிரிவுகளை மட்டும் பத்திரப் பதிவு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

பொதுக் கொள்கைக்கு மாறான ஆவணங்களைப் பதிவு செய்வதை மறுக்கும் உரிமையை 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின் பிரிவு 22A வழங்குகிறது. இதில் வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி அரசாணை (நிலை) எண் 150, வணிக வரி, நாள் 22-9-2000-ல் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளிலுள்ள மனைகளுக்கான ஆவணங்களைப் பதிவு செய்யும்போது சம்மந்தப்பட்ட உள்ளாட்சி மன்றத்திலிருந்து தடையின்மைச் சான்று பெற்ற பின்னரே பதிவு செய்யப்பட வேண்டுமென அறிவிக்கை வெளியிடப்பட்டு நகர்ப்புறங்களில் முறையாக உள்ளூர் திட்டக் குழுமத்திடம் அனுமதி பெற்று அமைக்கப்படும் மனைப் பிரிவுகளிலுள்ள மனைகளுக்கான ஆவணங்கள் மட்டுமே பதிவுத் துறையால் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

**58—**

## பத்திரப் பதிவு

**வினா எண் 18789—திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நகர்ப்புறங்களில் முறையாக நகரத் திட்டக் குழுமத்திடம் அனுமதி பெற்று அமைக்கப்படும் மனைப் பிரிவுகளை மட்டும் பத்திரப் பதிவு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

பொதுக் கொள்கைக்கு மாறான ஆவணங்களைப் பதிவு செய்வதை மறுக்கும் உரிமையை 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின் பிரிவு 22A வழங்குகிறது. இதில் வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி அரசாணை (நிலை) எண் 150, வணிக வரி, நாள் 22-9-2000-ல் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளிலுள்ள மனைகளுக்கான ஆவணங்களைப் பதிவு செய்யும்போது சம்மந்தப்பட்ட உள்ளாட்சி மன்றத்திலிருந்து தடையின்மைச் சான்று பெற்ற பின்னரே பதிவு செய்யப்பட வேண்டுமென அறிவிக்கை வெளியிடப்பட்டு நகர்ப்புறங்களில் முறையாக உள்ள திட்டக் குழுமத்திடம் அனுமதி பெற்று அமைக்கப்படும் மனைப் பிரிவுகளிலுள்ள மனைகளுக்கான ஆவணங்கள் மட்டுமே பதிவுத் துறையால் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

**59—**

## அலுவலகத்தைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 21799—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தை ரூ.5.20 இலட்சம் செலவில் பழுதுபார்க்கும் பொருட்டு தற்போது பொதுப் பணித் துறையினரிடமிருந்து சம்பந்தப்பட்ட மாவட்டப் பதிவாளர்மூலம் முன்னுரிமைப் பட்டியல் பெறப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் நிதியாண்டில் மேற்சொன்ன ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தைப் பழுதுபார்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

[2007 அக்டோபர் 18

**60—**

## தேயிலைத் தொழிற்சாலை

**வினா எண் 13459—திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மூடப்பட்டுள்ள கீழ்கோத்தகிரி கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையை திறந்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

கீழ்கோத்தகிரி கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை தற்போது கலைக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை கலைக்கப்பட்டதற்கான காரணங்கள் பின்வருமாறு:—

1. உறுப்பினர்கள் குறைந்தபட்ச உற்பத்திக்குத் தேவையான பச்சைத் தேயிலையை வழங்க முன்வரவில்லை.
2. அதனால் உற்பத்திச் செலவு அதிகமாகி நட்டத்தில் இயங்கி வந்தது.
3. தனியார் தேயிலைத் தொழிற்சாலைகள் வழங்கும் பசுந்தேயிலைக்கான விலை வழங்கப்பட்டும், உறுப்பினர்கள் போதிய பசுந்தேயிலையை தொழிற்சாலைக்கு வழங்கவில்லை.
4. இத்தொழிற்சாலை தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டம் பிரிவு 81-ன் கீழ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, அந்த விசாரணை அதிகாரியின் பரிந்துரைப்படி, 3-10-2003 அன்று கலைக்கப்பட்டது.
5. உறுப்பினர்களுக்கு பல வாய்ப்புகள் அளிக்கப்பட்டும், தொழிற்சாலையை நடத்த இன்ட்கோசர்வ் நிறுவனம் எடுத்த முயற்சிகளுக்கு பலன் ஏதும் கிடைக்கவில்லை.

சட்டபூர்வமாக கொடுக்கப்படவேண்டிய இனங்களின் மதிப்பு ரூ.84.00 இலட்சம் உள்ளதாலும், பொறுப்புக்கும், ஆஸ்திக்கும் இடைவெளி அதிகமாக உள்ளதாலும், நாளொன்றுக்கு பத்து இலட்சம் கிலோ பசுந்தேயிலை உறுப்பினர்கள் வழங்க உறுதி அளிக்காததாலும் இத்தொழிற்சாலையை மீண்டும் நடத்த வாய்ப்பில்லை.



2007 அக்டோபர் 18]

**61—**

## நிலம் கையகப்படுத்தல்

**வினா எண் 16742—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், பாகல்பட்டி ஊராட்சியில் ஹைடெக் மினரல் நிறுவனம் பயன்படுத்திவரும் கோவில் நிலத்தை அரசு அறிவித்துள்ள கயிறு தொழிற்சாலைக்கு கையகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், செல்லப்பிள்ளை கிராமத்தில் புல எண் 44/1 மற்றும் 44/2-ல் உள்ள மொத்த நிலம் 3.26 ஹெக்டேர் அருள்மிகு பாகல்பட்டி சென்றாய பெருமாள்சாமி கோயிலுக்குச் சொந்தமான பட்டா நிலமாகும். மேற்படி நிலத்திற்கு அருகில் ஹைடெக் மினரல் நிறுவனம் அமைந்துள்ளது. எனவே, இந்த இடத்தில் கயிறு தொழிற்சாலை அமைத்தால் ஹைடெக் நிறுவனத்திடமிருந்து வெளியாகும் கரித்தூளும், மண்குவியலும், புழுதியும் கயிறு தொழிற்சாலைக்கு ஊறுவிளைவிக்கும் என்பதால் இந்த இடம் கயிறு தொழிற்சாலை அமைக்க ஏற்ற இடமில்லை. ஆகவே, மேற்படி நிலத்தை கையகப்படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**62—**

## விவசாயிகளுக்கு நிவாரணம்

**வினா எண் 17296—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் வெள்ளச் சேதத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் முழுமையாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை வட்டத்திற்குட்பட்ட சட்டமன்றத் தொகுதியானது மலையும் மலைசார்ந்த இடமாக உள்ளதால் தேயிலை, காபி மற்றும் சில இடங்களில் குருமிளகு போன்ற தோட்டப் பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. இவை தி/வா. டாடா, பிர்லா, பிபி.டிசி மற்றும் இதுபோன்ற பெரிய நிறுவனங்களால் பயிர் செய்யப்பட்டு வருகின்றன. புவியியல் அமைப்புப்படி மலைப்பகுதியாக உள்ளதால் நாளதுவரையிலும் பயிர்களுக்கு வெள்ளச் சேதம் ஏற்படவில்லை. இதுவரை எவ்விதமான கோரிக்கை மனுக்களும் வரப்பெறவில்லை. அவ்வாறு வெள்ளச்சேதம் ஏதும் ஏற்பட்டு விவசாயிகள் பாதிக்கப்பட்டால், உரிய நிவாரணத் தொகை வழங்க அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) வினா எழாது.

**63—**

## பயிற்சி அளித்தல்

**வினா எண் 17298—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி மாணவ, மாணவிகளுக்கு நில நடுக்கம் ஏற்படும்போது தங்களைப் பாதுகாத்துக்கொள்ள பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் நில நடுக்கம் ஏற்படும்போது மாணவ, மாணவியர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளத் தேவையான பயிற்சி அளிப்பது குறித்துக் குழு ஒன்று அமைக்கப்பட்டு மாணவ, மாணவியர்களுக்கு உரிய பயிற்சி அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



**64—**

## நிவாரண நிதி

**வினா எண் 17300—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் வீடுகளுக்கு தற்போது வழங்கப்படும் 2,000 ரூபாயைப் பத்தாயிரமாக உயர்த்தித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள பேரிடர் நிவாரண நிதி விதிப்படி இயற்கைச் சீற்றங்களினால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ.2,000/-மும் பகுதியாகப் பாதிப்படைந்த குடிசைகளுக்கு ரூ.1,000/-மும் நிவாரண உதவியாக வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் குடிசைகளுக்கு தற்போது வழங்கப்படும் நிவாரண உதவியை உயர்த்துவது குறித்த செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**65—**

## இரும்புக் கம்பிவலை அமைத்தல்

**வினா எண் 21805—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் சார்நிலை சிறைச்சாலையின் நடைபாதைப் பகுதியில் இரும்பு வலை (கிரில்) அமைத்து மேல்தளத்தைப் பராமரிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

ஓமலூரில் உள்ள கிளைச் சிறையின் அங்கீகரிக்கப்பட்ட இடவசதி 48 ஆகும். அதில் தற்போது 41 சிறைவாசிகளே அடைக்கப்பட்டுள்ளனர். அங்குள்ள வராண்டாவின் கூரைகளைப் புதுப்பிப்பதற்கு ரூ.1,00,000/- ஒப்பளிப்பு வழங்கப்பட்டு பணிகள் முடிவுற்றுள்ளன. மேலும், கிளைச் சிறையில் 14 அடி உயரமுள்ள பாதுகாப்புச் சுவரும் உள்ளது. எனினும், இங்குள்ள நடைபாதைக்கு இரும்புக் கம்பிவலை அமைக்க பொதுப் பணித் துறையினரிடமிருந்து திட்ட மதிப்பீடு பெறப்பட்டு, ஆண்டுப் பராமரிப்பு நிதியின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அவ்வப்போது தேவைப்படும் பராமரிப்புப் பணிகள் பொதுப் பணித் துறையினரால் நிறைவேற்றப்படுகின்றன.

**66—**

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 21808—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் சார்நிலை சிறைச்சாலை வளாகத்தில் நவீன சுகாதாரக் கழிப்பிட வசதி செய்யவும், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி ஏற்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

ஓமலூரில் உள்ள கிளைச் சிறையின் அங்கீகரிக்கப்பட்ட இடவசதி 48 ஆகும். அதன் தற்போதைய அடைப்பு 41 ஆகும். கிளைச் சிறைகளில் விசாரணை சிறைவாசிகள்தான் பெரும் அளவில் அனுமதிக்கப்படுகின்றனர். 2004-05 ஆம் ஆண்டு கட்டடப் பராமரிப்பு நிதியின்கீழ் ஓமலூர் கிளைச் சிறையில் ரூ.50,000/- செலவில் கழிப்பறைகளில் தேவையான பழுதுபார்த்தலும், புதுப்பித்தலும் செய்துகொடுக்கப்பட்டுள்ளது. மேலும், சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் அங்குள்ள கழிப்பறைகளுக்கு அரைக் கதவுகள் (Half Door) பொருத்தப்பட்டுள்ளன.





மேலும், கிளைச் சிறையில் உள்ள வராண்டாவின் கூரைகள் ரூ.1,00,000/- செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இக்கிளைச் சிறையின் குடிநீர் வசதிக்காக ஏற்கெனவே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. குழாய்கள்மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைச் செப்பனிட பொதுப் பணித் துறையினரிடமிருந்து திட்ட மதிப்பீடு பெறப்பட்டு பராமரிப்பு நிதியின்கீழ் அங்கீகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் வழங்கப்படும் கட்டடப் பராமரிப்பு நிதியில் தேவைப்படும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**67—**

## தங்கும் விடுதிகள்

**வினா எண் 9649—திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கங்கைகொண்டசோழபுரம் வரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் தங்கிச் செல்ல தங்கும் விடுதிகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

2001-2002 ஆம் ஆண்டில் கங்கைகொண்டசோழபுரத்தில் அடிப்படை வசதிகள் செய்வதற்காக இத்துறைமூலம் ரூ.35.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு தொகை ஒப்பளிக்கப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும், நிருவாக அனுமதி அளிக்கப்பட்டதன்படி ரூ.29.25 இலட்சம் மதிப்பீட்டில் தங்கும் விடுதிகளும் கட்டப்பட உள்ளன. பொதுப் பணித் துறை (கட்டடங்கள்) கோட்டம்மூலம் விரைவில் பணிகள் துவங்கப்பட உள்ளன.

**68—**

## குடும்ப அட்டை

**வினா எண் 22445—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கிளாதரி ஊராட்சி, மணப்பட்டி கிராம மக்களுக்கு குடும்ப அட்டை வழங்கவும்,

மானாமதுரை தொகுதியில் புதிதாக வழங்கப்பட்ட குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மணப்பட்டி கிராமத்தில் புதிய குடும்ப அட்டை கோரி வரப்பெற்ற 37 மனுக்களில் 11 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டு அட்டை பெறத் தகுதியானவை 26 என்று கண்டறியப்பட்டுள்ளது. தகுதியான 26 மனுக்களும் விசாரணை முடிந்து பரிந்துரை செய்து ஆணையர் அலுவலகத்திற்கு குடும்ப அட்டை அச்சிடும்பொருட்டு அனுப்பப்பட்டு, அவற்றிற்கு குடும்ப அட்டை அச்சிட்டு பெறப்பட்டவுடன் உரிய குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும். மேலும், மானாமதுரை தொகுதியில் புதியதாக வழங்கப்படும் குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யக்கோரியது தொடர்பாக மாநிலம் முழுமைக்கும் வழங்கப்பட்டுள்ள புதிய குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கும் பொருட்டு கூடுதலாக மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யுமாறு மைய அரசிடம் கோரப்பட்டுள்ளது. கூடுதல் ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் புதிய குடும்ப அட்டைகளுக்கும் மண்ணெண்ணெய் வழங்கப்படும்.

**69—**

## தொழிலாளர் நல வாரியங்கள்

**வினா எண் 5309—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத் தொழிலாளர், விவசாயக் கூலித் தொழிலாளர் மற்றும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் நல வாரியங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 42, வருவாய்த் துறை, நாள் 18-1-2007-ல் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தோட்டத் தொழிலாளர்களுக்கு 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர் விதிகளின்கீழ் குடியிருப்பு வசதிகள், மின் வசதி, மருத்துவ வசதிகள், குழந்தை காப்பகங்கள், தொழிலாளர் குழந்தைகளுக்கு கல்வி வசதி மற்றும் சிற்றுண்டிச் சாலைகள் ஆகிய வசதிகள் மற்றும் பிற தொழிலாளர் சட்டங்கள்மூலம் அதன் பயன்களையும் நிருவாகம் அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின்கீழ், தொழிலாளர் நல வாரியத்திற்கு உறுப்பினர் சந்தாத் தொகை செலுத்தி தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் வழங்கப்படும் பயன்களையும் பெற்று வருகின்றனர். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குத் தனியாக நல வாரியம் அமைத்தல் குறித்து செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் தற்போது இல்லை.



**70—**

## தொழிற்சாலை திறப்பு

**வினா எண் 5602—திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம் சிறுமுகையில் மூடப்பட்டுள்ள சவுத் இந்தியா விஸ்கோஸ் தொழிற்சாலையைத் திறந்து 4,000 தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

1995-96 ஆண்டு வரை இலாபகரமாக இயங்கி வந்த சவுத் இந்தியா விஸ்கோஸ் என்ற நிறுவனத்தில் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் காரணமாகவும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கான சந்தை நிலைமை சாதகமாக அமையாததாலும், நிர்வாகக் குறைபாடுகள் காரணமாகவும் பெருத்த நஷ்டம் ஏற்பட்டதால் 19-10-2001 முதல் ஆலை இயங்கவில்லை. இந்நிலையில் நிர்வாகம் லே-ஆஃப் அனுமதி கோரி அரசுக்கு விண்ணப்பித்தது. ஆனால் அரசு அனுமதி அளிக்க மறுத்துவிட்டது. இருப்பினும், பிப்ரவரி 2002 வரை தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

[2007 அக்டோபர் 18

நிறுவனத்தின் தொடர் நஷ்டம் அதன் நிகர மதிப்பைவிட அதிகமானதால் நிறுவனத்தைப் புனரமைப்பது குறித்து நிர்வாகம், பி.ஐ.எப்.ஆர்-க்கு விண்ணப்பித்ததைத் தொடர்ந்து பி.ஐ.எப்.ஆர்.-ஆல் சவுத் இந்தியா விஸ்கோஸ் இண்டஸ்ட்ரீஸ் ஒரு நலிவுற்ற நிறுவனமாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் 25-10-2002 அன்று தொழிலாளர்கள் ஆலையின் வளாகத்திற்குள் வன்முறையில் ஈடுபட்டதால், ஆலை வளாகத்திலுள்ள அபாயகரமான இரசாயனப் பொருட்கள் மற்றும் விலை உயர்ந்த இயந்திரங்கள் மற்றும் ஆலை அதிகாரிகளைப் பாதுகாப்பதற்கு ஏதுவாக, 31-10-2002 முதல் கதவடைப்பு அறிவிப்பை நிர்வாகம் வெளியிட்டது.

கதவடைப்பு தொடர்பாக எழுப்பப்பட்ட தொழில் தாவாவை தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்பிற்கு அரசு அனுப்பியது. நிறுவனத்தின் கதவடைப்பு சட்ட விரோதமானதென்றும், தொழிலாளர்கள் தொழிற் தகராறு சட்டப் பிரிவு 25 எம் (8)-ன்படி அனைத்துப் பயன்களையும் பெறுவதற்குத் தகுதியுள்ளவர்கள் என்றும் தீர்ப்பாயம் 22-3-2006 அன்று உத்தரவு வழங்கியுள்ளது.

வழக்கு எண் சி.பி. 17/2004-ல் எஸ்.ஐ.வி. இண்டஸ்ட்ரீஸ்-ஐ கலைப்பு செய்து சென்னை உயர்நீதிமன்றம் 25-8-2004 அன்று உத்தரவிட்டுள்ளதைத் தொடர்ந்து 16-10-2004 முதல் நிறுவனம் கலைப்பு அதிகாரியின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இந்நிலையில் தொழிற்சாலையைத் திறந்து தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்குவது குறித்து நடவடிக்கை மேற்கொள்ள இயலாது.

**71—**

## இழப்பீடு வழங்குதல்

**வினா எண் 11857—திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் விவசாய மற்றும் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பணியிலிருக்கும்போது விஷ ஜந்துக்களினால் பாதிப்போ, மரணமோ ஏற்பட்டால் விபத்தாகக் கருதி இழப்பீட்டுத் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

விவசாயத் தொழிலாளர்கள், சிறு மற்றும் குறு நில விவசாயிகளுக்கு அவர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது, பாம்பு மற்றும் விஷப் பூச்சிகள் கடித்து காயமுறுதல் மற்றும் இறத்தல் போன்ற நேர்வுகளிலும் விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் நிவாரணம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் பணியில் இருக்கும்போது விஷ ஜந்துக்களினால் பாதிப்போ, மரணமோ ஏற்பட்டால் இழப்பீட்டுத் தொகை வழங்க 1994 ஆம் வருட தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் காப்பீட்டுக் கழகத்தினால் இழப்பீடு வழங்கப்பட்டு வருகிறது.

**72—**

## தொழிற்பயிற்சி நிலையம்

**வினா எண் 13165—திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் பகுதியில் அரசு சார்பில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

**73—**

## குழு அமைத்தல்

**வினா எண் 13784—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் மூடிக் கிடக்கும் மில்களைப் பேச்சுவார்த்தைமூலம் திறக்க சட்டமன்ற உறுப்பினர், அதிகாரிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், மில் நிர்வாகத்தினர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்படுமா?

[2007 அக்டோபர் 18

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் மூடிக் கிடக்கும் நிறுவனங்களை மீண்டும் திறந்து இயக்கவும் அவ்வாறு இயக்க இயலாத நிலையில் உள்ள நிறுவனங்களில் பணிபுரிந்து பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகையைப் பெற்றுத் தருவது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தவும் மாவட்டந்தோறும் முத்தரப்புக் குழு ஒன்று அரசாணை (டி) 133, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 12-02-2002-ன்படி அமைத்து அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி அம்முத்தரப்புக் குழுவில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும், தொழிலாளர் அலுவலர்/தொழிலாளர் உதவி ஆணையரை (சமரசம்) உறுப்பினர்-செயலராகவும், அந்தந்தத் தொகுதி சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களை உறுப்பினர்களாகவும், நிர்வாகம்/தொழிற்சங்கப் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி, தூத்துக்குடி, பெரம்பலூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் மூடப்பட்ட நிறுவனங்கள் ஏதுமில்லாத நிலையில் முத்தரப்புக் குழு அமைக்கப்படவில்லை. இதர அனைத்து மாவட்டங்களிலும் குழு அமைக்கப்பட்டு இம்முத்தரப்புக் குழு மூன்று மாதத்திற்கு ஒருமுறை கூடி, மூடப்பட்ட நிறுவனங்கள் குறித்துப் பேச்சு வார்த்தை மேற்கொண்டு, பேச்சுவார்த்தையின் விவரத்தை அரசுக்குத் தெரிவித்து வருகின்றனர். மீண்டும் அரசாணை (டி) எண் 1017, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 20-07-2005-ல் 3 வருடத்திற்கு இம்முத்தரப்புக் குழுவின் காலத்தை நீட்டித்து அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. அதன்படி மாவட்டந்தோறும் முத்தரப்புக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டு, பேச்சுவார்த்தையின் விவரம் அரசுக்கு நேரடியாக அனுப்பப்பட்டு வருகிறது.

**74—**

## தொழிலாளர் நல வாரியங்கள்

**வினா எண் 18000—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஆட்டோ ஓட்டுநர், விசைத்தறித் தொழிலாளர், தனியார் வாகன ஓட்டுநர், வணிக நிறுவனத் தொழிலாளர்கள்,



2007 அக்டோபர் 18]

தேயிலைத் தோட்டத் தொழிலாளர் ஆகியோருக்குத் தனித்தனி நல வாரியங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம் 1-9-2006 முதல் தனியாக அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. விசைத்தறித் தொழிலாளர்கள் மற்றும் வணிக நிறுவனத் தொழிலாளர்களுக்கு தனித் தனியாக நல வாரியங்கள் அமைக்கப்படவில்லை. இத்தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்து நலத் திட்டப் பயன்களைப் பெற வழிவகை உள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர் விதிகளின்கீழ் குடியிருப்பு வசதிகள், மின் வசதி, மருத்துவ வசதிகள், குழந்தை காப்பகங்கள், தொழிலாளர் குழந்தைகளுக்கு கல்வி வசதி மற்றும் சிற்றுண்டிசாலைகள் ஆகிய வசதிகள் மற்றும் பிற தொழிலாளர் சட்டங்கள்மூலம் அதன் பயன்களையும் நிர்வாகம் அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின்கீழ் தொழிலாளர் நல வாரியத்திற்கு உறுப்பினர் சந்தாத் தொகை செலுத்தி தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் வழங்கப்படும் பயன்களையும் பெற்று வருகின்றனர். மேலும், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு தனியாக நல வாரியம் அமைத்தல் குறித்து செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் தற்போது இல்லை.

**75—**

## தொழிற்பயிற்சி நிலையங்கள்

**வினா எண் 18037—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 அக்டோபர் 18

*(அ) வால்பாறை, சோலையாறு அணைப் பகுதி, அங்கலக்குறிச்சியில் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) வால்பாறை, சோலையாறு அணைப் பகுதி, அங்கலக்குறிச்சி அமைந்துள்ள கோவை மாவட்டத்தில் கீழ்க்கண்ட மூன்று அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன.*

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கோவை | — | 1,104 | இருக்கைகள் |
| 2. | கோவை (ம) | — | 160 | இருக்கைகள் |
| 3. | திருப்பூர் | — | 144 | இருக்கைகள். |

**மொத்தம் 1,408 இருக்கைகள்**

*மேலும், இம்மாவட்டத்தில் 3,096 இருக்கைகள் கொண்ட 28 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் இயங்கி வருகின்றன. இம்மாவட்டத்தில் மொத்தம் 4,504 இருக்கைகள் கொண்ட மூன்று அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும், 28 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்களும் இயங்கி வருவதால், வால்பாறை, சோலையாறு அணைப் பகுதி, அங்கலக்குறிச்சியில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் ஏற்படுத்த போதிய காரணங்கள் இல்லை.*

*(ஆ) கேள்வி எழாது.*

**76—**

**நல வாரியம்**

**வினா எண் 18794—திரு. சி. கோவிந்தசாமி:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழகத்தில் சுமைப் பணித் தொழிலாளர்களுக்கு தனி நல வாரியம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*தற்போது தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்தில் சுமைப் பணித் தொழிலாளர்கள் பதிவு செய்து பயனடைந்து வருகிறார்கள். சுமைப் பணித் தொழிலாளர்களுக்குத் தனி நல வாரியம் அமைப்பதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**77—**

**தொகுப்பு ஆயுள் காப்பீடு**

**வினா எண் 25035—செல்வி கே. பாலபாரதி:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டிலுள்ள ரிக்ஷாக்காரர்கள், ஆட்டோ ஓட்டுநர்களுக்கு தொகுப்பு ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாட்டிலுள்ள ரிக்ஷாக்காரர்கள், ஆட்டோ ஓட்டுநர்களுக்கு தொகுப்பு ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) இவ்வினா எழவில்லை.*

**78—**

**நல வாரியம் அமைத்தல்**

**வினா எண் 25040—திரு. என். நன்மாறன்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிறுகடைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வணிகத் தொழிலாளர் நல வாரியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2007 அக்டோபர் 18

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டிலுள்ள சிறு கடைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து பயனடைந்து வருகின்றனர். சிறு கடைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வணிகத் தொழிலாளர் நல வாரியம் அமைப்பதற்கான செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**79—**

**தனி நல வாரியம் அமைத்தல்**

**வினா எண் 25041—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரு சக்கர மோட்டார் வாகனம் பழுது பார்ப்பவர்களுக்குத் தனி நல வாரியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டிலுள்ள இரு சக்கர மோட்டார் வாகனம் பழுது பார்ப்பவர்கள் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்து பயன் அடைந்து வருகின்றனர். இரு சக்கர மோட்டார் வாகனம் பழுது பார்ப்பவர்களுக்குத் தனி நல வாரியம் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**80—**

**அடிப்படை வசதிகள்**

**வினா எண் 9996—திரு. அ. சின்னசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 அக்டோபர் 18]

(அ) பேரணாம்பட்டு தொகுதி, கைலாசகிரி மலைமீதுள்ள சுப்பிரமணியசுவாமி கோயிலில் தங்கும் விடுதி, குடிநீர் வசதி, பூங்கா போன்ற வசதிகளைச் செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், கைலாசகிரி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பரம்பரை அறங்காவலர் நிர்வாகத்தின்கீழ் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ. 3.82 இலட்சமாகும்.

இத்திருக்கோயில் மலைமீது அமைந்துள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு வரும் சேவார்த்திகள் தங்குவதற்கு தங்கும் விடுதியும் இதர வசதிகளையும் செய்திட, சுற்றுலாத் துறை பொறியாளர்கள் 15-12-2006 அன்று திருக்கோயிலுக்கு முகாம் மேற்கொண்டு ரூ. 9.00 இலட்சத்திற்கு உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பொருள் தொடர்பாக சுற்றுலாத் துறையினரையும் பேரணாம்பட்டு ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலரையும் தொடர்பு கொண்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**81—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 12275—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, என். புளியங்குளம் ஸ்ரீஅரியநாச்சி அம்மன் கோயிலுக்குக் குடிதண்ணீர் வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 அக்டோபர் 18

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை என். புளியங்குளம் ஸ்ரீ அரியநாச்சியம்மன் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு மின் வசதி மற்றும் குடிநீர் வசதியும் உள்ளது. வெள்ளிக்கிழமை மட்டுமே பூஜை நடைபெற்று வருகிறது. எனவே, இத்திருக்கோயிலுக்கு இந்து சமய அறநிலையத் துறைமூலம் குடிநீர் வசதி செய்து தரும் திட்டம் ஏதும் இல்லை.

**82—**

### குளம் சீரமைத்தல்

**வினா எண் 20992—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, கட்டிக்குளம் கிராமக் கோயில் ஊரணி, மிளகனூர் கோயில் ஊரணி ஆகியவற்றைத் தூர்வார அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, கிராமக்கோயில் ஊரணி–கட்டிக்குளம், அருள்மிகு சூட்டுகோல் ராமசாமி திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் திருக்குளத்தில் படிக்கட்டுகள் சீரமைக்கப்பட வேண்டியுள்ளது. இத்திருக்குளத்தில் தற்போது நீர் நிரம்பியுள்ளது. படிக்கட்டுகளை சீரமைக்க உத்தேசமாக ரூ.2,00,000 செலவாகும். இப்பணியினை மாவட்ட நிர்வாகத்தின்மூலம் செய்திட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.



2007 அக்டோபர் 18]

மானாமதுரை தொகுதி மிளகனூர் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் உள்ள பட்டியலைச் சேராத திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் பரம்பரை அறங்காவலர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலில் அரசு நிதியுதவியின் கீழ் ஒருகால பூஜை நடைபெற்று வருகிறது. இத்திருக்கோயிலின் முன்புறம் குளம் ஒன்று உள்ளது. இத்திருக்குளத்திற்கு சுற்றுச்சுவர் கட்டி சீரமைக்கப்பட வேண்டியுள்ளது. இக்குளத்தினைச் சீரமைக்க உத்தேசமாக ரூ.3,00,000 செலவாகும். இப்பணியினை மாவட்ட நிர்வாகத்தின்மூலம் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**83—**

### கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 23793—திரு. கே. வீ. ராமநாதன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, ஓடத்துறை கிராமம், பாலப்பாளையத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கென தனியே கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், பாலப்பாளையம், சூரியம்பாளையம், செல்லக்குமாரபாளையம், பொம்மநாயக்கன்பாளையம், ஓடத்துறை மற்றும் கூத்தாடிப்பாளையம் ஆகிய ஊர்களை விவகார எல்லைகளாகக் கொண்டு பாலப்பாளையம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் புதிய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தினைப் பதிவு செய்து தரக்கோரிய கோரிக்கை கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையரகத்தில் பெறப்பட்டு, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

[2007 அக்டோபர் 18

புதிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தினைப் பதிவு செய்யும் பொருட்டு ஈரோடு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் (கோ-ஆப்டெக்ஸ்) இசைவு கோரப்பட்டு, ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியிடமிருந்து இசைவுக் கடிதம் தற்போது பெறப்பட்டுள்ளது. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் (கோ-ஆப்டெக்ஸ்) இசைவு பெறப்பட்டவுடன் புதிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்படும்.

**84—**

### அடிப்படை வசதிகள்

**வினா எண் 18421—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ரமணமுதலிப்புதூர் நெசவாளர் குடியிருப்புப் பகுதிக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பகுதியில் உள்ள ரமணமுதலிப்புதூரில் 85 கைத்தறி நெசவாளர்கள் வசிக்கின்றனர். மேற்படி ரமணமுதலிப்புதூர், சிற்றூராட்சியானது, அடிப்படை வசதிகளான சாலைகள் (கான்கிரீட்) குடிநீர் வசதி, பொதுக் கழிப்பிட வசதி மற்றும் சமுதாயக்கூட வசதியினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. மேலும் இப்பகுதி நெசவாளர்கள் அனைவருக்கும் அரசின் இலவச மின்சார வசதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ரமணமுதலிப்புதூர் கைத்தறி நெசவாளர்களுக்கு, மேற்படி அடிப்படை வசதிகள் தவிர, துறையின் மூலம், தொழிற்கூடம் கட்ட அரசு மானியம், தறி உபகரணங்களுக்கு மானியம், பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்குக் கல்வி உதவித் தொகை, சங்கத்தின்மூலம் தொடர் வேலைவாய்ப்பு ஆகிய உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.



2007 அக்டோபர் 18]

**85—**

### அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம்

**வினா எண் 11701—திரு. கோ. அரி:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதியில் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் தொடங்கிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

திருத்தணித் தொகுதி அடங்கிய திருவள்ளூர் மாவட்டத்தில், திரூரில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் ஒன்றும், அரசு உதவி பெறும் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஒன்றும் மற்றும் 25 சுயநிதி தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும் இயங்கி வருகின்றன. எனவே திருத்தணித் தொகுதியில் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் துவங்க அவசியம் எழவில்லை.

**86—**

### விற்பனை வரியைக் குறைத்தல்

**வினா எண் 17674—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வீட்டில் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களுக்கான விற்பனை வரியைக் குறைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:**

1-1-2007 முதல் தமிழ்நாட்டில் மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் அம்லபடுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும், பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட வாளிகள் மற்றும் குடங்கள், மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் முதலாம் இணைப்புப் பட்டியல் பகுதி-பி வரிசை எண் 23-லும், பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட கிண்ணங்கள், டம்ளர்கள், மற்றும் தட்டுகள் வரிசை எண் 39-லும் கொண்டு வாப்பட்டு 4 சதவிகித வரிக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

[2007 அக்டோபர் 18

தற்போது விதிக்கப்படும் 4 சதவிகித மதிப்புக் கூடுதல் வரி என்பது மிகக் குறைந்தபட்ச வரியாகும். மேலும், தமிழ்நாட்டிற்குள்ளேயே பொருட்களை வாங்கி; அவற்றை தமிழ்நாட்டிற்குள்ளேயே விற்பனை செய்யும் வணிகரின் ஓராண்டு மொத்த விற்பனைத் தொகை ரூ.10 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின் அவ்வணிகர்கள் பதிவு பற வேண்டியது இல்லை. வரி செலுத்துவதிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளனர். அத்தகைய வணிகர்களின் ஆண்டு விற்பனைத் தொகை ரூபாய் பத்து இலட்சத்திற்கு மேற்பட்டிருந்து ரூபாய் ஐம்பது இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும் பட்சத்தில், அத்தகைய வணிகர்கள் விருப்பத்தின் அடிப்படையில் தங்களுடைய விற்பனைத் தொகைமீது ½ சதவிகித இணக்க வரி மட்டுமே செலுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தில் தற்போது நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வரி விகிதங்கள் நாடு முழுவதும் ஒரே வரி விகிதங்கள் மேற்கொள்ளப்படும் என்ற கொள்கை அடிப்படையின்கீழ் நிர்ணயம் செய்யப்பட்டவை.

மேலும் மதிப்புக் கூடுதல் வரி அமலாக்கத்தினால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலையில் தற்போது வரிக் குறைப்பு என்பது சாத்தியமில்லை.

**87—**

**வரி விலக்கு அளித்தல்**

**வினா எண் 17688—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் விவசாயத்திற்குப் பயன்படுத்தும் விதை, பூச்சி மருந்து, உரம் போன்ற பொருட்களுக்கு முழுமையாக வரி விலக்கு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1-1-2007 முதல் தமிழ்நாட்டில் மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.



2007 அக்டோபர் 18]

2. விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் விதைகளில் எண்ணெய் வித்துகள் அல்லாத பிறவகை விதைகள், ஏற்கெனவே, இச்சட்டத்தின் கீழ் நான்காம் இணைப்புப் பட்டியலில் பகுதி பி வரிசை எண் 7-ன்கீழ் கொண்டு வரப்பட்டு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

3. பூச்சி மருந்து மற்றும் உரம் ஆகியவற்றுக்கு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் 4 சதவிகித வரி விதிக்கப்படுகிறது. அதேசமயம், 4-1-2007 நாளிட்ட வணிக வரி (ம) பதிவுத் துறை அரசாணை (நிலை) எண் 16-ல் இவற்றின் இரண்டாவது மற்றும் அதற்கடுத்த விற்பனைமீது 1-1-2007 முதல் வரி விலக்கு அளித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. நாடு முழுவதும் ஒரே சமச்சீரான வரி விகிதம் மேற்கொள்ளப்படும் என்ற ஒருமித்த கருத்தின் அடிப்படையில், இவ்வரி விகிதங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. மேலும், உரங்களுக்கு மத்திய அரசு மானியம் வழங்கி வரும் சூழ்நிலையில் முழுமையான வரி விலக்கு என்பது தற்போது சாத்தியமில்லை.

**88—**

**சாலை அமைத்தல்**

**வினா எண் 19463—திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, அளக்குடியிலிருந்து வெள்ளை மணல்திட்டு வரை வனத் துறைமூலம் சாலை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

வெள்ளை மணல் திட்டு குப்ப மக்கள் அளக்குடி கிராமத்திற்கும் வெள்ளை மணல்திட்டு குப்பத்திற்கும் இடையே உள்ள அளக்குடி ஓதுக்குக்காடு வழியாக 2 அடி அகலமுள்ள 1½ கி.மீ. நீளமுள்ள நடைபாதையைப் பயன்படுத்தி நகரங்களுக்குச் சென்று வருகின்றனர். இந்த நடைபாதையினை 4 மீட்டர் அகலம் கொண்ட சாலையாக அமைக்க ரூ.22.50 லட்சம் தேவைப்படும். வனநிலங்களை வனமல்லாத பணிகளுக்கு உபயோகிக்க வனப் பாதுகாப்புச் சட்டம் 1980-ன்படி மைய

[2007 அக்டோபர் 18

அரசின் முன் அனுமதி பெற வேண்டும். தேவையான நிதி ஆதாரத்தைப் பொறுத்து மைய அரசின் முன் அனுமதியுடன் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**89—**

### மரக் கன்றுகள் வளர்ப்பு

**வினா எண் 23000—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை நாகமலைச் சரிவுகளில் காட்டு மரக் கன்றுகளை நட்டு வளர்க்க அரசு முன் வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

நாகமலை காப்புக் காட்டின் மொத்தப் பரப்பளவான 460 எக்டேரில், 300 எக்டேர் பரப்பளவிற்கு 2003-2004 மற்றும் 2004-2005 ஆண்டுகளில் 80,000 பலவகை மரச் செடிகள் நடவு செய்யப்பட்டு அவை தற்சமயம் வளர்ச்சி அடைந்து வருகின்றன. மீதமுள்ள பரப்பளவான 160 எக்டேர், கடுமையான பாறை மற்றும் சரளைகளுடன் மண் கண்டமே இல்லாமல் உள்ளதால் இக்காட்டுப் பகுதியில் மேலும் நடவுப் பணிகள் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**90—**

### சாலையைப் பராமரித்தல்

**வினா எண் 8000—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, சின்கோனா செல்லும் வழியிலுள்ள ஈட்டியார் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வால்பாறை தொகுதி, சின்கோனா செல்லும் வழியில் உள்ள ஈட்டியார் சாலை என்பது தனியார் எஸ்டேட் நிர்வாகத்திற்குச் சொந்தமான சாலை என்பதால் நெடுஞ்சாலைத் துறைமூலம் மேற்படிச் சாலையை பராமரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.



2007 அக்டோபர் 18]

**91—**

### தரைப் பாலம் அமைத்தல்

**வினா எண் 10533—திரு. கே. எல். இளவழகன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், ஆரூர் ஊராட்சி, பென்னகர்மடுவுமீது தரைப் பாலம் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், ஆரூர் ஊராட்சி, பென்னகர்மடுவுமீது தரைப் பாலம் அமைப்பதற்கு நபார்டு ஆர்.ஐ.டி.எப். XI திட்டத்தின்கீழ் ரூ.80.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, வேலை தொடங்கப்பட்டுள்ளது.

**92—**

### சாலைச் சீரமைப்பு

**வினா எண் 14530—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, கெலமங்கலம்–பைரமங்கலம்–ஓசூர் சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

தளி தொகுதி, கெலமங்கலம்–பைரமங்கலம்–ஓசூர் சாலையானது கிருஷ்ணகிரி கோட்டப் பராமரிப்பில் உள்ள மாவட்ட இதர சாலையான அத்திமுகம் – பேரண்டப்பள்ளி – தொரப்பள்ளி– கெலமங்கலம் சாலை 0/0-23/4 கி.மீ. கொண்டதாகும். இதன் மொத்த நீளம் 23/4 கி.மீ. ஆகும். மேற்படி சாலையில் பழுதடைந்துள்ள பகுதிகளில் தனி பழுதுபார்த்தல் (எஸ்.ஆர்.) தலைப்பின்கீழ் ரூ.24.50 இலட்சத்தில் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

[2007 அக்டோபர் 18

93—

## சாலைப் பணிகள்

**வினா எண் 14703—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டத்தில் உள்ள கரும்புச் சாலைகள், கரும்புச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பின்வரும் மூன்று சாலைப் பணிகளுக்கு கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 29-1-2007 அன்று நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது:—

| வ. எண் | பணியின் பெயர் | நீளம் கி.மீ. | தோராயத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| (1) | காரத்தொழுவு-குமாரலிங்கம் சாலை முதல் அமராவதி வாய்க்கால் சாலை வரை மேம்பாடு செய்தல் | 2.80 | 40.00 |
| (2) | ருத்ரபாளையம்-கல்லாபுரம் சாலை முதல் மாவலம்பாறை வரை (எழூரம்மன் கோவில் சாலை வழியாக) மேம்பாடு செய்தல் | 3.80 | 60.00 |
| (3) | காரத்தொழுவு-குமாரலிங்கம் சாலை முதல் சாமராயப்பட்டி சாலை வரை மேம்பாடு செய்தல் | 3.20 | 60.00 |
| | மொத்தம் .. | 9.80 | 160.00 |



2007 அக்டோபர் 18]

மேற்குறிப்பிட்டுள்ள பணிகளைச் செயலாக்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரி விரைவில் பணிகளைத் துவக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

94—

## தரைப் பாலம் அமைத்தல்

**வினா எண் 18711—திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், புதூர்-புங்கனை ஊராட்சி, ஒட்டம்பட்டி அருகில் தரைப் பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், புதூர்-புங்கனை ஊராட்சி, ஒட்டம்பட்டி அருகில் ஆற்றின் அகலம் சுமார் 200 மீட்டர் இருப்பதால் தரைப் பாலம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

95—

## பாதுகாப்பு இல்லம்

**வினா எண் 10045—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, காளிகாபுரம், பெத்தநாயக்கனூர், ரமணமுதலிப்புதூர், சோமந்துரை, தென்சங்கம்பாளையம், ஜல்லிப்பட்டி, கம்பலாப்பட்டி, அங்கலக்குறிச்சி, கரியஞ்செட்டிப்பாளையம், பிலிசின்னம்பாளையம், தென்சித்தூர் முதலிய ஊராட்சிகளில் ஆதரவற்ற முதியவர்களுக்கு பாதுகாப்பு இல்லம் கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

வால்பாறை தொகுதி, காளிகாபுரம், பெத்தநாயக்கனூர், ரமணமுதலிப்புதூர், சோமந்துரை, தென்சங்கம்பாளையம், ஜல்லிப்பட்டி, கம்பலாப்பட்டி, அங்கலக்குறிச்சி, கரியஞ்செட்டிப்பாளையம், பிலிசின்னம்பாளையம், தென்சித்தூர் முதலிய ஊராட்சிகளில் ஆதரவற்ற முதியவர்களுக்கு பாதுகாப்பு இல்லம் கட்டித்தரும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை. வால்பாறை தொகுதி கோயம்புத்தூர் மாவட்டத்தில் அமையப்பெற்றுள்ளதால், அத்தொகுதியில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் ஊராட்சியில், தொண்டு நிறுவனங்கள் ஏதும் முதியோர் இல்லம் நடத்த முன்வருமாயின் அரசின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மானியம் பெறத் தகுதி பெற்றிருப்பின், மத்திய அரசின் மானிய உதவி பெறப் பரிந்துரைக்கப்படும்.

**96—**

## முதியோர் உதவித் தொகை

**வினா எண் 16057—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் நிலுவையிலுள்ள முதியோர் உதவித் தொகை மனுக்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் வால்பாறை வட்டம் மற்றும் பொள்ளாச்சி வட்டம் ஆகியவை அடங்கியுள்ளன. இந்தப் பகுதியில் வசிக்கும் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை கோரி வந்துள்ள மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதியுள்ளவர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளில் பெறப்பட்டுள்ள மனுக்களும் அவற்றில் எத்தனை பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளன என்ற விவரமும் கீழே கொடுக்கப்படுகிறது:—



| | வால்பாறை வட்டம் | பொள்ளாச்சி வட்டம் | மொத்தம். |
|---|---|---|---|
| 1. முதியோர் உதவித் தொகை வேண்டி பெறப்பட்ட விண்ணப்பங்கள் | 367 | 878 | 1245 |
| 2. அங்கீகரித்து உதவித் தொகை பெற்று வருபவர்கள் | 111 | 306 | 417 |
| 3. நிராகரிக்கப்பட்டவை | 243 | 572 | 815 |
| 4. நிலுவை | 13 | .. | 13 |

மேலும் உதவித் தொகை கோரி வரப்பெறும் விண்ணப்பங்களின்மீது அவ்வப்போது உரிய நடவடிக்கை மேற்கொண்டு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. நிலுவையிலுள்ள 13 மனுக்களின்மீது தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**97—**

## கிளை அலுவலகம்

**வினா எண் 16887—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் சமூக நலத் துறையின்கீழ் கிளை அலுவலகம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் சமூக நலத் துறையின்கீழ் கிளை அலுவலகம் ஏற்படுத்த அரசு விதிமுறைகளில் இடமில்லை. இருப்பினும் கோவை மாவட்ட சமூக நல அலுவலகக் கட்டுப்பாட்டின்கீழ் ஒரு சமூக நல விரிவாக்க அலுவலரும், இரண்டு மகளிர் ஊர் நல அலுவலர் பணியிடமும் சிறப்பினமாக வால்பாறை நகராட்சிக்கு அனுமதிக்க கருத்துரு ஒன்று சமூக நல இயக்குநரால் அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

98—

## கால்நடை மருத்துவர் நியமனம்

**வினா எண் 22492—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதியில் காலியாகவுள்ள பணியிடங்களில் கால்நடை மருத்துவர்களை பணி நியமனம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்ட நபர்கள் தருமபுரி தொகுதியில் காலியாக உள்ள கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்களில் விரைவில் நியமனம் செய்யப்படுவார்கள்.

99—

## கால்நடை மருத்துவர் நியமனம்

**வினா எண் 24275—திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி நகரிலுள்ள கால்நடை மருத்துவமனையில் கால்நடை மருத்துவர் பணி நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

சீர்காழி நகரிலுள்ள கால்நடை மருத்துவமனையில் பணி நியமனம் செய்யப்பட்ட கால்நடை மருத்துவர், டாக்டர் செ. இராஜேந்திரன் அவர்கள் 8-2-2007 மு.ப. முதல் பணியாற்றி வருகிறார்.



100—

## கல்வி உதவித் தொகை

**வினா எண் 11616—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்லூரிகளில் பட்டப் படிப்பு பயிலும் ஆதி திராவிட மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு வழங்கும் கல்வி உதவித் தொகையை உயர்த்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

மத்திய அரசு கடித எண் 11017/7/02 நாள் 28-1-2004 நாளின்படி பின்வருமாறு மத்திய அரசின் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது—

விடுதி மாணவர்களுக்கான பராமரிப்புத் தொகை :

| பிரிவு | ஏற்கெனவே வழங்கப்பட்ட தொகை. | கூடுதலாக வழங்கப்படும் தொகை. |
|---|---|---|
| (I) | 425 | 740 |
| (II) | 290 | 510 |
| (III) | 230 | 355 |
| (IV) | 150 | 235 |

[2007 அக்டோபர் 18

விடுதிசாரா மாணவர்களுக்கான பராமரிப்புத் தொகை:—

| பிரிவு | வழங்கப்பட்ட தொகை | கூடுதலாக வழங்கப்படும் தொகை |
|---|---|---|
| (I) | 190 | 330 |
| (II) | 190 | 330 |
| (III) | 120 | 185 |
| (IV) | 90 | 140 |

கல்வி உதவித் தொகை பெறுவதற்கான வருமான உச்சவரம்பு ரூ. 1,00,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

மத்திய அரசு கல்வி உதவித் தொகையின் ஒழுங்குமுறை விதிகளின்படி இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களில் உள்ள பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர். மற்றும் பழங்குடியின மாணவ/மாணவியர்களுக்கு பராமரிப்புக் கட்டணம் ஒரே மாதிரியாக வழங்கப்படுகிறது. ஏற்கெனவே வழங்கப்படும் உதவித் தொகையினை மத்திய அரசு உயர்த்தி ஆணையிடும்பட்சத்தில் தமிழ்நாட்டிற்கும் உயர்த்தப்பட்ட அளவின்படி கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.



2007 அக்டோபர் 18]

## பட்டியல் 2

1—

### புதிய தொழில்

**வினா எண் 5035—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி சிப்காட் வளாகத்திற்குள் புதிய தொழில் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிப்காட் நிறுவனம், 1980 ஆம் ஆண்டு சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் சுமார் 492.07 ஏக்கர் நிலப் பரப்பில் தொழில் வளாகத்தை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது. இதில் ஒதுக்கீடு செய்யத்தக்க நிலத்தின் மொத்த பரப்பளவு 382.20 ஏக்கர். இதுவரை 44 தொழில் பிரிவுகளுக்கு 173.88 ஏக்கர் நிலப் பரப்பினை சிப்காட் நிறுவனம் ஒதுக்கீடு செய்துள்ளது. 15 தொழில் பிரிவுகள் தங்களுடைய உற்பத்தியைத் தொடங்கி இயங்கி வருகின்றன. 8 தொழில் பிரிவுகள் தங்களுடைய தொழிற்சாலை கட்டுமானப் பணிகளை தொடங்கி உள்ளன. மீதமுள்ள 21 தொழில் பிரிவுகள் ஏற்கெனவே இயங்கி தற்பொழுது நலிவடைந்த நிலையில் உள்ளன. இன்னும் ஒதுக்கீடு செய்யப்படவுள்ள நிலப் பரப்பின் அளவு 208.32 ஏக்கர் ஆகும். இந்த தொழில் வளாகத்தில் புதிய தொழில்கள் துவங்குவதற்கு போதிய அளவு நிலங்கள், தகுந்த உட்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், நீர் வசதி, மின்சாரம் போன்றவை முழு அளவில் உள்ளன. புதிய தொழிற்சாலைகள் உருவாக்க சிப்காட் நிறுவனம் தகுந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மானாமதுரை சிப்காட் தொழில் வளாகத்தில் தொழில் தொடங்க தொழில் முனைவோர்கள் நிலம் வேண்டி வந்தால் அவர்களுக்குக் குத்தகை அடிப்படையில் சிப்காட் நிறுவனம் உடனடியாக நிலங்கள் வழங்கும்.

2—

## மதுபானங்கள் தயாரித்தல்

**வினா எண் 13882—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் வெளிவரும் மொலாசசைக் கொண்டு அந்தந்த ஆலைகளிலேயே மதுபானங்கள் தயாரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கூட்டுறவு/பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் வெளிவரும் மொலாசசைக் கொண்டு அந்தந்த ஆலைகளிலேயே மதுபானங்கள் தயாரிக்கும் ஆலை அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

3—

## தொழிற்பேட்டை தொடங்குதல்

**வினா எண் 14718—திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் தொகுதி, மேட்டுப்பாளையத்தில் தொழிற்பேட்டை ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தொழிற்பேட்டைகளை உருவாக்கப் போதிய அளவில் தொழில் முனைவோர்கள், பெரிய பரப்பளவுள்ள நிலம், போக்குவரத்து, தண்ணீர், மின்சாரம் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றுக்கான சாத்தியக்கூறுகள் அத்தியாவசியமானவை. இத்தகைய சாத்தியக்கூறுகள் மேட்டுப்பாளையம் பகுதியில் அமையப்பெறாததால் அங்கு தொழிற்பேட்டை தொடங்கும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.





4—

## துணைத் தொழில் பூங்கா

**வினா எண் 15703—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை, ஆழியாறு நகரில் துணைத் தொழில் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆழியாறு நகரில் துணைத் தொழில் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

சிப்காட் நிறுவனம், ஈரோடு மாவட்டத்தில் உள்ள பெருந்துறை தொகுதியில் சுமார் 2,600 ஏக்கர் நிலப்பரப்பில் பெரிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தொழில் தொடங்க சிப்காட் பெருந்துறை வளர்ச்சி மையத்தை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் தொழில் வளர்ச்சி மையம் கோவை மாநகர் மற்றும் பொள்ளாச்சி வால்பாறையிலிருந்து சுமார் 150 கி.மீ. தொலைவில் உள்ளதால் ஆழியாறு நகரில் உள்ள தொழில் முனைவோர்கள் தங்களது தொழிற்சாலைகளை சிப்காட் பெருந்துறை தொழில் வளர்ச்சி மையத்தில் துவங்கலாம். ஆழியாறு நகரில் துணைத் தொழில் பூங்காவிற்கான தேவை அதிகரிக்கும்போது அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

5—

## கூட்டுறவு சர்க்கரை ஆலை

**வினா எண் 16257—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், அரசு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 அக்டோபர் 18

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் யாதொரு முன்மொழிவும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**6—**

## சர்க்கரை ஆலையை இயக்குதல்

**வினா எண் 28269—திரு. பா. சந்திரகாசி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் எரையூர் சர்க்கரை ஆலையைத் தொடர்ந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் சர்க்கரை ஆலை 1978 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, அரைவை தொடர்ந்து நடைபெறுகிறது. நடப்பு 2006-2007 அரைவைப் பருவம் 23-11-2006 ஆம் நாள் தொடங்கப்பட்டது.

**7—**

## மின் கட்டண வசூல் மையம்

**வினா எண் 17495—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், தெற்கு கருங்குளம் கிராமத்தில் மின்சாரக் கட்டணம் வசூல் மையம் அமைத்திட அரசு முன்வருமா?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

மின் கட்டணம் கட்டுவதில் மின் நுகர்வோரின் சிரமத்தைப் போக்க திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூர் ஒன்றியம், தெற்கு கருங்குளத்தில் முகாம் வசூல் மையம் அமைத்து இரட்டைப் படை மாதங்களில் முதல் வியாழக்கிழமை அன்று மின் கட்டணம் வசூல் செய்ய 24-3-2007 நாளிட்ட கடிதம்மூலம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**8—**

## புதிய மின்சார அலுவலகம்

**வினா எண் 18634—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், முத்துநாயக்கன் பட்டியில் புதிய மின்சார அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், முத்துநாயக்கன்பட்டியில் ஏற்கெனவே முத்துநாயக்கன்பட்டி-I மற்றும் முத்துநாயக்கன்பட்டி-II ஆகிய இரண்டு பிரிவு அலுவலகங்கள் உள்ளன. எனவே, மற்றொரு பிரிவு அலுவலகம் அமைக்க வேலைப் பளு அடிப்படையில் தற்சமயம் அவசியம் இல்லை.

**9—**

## மின்சார அலுவலகம் துவக்குதல்

**வினா எண் 19485—திரு. வை. காவேரி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், அ.புதூரில் மின்சார அலுவலகம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், அ.புதூர் மகுடஞ்சாவடி பிரிவு அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் வருகிறது. பிரிவு அலுவலகத்தில் இருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளதால் வசூல் மையம் அங்கு ஏற்படுத்தப்பட்டு பிரதி மாதம் 5 ஆம் தேதி மின் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. மக்கள்தொகை குறைவாக உள்ளதாலும் (சுமார் 6280) வசூல் மையம் அங்கு இயங்கி வருவதாலும், பிரிவு அலுவலகம் தற்போது தொடங்க இயலாது.

**10—**

## மின் கட்டண வசூல் மையம்

**வினா எண் 22486—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பொம்மிடி மையப் பகுதியில் மின் கட்டண வசூல் மையம், விசாரணை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம். தருமபுரி மாவட்டம், பொம்மிடி மையப் பகுதியில் மின் கட்டணம் செலுத்தும் வசதியைக் கணினிமயமாக மாற்றத் தேவையான கணினி உபகரணங்கள் வாங்கவும் மற்றும் அவற்றை நிறுவவும் கொள்முதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. விசாரணை நிலையம் அமைக்க தனியாகத் திட்டம் ஏதும் இல்லை. தற்போதுள்ள பிரிவு அலுவலகங்களிலேயே விசாரணைகளுக்கு பதில் அளிக்கப்பட்டு வருகிறது.

**11—**

## கணினி மையமாக மாற்றுதல்

**வினா எண் 22487—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தருமபுரி மாவட்டம், கடத்தூர் பகுதி மின் கட்டண மையத்தைக் கணினி மையமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டம், கடத்தூர் பகுதி மின் கட்டண மையத்தைக் கணினி மையமாக மாற்றத் தேவையான கணினி மற்றும் உபகரணங்கள் வாங்கவும் மற்றும் அவற்றை நிறுவவும் கொள்முதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. கடத்தூர் பகுதி மின் கட்டண மையம் கணினி மையமாக விரைவில் மாற்றப்படும்.

**12—**

## கணினிமயமாக்கல்

**வினா எண் 22936—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பொம்மிடியில் மின் கட்டணம் செலுத்தும் வசதியைக் கணினிமயமாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டம் பொம்மிடியில் மின் கட்டணம் செலுத்தும் வசதியைக் கணினிமயமாக மாற்றத் தேவையான கணினி மற்றும் உபகரணங்கள் வாங்கவும் மற்றும் அவற்றை நிறுவவும் கொள்முதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. 90 நாட்களுக்குள் பொம்மிடியில் மின் கட்டண மையம் கணினிமயமாக மாற்றப்படும்.

[2007 அக்டோபர் 18

**13—**

### பேருந்து நிலையம் அமைத்தல்

**வினா எண் 1091—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தொளசம்பட்டி கிராமம், தொளசம்பட்டியில் பேருந்து நிலையம் ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தொளசம்பட்டி ஊராட்சியில் சுமார் 300 குடும்பங்கள் வசிக்கின்றன. இந்த ஊருக்கு மேட்டூர் மற்றும் சேலம் செல்லும் பேருந்துகள் வந்து போகின்றன. தினம் சுமார் 5 பேருந்துகள் 3 மற்றும் 4 முறை வந்து போகின்றன. இங்கிருந்து வெளியூர் பேருந்துகள் எதுவும் புறப்பட்டுச் செல்வதில்லை. பேருந்துகள் வந்து போக ஒரு பஸ் நிறுத்தம் மட்டுமே போதுமானது. இங்கே தனியாக பேருந்து நிலையம் தேவையில்லை.

**14—**

### தெரு விளக்கு வசதி

**வினா எண் 3224—திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், சர்க்கார் சாமக்குளம் ஒன்றியம், அக்ரஹார சாமக்குளம் ஊராட்சியில் செங்காடு பகுதியில் தெரு விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், சர்க்கார் சாமக்குளம் ஊராட்சி ஒன்றியம் அக்ரஹார சாமக்குளம் ஊராட்சி செங்காடு பகுதியில் தெரு விளக்குகள் அமைக்க சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. மேற்படி கூடுதல் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றதும் தெரு விளக்குகள் அமைத்துத் தரப்படும்.

**15—**

### பொது சுடுகாடு அமைத்தல்

**வினா எண் 5484—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், நவ்வலடி ஊராட்சி வல்லானிவிளை கிராமத்திற்கு சுடுகாடு அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், நவ்வலடி ஊராட்சியைச் சேர்ந்த வல்லான்விளை கிராமத்தில் மொத்தம் 120 குடும்பங்கள் உள்ளன. மொத்த மக்கள்தொகை சுமார் 400. இக்கிராமத்தில் இறந்தவர்களை அவரவர்களுக்குச் சொந்தமான பட்டா நிலத்தில் அடக்கம் செய்து வருகிறார்கள். வல்லான்விளை கிராமத்திற்கு மேல்புறம் தத்துவநேரி ஓடை உள்ளது. மேற்படி ஓடையின் அருகே 3 ஏக்கர் புறம்போக்கு நிலம் உள்ளது. அதில் பொது சுடுகாடு அமைக்க 1 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்ய ராதாபுரம் வட்டாட்சியர்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

16—

## நலிந்த ஊராட்சிகளுக்கு நிதி ஒதுக்குதல்

**வினா எண் 6029—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சிகளில் உள்ள மண், கல் குவாரிகள்மூலம் கிடைக்கும் ஊராட்சி நிதியினை நலிந்த ஊராட்சிகளுக்கு ஒதுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை எண் 3, தொழில் துறை (MMCE-I) நாள் 2-1-1996-ல் பத்தி 5-ன்படி உரிமைக் கட்டணம் மட்டுமே ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி முறையே 50:50 என்ற முறையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இந்நிலையில், மண், கல் குவாரிகள்மூலம் கிடைக்கும் ஊராட்சி நிதியினை நலிந்த ஊராட்சிகளுக்கு ஒதுக்க அரசாணையில் வழிவகை ஏதும் இல்லை என்பது தெரிவிக்கப்படுகிறது.

17—

## எரிமேடை அமைத்தல்

**வினா எண் 6668—திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், பரதராமி கிராமத்தில் உள்ள சுடுகாட்டில் எரிமேடை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஊராட்சி ஒன்றியம், பரதராமி கிராமத்தில் உள்ள சுடுகாட்டில் 2007-2008 ஆம் ஆண்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழும், சம்பூர்ண கிராமின் ரோஜ்கார் யோஜனா திட்டத்தின் மூலமாகவும் எரிமேடை அமைத்துத்தர தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

18—

## சிமெண்ட் மேடை அமைத்தல்

**வினா எண் 8192—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சிறுதொண்டமாதேவி கிராமத்தில் கலை நிகழ்ச்சிகள், கூட்டம் மற்றும் பள்ளி நிகழ்ச்சிகள் நடத்திடவும், பொதுவான இடத்தில் சிமெண்ட் மேடை அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, சிறுதொண்டமாதேவி கிராமத்தில் கலை நிகழ்ச்சிகள், கூட்டம் மற்றும் பள்ளி நிகழ்ச்சிகள் நடத்திடவும் பொதுவான இடத்தில் சிமெண்ட் மேடை அமைத்திட அரசு நிதியில் வழிவகை இல்லை. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டால் இப்பணியை மேற்கொள்ள இயலும்.

[2007 அக்டோபர் 18

19—

## பேருந்து நிறுத்தம்

**வினா எண் 8427—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை—வெள்ளோடு சாலையில் உள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகளுக்கு பேருந்து நிறுத்தம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெருந்துறை—வெள்ளோடு வழியே இயங்கும் பேருந்துகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு நிறுத்தத்தில் நின்று செல்லும் வகையில் இயக்கப்படுகின்றன. இருப்பினும், அவ்வப்பொழுது கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பேருந்து நிலையம் தேவையெனில் ஊராட்சியே திட்ட நிதியில் மேற்கொள்ளலாம்.

20—

## பயணிகள் நிழலகம்

**வினா எண் 10265—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோயில் ஒன்றியம், கஞ்சாநகரம் ஊராட்சி, மங்கனூர் கிராமத்திற்குச் செல்லும் பிரதான சாலையில் பயணிகள் நிழலகம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியம், கஞ்சாநகரம் ஊராட்சி, மங்கனூர் கிராமத்திற்குச் செல்லும் பிரதான சாலையில் பயணிகள் நிழலகம் கட்டுவதற்கு மதிப்பீடு ரூ. 40,000 ஆகும். பயணிகள் நிழலகம் கட்டும் பணி நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் மேற்கொள்ளுவதற்குரிய சிபாரிசினைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

21—

## சமுதாயக் கூடம் கட்டுதல்

**வினா எண் 10331—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, குன்றாண்டார்கோயில் ஒன்றியம், ரெகுநாதபுரத்தில் சமுதாயக் கூடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் சட்டமன்றத் தொகுதி, குன்றாண்டார்கோயில் ஊராட்சி ஒன்றியம், ரெகுநாதபுரத்தில் சமுதாயக்கூடம் கட்ட, 2007-08 ஆம் வருட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்தால் சமுதாயக் கூடம் கட்டப்படும்.

22—

## ஈமக்கிரியை மண்டபம் கட்டுதல்

**வினா எண் 10820—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 அக்டோபர் 18

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோயில் ஒன்றியம், ஆறுபாதி ஊராட்சி, கீழத்தெரு, காவேரி ஆற்றின் அருகில் ஈமக்கிரியை மண்டபம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியம், ஆறுபாதி ஊராட்சி, கீழத்தெரு காவேரி ஆற்றின் அருகில் ஈமக்கிரியை மண்டபம் கட்டும் பணி நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுவதால் மண்டபம் கட்டுவதற்குரிய சிபாரிசினைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பணிக்கான நிர்வாக அனுமதி பெறப்பட்ட பின்னர் ஈமக்கிரியை மண்டபம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**23—**

## பயணிகள் நிழற்குடை

**வினா எண் 12043—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோயில் ஒன்றியம், கிடாரங்கொண்டான் ஊராட்சியில், கீழப்பள்ளக் கொல்லையில் பயணிகள் நிழற்குடை கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கிடாரங்கொண்டான் ஊராட்சியில், கீழப்பள்ளக் கொல்லையில் பயணிகள் நிழற்குடை கட்டுவதற்கு ரூ. 40,000 செலவு



2007 அக்டோபர் 18]

ஆகும். பயணிகள் நிழற்குடை கட்டும் பணி நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுவதால், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் இப்பணியினை மேற்கொள்வதற்குரிய சிபாரிசினைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**24—**

## கழிவுநீர் வடிகால் வசதிகள்

**வினா எண் 15777—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி; செம்மண்கூடல் ஊராட்சி, எல்லாயூர் பகுதியில் சாக்கடை வசதியும், அமரகுந்தி ஊராட்சி, கே.எஸ். பேட்டை பகுதியில் ஆழமான சாக்கடை வசதியும் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, செம்மண்கூடல் ஊராட்சி, எல்லாயூர் பகுதியில் சாக்கடை வசதியும், அமரகுந்தி ஊராட்சி, கே.எஸ். பேட்டை பகுதியில் ஆழமான சாக்கடை வசதியும் ஏற்படுத்த தற்பொழுது ஒன்றியப் பொது நிதியில் போதுமான நிதி வசதி இல்லை.

**25—**

## கழிவுநீர் வடிகால்

**வினா எண் 16360—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோட்ட கவுண்டம்பட்டி ஊராட்சி, ஆனைகவுண்டம்பட்டி பகுதியில் சாக்கடை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோட்ட கவுண்டம்பட்டி ஊராட்சி, ஆனைகவுண்டம்பட்டி பகுதியில் சாக்கடை அமைத்துக் கொடுக்க தற்பொழுது போதுமான நிதி ஆதாரம் இல்லை.

**26—**

## கழிவுநீர்க் கால்வாய் வசதி

**வினா எண் 16780—திரு. அ. தமிழரசு:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், வெள்ளக்கல்பட்டி ஊராட்சி, அரபிக் கல்லூரி-மஞ்சளாம் பள்ளம்வரை சாக்கடை வசதி செய்ய அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஓமலூர் ஒன்றியம், வெள்ளக்கல்பட்டி ஊராட்சி, அரபிக் கல்லூரி – மஞ்சளாம் பள்ளம்வரை சாக்கடை வசதி செய்ய தற்போது ஒன்றியப் பொது நிதியில் போதுமான நிதி ஆதாரம் இல்லை.

**27—**

## இலவச திருமண மண்டபம்

**வினா எண் 16808—திரு. அ. தமிழரசு:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோட்டமேட்டுப்பட்டி ஊராட்சியில் இலவச திருமண மண்டபம் கட்ட அரசு முன்வருமா?*



**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோட்டமேட்டுப்பட்டி ஊராட்சி, ஆர்.சி. செட்டிப்பட்டியில் ஏற்கெனவே ஒரு சமுதாயக் கூடம் உள்ளது. இருப்பினும், இவ்வூராட்சியில் கோட்டமேட்டுப்பட்டி என்னுமிடத்தில் ஒரு சமுதாயக்கூடம் அமைக்க ஏறத்தாழ ரூ. 5.50 இலட்சம் செலவாகும். ஆனால், ஒன்றியப் பொது நிதியில் போதுமான நிதி வசதி இல்லையாதலால் இந்த வேலையினைத் தற்போது செய்ய இயலாது.

**28—**

## கழிவுநீர் வடிகால் வசதி

**வினா எண் 17902—திரு. பெ. கண்ணன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சியில் சாக்கடை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியத்தைச் சேர்ந்த செம்மண்கூடல் ஊராட்சியில் சாக்கடை வசதி மற்றும் அடிப்படை வசதிகள் 2007-2008 ஆம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் செய்து தரப்படவுள்ளன.

**29—**

## மயான வசதி

**வினா எண் 17912— திரு. பெ. கண்ணன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2007 அக்டோபர் 18

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, கருக்கல்வாடி ஊராட்சிக்கு மயான வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், கருக்கல்வாடி ஊராட்சி கங்காணியூர் கோட்டமேடு (சுப்புரு வீடு பின்புறம்) கருக்கல்வாடி குட்டைக்கரை, நரசுக்காடு அருந்ததியர் காலனி முன்பு மயானம் உள்ளது. எனவே, தற்பொழுதுள்ள மயானம் 2007-2008 ஆம் ஆண்டில் நிதி வசதி பெற்று மேம்பாடு செய்யப்படும்.

**30—**

## சமுதாயக் கூடம் கட்டுதல்

**வினா எண் 22069—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், முகவூர் கிராமத்திற்கு ஒரு சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம் முகவூர் கிராமத்திற்கு சமுதாயக் கூடம் கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் 2007-08 ஆம் ஆண்டு சமுதாயக் கூடம் கட்டித் தரப்படும்.



2007 அக்டோபர் 18]

**31—**

## சமுதாயக் கூடம் அமைத்தல்

**வினா எண் 22392—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், சாலூர் கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சமுதாயக் கூடம் கட்டுவதற்கு எந்தத் திட்டத்திலும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதால் செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், சாலூர் கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

**32—**

## மயானத்தை மேம்படுத்துதல்

**வினா எண் 23784—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை அனுப்பானடியிலுள்ள சிந்தாமணி கிராம மயானத்தினை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை அனுப்பானடியிலுள்ள திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சிந்தாமணி கிராம மயானத்தினை 2007-08 ஆம் நிதியாண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அரசு விதிமுறைகளின்படி செப்பனிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2007 அக்டோபர் 18

**33—**

## பூச்சிமருந்து இயந்திரம் வழங்குதல்

**வினா எண் 7034—திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு இலவசமாக கைத்தெளிப்பான் (பூச்சி மருந்து) இயந்திரம் அதிக அளவில் கொடுக்கப்பட அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) விவசாயிகளுக்கு இலவசமாக கைத்தெளிப்பான் (பூச்சி மருந்து) இயந்திரம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**34—**

## புதிய மோட்டார்கள் வழங்குதல்

**வினா எண் 12737—திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் பயன்படுத்தும் பழைய மின் மோட்டார்களை மாற்றி மானிய விலையில் புதிய மின் மோட்டார்களை விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம்.

இத்திட்டம் முன்னோடித் திட்டமாக 2003-04-ல் கோவை, தேனி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. தொடர்ந்து 2004-05, 2005-06 மற்றும் 2006-07 ஆம் நிதி ஆண்டுகளில் சென்னை மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.



2007 அக்டோபர் 18]

**35—**

## பயிற்சி அளித்தல்

**வினா எண் 20452—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள விவசாயிகள் நவீன விவசாயக் கருவிகளைப் பயன்படுத்த பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக விவசாயிகளுக்கும் வேலையற்ற கிராமப்புற இளைஞர்களுக்கும் மத்திய அரசு நிதி உதவியுடன் வேளாண் கருவிகளைக் கையாளுதல் மற்றும் பராமரித்தல் சம்பந்தமான பயிற்சி அளிக்கும் திட்டம் கோவை மாவட்டத்தில் ரூ. 1.45 இலட்சம் செலவில் 2006-07 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. 15 நாட்கள் வீதம் 6 பயிற்சிகள் நடத்தப்பட்டன. மொத்தம் 120 விவசாயிகள் (35 ஆண்கள் மற்றும் 85 பெண்கள்) பயிற்சிகளில் கலந்து கொண்டுள்ளனர். 2006-07 ஆம் ஆண்டில் நடைபெற்றுள்ள பயிற்சிகளில் வால்பாறை தொகுதியிலிருந்து விவசாயிகள் கலந்து கொள்ளவில்லை. இருப்பினும் 2007-08 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் வால்பாறை தொகுதி விவசாயிகள் பயன்பெறும் வகையில் பயிற்சிகள் வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**36—**

## கதிர் அடிக்கும் களம்

**வினா எண் 21993—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஒன்றியம், முகவூர் கிராமத்திற்கு கதிர் அடிக்கும் களம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 அக்டோபர் 18

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஒன்றியம், முகவூர் கிராமத்திற்கு கதிரடிக்கும் களம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**37—**

**கதிர் அடிக்கும் களம்**

**வினா எண் 27959—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், பள்ளிப்பட்டி ஊராட்சி பேருந்து நிறுத்தம் பகுதியில் கதிர் அடிக்கும் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், பள்ளிப்பட்டி ஊராட்சி பேருந்து நிறுத்தம் பகுதியில் கதிர் அடிக்கும் களம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**38—**

**கதிர் அடிக்கும் களம்**

**வினா எண் 27960—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், பள்ளிப்பட்டி ஊராட்சி, நாகோஜிப்பட்டி, காட்டுவளவு, கொக்காரப்பள்ளம் ஆகிய பகுதிகளில் கதிர் அடிக்கும் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், பள்ளிப்பட்டி ஊராட்சி, நாகோஜிப்பட்டி, காட்டுவளவு, கொக்காரப்பள்ளம் ஆகிய பகுதிகளில் கதிர் அடிக்கும் களம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**39—**

**கதிர் அடிக்கும் களம்**

**வினா எண் 27961—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், மல்லியகுந்தம் ஊராட்சி மாங்குட்டையான் தெரு, குட்டப்பட்டி ஊராட்சி, ஊஞ்சப்பட்டி ஆகிய பகுதிகளில் கதிர் அடிக்கும் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம் மல்லியக்குந்தம் ஊராட்சி, மாங்குட்டையான் தெரு, குட்டப்பட்டி ஊராட்சி, ஊஞ்சப்பட்டி ஆகிய பகுதிகளில் கதிர் அடிக்கும் களம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**40—**

**பாசன வசதி**

**வினா எண் 11294—திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 அக்டோபர் 18

திருப்பரங்குன்றம் தொகுதி, திருமங்கலம் பிரதானக் கால்வாயை இரு பிரிவாக்கி வடபழஞ்சிவெழுத்துப்பட்டி, மேலக்குயில்குடி, கீழக்குயில்குடி, வடிவேல்கரைக் கண்மாய் மற்றும் சாக்கிலிபட்டி, வேடர்புளியங்குளம், தணக்கண்குளம் ஆகியன பாசன வசதி பெற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

பெரியாறு அணையின் நீர் மட்டம் குறைக்கப்பட்ட நிலையில் பெரியாறு ஆயக்கட்டுப் பகுதிக்கு பாசனத்திற்குத் தேவைப்படும் 24 டி.எம்.சி. அடி தண்ணீரில் 19 டி.எம்.சி. அடி தண்ணீர் மட்டுமே கிடைக்கிறது. எனவே, இந்தச் சூழ்நிலையில், திருமங்கலம் பிரதானக் கால்வாயை இரு பிரிவாக்கி பாசன வசதி அளிக்க புதிய கால்வாய் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**41—**

## புதிய பேருந்துகள்

**வினா எண் 1603—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில் இருந்து சென்னை வரும் அரசு விரைவுப் பேருந்துகள் மிகவும் பழையதாக இருப்பதை மாற்றி புதிய பேருந்துகள் வாங்கி இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் மதுரை-சென்னை தடத்தில் மொத்தம் 60 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி 60 பேருந்துகளில் டிசம்பர் 2006 வரை 8 பழைய பேருந்துகளை அகற்றி அவற்றுக்குப் பதிலாக 8 புதிய அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.



2007 அக்டோபர் 18]

**42—**

## பேருந்து வசதி

**வினா எண் 2101—திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் பகுதி, அரிசிபாளையம் ஊராட்சி மக்களுக்கு பேருந்து வசதி ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரிசிபாளையம் கிராமத்தினை திருப்புமுனையாகக் கொண்டு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர் மற்றும் தனியார் பேருந்துகள் 2, தினசரி 20 நடைகளும் (Single Trips), அரிசிபாளையம் கிராமம் வழியாக 5 நகரப் பேருந்துகள் தினசரி 58 நடைகளும் (Single Trips), ஆக மொத்தம் 7 பேருந்துகள் தினசரி 78 நடைகளுமாக (Single Trips) இப்பகுதியில் தற்போதைய பயணிகள் அடர்விற்கேற்ப இயக்கப்பட்டு வருகின்றன.

**43—**

## பேருந்து வசதி

**வினா எண் 3278—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, முத்துமுடி, ஷேக்கல்முடி, பன்னிமேடு பங்களா டிவிஷன், தோனிமுடி, ஆனைமுடி, குரங்குமுடி, தாய்முடி எஸ்டேட், அங்கலக்குறிச்சி உட்பகுதி, கரியாஞ்செட்டிப்பாளையம் உட்பகுதி, பிலிசின்னம்பாளையம் ஊராட்சி ஆகிய குடியிருப்புப் பகுதிகளுக்குக் கூடுதலாகப் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம்/தனியார் பேருந்துகள் கீழ்க்கண்ட பகுதிகட்கு இயக்கப்படும் விவரம் வருமாறு:—

[2007 அக்டோபர் 18

| | | |
|---|---|---|
| முத்துமுடி | : | 7 பேருந்துகள் தினசரி 16 நடைகளும் |
| வேடிக்கல் முடி | : | 17 பேருந்துகள் தினசரி 40 நடைகளும் |
| பன்னிமேடு பங்களா டிவிஷன் | : | முடிஸ் சோலையாறு டேம் பிரதான சாலையிலிருந்து 30 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இப்பகுதிக்குச் செல்லும் சாலை (1.0 கி.மீ. தூரம்) பேருந்துகள் இயக்கிடத் தகுதியற்ற நிலையில் அமைந்துள்ளது. மேற்கண்ட சாலையைச் செப்பனிடும்பட்சத்தில் பேருந்து இயக்கிட நடவடிக்கை எடுக்கப்படும். |
| தோனிமுடி | : | 5 பேருந்துகள் தினசரி 10 நடைகளும் |
| ஆனைமுடி | : | 6 பேருந்துகள் தினசரி 30 நடைகளும் |
| குரங்குமுடி | : | 5 பேருந்துகள் தினசரி 20 நடைகளும் (தற்போதைய பயணிகள் அடர்விற்கு ஏற்ப போதிய பேருந்துகள் இயக்கப் பட்டு வருகின்றன). |
| பிலிசின்னம்பாளையம் மற்றும் அங்கலக்குறிச்சி உட்பகுதி | : | அரசுப் பேருந்துமூலம் 10 நகரப் பேருந்துகள் தினசரி 118 நடைகளும் தனியார் துறை நகரப் பேருந்துகள் 5 தினசரி 80 நடைகளும், தனியார் துறை புறநகர் பேருந்து 1 தினசரி 14 நடைகளும், அரசு புறநகர் பேருந்துகள் 34 தினசரி 106 நடைகளும் பயணிகள் அடர்விற்கேற்ப இயங்கி வருகின்றன. |
| கரியாஞ்செட்டிப் பாளையம் | : | அரசு நகரப் பேருந்துகள் 2 தினசரி 26 நடைகள் தற்போதைய பயணிகள் அடர்விற்கேற்ப இயங்கி வருகின்றன. பன்னிமேடு பங்களா டிவிஷன் தவிர இதர அனைத்துப் பகுதிகளுக்கும் தற்போது போதுமான அளவு பேருந்துகள் இயங்கி வருகின்றன. |



2007 அக்டோபர் 18]

**44—**

## நகரப் பேருந்துகள் இயக்குதல்

**வினா எண் 3590—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு அரசு மருத்துவமனை–மருத்துவக் கல்லூரி–சட்டக் கல்லூரி–என்.ஜி.ஓ. நகர்–திருமணி வரை நகரப் பேருந்துகள் 30 நிமிடத்திற்கு ஒன்று வீதம் இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டிலிருந்து என்.ஜி.ஓ. நகர், திருமணி வரை தடம் எண் டி. 10 என்ற நகரப் பேருந்தும், தடம் எண் டி. 27 என்ற நகரப் பேருந்து செங்கல்பட்டு–கிளாப்பாக்கம் (வழி) மருத்துவக் கல்லூரி, சட்டக் கல்லூரி, திருமணிக்கும், தடம் எண் டி 60 என்ற நகரப் பேருந்து தாம்பரம்–செங்கல்பட்டு சட்டக் கல்லூரி (வழி) செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரிக்கும், தடம் எண் டி 21 என்ற நகரப் பேருந்து செங்கல்பட்டு–மாணாவதி (வழி) மருத்துவக் கல்லூரி, சட்டக் கல்லூரி வழியாக இயக்கப்படுகிறது. எனவே, மேற்கூறியபடி இயக்கப்படும் 27 நடைகளே தற்போதுள்ள போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாக உள்ளன.

**45—**

## பேருந்து நின்று செல்ல நடவடிக்கை

**வினா எண் 5295—திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரம்–பழையாறு வழித்தடத்தில் கூத்தியம்பேட்டை, கொப்பியம் பேருந்து நிறுத்தங்களில் பேருந்துகள் நின்று செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சிதம்பரம்–பழையாறு தடத்தில் கூத்தியம்பேட்டை மற்றும் கொப்பியம் ஆகிய பேருந்து நிறுத்தங்களில் பேருந்துகளை நிறுத்தி

[2007 அக்டோபர் 18

பயணிகளை ஏற்றி/இறக்கிச் செல்ல தக்க அறிவுரை 2-9-2006 அன்று வழங்கி தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**46—**

## கூடுதல் பேருந்து வசதி

**வினா எண் 5761—திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி தொகுதி, சின்னமனூர்-கம்பம், முத்துலாபுரம், எரசை, இராயப்பன்பட்டிக்கு கூடுதலாகப் பள்ளி நேரத்தில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், மதுரை, கோரிக்கைத் தடத்தில் கீழ்க்கண்டவாறு பேருந்துகளை தற்போது இயக்கி வருகிறது.

கம்பம்—சின்னமனூர் வழி காமயகவுண்டன்பட்டி, இராயப்பன்பட்டி ஆனைமலையன்பட்டி, சின்ன ஓவலாபுரம், எரசை வழித்தடத்தில் காலையில் 7-35, 8-00, 8-30 மணி நேரங்களில் ஒரு தனி நடையும், மாலையில் 4-15 மற்றும் 4-35 மணிக்கு ஒரு தனி நடையும் இயக்குகிறது. மேலும், கம்பம்—பாளையம் வழி இராயப்பன்பட்டி தடத்தில் மாலையில் 4-25 மணிக்கு ஒரு தனி நடையும், சின்னமனூர்—கம்பம் வழி முத்துலாபுரம், சின்ன ஓவலாபுரம், இராயப்பன்பட்டி தடத்தில் காலை 7-30 மணி, 8-20 மணிக்கு ஒரு தனி நடையும், மாலை 5-50 மணிக்கு ஒரு தனி நடையும், சின்னமனூர்—சின்ன ஓவலாபுரம் வழி முத்துலாபுரம் தடத்தில் காலை 7-40 மணிக்கு ஒரு தனி நடையும் மாலை 5-35 மணிக்கு ஒரு தனி நடையும் மற்றும் சின்னமனூர்—பாளையம் வழி முத்துலாபுரம், ஊத்துப்பட்டி தடத்தில் 4-30 மணிக்கு ஒரு தனி நடையும் இயக்கப்படுகிறது. இதுதவிர, காலை 7-00 மணிக்கு சின்னமனூர்—கம்பம் வழி எரசை, சின்ன ஓவலாபுரம், இராயப்பன்பட்டி ஒரு தனிநடை கூடுதலாக இயக்க நடவடிக்கையில் உள்ளது. எனவே, மேலே குறிப்பிட்டுள்ளவாறு பள்ளி செல்லும் மாணவ மாணவியர்களுக்கு வினாவில் குறிப்பிட்டுள்ள அனைத்து ஊர்களுக்கும் போதுமான பேருந்து வசதிகள் உள்ளன.



2007 அக்டோபர் 18]

**47—**

## பேருந்து வசதி

**வினா எண் 5965—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து செல்லம்பட்டி, வாலாந்தூர் வழியாக வின்னகுடி சென்றுகொண்டிருந்த பேருந்தை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து செல்லம்பட்டி, வாலாந்தூர் வழியாக வின்னகுடிக்கு 4 தனி நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வந்தது. இத்தடத்தில் சொக்கத்தேவன்பட்டி முதல் வின்னகுடிவரை சாலை மோசமாக இருந்ததால் பலமுறை பேருந்து சாலையை விட்டு கீழிறங்கிவிட்டதால் தொடர்ந்து இயக்க இயலாமற்போனது. 2-10-2006 அன்று சாலையினை ஆய்வு செய்தபோது சாலை பேருந்து இயக்கத்திற்கு உகந்ததாக இல்லை என்பதால் வின்னகுடிக்கு இயக்கிய பேருந்து மீண்டும் இயக்க இயலாத நிலை உள்ளது.

**48—**

## அலுவலகக் கட்டடம்

**வினா எண் 6025—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மண்டலத்தில் போக்குவரத்து கோட்டம்-3-ல் தலைமை அலுவலகத்திற்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மண்டல தலைமை அலுவலகம் கட்டுவதற்கான நிலம் காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் வட்டம்

[2007 அக்டோபர் 18

காரப்பேட்டை கிராமத்தில் உள்ள புல எண் 311/2-ல் 1.58 ஹெக்டேர் நிலத்தை அளவீடு செய்து காஞ்சிபுரம் வட்டாட்சியரால் 1-11-2006 அன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி கையகப்படுத்தப்பட்டுள்ள நிலத்தில் காஞ்சிபுரம் மண்டல தலைமை அலுவலகம் கட்டுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**49—**

## பேருந்து வசதி

**வினா எண் 6352—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, மதுரை பெரியார் நிலையத்திலிருந்து செக்கானூரணி, பன்னியான் வழியாக விக்கிரமங்கலம் சென்றுவர பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்போது பெரியார் நிலையத்திலிருந்து செக்கானூரணி வழியாக பன்னியானுக்கு 20 தனி நடைகளும், கீலப்பட்டி வழியாக விக்கிரமங்கலத்திற்கு 10 தனி நடைகளும், திருமங்கலத்திலிருந்து 12 தனி நடைகளும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இவை தவிர, பெரியார் நிலையத்திலிருந்து துவரிமான், நாராயணபுரம் வழியாக விக்கிரமங்கலத்திற்கு 26 தனி நடைகளும் விக்கிரமங்கலம் வழியாக பல்வேறு இடங்களுக்கும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேற்கண்டவாறு பெரியார் நிலையத்திலிருந்து அதிகளவு கிராமங்கள் உள்ள வழிகளில் விக்கிரமங்கலத்திற்கு போதியளவு பேருந்து வசதிகள் உள்ளதாலும், பன்னியான் கிராம மக்கள் பெரியார் நிலையத்திற்கு வருவதற்கு அருகில் உள்ள கீழப்பட்டிக்குச் சென்று விக்கிரமங்கலம் செல்வதற்கும் போதிய பேருந்து வசதிகள் உள்ளதாலும் வினாவில் குறிப்பிட்ட கிராமங்கள் அதிகம் இல்லாத வழித்தடத்தில் பேருந்து இயக்கினால் நேரடிப் பயணிகள் அதிகம் இருக்க வாய்ப்பில்லை. எனவே, மதுரை பெரியார் நிலையத்திலிருந்து செக்கானூரணி, பன்னியான் வழியாக விக்கிரமங்கலத்திற்குப் புதிய தடம் இயக்கும் தேவை எழவில்லை.



2007 அக்டோபர் 18]

**50—**

## பேருந்து வசதிகள்

**வினா எண் 6364—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து மேலக்கால், விக்கிரமங்கலம் வழியாக ரெட்டியப்பட்டி செல்லும் பேருந்து, டி.உடையாம்பட்டிக்கு மதுரை பெரியார் நிலையத்திலிருந்து மேலக்கால், விக்கிரமங்கலம், நரியம்பட்டி வழியாக அய்யனார்குளம் செல்லும் பேருந்து ஆகிய பேருந்துகளை இரண்டு கூடுதல் டிரிப்புகள் இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்போது பெரியார் நிலையத்திலிருந்து மேலக்கால், விக்கிரமங்கலம் வழியாக ரெட்டியப்பட்டிக்கு 4 தனி நடைகளும், ரெட்டியப்பட்டியிலிருந்து 10 கி.மீ. தூரத்தில் உள்ள தெப்பத்துப்பட்டிக்கு 4 தனி நடைகளும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இவை தவிர, ரெட்டியப்பட்டியிலிருந்து 1.0 கி.மீ. தூரத்தில் உள்ள ரெட்டியப்பட்டி பிரிவு நிறுத்தம் வழியாக உசிலம்பட்டி-விக்கிரமங்கலம் தடப் பேருந்துகள் மூலம் 24 தனி நடைகள் பேருந்து வசதி உள்ளது. இதேபோன்று பெரியார் நிலையத்திலிருந்து மேலக்கால், விக்கிரமங்கலம், நரியம்பட்டி வழியாக அய்யனார்குளத்திற்கு 12 தனி நடைகளும், அய்யனார்குளத்திற்கு அருகில் உள்ள நரியம்பட்டிக்கு 4 தனி நடைகளும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இந்த நடைகளில் உள்ள பயணிகள் அடர்வும் சுமாராகவே உள்ளது. மேற்கண்ட தடப் பேருந்துகளின் பயணிகள் அடர்வினைக் கருத்தில் கொள்ளும்போது இத்தடங்களில் மேலும் கூடுதல் நடைகள் இயக்கும் தேவை எழவில்லை.

**51—**

## பேருந்து வசதி

**வினா எண் 6372—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, பேயம்பட்டிக்கு உசிலம்பட்டியிலிருந்து சென்று கொண்டிருந்த பேருந்தை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி–பேயம்பட்டி தடத்தில் நாளொன்றுக்கு 4 தனி நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வந்தது. பகாதேவன்பட்டியில் உள்ள ஆக்கிரமிப்பினால் பகாதேவன்பட்டிக்கு அப்பால் பேருந்து இயக்க இயலாத நிலை ஏற்பட்டு 2003 ஆம் வருடம் முதல் மேற்படி பேருந்து பாப்பாபட்டிவரையே இயக்கப்பட்டு வருகிறது. 25-9-2006 அன்று இச்சாலை ஆய்வு செய்யப்பட்டது. தற்போது பாப்பாபட்டியிலிருந்து பகாதேவன்பட்டி வரை சாலை போடும் பணி நடைபெற்று வருகிறது. பகாதேவன்பட்டியில் இதுவரை, பேருந்து இயக்கத்திற்கு இடையூறாக இருந்து வந்த வீட்டுச் சுவர்கள் அதே நிலையிலேயே உள்ளன. பகாதேவன்பட்டியிலிருந்து பேயம்பட்டி வரை உள்ள சாலையில் அரிப்பு ஏற்பட்டு கற்கள் சிதைந்து இருபுறமும் முட்புதர்கள் அடர்ந்து உள்ளன. மேலும் பேயம்பட்டியில் பேருந்து திரும்புவதற்கு இடவசதியும் இல்லை. மேற்கண்ட காரணங்களால் உசிலம்பட்டி–பேயம்பட்டி வழித்தட பேருந்தை மீண்டும் இயக்க இயலாத நிலை உள்ளது.

**52—**

## பேருந்து வசதி

**வினா எண் 6373—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியிலிருந்து தெப்பத்துப்பட்டி (வழி உத்தப்பநாயக்கனூர்) செல்லும் பேருந்தை வாடிப்பட்டிக்கு சென்றுவர அனுமதிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி --வாடிப்பட்டி வழி உத்தப்பநாயக்கனூர், கல்லாத்து, விக்கிரமங்கலம், சோழவந்தான் தடத்தின் தூரம் 46.2 கி.மீ. ஆகும். தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள் 1989 பிரிவு '3e'-ன்படி 3.5 கி.மீ. தூரம் வரை மட்டுமே நகரப் பேருந்து இயக்க இயலும். தவிர இத்தடம்



மிகக் குறைவான தூரமே உள்ளதால் புறநகர் பேருந்தும் இயக்க இயலாது. இத்தடத்தில் அனைத்து கிராமங்களுக்கும் பல்வேறு தடப் பேருந்துகள்மூலம் போதிய அளவில் பேருந்து வசதிகள் உள்ளன.

**53—**

## பேருந்து வசதி

**வினா எண் 6377—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டியிலிருந்து செல்லம்பட்டி, ஜோதிமாணிக்கம், விக்கிரமங்கலம் வழியாக சோழவந்தான் செல்லும் பேருந்தை கூடுதல் இரண்டு டிரிப்புகள் இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்போது உசிலம்பட்டியிலிருந்து செல்லம்பட்டி, ஜோதிமாணிக்கம், விக்கிரமங்கலம் வழியாக சோழவந்தானுக்கு 8 தனி நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட நடைகளில் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளதாலும், மேலும் இப்பேருந்து நாளொன்றுக்கு ரூ.2,098/-வரை நட்டத்தில் இயக்கப்படுகிறது. எனவே, கூடுதல் டிரிப்புகள் இயக்க இயலாது.

**54—**

## பேருந்து வசதி

**வினா எண் 6392—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை அண்ணா பேருந்து நிலையத்திலிருந்து பெரியார், அரசரடி, செக்கானூரணி, செல்லம்பட்டி, வாலாந்தூர் வழியாக உச்சப்பட்டி (அழகப்பன் நகர்) பகுதிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அண்ணா நிலையம்–உச்சப்பட்டி வழி பெரியார் நிலையம், அரசரடி செக்கானூரணி, செல்லம்பட்டி, வாலாந்தூர் தடத்தின் தூரம் 39.5 கி.மீ.

ஆகும். தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள் 1989 பிரிவு '3e'-ன்படி பேருந்து வசதி பெற்றுள்ள தடங்களில் 35 கி.மீ. தூரம் வரை மட்டுமே நகரப் பேருந்து இயக்க இயலும். இருப்பினும் இத்தடத்தில் அண்ணா நிலையத்திலிருந்து பெரியார் நிலையத்திற்குப் போதுமான அளவு வசதி உள்ளது. மதுரை பெரியார் நிலையத்திலிருந்து உச்சப்பட்டிக்கு நாளொன்றுக்கு 14 தனி நடைகளும் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

**55—**

## பேருந்து வசதி

**வினா எண் 7872—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டியிலிருந்து கோட்டூர், ரெங்கநாதபுரம் வழியாக மன்னார்குடிக்குப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை தடத்தின் நீளம் 33 கி.மீ. ஆகும். இத்தடத்தில் மன்னார்குடி-தட்டாங்கோயில் தடத்தில் 176 நடைகளும், தட்டாங்கோயில்-பனையூர் (வழி) ரெங்கநாதபுரம் 12 நடைகளும், கோட்டூர்-திருத்துறைப்பூண்டிக்கு 176 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இத்தடத்தில் பனையூர் முதல் கோட்டூர் வரை உள்ள 3 கி.மீ. மட்டுமே, சாலைப் பகுதி மிகவும் பழுதடைந்துள்ளதால், தற்சமயம் பேருந்து இயக்கிட இயலாத நிலை உள்ளது. இச்சாலை சீர் செய்யப்பட்ட பின் புதிய வழித்தடம் துவக்கிடும்போது கோரிக்கை தடத்தில் பேருந்து இயக்கிட ஆவன செய்யப்படும்.

**56—**

## அரசுப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 9471—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





மானாமதுரையிலிருந்து இடைக்காட்டூர் வழியாக மதுரைக்கு, மானாமதுரையிலிருந்து இராமேஸ்வரம், திருச்செந்தூர் வழியாக கன்னியாகுமரிக்கு மதுரை வழியாக கோயம்புத்தூருக்கு அரசுப் பேருந்துகள் இயக்க முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மானாமதுரையிலிருந்து மதுரைக்கு இடைக்காட்டூர் வழியாக, புறநகர் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. மேலும், மானாமதுரையிலிருந்து கமுதி வழியாக திருச்செந்தூருக்கு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இராமேஸ்வரத்திலிருந்து மானாமதுரை, மதுரை வழியாக கன்னியாகுமரிக்கு அரசுப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது மற்றும் கோயம்புத்தூரிலிருந்து ஏர்வாடி-கோயம்புத்தூர் (வழி) மதுரை, மானாமதுரை வழித்தடத்தில் அரசுப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

**57—**

## நகரப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 9659—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து சங்கமங்கலம், தீயனூர், அரிமண்டபம் வரை நகரப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை தடத்தில் ஆய்வு மேற்கொண்டதில் தீயனூர் முதல் அரிமண்டபம் வரையிலான சாலை, பேருந்து இயக்கத் தகுதியற்ற நிலையில் உள்ளதாலும், தீயனூர் செல்லும் வழித்தடத்தில் பாலம் பழுதடைந்த நிலையில் மிகக் குறுகிய நிலையில் உள்ளதாலும் மேற்கண்ட குறைபாடுகள் சரிசெய்த பின்னர் பொதுமக்களின் தேவையின் அடிப்படையில் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

58—

## புதிய பேருந்துகள் வழங்குதல்

**வினா எண் 9640—திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் அரசுப் போக்குவரத்துப் பணிமனையிலுள்ள பழைய பேருந்துகளை நீக்கிவிட்டுப் புதிய பேருந்துகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஜெயங்கொண்டம் பணிமனையில் இருந்து இயக்கப்படும் புறநகர் மற்றும் நகரப் பேருந்துகள் வயது மூப்பு மற்றும் தகுதி அடிப்படையிலேயே கழிவு செய்யப்பட்டு வாகன மாற்றம் செய்யப்படுகிறது. தற்போது ஜெயங்கொண்டம் கிளையில் 73 பேருந்துகள் உள்ளன. மேற்படி பேருந்துகளின் சராசரி வயது 5.2 ஆண்டுகள் ஆகும். தற்போது புதிய பேருந்துகள் கட்டுமானப் பணி நடைபெற்று வருகின்றது. புதிய பேருந்துகள் வரும்போது பழைய பேருந்துகள் வயது மூப்பு மற்றும் தகுதி அடிப்படையில் ஒவ்வொன்றாகக் கழிவு செய்யப்படும்.

59—

## பேருந்து வசதி

**வினா எண் 9641—திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டத்தைச் சுற்றியுள்ள அனைத்து கிராமங்களுக்கும் பேருந்து வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஜெயங்கொண்டம் கிளையில் இருந்து ஜெயங்கொண்டத்தைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு 22 நகரப் பேருந்துகள்மூலம் 49 வழித்தடங்களில் சாலை வசதியுள்ள கிராமங்களுக்குப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இவைதவிர, 5 மினி பேருந்துகளும் ஜெயங்கொண்டத்தைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு இயங்கி வருகின்றன. இத்துடன் 46 புறநகர் பேருந்துகள்மூலம் ஜெயங்கொண்டம் பகுதியில் இருந்து அரியலூர், பெரம்பலூர், டி.பழூர், கோட்டைக்காடு, செந்துறை, ஸ்ரீமுஷ்ணம், விருத்தாசலம், சிதம்பரம், கும்பகோணம், திருச்சி போன்ற குறுகிய தொலைவில் உள்ள ஊர்களுக்கும், சென்னை, பாண்டி, நெய்வேலி, திருப்பூர், கோயம்புத்தூர், பழனி போன்ற நெடுந்தூர ஊர்களுக்கும், பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும், தேவையின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டு தேவைக்கு ஏற்ப கூடுதல் பேருந்துகள் இயக்கவும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

60—

## பேருந்து வசதி

**வினா எண் 12576—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியிலிருந்து திருநெல்லிக்காவல், கோட்டூர், விக்ரபாண்டியம், திருக்கொள்ளிக்காடு, செருவாமணி, மாரங்குடி வழியாகப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை தடமான மன்னார்குடி–கோட்டூருக்கு தினசரி 88 நடைகளும், கோட்டூர்–ஆலத்தூருக்கு 10 நடைகளும், செருவாமணி–திருக்கொள்ளிக்காட்டுக்கு 16 நடைகளும் கும்பகோணம் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து மூலம் இயக்கப்படுகிறது. இத்தடத்தில் ஆலத்தூர் முதல் செருவாமணி வரை இடைப்பட்ட 4.8 கி.மீ. சாலைப் பகுதி மிகவும் பழுதடைந்து குறுகலாக பேருந்து இயக்கத்திற்குத் தகுதியற்றதாக உள்ளது.

61—

## பணிமனை அமைத்தல்

**வினா எண் 13852—திரு. கி. அறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு போக்குவரத்துப் பணிமனை, நகரை ஒட்டிய வேறு இடத்தில் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டில் தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் பணிமனை அனைத்து வசதிகளுடன் பேருந்து நிலையத்திற்கு வெகு அருகில் பயணிகள் பயனடையும் விதத்தில் அமைந்துள்ளது. எனவே, செங்கல்பட்டு பணிமனையை நகரை ஒட்டிய வேறு இடத்தில் அமைப்பதற்கான நடவடிக்கை தற்போது இல்லை.

62—

## தொழிற்கூடம்

**வினா எண் 18650—திரு. ஞா. ஜான் ஜோசப்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளவங்கோடு தொகுதி, ஏழுதேசம் ஆதி திராவிடர் கயிற்று மிதியடி மற்றும் கயிற்றுப் பாய் தொழிற்கூடத்தை மீண்டும் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் 10 கயிறு தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் தொழில் வணிக இயக்குநரகத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன. இம்மாவட்டத்தில் விளவங்கோடு வட்டம் கலிங்கராஜபுரம் ஊரில் ஏழுதேசம் ஆதி திராவிடர் கயிறு மற்றும் கயிற்றுப் பாய் தொழிலாளர் தொழிற்கூட்டுறவுச் சங்கம் தொழில் வணிகத் துறையின்



கட்டுப்பாட்டில் இயங்கி வந்தது. இந்தச் சங்கம் கயிறு, கயிற்றுப் பாய் மற்றும் கயிறு மிதியடிகள் உற்பத்தியில் ஈடுபட்டு வந்தது. இதே பகுதியில் கலிங்கராஜபுரம் ஆதி திராவிடர் கயிறு தொழிலாளர் தொழிற்கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் சங்கம் ஒன்றும் இதே துறையின்கீழ் இயங்கி வந்தது. இச்சங்கம் கயிறு உற்பத்தியில் மட்டும் ஈடுபட்டு வந்தது. இரு சங்கங்களும் மிக மிக அருகில் இருந்து வந்தன. மேலும், அப்பகுதி மக்கள் இரு சங்கங்களிலும் உறுப்பினர்களாக இருந்து வந்தனர். இந்நிலையில் ஏழுதேசம் ஆதி திராவிடர் கயிறு மற்றும் கயிற்றுப் பாய் தொழிலாளர் தொழிற்கூட்டுறவுச் சங்கத்தில் கயிறு, கயிற்றுப் பாய் மற்றும் கயிறு மிதியடிகள் உற்பத்தி நடைபெற்று வந்ததால் கலிங்கராஜபுரம் ஆதி திராவிடர் கயிறு தொழிலாளர் தொழிற்கூட்டுறவுச் சங்கம் செயலிழந்து இருந்தது. கயிற்றுப் பாய் மற்றும் கயிறு மிதியடி உற்பத்தியில் ஈடுபட்ட உறுப்பினர்களுக்குக் கிடைத்து வந்த கூலியின் அளவினைவிட தென்னை நார் உற்பத்தியில் கிடைக்கும் கூலியின் அளவு அதிகமாக இருந்ததால் ஒருங்கிணைந்த கயிறு வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்னர் சங்கத்தில் தென்னை நார் உற்பத்தி மற்றும் கயிறு உற்பத்தியில் உறுப்பினர்கள் அதிக ஆர்வம் காட்டியதோடு கயிற்றுப் பாய் மற்றும் மிதியடி உற்பத்தியில் ஈடுபடவில்லை. மேலும் கயிற்றுப் பாய் மற்றும் மிதியடிகளின் சந்தை வாய்ப்பும் வெகுவாகக் குறைந்து விட்டது. ஆகவே இரு சங்க உறுப்பினர்களும் பயன்பெறத்தக்க வகையில், இரு சங்க உறுப்பினர்களின் பேரவைத் தீர்மானத்தின்படி, அவற்றை இணைத்து ஏழுதேசம் ஆதி திராவிடர் கயிறு தொழிலாளர் தொழிற்கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் ஒரே சங்கமாகப் பதிவு செய்யப்பட்டு 23-11-1993 முதல் செயல்பட்டு வருகிறது.

63—

## பட்டா வழங்குதல்

**வினா எண் 18733—திரு. ஞா. ஜான் ஜோசப்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு வட்டம், களியல் கிராமம், செண்பகத்தரிசு பகுதியில் குடியிருக்கும் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 ஜனவரி திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் வீட்டுமனை ஒப்படை செய்ய அரசாணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல், ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழாது.

**64—**

## பட்டா வழங்குதல்

**வினா எண் 18790—திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வட்டம், க.ச.எண் 59/1 நத்தம் புறம்போக்கில் குடியிருக்கும் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில்



2007 ஜனவரி திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் வீட்டுமனை ஒப்படை செய்ய அரசாணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல், ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழாது.

**65—**

## வளர்ச்சிப் பணிகள்

**வினா எண் 22440—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்பட்ட மானாமதுரை தொகுதி, இடைக்காட்டூரில் வளர்ச்சிப் பணிகளை துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இடைக்காட்டூரில் பாரம்பரிய நகரங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள 2003-2004 ஆம் ஆண்டில் வீட்டு வசதி (ம) நகர்ப்புற மேம்பாட்டுத் துறை நிதியிலிருந்து ரூ.25.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 50 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன.

மேலும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசாணையின்படி, இடைக்காட்டூர் கிராமப் பஞ்சாயத்து பாரம்பரிய நகரம் என அறிவிக்கப்பட்டு நகர் மற்றும் ஊரமைப்புத் துறை நிதியிலிருந்து ரூ.50.00 இலட்சம் மானியம் பெற்றிடத் தகுதியுடையதென ஆணையிடப்பட்டுள்ளது.

**66—**

## சிறுவர் பூங்காவைப் புதுப்பித்தல்

**வினா எண் 26825—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் சிறுவர் பூங்காவைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 அக்டோபர் 18

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) இராமநாதபுரம் சிறுவர் பூங்காவைப் புதுப்பித்தல் குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை

**67—**

## சுற்றுலா ஏற்பாடு செய்தல்

**வினா எண் 28885—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டத்தில் சுற்றுலாத் துறைமூலம் குறிப்பிட்ட இடங்களை உள்ளடக்கி சுற்றுலா ஏற்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்மூலம் சென்னையை மையமாகக் கொண்டு அரை நாள் சுற்றுலா முதல் 14 நாட்கள் சுற்றுலா வரை 37 வகையான சுற்றுலாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலாத் தலங்கள் மட்டுமின்றி தென் மாநிலங்களிலுள்ள சுற்றுலா இடங்களுக்கும் சுற்றுலா இயக்கப்பட்டு வருகின்றது. தற்போது உடுமலைப்பேட்டையைச் சுற்றியுள்ள சுற்றுலாப் பகுதிகளுக்கான சுற்றுலாவை அறிமுகப்படுத்தும் திட்டம் ஏதும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**68—**

## கோயில்களுக்கு நிதி வழங்குதல்

**வினா எண் 28886—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 அக்டோபர் 18]

(அ) உடுமலைப்பேட்டை வட்டம் சங்கராமநல்லூர், நடராஜர் திருக்கோயில், கொமரலிங்கம் காசி விஸ்வநாதர் திருக்கோயில், திருமூர்த்தி மலை, அமணலிங்கேஸ்வரர் திருக்கோயில் ஆகிய கோயில்களுக்கு சுற்றுலாத் துறைமூலம் நிதி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், சங்கராமநல்லூர் நடராஜர் திருக்கோயில், கொமரலிங்கம் காசி விஸ்வநாதர் திருக்கோயில், திருமூர்த்தி மலை அமணலிங்கேஸ்வரர் திருக்கோயில் ஆகிய கோயில்களுக்கு சுற்றுலாத் துறைமூலம் நிதி வழங்குதல் குறித்து செயற்குறிப்பு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

2004-2005 ஆம் ஆண்டில் திருமூர்த்தி மலையில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்த ரூ. 8.45 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, 50 சதவிகித மாநில அரசுப் பங்கு ரூ. 4.22 இலட்சம் மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

**69—**

## அரசு வீடுகளைச் சீரமைத்தல்

**வினா எண் 19543—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, குறிச்சி கிராமம், குறிச்சி காலனியில் அரசு கட்டிக் கொடுத்த வீடுகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன் வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் நகர குடிசைப் பகுதிகளில் மட்டுமே தற்போது செயல்படுத்தப்பட்டு

[2007 அக்டோபர் 18

வருகின்றன. ஈரோடு மாவட்டம் பவானி தொகுதியில் உள்ள குறிச்சி காலனி, குறிச்சி கிராமப் பகுதியில் அமைந்துள்ளதால் அங்குள்ள வீடுகளைச் சீரமைக்கும் பணிகள் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் செயல்படுத்த இயலாது.

**70—**

**மருத்துவர்களை நியமித்தல்**

**வினா எண் 13761—திரு. ஞா. ஜான் ஜோசப்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறை, நித்திரவிளை, இடைக்கோடு ESI மருத்துவமனைகளில் போதிய மருத்துவர் மற்றும் ஊழியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கிவரும் குழித்துறை, நித்திரவிளை மற்றும் இடைக்கோடு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர், செவிலியர் மற்றும் மருந்தாளுநர் பணியிடங்களில் காலியிடங்கள் ஏதும் இல்லை. ஏனைய பணியிடங்களான இளநிலை உதவியாளர், செவிலியர் உதவியாளர் நிலை 2, அலுவலக உதவியாளர், மருத்துவமனைப் பணியாளர் மற்றும் துப்புரவுப் பணியாளர்களின் காலியான பணியிடங்களை நிரப்ப கடந்த 5 ஆண்டுகளாக கருணை அடிப்படையிலான மற்றும் நேரடி நியமனங்கள் மூலம் நிரப்பிட பணி நியமனத் தடைச் சட்டம் அமலில் இருந்ததால் நிரப்பிட இயலவில்லை. தற்போது பணி நியமனத் தடைச் சட்டம் விலக்கப்பட்ட நிலையில் காலிப் பணியிடங்களை நிரப்பிட உரிய நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டு வருகிறது.

**71—**

**தொழிலாளர் குறைதீர்க்கும் மையம்**

**வினா எண் 18062—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 அக்டோபர் 18]

(அ) வால்பாறையில் தொழிலாளர் குறை தீர்க்கும் மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையைப் பொறுத்தமட்டில் தொழிலாளர்களின் குறையினைத் தீர்க்க தொழிலாளர் அலுவலர், தொழிலாளர் ஆய்வாளர், தொழிலாளர் உதவி ஆணையர், தொழிலாளர் துணை ஆய்வர் அலுவலகங்களும் தனித்தனியே செயல்பட்டு வருகின்றன. பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் முன்பு மனு/புகார் அளித்தால் அதன்மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தொழிலாளர் குறை தீர்க்கும் மையம் என்று தனியே அமைக்க இயலாது.

**72—**

**மருத்துவ வசதி அளித்தல்**

**வினா எண் 18071—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலுள்ள அனைத்து அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும் தொழிலாளர் ஈட்டுறுதிக் கழக மருத்துவ வசதி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அமைப்புசாரா தொழிலாளர்களைத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்ப்பது குறித்து மத்திய அரசும், தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகமும் முடிவு எடுக்க வேண்டும். ஆனால், இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. வால்பாறை பகுதியில் தோட்டத் தொழிலாளர்களே அதிகம் உள்ளனர். தோட்டத்

தொழிலாளர்கள், தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. எனவே, வால்பாறையிலுள்ள அனைத்து அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும் தொழிலாளர் ஈட்டுறுதிக் கழக மருத்துவ வசதி அளிக்க இயலாது.

**73—**

## மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 18072—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் தொழிலாளர் ஈட்டுறுதிக் கழக மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை மருந்தகம் திறக்க, அளவை செய்வது தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகமாகும். ஒரு புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை 50,000 காப்பீட்டாளர்களுக்கு மேல் வசிக்கும் இடத்திலும் 3,000-க்கு மேல் காப்பீட்டாளர்கள் வசிக்கும் இடத்தில் ஒரு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை மருந்தகமும் திறக்கப்படுகின்றது. வால்பாறை பகுதியில் தோட்டத் தொழிலாளர்களே வசிக்கின்றார்கள். அமைப்பு சாரா தொழிலாளர்கள் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் இதுவரை இணைக்கப்படவில்லை. எனவே, வால்பாறை பகுதியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகமோ மருத்துவம்னையோ திறப்பது சாத்தியமாகாது.

**74—**

## நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 18424—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) வால்பாறை தொகுதியில் புதிய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில், கைத்தறிகள் உள்ள பகுதியில் புதிய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைத்துத் தர தற்சமயம் கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை. எனினும், தறியுள்ள நெசவாளர்கள் ஒருங்கிணைந்து புதியதாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைத்துத்தர விண்ணப்பிக்கும் வேளையில், அவ்விண்ணப்பம் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு பரிசீலிக்கப்பட்டு புதிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்து தரப்படும்.

**75—**

## நெசவாளர்களுக்கு விடு கட்டுதல்

**வினா எண் 18446—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் நெசவாளர்களுக்கு வீடுகட்டும் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) கைத்தறி நெசவாளர்களுக்கு மத்திய மாநில அரசுகளின் மானிய உதவியுடன் வீடு கட்டும் திட்டம் அரசால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. கோவை மாவட்டத்தில் 1997-98 ஆம் ஆண்டு முடிய, 2,278 வீடுகள் கட்டி பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2002-2003 முதல் 2004-2005 முடிய கோவை மாவட்டத்திலுள்ள ஏழு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 45 வீடுகள் கட்டப்பட்டு, பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) இவ்வினா எழவில்லை.

[2007 அக்டோபர் 18

**76—**

### கடன் வசதி

**வினா எண் 18512—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, வனவாசி, நங்கவள்ளி, ஜலகண்டபுரம் பகுதியிலுள்ள நெசவாளர்களுக்கு கூட்டுறவு வங்கியின்மூலம் கடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

மேட்டூர் தொகுதி, வனவாசி, நங்கவள்ளி மற்றும் ஜலகண்டபுரம் ஆகிய பகுதிகளில் மொத்தம் 13,729 நெசவாளர்கள் உள்ளனர். அவர்களில் 3,870 கைத்தறி நெசவாளர்களும், 9,859 விசைத்தறி நெசவாளர்களும் ஆவர். கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள 1,045 நெசவாளர்களுக்கு அவர்கள் சார்ந்துள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் காசுக் கடனில் கடன் தொகையினை பெற்றுத் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது. கூட்டுறவு அமைப்பின்கீழ் அல்லாத 12,664 நெசவாளர்களுக்கு கூட்டுறவு வங்கியின்மூலம் கடன் பெற்று வழங்க வழிவகையில்லையெனினும், மேற்படி நெசவாளர்களுக்குக் கடன்பெற்று வழங்கக் கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின்மூலம் பரிசீலிக்கப்பட்டு ஆவன செய்யப்பட்டு வருகிறது. மேலும் கைத்தறி நெசவாளர்கள் "ஸ்சுவரோஜ்கார் கடன் அட்டை" வழங்கும் திட்டத்தின்கீழும் (Swarojgar Credit Card) தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் ரூ. 25,000/-க்கு மிகாமல் கடன்பெறுவதற்கும் வழிவகையுள்ளது.

**77—**

### ஆசிரியர் பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 16112—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள இடைநிலை, உயர்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) தற்போது வால்பாறை தொகுதியில் உள்ள 8 உயர்நிலை மற்றும் 3 மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள கீழ்க்கண்ட ஆசிரியர் பணியிடங்கள், விரைவில் நிரப்பப்படும்:—

**காலிப் பணியிட விவரம்**

**பள்ளி உதவி ஆசிரியர் பணியிடம்**

| தமிழ் | ஆங்கிலம் | கணிதம் | அறிவியல் | வரலாறு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 8 | 1 | 5 | 5 | 1 | 20 |

**இடைநிலை ஆசிரியர் பணியிடம் 11**

(ஆ) மேற்படி காலிப் பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் தேர்வாளர்களைக் கொண்டும் மற்றும் பதவி உயர்வுமூலமும் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**78—**

### இரவு நேரக் காவலர் நியமனம்

**வினா எண் 16115—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலுள்ள ஆரம்பப் பள்ளிக்கு இரவு நேரக் காவலர் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தொடக்கப் பள்ளிகளுக்கு இரவுக் காவலர் பணியிடம் அனுமதிக்கப்படுவதில்லை.

[2007 அக்டோபர் 18

**79—**

## சுகாதாரக் கேட்டினைப் போக்குதல்

**வினா எண் 12460—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மற்றும் பெருநகரங்களில் உள்ள புறநகர்ப் பகுதிகளில் சாலையோரங்களில் கொட்டப்படும் கழிவுகளால் ஏற்படும் சுகாதாரக் கேட்டினைப் போக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

சென்னை மற்றும் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் சாலையோரங்களிலோ, நீர் நிலைகளிலோ குப்பைகளைக் கொட்டக்கூடாது என தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும் கழிவுகளை ஆதாரத்திலேயே பிரிக்க வேண்டும் எனவும் அவற்றில் மக்கும் கழிவுகள் உரமாக்கப்பட வேண்டும் என்றும், மறு சுழற்சி செய்யத்தக்கவற்றை மறு சுழற்சி செய்ய வேண்டும் எனவும், வினைபுரியாக் கழிவுகளைப் பாதுகாக்கப்பட்ட நிலநிரப்புதல்மூலம் அகற்ற வேண்டும் எனவும் வாரியம் உள்ளாட்சி அமைப்புகளைக் கேட்டுக் கொண்டுள்ளது.

மேலும், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும், மக்கும் கழிவுகளை உரமாக்கிட உடனடியாக உரிய இடத்தினைத் தேர்வு செய்ய வேண்டும் எனவும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் வலியுறுத்தியுள்ளது. வாரியத்தின் தொடர் வலியுறுத்தலின் காரணமாக 152 நகராட்சிகளில் 90 நகராட்சிகளும், 6 மாநகராட்சிகளில் 2 மாநகராட்சிகளும், இடத்தினைத் தேர்வு செய்து வாரியத்தின் அனுமதியையும் பெற்றுள்ளன. இவற்றில் 46 நகராட்சிகளுக்கு அங்கீகாரம் (Authorisation) வழங்கப்பட்டுள்ளது. திடக் கழிவுகளை முறையாகக் கையாள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களாலும், தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**80—**

## புகையைக் கட்டுப்படுத்துதல்

**வினா எண் 12461—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 அக்டோபர் 18]

சென்னை நகர் மற்றும் தமிழகத்தில் உள்ள பெரு நகரங்களில் பெருகிவரும் வாகனங்கள்மூலம் ஏற்படும் புகையைக் கட்டுப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

வாகனங்களிலிருந்து வெளியேற்றப்படும் மாசினைக் கட்டுப்படுத்த ஒவ்வொரு வாகனமும் நிர்ணயிக்கப்பட்ட புகை தர அளவுக்குட்பட்டு காணப்பட வேண்டும் என்ற நியதி வகுக்கப்பட்டு, அதனை உறுதி செய்ய ஒவ்வொரு வாகனமும் ஆறு மாதங்களுக்கொருமுறை புகை சோதனைக்குட்படுத்தி புகை தர அளவுச் சான்றிதழ் பெற வேண்டும் என்று வகுக்கப்பட்டுள்ளது. அதற்காகத் தமிழகமெங்கும் சுமார் 263 தனியார் வாகன புகைச் சோதனை நிலையங்களுக்கு அரசு அங்கீகாரம் வழங்கி செயல்படுத்தி வருகிறது. இதில் 95 புகைச் சோதனை நிலையங்கள் சென்னை நகரில் மட்டும் செயல்பட்டு வருகின்றன. சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழக வாகனங்களிலிருந்து வெளிப்படும் புகையைக் கட்டுப்படுத்த மாநகரப் போக்குவரத்துக் கழகம் பழைய பேருந்துகளுக்குப் பதில் புதிய பேருந்துகளைப் படிப்படியாக மாற்ற நடவடிக்கை எடுத்து வருகிறது. வாகனங்கள் உமிழும் மாசினைக் கட்டுப்படுத்த பசுமை எரிபொருளான திரவப் பெட்ரோலிய எரிவாயுவை (LPG) பயன்படுத்தி சென்னை நகரில் 23 தானியங்கி திரவப் பெட்ரோலிய எரிவாயு நிரப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இரண்டு மற்றும் மூன்று சக்கர பெட்ரோல் வாகனங்களுக்கு பெட்ரோலுடன் கலந்து 2T எண்ணெய் நிரப்பும் கருவிகள், அனைத்து பெட்ரோல் நிலையங்களிலும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மோட்டார் வாகனங்களில் பயன்படுத்தப்படும் மோட்டார் எண்ணெய்யில் (Engine Oil) கலப்படத்தைத் தடுக்கும்பொருட்டு பெட்ரோல் நிலையங்களில் உதிரியாக 2டி (2T Oil) எண்ணெய் விற்பனையை 1-1-2007 முதல் சென்னை உட்பட இதர மாநிலங்களில 16 நகரங்களில் தடை செய்து, மத்திய அரசு அறிவிக்கையினை எண் ஜிஎஸ்ஆர். 714 (ஈ) நாள் 17-11-2006-ல் வெளியிட்டுள்ளது. பாரத்-III தர அளவிற்குட்பட்ட பயணிகள் வாகனங்கள் மட்டுமே சென்னை நகரில் கடந்த ஏப்ரல் 2005 முதல் பதிவு செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் சென்னை நகரில் ஐந்து இடங்களில் காற்று மாசு ஆய்வு செய்து வருகிறது. மேலும், அவ்வப்போது காற்று மாசு குறித்த விழிப்புணர்வைப் பொதுமக்களிடம் ஏற்படுத்தி வருகிறது. சென்னை நகரில் காற்றின் தரத்தை மேம்படுத்த உச்ச நீதிமன்றம் வகுத்துள்ள செயல் திட்டத்தின் அடிப்படையில் (Action Plan) அரசின் பல்வேறு துறைகளின்

[2007 அக்டோபர் 1[...]

மூலம் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், இத்தகை[...] செயல் திட்டத்தைக் கண்காணிக்க தமிழக அரசின் தலைமைச் செயலாள[...] தலைமையில் ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு அவ்வப்போது ஆய்[...] செய்யப்பட்டு வருகிறது.

**81—**

**சாலை அமைத்தல்**

**வினா எண் 20770—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு வனத் துறை[...] அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, மானியதஅள்ளி ஊராட்சி, பரிகம் முத[...] மலையூர் காடு கிராமம்வரை சாலை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

தருமபுரி வனக் கோட்டத்தைச் சேர்ந்த பரிகம் "B" காப்புக் காட்டினு[...] பரிகம் முதல் மலையூர் கிராமம்வரை சாலை அமைக்க வழி உரிமம் ஏது[...] வழங்கப்படவில்லை. மேலும், இச்சாலை அமைப்பதனால் வனமும், வ[...] உயிரினங்களும் பாதிக்கப்படும் என்பதனால் இச்சாலை அமைக்கு[...] உத்தேசம் ஏதுமில்லை.

**82—**

**ஏரியைச் சீரமைத்தல்**

**வினா எண் 23166—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு வன[...] துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, பெருங்காப்பூர் ஊராட்சியில் வன[...] துறையின் முட்டுக்கோடு ஏரியில் கரைகளைச் சீரமைக்க அர[...] நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் வனக் கோட்டம், செஞ்சி சரகத்தில் உள்ள பெருங்காப்பூ[...] முட்டுக்கோடு ஏரி, பெருங்காப்பூர் காடு வளர்ப்புத் திட்ட கிராமத்தி[...] உள்ள பகுதியாகும். 2004 ஆம் வருடம் ஏற்பட்ட கடும் வெள்ளத்தினா[...]



2007 அக்டோபர் 18]

சேதமடைந்த இந்த ஏரியை சீரமைக்க வனத் துறையால் ரூ. 8.5 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. 2007-2008-ல் விழுப்புரம் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்களின்கீழ் வனத் துறையின் மூலம் இந்த ஏரியைச் சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**83—**

**மாற்றுவழி ஏற்படுத்துதல்**

**வினா எண் 4508—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறைக்கு ஒரு மாற்று வழி ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

பொள்ளாச்சியிலிருந்து வால்பாறைக்கு, பொள்ளாச்சி (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ள பொள்ளாச்சி-வால்பாறை சாலை கி.மீ. 0/0-64/0 என்ற மாநிலச் சாலை உள்ளது. இச்சாலையில் கி.மீ. 23/0-ல் வில்லேடு குதிரைப் பாதை என அழைக்கப்படும் ஒரு நடைபாதை உள்ளது. இது அடர்ந்த காடுகளிடையே கரடுமுரடான, செங்குத்தான, குறுகலான பாதையாக மலை அடிவாரப் பகுதியான ஆழியாறு டேம் அருகில் இணைகிறது. இது வனத் துறையின் இந்திரா காந்தி வன உயிரினப் பாதுகாப்பு மையம் வழியே செல்கிறது. இப்பாதையினை மேம்படுத்தி மாற்று வழி ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**84—**

**சாலைகளைச் செப்பனிடுதல்**

**வினா எண் 8008—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் அய்யர்பாடியிலிருந்து ஸ்டேன்மோர், சிறுகுன்றா, மாணிக்கா மற்றும் குரங்குமுடி சாலைகளைச் செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு. பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி (நெ) கோட்டப் பராமரிப்பிலுள்ள மாவட்ட இதர சாலையான அய்யர்பாடியிலிருந்து கி.மீ. 3/2 ஸ்டேன்மோர்–சிறுகுன்றா சாலையில் சேரும் கி.மீ. 0/0-8/8.50 வரையுள்ள சாலையில், பழுதடைந்துள்ள பகுதிகளான கி.மீ. 5/4-6/2, 7/0-8/8.50 மற்றும் 0/8-0/10 வரையுள்ள பகுதிகளும் மற்றும் மாவட்ட முக்கியச் சாலையான வால்பாறை–மாணிக்கா மற்றும் குரங்குமுடி சாலையில் பழுதடைந்துள்ள பகுதிகளான கி.மீ. 0/6-1/8 மற்றும் 5/0-8/0 வரையுள்ள பகுதிகளுக்கும், சிறப்பு பழுதுபார்த்தல் மற்றும் காலமுறை புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

**85—**

### சுரங்கப் பாதை அமைத்தல்

**வினா எண் 13136—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமத்தி ஒன்றியம் தேசிய நெடுஞ்சாலையில் என்.எச்.7-271/25 கி.மீ. பகுதியில் உள்ள குறுக்குச் சாலையை கீழ்வழிச் சுரங்கப் பாதையாக மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு. பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தே.நெ. 7 இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் பராமரிப்பில் உள்ளது. இச்சாலையில் கி.மீ.271/2.50-ல் சுரங்கப் பாதை (Underpass) கட்டுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்றும், எனவே அந்த இடத்தில் பிரியும் பரமத்தி சாலைக்கு சிறிய குறுக்கிணைப்பு (Minor intersection) பகுதி அமைக்கப்படும் என்றும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தெரிவித்துள்ளது.



**86—**

### சாலை விரிவாக்கம்

**வினா எண் 14812—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஒன்றியம் பழவூர் கிராமம் வழியாகச் செல்லும் MKK சாலையிலிருந்து பழவூர் புதுகாலனிவரை உள்ள சாலையை விரிவாக்கம் செய்து புதிய தார்ச்சாலை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி கோட்டப் பராமரிப்பில் உள்ள மாவட்ட இதர சாலையான பழவூர்-இருக்கன்துறை சாலையின் மொத்த நீளம் 11.20 கி.மீ ஆகும். இதில் பழவூர் புதுகாலனி கி.மீ. 0/4-ல் உள்ளது. ஒரு வழித்தடம் கொண்ட இச்சாலைப் பகுதியானது பழவூர் கிராமத்தின் மத்தியில் வீடுகள் நெருக்கமாக உள்ள பகுதியில் செல்கிறது. இச்சாலையின் போக்குவரத்துச் செறிவு 2440 ஆகும். இச்சாலையை விரிவாக்கம் செய்யும் அளவிற்குத் தேவையான (15000) போக்குவரத்துச் செறிவு இல்லையாதலால் மேற்படி சாலையினை விரிவாக்கம் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும் இச்சாலை, போக்குவரத்துக்கு ஏற்ற நிலையில் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது.

**87—**

### நான்கு வழிப் பாதை பணி

**வினா எண் 17240—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம்-தொப்பூர் தேசிய நெடுஞ்சாலை-7 நான்கு வழிப் பாதைப் பணியை விரைவில் முடிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு. பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

தே.நெ.7-ல் சேலம்-தொப்பூர் சாலையை நான்கு வழிப் பாதையாக மாற்றியமைக்கும் பணி தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால்

[2007 அக்டோபர் 18

மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி இரு பிரிவுகளாக மேற்கொள்ளப்பட்டு முதல் தொகுப்பான சேலத்திலிருந்து தும்பிப்பாடி வரையிலான பணி செப்டம்பர் 2007-க்குள்ளும் தும்பிப்பாடியிலிருந்து தொப்பூர் கணவாய் வரை நவம்பர் 2007-க்குள்ளும் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. நில எடுப்பு போன்ற உதவிகளை மாநில அரசு செய்து கொடுக்கிறது.

**88—**

**கால்நடைக் கிளை நிலையம்**

**வினா எண் 20773—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், இராப்பூசல் கிராமத்தில் உள்ள கால்நடை துணை மருத்துவமனையை மீண்டும் செயல்படுத்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், இராப்பூசல் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றது. தற்போது கால்நடை ஆய்வாளர் பதவி காலியாக உள்ளது. ஆகவே, மேற்படி இராப்பூசல் கால்நடைக் கிளை நிலையப் பகுதியிலுள்ள கால்நடைகளுக்கு இலுப்பூர் கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவரால் சிகிச்சைப் பணிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

**89—**

**திருமணக் கடன் வழங்குதல்**

**வினா எண் 3174—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு திருமணக் கடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு திருமண நிதி உதவி வழங்கும் திட்டம் சமூக நலத் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, தனியாக திருமணக் கடன்கள் வழங்கும் திட்டம் ஏதும் இத்துறையில் இல்லை.

**90—**

**ஆதிவாசிகளுக்கு உதவித் தொகை**

**வினா எண் 4129—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள ஆதிவாசிகளுக்கு மத்திய அரசு வழங்கும் உதவித் தொகை முறையாகச் சேருகிறதா என்பதைக் கண்டறிய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

மத்திய அரசினால் ஆதிவாசிகளுக்குக் கீழ்க்காணும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

1. இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவுக் கூறு 275(1) [Article 275 (1) of the Constitution of India]
2. பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் மத்திய சிறப்பு உதவித் திட்டம் [Special Central Assistance to Tribal Sub-Plan]
3. பண்டைய பழங்குடியினருக்கான மத்திய அரசின் நிதி உதவித் திட்டம் [Central Sector Scheme for Development of Primitive Tribal Groups]

மேற்காணும் திட்டங்களுக்காக மத்திய அரசுமூலம் பெறப்படும் நிதியைத் தகுந்த பயனாளிகளைத் தேர்வு செய்தும், தகுதிவாய்ந்த திட்டங்களுக்கான முன்மொழிவுகள் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களால் பெறப்பட்டு, அரசால் உரிய பரிசீலனைக்குப்பின்

[2007 அக்டோபர் 18

திட்டங்களின் தன்மைக்கேற்பவும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த நிதி ஒதுக்கீடு, சம்பந்தப்பட்ட திட்டங்களுக்கும் உரிய பயனாளிகளுக்கும் செலவு செய்யப்பட்டு அதற்குரிய பயனீட்டுச் சான்றுகள் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் பெறப்பட்டு மாநில அரசுமூலம் மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. மேலும், இத்திட்டங்கள் முறையே செயல்படுத்தப்படுகின்றனவா எனவும், நிதி ஒதுக்கீடு முழுமையாகச் செலவு செய்யப்பட்டு பயனாளிகளுக்குச் சென்றடைந்துள்ளதா என்பதையும் மாவட்டத் துறைத் தலைமை அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர்கள், ஆணையர் மற்றும் அரசுச் செயலர் அளவில் நேரில் சென்று தல ஆய்வு செய்து திட்டம் நிறைவேறிய விவரம் உறுதிப்படுத்தப்படுகிறது. மேலும், பல்வேறு துறைகள் தங்களது துறையின் மொத்த நிதி ஒதுக்கீட்டில் 1.04% நிதியை பழங்குடியினர் துணைத் திட்டத்துக்கென ஒதுக்கீடு செய்து பழங்குடியினருக்கான மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. இத்திட்டங்கள் அரசு மட்டத்தில் ஆய்வு செய்யப்படுகின்றன.

**91—**

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 5462—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, மலையரசன் குப்பத்தில் பழங்குடி மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மலையாசன் குப்பம் பழங்குடியினர் (இருளர்) காலனிக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுக்க நிரந்தர காத்திருப்போர் பயனாளிகள் பட்டியல், திட்ட அலுவலருக்கு வட்ட வளர்ச்சி அலுவலர் அவர்களால் அனுப்பப்பட்டுள்ளது. பட்டியல் பெறப்பட்டதும் முன்னுரிமைப்படி தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படும்.



2007 அக்டோபர் 18]

**92—**

## ஆதி திராவிடர் நலத் துறைப் பள்ளிகள்

**வினா எண் 8654—திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதியில் ஆதி திராவிடர் நலத் துறைப் பள்ளிகள் துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

1. அனைவருக்கும் கல்வித் திட்டம், கல்வித் துறையின்கீழ் அமலாக்கப்படுகிறது. இது மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். புதிய ஆரம்பப் பள்ளிகள் துவக்குதல், ஆரம்பப் பள்ளிகளை நிலை உயர்த்துதல், ஆரம்ப/நடுநிலைப் பள்ளிகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ஆசிரியர்களை நியமித்தல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

2. புதிய பள்ளிகள் துவங்க தொடக்கக் கல்வித் துறைமூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆதி திராவிடர் நலத் துறைமூலம் பரிந்துரை எதுவும் செய்யப்படுவதில்லை. புதிய பள்ளிகள் துவங்க பெறப்படும் கடிதங்கள் தொடக்கக் கல்வி இயக்ககத்திற்கு அனுப்பப்படுகின்றன.

3. தேவைப்படும் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. குறைந்தபட்சம் 25 மாணவர்களுடன் இரண்டு ஆண்டுகள் செயல்படும் கல்வி உறுதியளிப்பு மையங்கள் தொடக்கப் பள்ளிகளாக மாற்றப்படுகின்றன. இதற்கான கருத்துரு மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்மூலம் மாவட்ட கல்விக் குழுவில் வைத்து முடிவு செய்யப்படும்.

**93—**

## தொகுப்பு வீடுகள் கட்டுதல்

**வினா எண் 11423—திரு. ஒ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 அக்டோபர் 18

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, அத்திக்கடவு மற்றும் பில்லூர் அணைப் பகுதிகளில், பழங்குடியினருக்கு வனத் துறை அனுமதி பெற்று குடியிருக்க தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, அத்திக்கடவு மற்றும் பில்லூர் அணைப் பகுதிகளில் பழங்குடியினருக்கு தொகுப்பு வீடுகள் கட்ட கோவை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து உரிய முன்மொழிவுகள் வரப்பெற்றவுடன் வனத் துறையினரிடமிருந்து அனுமதி பெற்று தேவையான நிதி ஒதுக்கீடு செய்து தொகுப்பு வீடுகள் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**94—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 14194—திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதிக்குட்பட்ட ஜம்பை கிராமம் பெரிய வடமலைப் பாளையம், அப்பிச்சியார் கோயில் வீதி, ஆதி திராவிடர் தெருவில் ஆழ்துளைக் கிணற்றில் மோட்டார் பொருத்தி குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், ஜம்பை பேரூராட்சிக்குட்பட்ட பெரிய வடமலைப் பாளையம், அப்பிச்சியார் கோயில் வீதி ஆதி திராவிடர் காலனியில் உள்ள 30 குடும்பங்களுக்கு ஒரு ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் பவானி ஆற்றுக் குடிநீர் பொதுக் குழாய் 4 இடங்களில் அமைக்கப்பட்டு, அப்பகுதிக்கு தினந்தோறும் தண்ணீர் போதுமான அளவு வழங்கப்பட்டு வருகிறது.



2007 அக்டோபர் 18]

**95—**

## ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல்

**வினா எண் 19454—திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கொண்டல் ஆதி திராவிடர் நலத் துறை மேல்நிலைப் பள்ளியில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

ஆம். சீர்காழி தொகுதி, கொண்டல், ஆதி திராவிடர் நலத் துறை மேல்நிலைப் பள்ளியில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**96—**

## கடன் உதவிகள்

**வினா எண் 23595—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தாட்கோமூலம் வழங்கும் கடன் உதவிகளை தாட்கோ அலுவலகம்மூலமே வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வறுமைக் கோட்டின்கீழ் உள்ள இந்து ஆதி திராவிடர்களுக்கு தாட்கோமூலம் வங்கிகளில் கடனுதவி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது தவிர, இந்து ஆதி திராவிடர்களின் முன்னேற்றத்திற்காக டெல்லியில் தேசிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நிதி மேம்பாட்டுக் கழகங்கள் (NSFDC & NSTFDC) போன்ற

[2007 அக்டோபர் 18

நிதி நிறுவனங்கள் வாயிலாக அவர்கள் கோரும் திட்டத்திற்கான கடன் தொகையினைக் குறைந்த வட்டியில் நேரடியாகத் தாட்கோமூலம் வழங்கும் திட்டம் தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது.

2. மேலும் தேசிய சுகாதாரப் பணியாளர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத் திட்டம் (NSKFDC) மூலம் சுகாதாரப் பணியாளர் மற்றும் அவரைச் சார்ந்தவர்களுக்கு வருவாய் ஈட்டக்கூடிய தொழிலைச் சொந்தமாகத் தொடங்க தாட்கோ மானியத்துடன் கூடிய கடன் தொகையினைக் குறைந்த வட்டியில் நேரடியாகத் தாட்கோமூலம் வழங்கும் திட்டம் தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது.

**97—**

**குளிர்பதனக் கிடங்கு**

**வினா எண் 7154—திரு. கோ. ஐயப்பன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் துறைமுகப் பகுதி மீனவர்களுக்கு மீன் அங்காடி மற்றும் குளிர்பதனக் கிடங்கு அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

கடலூர் துறைமுகப் பகுதி மீனவர்களுக்கு குளிர்பதனக் கிடங்கு அமைத்துத் தருவது குறித்த திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**98—**

**மீன் விற்பனை மையம்**

**வினா எண் 16188—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியாறு அணை மீன் விற்பனை மையத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டத்தில் கோவை, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, அமராவதி அணை, திருமூர்த்தி அணை போன்ற இடங்களில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மீன் விற்பனை நிலையங்கள் மற்றும் நடமாடும் விற்பனை நிலையங்கள் அமைத்து நடத்தி வருகிறது. தற்போது ஆழியாறிலுள்ள மீன் விற்பனை நிலையம் பொதுமக்களின் தேவையைப் பூர்த்தி செய்து வருவதால், எதிர்காலத்தில் தேவையேற்படின் அதற்கேற்ப ஆழியாறிலுள்ள மீன் விற்பனை நிலையத்தை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்மூலம் விரிவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**99—**

**பால் குளிரூட்டும் மையம்**

**வினா எண் 18376—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் குளிரூட்டப்பட்ட பால் மையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் பெரும்பாலான மக்கள் தேயிலைத் தொழிலைச் சார்ந்து இருப்பதால் கறவை மாடுகள் வளர்ப்பதில் ஈடுபாடு இல்லை. இத்தொகுதியில் தேயிலைத் தோட்டத்தில் வளர்க்கப்படும் கறவை மாடுகளிலிருந்து பெறப்படும் பால் அந்தந்த தேயிலைத் தோட்டம் / தொழிற்சாலையில் உள்ளவர்களின் உபயோகத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பால் குளிரூட்டும் மையம் அமைக்க

குறைந்தது 10,000 லிட்டர் பால் உற்பத்தி இருக்க வேண்டும். இத்தொகுதியில் சோலையாறு நகர் மற்றும் ரொட்டிக்கடை போன்ற இடங்களில் செயல்பட்டு வந்த பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் போதிய பால் கொள்முதல் இல்லாததால் நலிவடைந்து சங்கங்கள் கலைக்கப்பட்டு விட்டன. ஆகவே, வால்பாறை தொகுதியில் பால் குளிரூட்டும் மையம் அமைக்க வாய்ப்பில்லை.

**100—**

## பனைப் பொருட்கள் விற்பனை

**வினா எண் 14214—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பனைத் தொழிலைப் பெருக்க பதநீர், வெல்லம், பனங்கற்கண்டு போன்றவற்றின் விற்பனையைப் பெருக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

பனைத் தொழிலாளர்களால் அந்தந்த பருவ காலங்களில் உற்பத்தி செய்யப்படும் பதநீர், பனைவெல்லம், பனங்கற்கண்டு போன்றவை "பாம் கிராப்ட்கள்" மூலமாகவும், மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு சம்மேளனக் கிளைகளிலும் மற்றும் மாநில அளவில் உள்ள தமிழ்நாடு மாநில பனைவெல்லக் கூட்டுறவு இணையத்தின் கிளைகளிலும் மற்றும் கதர் அங்காடிகள்மூலமாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும், சம்மேளனங்களில் உற்பத்தி செய்யப்படும் பனைப் பொருட்களான பதநீர், வெல்லம், பனங்கற்கண்டு, பிரஷ் போன்றவற்றை விற்பனை செய்வது தொடர்பாக அரசுத் துறை மற்றும் தனியார் துறைகளிடம் தொடர்பு கொண்டு, தேவை நமூனா பெற்று, மேற்படி பொருட்களை விற்பனை செய்ய பணிக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.





## பட்டியல் 3

**1—**

## தெரு விளக்கு வசதி

**வினா எண் 4931—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, ஈங்கூர் ஊராட்சி, சரவம்பதிப்புதூர், சரவம்பதி, நல்லமுத்தாம்பாளையம் ஆகிய இடங்களில் தெரு விளக்கு வசதி செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், ஈங்கூர் ஊராட்சியில் நமது கிராம திட்டத்தில் ஊராட்சியின்மூலம் சரவம்பதிப்புதூரில் ஒரு தெரு விளக்கு, சரவம்பதியில் இரண்டு தெரு விளக்குகள் மற்றும் நல்லமுத்தாம்பாளையத்தில் இரண்டு தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

**2—**

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 5859—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, காவேரிப்பட்டினம் சாலை முதல் கல்குட்டப்பட்டி செல்லும் மண் சாலையை தார்ச் சாலையாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதி, பன்னிஅள்ளி ஊராட்சி, கல்குட்டப்பட்டி சாலை கி.மீ. 0/0—0/8 வரை தார்ச் சாலை அமைக்கும் பணி அடிப்படை வசதிகள் திட்டத்தின்கீழ் ரூ. 4.70 இலட்சம் செலவினத்தில் ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின்மூலம் நிறைவேற்றப்பட்டு அக்டோபர் 2006 ஆம் ஆண்டு முதல் பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

**3—**

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 5862—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, பென்டரஅள்ளியிலிருந்து திப்பனான்குட்டை ஏரி வரை உள்ள மண் சாலையை தார்ச் சாலையாக அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதி, பென்டரஅள்ளியிலிருந்து திப்பனான்குட்டை ஏரி வரை உள்ள சுமார் 300 மீட்டர் மண் சாலையில் 50 மீட்டர் அளவில் சிமெண்ட் சாலை உள்ளது. மேலும், 250 மீட்டர் அளவு சாலையை கப்பிச் சாலையாக அரசம்பட்டி ஊராட்சி நிர்வாகம் மூலம் 2007-2008 ஆம் ஆண்டில் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம் II-ல் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், கப்பிச் சாலை அமைக்கும் பணி முடிவுற்றதும் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப, தார்ச் சாலை அமைக்க முன்னுரிமை அளிக்கப்படும்.





**4—**

## தெரு விளக்கு வசதி

**வினா எண் 6421—திரு. வை. காவேரி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, இருப்பாளி ஒன்றியம், குப்பமுத்துவளவு பகுதியில் தெரு விளக்கு அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி ஒன்றியம், இருப்பாளி கிராமம், குப்பமுத்துவளவு பகுதியில், சுமார் 15 வீடுகள் உள்ளன. ஏற்கெனவே ஒரு தெரு விளக்கு உள்ளது. ஒன்றியப் பொது நிதியில் போதுமான நிதி இருப்பு இல்லாமையால், தற்போது மேலும், தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்க இயலாத நிலை உள்ளது.

**5—**

## பாலம் அமைத்தல்

**வினா எண் 8329—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கீழ்மாம்பட்டு முடப்புளியான் தெரு மேற்கில் உள்ள ஓடையில் பாலம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, கீழ்மாம்பட்டு முடப்புளியான் தெரு மேற்கில் உள்ள ஓடையில் பாலம் அமைத்திட வரும் நிதியாண்டில் தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதியிலிருந்து எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**6—**

## வீடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 10593—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, குன்றாண்டார்கோயில் ஒன்றியம், ரெகுநாதபுரத்தில் கச்சா வீடுகளைப் பழுதுபார்த்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களுக்காக 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பெற்ற வீடுகளைப் பழுதுபார்ப்பதற்காக, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடான ரூ. 60 இலட்சத்தில் பணிகள் செய்துகொள்ள அரசு ஆணை (நிலை) எண்173, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி.2) துறை, நாள் 29-11-2006-ல் வகை செய்யப் பெற்றுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் விரும்பினால் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பெற்ற வீடுகளைச் சரியான அடையாளம் கொண்டு பரிந்துரைக்கும் பட்சத்தில் மேற்படி ஆதி திராவிடர் குடும்பங்களுக்கான கச்சா வீடுகளுக்கு தலா ரூ.10,000/- நிதி ஒதுக்கீடு செய்ய வழிவகை உள்ளதால், குளத்தூர் சட்டமன்ற உறுப்பினரை, இப்பணியை எடுத்துக்கொள்ள பரிந்துரை செய்யுமாறு திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுக்கோட்டை அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். பரிந்துரை பெற்றவுடன் அதனடிப்படையில் பணி எடுத்துச் செய்யப்படும்.





**7—**

## தெரு விளக்கு அமைத்தல்

**வினா எண் 10685—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோகனூர் ஒன்றியம், மணப்பள்ளி ஊராட்சி, கணேசபுரத்தில் தெரு விளக்கு அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஊராட்சி ஒன்றியம், மணப்பள்ளி ஊராட்சி, கணேசபுரத்தில் தெரு விளக்குகள் அமைத்துத்தர மணப்பள்ளி ஊராட்சி மூலமாக விண்ணப்பம், மின்வாரிய அலுவலகத்திற்கு அனுப்பி மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஏற்கெனவே உள்ள மின் கம்பங்களில் மின் கம்பிகள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கம்பங்களில் 10 தெருவிளக்குகள் மூன்று மாத காலத்திற்குள் அமைத்துத்தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**8—**

## சமுதாயக் கூடம் அமைத்தல்

**வினா எண் 12616—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலாம்பாடி கிராமம், நெய்க்காரன்பாளையத்திலுள்ள 3-வது வார்டில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் ஆலாம்பாடி கிராமம், நெய்க்காரன்பாளையத்திலுள்ள 3-வது வார்டில் சமுதாயக் கூடம் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**9—**

**புதிய ஒன்றியம் அமைத்தல்**

**வினா எண் 12755—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஒன்றியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உள்ளாட்சி அமைப்புகளை நிலை உயர்த்துவதற்கும், அவற்றின் எல்லைகளை மாற்றியமைப்பதற்கும், அவற்றைப் பிரிப்பதற்கும் மற்றும் சேர்ப்பதற்கும் ஏதுவாக பரிந்துரை செய்ய அரசு ஆணை (ப) எண் 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16-3-2007-ல் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சில நடைமுறைகளையும், அரசின் முடிவினையும் தெரிவித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதனடிப்படையில் ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஒன்றியம் அமைக்க தற்போது வழிவகை இல்லை.



**10—**

**மராமத்துப் பணி**

**வினா எண் 13304—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, நீர்பழனி ஊராட்சி, காரப்பட்டு ஆதி திராவிட குடியிருப்பு வீடுகளில் மராமத்துப் பணி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களுக்காக 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பெற்ற வீடுகளைப் பழுதுபார்ப்பதற்காக, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடான ரூ. 60 இலட்சத்தில் பணிகள் செய்துகொள்ள அரசு ஆணை (நிலை) எண் 173, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி.2) துறை, நாள் 29-11-2006-ல் வகை செய்யப் பெற்றுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் விரும்பினால் 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பெற்ற வீடுகளைச் சரியான அடையாளம் கொண்டு பரிந்துரைக்கும்பட்சத்தில் மேற்படி ஆதி திராவிடர் குடும்பங்களுக்கான கச்சா வீடுகளுக்கு தலா ரூ. 10,000/- நிதி ஒதுக்கீடு செய்ய வழிவகை உள்ளதால், குளத்தூர் சட்டமன்ற உறுப்பினரை, இப்பணியை எடுத்துக்கொள்ள பரிந்துரை செய்யுமாறு திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுக்கோட்டை அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். பரிந்துரை பெற்றவுடன் அதனடிப்படையில் பணி எடுத்துச் செய்யப்படும்.

[2007 அக்டோபர் 18

**11—**

### தார்ச் சாலை

**வினா எண் 13428—திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் தொகுதி, ஆத்தூர் பூலாம்பாளையம் ஊராட்சி சின்னவடுகப்பட்டி முதல் கரூர்-சேலம் பழைய தேசிய நெடுஞ்சாலை வரை மற்றும் பரணி பார்க் பள்ளி ஆகிய இடங்களிலுள்ள மெட்டல் சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்றித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கரூர் தொகுதி, ஆத்தூர் பூலாம்பாளையம் ஊராட்சி சின்னவடுகப்பட்டி முதல் கரூர்-சேலம் பழைய தேசிய நெடுஞ்சாலை வரை மற்றும் பரணி பார்க் பள்ளி ஆகிய இடங்களிலுள்ள மெட்டல் சாலைகள் பணியினை 2006-2007 ஆம் ஆண்டு சம்பூர்ண கிராமின் ரோஜ்கார் யோஜனா சிறப்புக் கூறு திட்டத்தின்மூலம் ரூ. 4.51 இலட்சம் மற்றும் கரூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதி ஒதுக்கீட்டின்கீழ் ரூ. 3.64 இலட்சம், ஆக மொத்தம் ரூ. 8.15 இலட்சம் மதிப்பீட்டில் ஓரடுக்கு கப்பிச் சாலைகளாக அமைக்க அனுமதி வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

**12—**

### தொகுப்பு வீடுகளைப் பராமரித்தல்

**வினா எண் 16456—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆதி திராவிடர் குடியிருக்கும் தொகுப்பு வீடுகளுக்குப் பராமரிப்புப் பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, ஊராட்சிகளில் உள்ள ஆதி திராவிடர் குடியிருக்கும் தொகுப்பு வீடுகளுக்கு நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப பராமரிப்புப் பணி மேற்கொள்ளப் பரிசீலனை செய்யப்படும்.

**13—**

### தொகுப்பு வீடுகளைச் செப்பனிடுதல்

**வினா எண் 18169—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஊராட்சிகளில் உள்ள தொகுப்பு வீடுகளைச் செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, ஊராட்சிகளில் உள்ள தொகுப்பு வீடுகளைச் செப்பனிடும் பணி நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**14—**

### கான்கிரீட் சாலை

**வினா எண் 18260—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ரமணமுதலிப்புதூர், பெத்தநாயக்கனூர், தென்சித்தூர், தென்சங்கம்பாளையம், வேட்டைக்காரன்புதூர் ஆகிய ஊராட்சிகளிலுள்ள சாலைகளை மாற்றி கான்கிரீட் சாலைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியிலுள்ள ரமணமுதலிப்புதூர் ஊராட்சி, 2006-07 ஆம் ஆண்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு ஊராட்சி சாலைகள் அனைத்தையும் கான்கிரீட் சாலைகளாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மற்ற ஊராட்சிகளான பெத்தநாயக்கனூர், தென்சித்தூர், தென்சங்கம்பாளையம் ஆகிய ஊர்களில் வரும் நிதி ஆண்டுகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் சாலைகள் அனைத்தையும் கான்கிரீட் சாலைகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி ஆகும்.

**15—**

### பழுதுநீக்கம்

**வினா எண் 19014—திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, புளியந்துறை ஆதி திராவிடர் கிராமத்தில் பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் புளியந்துறை ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளின் மொத்த எண்ணிக்கை



95 ஆகும். அதில் பழுதடைந்துள்ளவை 65 ஆகும். நல்ல நிலையில் உள்ளவை 30 ஆகும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புளியந்துறை ஊராட்சியில் பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளைப் பழுதுநீக்கம் செய்ய சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்தால் இப்பணியினைச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**16—**

### பராமரிப்புப் பணி

**வினா எண் 19552—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, இல்லியம்புதூர் ஆதி திராவிடர் காலனி தொகுப்பு வீடுகளைப் பராமரிப்பு செய்யவும் கொக்கம்பாளையம் காலனி தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்க்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, இல்லியம்புதூர் மற்றும் கொக்கம்பாளையம் ஆதி திராவிடர் காலனி வீடுகளைப் பராமரிப்பு செய்யவும், பழுதுபார்க்கவும் வரும் நிதியாண்டிற்கான நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**17—**

### பேரூராட்சியாக மாற்றுதல்

**வினா எண் 21236—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்பாச்சேத்தி ஊராட்சியை பேரூராட்சியாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* உள்ளாட்சி அமைப்புகளை நிலை உயர்த்துவதற்கும், அவற்றின் எல்லைகளை மாற்றியமைப்பதற்கும் அவற்றைப் பிரிப்பதற்கும் ஏதுவாக பரிந்துரை செய்ய அரசு ஆணை (ப) எண் 131, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16-3-2007-ல் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சில நடைமுறைகளையும், அரசின் முடிவினையும் தெரிவித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதனடிப்படையில் மானாமதுரை தொகுதி, திருப்பாச்சேத்தி ஊராட்சியைப் பேரூராட்சியாக மாற்ற தற்போது வாய்ப்பு இல்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

**18—**

## சமுதாயக் கூடம் அமைத்தல்

**வினா எண் 28701—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், வழுவதூர் ஊராட்சி, ஆனூர் ஊராட்சி ஆகிய பகுதிகளில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், வழுவதூர் ஊராட்சி, ஆனூர் ஊராட்சி ஆகிய பகுதிகளில் சமுதாயக் கூடம் அமைக்கப்படும்.



**19—**

## சமுதாயக் கூடம் அமைத்தல்

**வினா எண் 29335—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், வடகடம்பாடி ஊராட்சி மற்றும் பொன்விளைந்தகளத்தூர் ஊராட்சியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், வடகடம்பாடி ஊராட்சி மற்றும் பொன்விளைந்தகளத்தூர் ஊராட்சியில் சமுதாயக் கூடம் அமைக்கப்படும்.

**20—**

## சமுதாயக் கூடத்தைச் சீர்செய்தல்

**வினா எண் 30070—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் ஒன்றியம், கலசப்பாக்கம் ஊராட்சியிலுள்ள சமுதாயக் கூடத்தைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் ஒன்றியம், கலசப்பாக்கம் ஊராட்சியிலுள்ள சமுதாயக் கூடத்தைச் சீர்செய்ய அரசு விதிமுறைகளின்படி தற்போது நிதி ஒதுக்கீடு இல்லை.

[2007 அக்டோபர் 18

**21—**

## நவீன மருந்து கண்டுபிடித்தல்

**வினா எண் 20419—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னை மரங்களை நோயிலிருந்து காப்பாற்ற நவீன மருந்து கண்டுபிடிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தென்னை மரங்களை நோயிலிருந்து தடுக்கும்பொருட்டு பல்வேறு ஆராய்ச்சிகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுமட்டுமல்லாமல் தென்னை சார்ந்த தொழில்நுட்பங்களாக—

1. தென்னந்தோப்புகளைச் சுத்தமாகவும், சரியான முறையிலும் பராமரிப்பு செய்யவும்

2. பரிந்துரைக்கப்பட்ட உர அளவினை இடுவதன்மூலம் தென்னை மரங்களின் நோய் எதிர்ப்புத் தன்மையை அதிகரிக்கவும்

3. இயற்கை உரங்களான மண் புழு உரம், தென்னை நார்க் கழிவு உரம் போன்றவற்றை இடுவதன்மூலமும், தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(ஆ) 2006-07-ல் தென்னை வளர்ச்சி வாரிய நிதியுதவியுடன் நோயுற்ற மரங்களை வெட்டி எடுக்க ரூ.235.586 இலட்சம் செலவழிக்கப்பட்டு மரம் ஒன்றுக்கு ரூ. 250/- மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதில் கோவை மாவட்டத்திற்கு மட்டும் ரூ.26.250 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு உள்ளது. இத்தொகை பொள்ளாச்சி மற்றும் உடுமலை கோட்டங்களில் உள்ள தோப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2007-08ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



2007 அக்டோபர் 18]

**22—**

## கரும்பு உற்பத்தி

**வினா எண் 20735—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் கரும்பு உற்பத்தியை அதிகரிக்க அரசிடம் புதிய திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதிக்குட்பட்ட பகுதிகள் தனியார் சர்க்கரை ஆலையான பண்ணாரியம்மன் சர்க்கரை ஆலையின் விவகார எல்லைக்குட்பட்டவை. வால்பாறை தொகுதிக்குட்பட்ட பெரும்பாலான பகுதிகள் மலைப் பகுதிகளாக உள்ளன. எஞ்சியுள்ள பகுதியில் மிகக் குறைந்த அளவிலான கரும்பு பயிரிடப்படுகிறது. எனவே, வால்பாறை தொகுதியில் கரும்பு உற்பத்தியை அதிகரிக்க அரசிடம் புதிய திட்டம் ஏதும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

**23—**

## காட்டாமணக்கு பயிரிடுதல்

**வினா எண் 22378—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில் காட்டாமணக்கு பயிரிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதியில் காட்டாமணக்கு பயிரிட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

[2007 அக்டோபர் 18

காட்டாமணக்கு பயிரிடும் விவசாயிகளுக்கு 50% மானிய விலையில் காட்டாமணக்கு நாற்றுகளை வழங்கி அவர்களை ஊக்கப்படுத்திட செயல்திட்டம் வகுக்கப்பட்டு வரும் ஆகஸ்டு 2007 முதல் செயலாக்கம் துவக்கப்பட உள்ளது. மேலும், தனியார் நிறுவனங்களான மோகன் புருவரீஸ் மற்றும் டிஸ்டில்லரீஸ் லிமிடெட் மற்றும் கேசிபி சுகர்ஸ் லிமிடெட் ஆகியவை காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒப்பந்தப் பண்ணை அடிப்படையில் காட்டாமணக்கு சாகுபடி செய்ய ஆர்வமுள்ள விவசாயிகளைத் தெரிவு செய்து காட்டாமணக்கு சாகுபடியைப் பரவலாக்கம் செய்திட முனைந்துள்ளன.

தற்போது மோகன் புருவரீஸ் மற்றும் டிஸ்டில்லரீஸ் லிமிடெட் என்ற தனியார் நிறுவனம்மூலம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 166.4 எக்டேர் பரப்பில் ஒப்பந்தப் பண்ணைமூலம் காட்டாமணக்கு சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**24—**

## ஷட்டர் அமைத்தல்

**வினா எண் 10944—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடி ஆலந்துறை ஆற்றிலிருந்து சிவகாமிபுரம் புதுக்குளத்திற்கு தண்ணீர் வரும் கீழ்மட்டக் கால்வாயில் உப்பு ஓடை பிரியுமிடத்தில் ஷட்டர் அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடி ஆலந்துறை ஆற்றிலிருந்து சிவகாமிபுரம் புதுக்குளத்திற்கு தண்ணீர் வரும் கீழ்மட்டக் கால்வாயில் உப்பு ஓடை பிரியுமிடத்தில் ஷட்டர் அமைத்திட, நடப்பு நிதியாண்டில் (2007-2008) குளங்கள் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு என்ற தலைப்பின்கீழ் பணிகள் செயலாக்கத்திற்கு மதுரை மண்டல நீர்வள ஆதார அமைப்புத் தலைமைப் பொறியாளரால் எடுத்துக்கொள்ளப்பட உள்ளன.



2007 அக்டோபர் 18]

**25—**

## ஏரி அமைத்தல்

**வினா எண் 14639—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, கோட்டையூர் கிராமம் கங்கப்பள்ளம் என்ற இடத்தில் ஏரி கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

தளி தொகுதி, கோட்டையூர் கிராமம் கங்கப்பள்ளம் அருகே புதிய ஏரி அமைக்கும் திட்டம் பொதுப் பணித் துறை, நீர்வள ஆதார அமைப்பு, திட்ட உருவாக்கத் தலைமைப் பொறியாளர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

**26—**

## பேருந்து வசதி

**வினா எண் 922—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, தாய்முடி எஸ்டேட் குடியிருப்புப் பகுதிக்குப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள தாய்முடி எஸ்டேட் குடியிருப்புப் பகுதி, பேருந்துகள் இயங்கிவரும் பிரதான சாலையில் இருந்து மிகக் குறுகிய தூரத்திலேயே (சுமார் 250 மீட்டர்) அமைந்துள்ளது. தற்போது பிரதான சாலையில் 136 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதுவே தற்போதைய பயணிகள் அடர்விற்குப் போதுமானதாகும்.

[2007 அக்டோபர் 18

**27—**

## பேருந்து வசதி

**வினா எண் 3244—திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட வரதையங்கார்பாளையத்திற்கு பேருந்து வசதி தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர் தடம் எண் 63-ஏ, வரதையங்கார்பாளையம் கிராமம் வழியாக தினசரி 6 நடைகள் (Single Trips) இயக்கி வந்தது. மேற்கண்ட பேருந்து இயங்கிவந்த வழித்தடத்தில் வரதையங்கார்பாளையம் முதல் வையம்பாளையம் வரையிலான 2.7 கி.மீ. தூர சாலை மிகவும் பழுதடைந்து பேருந்து இயக்கிட இயலாததால் தற்காலிகமாக கீரணத்தம் புதுப்பாளையம் வழியாக வையம்பாளையம் செல்லும்வகையில் மாற்றி இயக்கப்பட்டு வருகிறது. பழுதடைந்துள்ள சாலை செப்பனிட்ட பின்பு முன்பு இயக்கப்பட்ட வரதையங்கார்பாளையம் வழியாக இயக்கம் செய்யப்படும்.

**28—**

## போக்குவரத்துப் பணிமனை

**வினா எண் 3250—செல்வி ஆ. அங்கையற்கண்ணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரத்திற்கு அரசுப் போக்குவரத்து பணிமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

9-8-2006 அன்று போக்குவரத்துத் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்



2007 அக்டோபர் 18]

சங்கராபுரத்தில் இந்த ஆண்டே புதிய பணிமனை அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்கள். பணிமனைக்கான அனுமதி அரசாணை (நிலை) எண் 65, போக்குவரத்துத் துறை, நாள் 11-9-2006-ல் வழங்கப்பட்டுள்ளது. சங்கராபுரம் வட்டத்தில் அரசுக்குச் சொந்தமான 3.17 ஏக்கர் நிலம், நில உரிமை மாற்றம் அடிப்படையில் வருவாய்த் துறையினர்மூலம் பெறப்பட்டுள்ளது. பணிமனை கட்டுமானப் பணிக்கு ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்புதல் பெறப்பட்டு தற்போது அந்த இடத்தில் நிலத்தடி நீர் ஆய்வு செய்து ஆழ்துளைக் கிணறு அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**29—**

## கூடுதல் பேருந்துகள் இயக்குதல்

**வினா எண் 3288—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 'வால்பாறை தொகுதி, அர்த்தநாரிப்பாளையம் ஊராட்சி, கம்பாலம்பட்டி, அரசூர் கிராமம், கோடங்கிப்பட்டி, பூப்பருத்தி கிராமம், அர்த்தநாரிப்பாளையம் ஊராட்சி, ஜல்லிப்பட்டி ஊராட்சி, ரமணமுதலிப்புதூர் ஊராட்சி, தென்சித்தூர் ஊராட்சி ஆகிய இடங்களுக்கு கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் கோயம்புத்தூர்/தனியார் பேருந்துகள் கீழ்க்கண்ட பகுதிகட்கு இயக்கப்பட்டு வரும் விவரம் வருமாறு:

**1. அர்த்தநாரி ஊராட்சி/அர்த்தநாரிப்பாளையம் ஊராட்சி**

(இரு பெயர்களும் அர்த்தநாரிப்பாளையத்தையே குறிக்கிறது)

பொள்ளாச்சியிலிருந்து 3 நகரப் பேருந்துகள் தினசரி 40 நடைகள் (Single Trips) உடுமலையிலிருந்து 1 நகரப் பேருந்து தினசரி 8 நடைகள் (Single Trips) ஆக மொத்தம் 4 நகரப் பேருந்துகள் தினசரி 48 நடைகள் (Single Trips) அர்த்தநாரிப்பாளையத்திற்கு இயங்கி வருகின்றன.

[2007 அக்டோபர் 18

**2. கம்பாலம்பட்டி**

பொள்ளாச்சியிலிருந்து நகரப் பேருந்துகள் 4, தினசரி 54 நடைகள் (Single Trips), உடுமலையிலிருந்து 1 தனியார் நகரப் பேருந்து 14 நடைகள் (Single Trips) ஆக 5 நகரப் பேருந்துகள் 68 நடைகள் (Single Trips); இது தவிர உடுமலையிலிருந்து கழகப் புறநகர் பேருந்துகள் 5, தினசரி 40 நடைகள் (Single Trips), தனியார் துறையின் 3 பேருந்துகள் இக்கிராமம் வழியாக 16 நடைகள் (Single Trips) இயங்கி வருகின்றன. ஆக மொத்தம் 13 பேருந்துகள் வாயிலாக தினசரி 124 நடைகள் (Single Trips) இயங்கி வருகின்றன.

**3. அரசூர்**

கழகத்தின் 2 நகரப் பேருந்துகள் பொள்ளாச்சியிலிருந்து தினசரி 26 நடைகள் (Single Trips) இயங்கி வருகின்றன.

**4. கோடங்கிப்பட்டி**

பொள்ளாச்சியிலிருந்து கழக 2 நகரப் பேருந்துகள் தினசரி 11 நடைகள் (Single Trips) இயங்கி வருகின்றன.

**5. பூப்பருத்தி கிராமம்**

(பூவலப்பருத்தி என்பதே சரியான பெயர்) பொள்ளாச்சியிலிருந்து 2 நகரப் பேருந்துகள் தினசரி 18 நடைகள் (Single Trips), உடுமலையிலிருந்து 1 நகரப் பேருந்து தினசரி 14 நடைகள் (Single Trips), உடுமலையிலிருந்து கழக புறநகரப் பேருந்துகள் 5, தினசரி 40 நடைகள் (Single Trips) தனியார் துறையின் 3 புறநகர் பேருந்துகள் 16 நடைகள் (Single Trips), என தினசரி 11 பேருந்துகள் 88 நடைகள் (Single Trips) இயங்கி வருகின்றன.

**6. ஜல்லிப்பட்டி ஊராட்சி**

பொள்ளாச்சியிலிருந்து நகரப் பேருந்துகள் 2, தினசரி 21 நடைகள் (Single Trips) உடுமலையிலிருந்து கழகப் புறநகர் பேருந்து 1, தினசரி 2 நடைகள் (Single Trips) ஆக 3 பேருந்துகள் தினசரி 23 நடைகள் (Single Trips) இயங்கி வருகின்றன.

**7. ரமணமுதலிப்புதூர்**

பொள்ளாச்சியிலிருந்து நகரப் பேருந்து 1, தினசரி 4 நடைகள் தனியார் பேருந்து 1, தினசரி 18 நடைகளும், உடுமலையிலிருந்து



2007 அக்டோபர் 18]

4 கழகப் புறநகர் பேருந்துகள் தினசரி 22 நடைகளும் (Single Trips) ஆக 6 பேருந்துகள் 44 நடைகள் (Single Trips) இயங்கி வருகின்றன.

**8. தென் சித்தூர் ஊராட்சி** (தென் சித்தூர் என்ற பெயரில் கிராமம் இல்லை)

**(அ) தென்சங்கம்பாளையம்**

பொள்ளாச்சியிலிருந்து கழகம் மற்றும் தனியார் நகரப் பேருந்துகள் 25, தினசரி 349 நடைகளும் (Single Trips) கழக மற்றும் தனியார் புறநகர் பேருந்துகள் 35, தினசரி 120 நடைகளும் (Single Trips) உடுமலையிலிருந்து கழக மற்றும் தனியார் புறநகர் பேருந்துகள் 8, தினசரி 56 நடைகளும் (Single Trips) இயங்கி வருகின்றன.

**(ஆ) சோமந்துறை சித்தூர்**

பொள்ளாச்சியிலிருந்து சமத்தூர் வழியாக கழக நகரப் பேருந்துகள் 3, தினசரி 44 நடைகள் (Single Trips) தனியார் துறை 3 நகரப் பேருந்துகள் தினசரி 48 நடைகள் (Single Trips) ஆனைமலை வழியாக 2 கழக நகரப் பேருந்துகள் தினசரி 32 நடைகளும் (Single Trips) ஆக 10 பேருந்துகள் தினசரி 151 நடைகள் (Single Trips) இயங்கி வருகின்றன.

மேற்குறிப்பிட்டுள்ள பகுதிகள் அனைத்திற்கும் தற்போதைய பயணிகள் அடர்விற்கு ஏற்ப போதிய அளவு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

30—

## கூடுதல் பேருந்துகள்

**வினா எண் 3297—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சோமந்துறை ஊராட்சி, தென்சங்கம்பாளையம் ஊராட்சி, பெத்தநாயக்கனூர் ஊராட்சி, காளியாபுரம் ஊராட்சி, கஜமுடி எஸ்டேட், கருமலை பஜார் பகுதி, ஊசிமலை, அக்காமலை, வெள்ளமலை, சின்கோனா ஆகிய பகுதிகளுக்கு கூடுதலாகப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம்/தனியார் பேருந்துகள் கீழ்க்கண்ட பகுதிகட்கு இயக்கப்படுகின்றன:

| எண் | ஊராட்சி | நகர/புறநகர் தனியார் பேருந்துகள் | பேருந்துகளின் எண்ணிக்கை | நடைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | **சோமந்துறை ஊராட்சி** | | | |
| | பொள்ளாச்சி சமத்தூர் வழியாக | நகரப் பேருந்துகள் | 3 | 44 |
| | | தனியார் பேருந்துகள் | 3 | 48 |
| | ஆனைமலை வழியாக | நகரப் பேருந்துகள் | 2 | 27 |
| | | தனியார் பேருந்துகள் | 2 | 32 |
| | | **மொத்தம்** | **10** | **151** |
| 2 | **தென்சங்கம்பாளையம் ஊராட்சி:** | | | |
| | பொள்ளாச்சியிலிருந்து | நகர/தனியார் பேருந்துகள் | 25 | 349 |
| | | கழகப் புறநகர்/தனியார் பேருந்துகள் | 35 | 120 |
| | உடுமலையிலிருந்து | அரசு புறநகர்/தனியார் பேருந்துகள் | 8 | 56 |
| 3 | **பெத்தநாய்க்கனூர் ஊராட்சி** | கழக நகரப் பேருந்துகள் | 2 | 27 |
| | | புறநகர் பேருந்துகள் | 1 | 2 |
| | | தனியார் பேருந்துகள் | 2 | 32 |
| 4 | **காளியாபுரம் ஊராட்சி** பொள்ளாச்சியிலிருந்து | கழக நகரப் பேருந்துகள் | 70 | |
| | | தனியார் நகரப் பேருந்துகள் | 18 | |
| | உடுமலை காளியாபுரம் | தனியார் புறநகர் | 2 | 14 |
| 5 | **கஜமுடி எஸ்டேட் பகுதி** | கழகப் பேருந்துகள் | 3 | 12 |
| 6 | **கருமலை பஜார் பகுதி** | கழகப் பேருந்துகள் | 19 | 74 |



| | | | | |
|---|---|---|---|---|
| 7 | **ஊசிமலை** | கழகப் பேருந்துகள் | 7 | 32 |
| 8 | **அக்காமலை** | கழகப் பேருந்துகள் | 6 | 28 |
| 9 | **வெள்ளமலை** | கழகப் பேருந்துகள் | 7 | 32 |
| 10 | **சின்கோனா** | கழகப் பேருந்துகள் | 12 | 36 |

மேற்கண்ட அனைத்துப் பகுதிகளுக்கும் தற்போதைய பயணிகளின் அடர்விற்கேற்ப போதுமான அளவு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

**31—**

**கூடுதல் பேருந்துகள்**

**வினா எண் 3308—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை பெரிய கல்லாறு, சின்ன கல்லாறு, உப்பாசி தொலைச்சாலை, பரம்பிக்குளம் அணைப் பகுதி, டாப்சிலிப் பகுதி ஆகிய இடங்களுக்கு கூடுதலாக பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர்மூலம் தற்போது கீழ்க்கண்ட பகுதிகட்கு பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது:

1. **பெரிய கல்லாறு**—தற்போது 3 பேருந்துகள் தினசரி 16 நடைகள் (Single Trips) இயங்கி வருகின்றன.

2. **சின்ன கல்லாறு**—தற்போது 4 பேருந்துகள் தினசரி 14 நடைகள் (Single Trips) இயங்கி வருகின்றன.

3. **உப்பாசி தொலைச்சாலை**—(உப்பாசி ஆய்வுச் சாலை என்பதே சரியாகும்) இப்பகுதிக்கு ஒரு பேருந்து தினசரி 4 நடைகள் (Single Trips) இயங்கி வருகிறது.

[2007 அக்டோபர் 18

*4. பரம்பிக்குளம் அணைப் பகுதி*—1 பேருந்து தினசரி 4 நடைகள் (Single Trips) இயங்கி வருகிறது.

*5. டாப்சிலிப்*—1 பேருந்து தினசரி 6 நடைகள் (Single Trips) இயங்கி வருகிறது.

தற்போதைய பயணிகளின் அடர்விற்கு ஏற்ப போதிய பேருந்துகள் மேலே குறிப்பிடப்பட்டவாறு இயக்கப்பட்டு வருகின்றன.

**32—**

## கூடுதல் பேருந்து

**வினா எண் 5294—திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழியிலிருந்து சென்னைக்கு கூடுதலாக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றை இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் தற்போது தடம் எண் 326-ல் சீர்காழியிலிருந்து சென்னைக்கு தினசரி இரவு 22.00 மணிக்கு ஒரு பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது. மேற்படி பேருந்திற்கு போதிய பயணிகள் சீர்காழியில் இல்லாத நிலையில் சீர்காழி-சென்னை தடத்தில் கூடுதல் பேருந்து இயக்க சாத்தியமில்லை. மேலும், கீழ்க்காணும் தடப் பேருந்துகள் சீர்காழி வழியாக சென்னைக்கு தினசரி இயக்கப்பட்டு வருகின்றன:

| வ. எண் | தடம் எண் | செல்லுமிடம் | வழி | மொத்த பேருந்துகள் | நடைகள் |
|---|---|---|---|---|---|
| 1. | 326 | நாகப்பட்டினம்-சென்னை | சீர்காழி | 9 | 18 |
| 2. | 324 | வேளாங்கண்ணி-சென்னை | சீர்காழி | 16 | 32 |
| 3. | 330 | திருநள்ளார்-சென்னை | சீர்காழி | 2 | 4 |
| 4. | 304டி | மயிலாடுதுறை-சென்னை | சீர்காழி | 12 | 20 |
| 5. | 335 | வேதாரண்யம்-சென்னை | சீர்காழி | 2 | 4 |
| | | மொத்த பேருந்து நடைகள் | | 41 | 78 |

மேற்படி பேருந்து வசதிகள் சீர்காழி-சென்னை பயணிகள் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக உள்ளன.



2007 அக்டோபர் 18]

**33—**

## விரைவுப் பேருந்து வசதி

**வினா எண் 7858—திரு. ரெ. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டையிலிருந்து தஞ்சாவூர் வழியாக சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கந்தர்வக்கோட்டை-சென்னை பயணிகள், நகரப் பேருந்து வசதியைப் பயன்படுத்தி தஞ்சாவூர் வந்து, அங்கிருந்து இயக்கப்படும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், தடம் எண் 323-ல் தஞ்சாவூரிலிருந்து-சென்னைக்கு தினசரி 25 பேருந்துகள் 50 நடைகள் வீதம் இயக்கப்பட்டு வரும் பேருந்து வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக உள்ளது. எனவே, தற்போது கந்தர்வக்கோட்டை-சென்னைக்கு தஞ்சாவூர் வழியாக பேருந்து இயக்க சாத்தியமில்லை.

**34—**

## நகரப் பேருந்து வசதி

**வினா எண் 9698—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சித்தேரி மலைவாழ் மக்கள் நலன் கருதி சித்தேரி ஊராட்சிக்குட்பட்ட சாலை வசதியுள்ள அனைத்து கிராமங்களையும் ஒருங்கிணைத்து நகரப் பேருந்து வசதியை செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சித்தேரி ஊராட்சிக்குட்பட்ட சாலை வசதியுள்ள அனைத்து கிராமங்களையும் ஒருங்கிணைத்து அரூர்-சித்தேரி மற்றும் வாழப்பாடி-சேலூர்-அம்மாபாளையம் வழித்தடத்தில் ஏற்கெனவே சேலம், தமிழ்நாடு

அரசுப் போக்குவரத்துக் கழகம், தருமபுரி மண்டலம்மூலம் நகரப் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. இதில், சித்தேரியிலிருந்து நொச்சிக்குட்டை வரை 10 கி.மீ. தூரத்திற்கு யாதொரு பேருந்து வசதியும் இல்லை. இருப்பினும், புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படும் பொழுது சித்தேரி-நொச்சிக்குட்டை தடத்தில் இக்கழகத்தின்மூலம் பேருந்து வசதி செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**35—**

## நகரப் பேருந்து வசதி

**வினா எண் 9751—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, கே. சவுளூர், யு. புரம் மற்றும் நாகமங்கலம் கிராமங்களுக்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ)

**கே. சவுளூர் கிராமம்**

காவேரிப்பட்டினம்–கே. சவுளூர் வழித்தடத்தின் நீளம் 3.8 கி.மீ. ஆகும். இத்தடத்தில் காவேரிப்பட்டினத்திலிருந்து 3 கி.மீ. தூரமுள்ள கே. சவுளூர் பிரிவு சாலை வழியாக கே.ஆர்.பி. டேம் வரை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) தருமபுரி மண்டல நகர் பேருந்து தடம் எண் கே.54 மற்றும் கே.55 பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், கே. சவுளூர் கிராமம், கே. சவுளூர் பிரிவு சாலையிலிருந்து நடைபயண தூரத்திலேயே உள்ளதால், கே. சவுளூர் கிராமம் பேருந்து வசதி பெற்ற கிராமமாகவே கருதப்படுகிறது.

**யு. புரம்**

காவேரிப்பட்டினம் தொகுதியைச் சார்ந்த யு. புரம் கிராமத்திற்கு சேலம் தருமபுரி மண்டலம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த நகரப் பேருந்து தடம் எண் எச் 20 மூலம் நாளொன்றுக்கு 8 நடைகள் ஓசூரிலிருந்து இயக்கப்பட்டு வருகிறது. இத்தடத்தில் பயணிகளின் அடர்வு 53 விழுக்காடே ஆகும்.



**நாகமங்கலம் கிராமம்:**

காவேரிப்பட்டினம் தொகுதியைச் சார்ந்த நாகமங்கலம் கிராமத்திற்கு கீழ்க்கண்டவாறு நகரப் பேருந்து வசதி ஏற்கெனவே செய்யப்பட்டுள்ளது:

| வ.எண் | நகரத் தடம் எண் | தடம் | நாளொன்றுக்கு இயக்கப்படும் நடைகள் | பயணிகளின் அடர்வு |
|---|---|---|---|---|
| 1. | H20 | ஓசூர்-யு. புரம் நாகமங்கலம் | 8 | 53% |
| 2. | H24 | தேன்கனிக்கோட்டை-தின்னூர் (வழி) நாகமங்கலம் | 2 | 48% |

மேலே சொன்ன பேருந்து வசதிகளே அப்பகுதி மக்களின் தேவைக்குப் போதுமானதாகும்.

**36—**

## பேருந்து வசதி

**வினா எண் 11074—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வேலூர் முதல் காட்டுப்புத்தூர் (வழி மோகனூர்) வழித்தடத்தில் மூன்று நடைகளாக குறைக்கப்பட்டு இயங்கிவந்த நகரப் பேருந்தை மீண்டும் இயக்கி பள்ளி மாணவ, மாணவிகளின் நெரிசலான பயணத்தை எளிதாக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் முதல் காட்டுப்புத்தூர் (வழி மோகனூர்) வழித்தடத்தில் கழக நகரப் பேருந்துகள் 9 (ஒன்பது) புறநகர் பேருந்துகள் 2 (இரண்டு) ஆகியவற்றின்மூலம் தினசரி 45 நடைகள் இயக்கப்படுகின்றன. இதில் 2006-ல் சட்டமன்ற உறுப்பினர் (கபிலர்மலை) அவர்களின் பரிந்துரையின்பேரில் நான்கு நடைகள் கூடுதலாக இயக்கப்பட்டதும் அடங்கும். மேலும், பள்ளி மாணவ, மாணவிகள் வசதிக்காக பள்ளி நேரத்திற்கு வேலூர்-மோகனூர்-

[2007 அக்டோபர் 18

காட்டுப்புத்தூர் வழித்தடத்தில் காலை, மாலை நேரங்களில் தினசரி 35 நடைகள் இயக்கப்படுகின்றன. இத்தடத்தில் இயக்கப்படும் நகரப் பேருந்துகளின் சராசரி பயணிகள் அடர்வு 50 சதவிகிதத்திற்குக் குறைவாகவே உள்ளது. மேலும் இத்தடத்தில் தனியார் பேருந்துகள் சுமார் 30 நடைகள் இயக்கப்படுகின்றன. மேற்படி பேருந்து வசதியே தற்சமய பயணிகள் அடர்வுக்குப் போதுமானதாகும்.

**37—**

### ஒட்டுநர் பயிற்சிப் பள்ளி

**வினா எண் 13634—திரு. ஒ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூடப்பட்ட அரசு பவானிசாகர் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியை மீண்டும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோட்டை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வந்த போக்குவரத்துக் கழகமானது கோவை போக்குவரத்துக் கழகத்துடன் இணைக்கப்பட்டு ஒருங்கிணைந்த போக்குவரத்துக் கழகமாக, கோவையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. ஓட்டுநர்களுக்குப் பயிற்சி அளிக்க ஏதுவாக ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி, பொள்ளாச்சியில் அனைத்து வசதிகளுடன் இயங்கி வருவதால் பவானிசாகரில் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளியை மீண்டும் செயல்படுத்தத் திட்டம் இல்லை.

**38—**

### பேருந்து நிறுத்தம்

**வினா எண் 15840—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம் சாத்தப்பாடியில் பேருந்து நிறுத்தம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலம் மூலமாக சேலம்–மேட்டூர் வழித்தடத்தில் இயங்கும் குறுந்தூர புறநகர் பேருந்துகள் மற்றும் நகரப் பேருந்துகள் அனைத்தும் சாத்தப்பாடியில் நின்று பயணிகளை ஏற்றியும் இறக்கியும் செல்கின்றன.

**39—**

### ஓட்டுநர் வயது நிர்ணயம்

**வினா எண் 25116—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கனரக வாகனங்கள் ஓட்டுபவர்களுக்கு அனுபவ வயதை நிர்ணயிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) 1988 ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டம் (மத்தியச் சட்டம் 59/1988)-ன்படி கனரக வாகனங்கள் ஓட்டுபவர்களுக்கு வயதை நிர்ணயிக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு மட்டுமே உள்ளது.

(ஆ) எழாது.

**40—**

### போக்குவரத்துப் பகுதி அலுவலகம்

**வினா எண் 25117—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர், வால்பாறையில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கிளை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் புதிய போக்குவரத்துப் பகுதி அலுவலகம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

**41—**

### பேருந்து வசதி

**வினா எண் 27957—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், பொட்டனேரி ஊராட்சி, குள்ளமடையனூரில் பேருந்துகள் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம்-மேட்டூர் வழித்தடத்தில் மேச்சேரியை அடுத்துள்ள பொட்டனேரி மற்றும் குஞ்சாண்டியூருக்கும் இடையில் உள்ள குள்ளமுடையானூரில் இவ்வழித்தட நகரப் பேருந்துகள் அனைத்தும் நின்று பயணிகளை ஏற்றியும் இறக்கியும் செல்கின்றன மற்றும் பயணிகள் கோரும்பட்சத்தில் புறநகர்ப் பேருந்துகளும் நின்று பயணிகளை ஏற்றியும் இறக்கியும் செல்கின்றன.

**42—**

### பேருந்து வசதி

**வினா எண் 27958—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேட்டூரிலிருந்து இயக்கப்படும் 7 ஆம் எண் பேருந்தை விருதாசம்பட்டிவரை நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலம் மூலமாக நகரப் பேருந்து தடம் எண் 7, மேட்டூரிலிருந்து கொளத்தூர், அய்யம்புதூர், தார்காடு வழியாக நீதிபுரம் வரை இயங்கி வருகின்றது.

ஆனால் வினாவில் தெரிவித்துள்ள விருதசாம்பட்டி கிராமமானது மேட்டூரிலிருந்து குஞ்சாண்டியூர், குட்டப்பட்டி வழியாக மேச்சேரி செல்லும் வழித்தடத்தில் உள்ளது.

எனவே, கோரப்பட்டுள்ளவாறு தடம் எண் 7 நகரப் பேருந்தினை விருதசாம்பட்டி வரை நீட்டித்து இயக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை.

**43—**

### பேருந்து வசதி

**வினா எண் 28883—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டத்தில், மானுப்பட்டியிலிருந்து எலையமுத்தூர் கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானுப்பட்டிக்கும் எலையமுத்தூருக்கும் இடைப்பட்ட தூரம் சுமார் 7.0 கி.மீ. ஆகும். இவ்விடைப்பட்ட தூரத்தில் குறிப்பிடும்படியான மக்கள்தொகை கொண்ட கிராமங்கள் ஏதுமில்லை. எனவே, தற்போது இவ்விரு கிராமங்களுக்கிடையே பேருந்து இயக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், உடுமலைப்பேட்டையிலிருந்து மானுப்பட்டி வழியாக அமராவதிக்கு கோயம்புத்தூர் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் மற்றும் தனியார் பேருந்துகளின்மூலம் தினசரி 90 நடைகளும், உடுமலையிலிருந்து கல்லாபுரத்திற்கு எலையமுத்தூர் வழியாக கழகப் பேருந்துகள் தினசரி 30 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்காணும் பேருந்து வசதிகளே இவ்விரு கிராமங்களுக்குப் போதுமானதாகும்.

**44—**

## இலவச தொழிற்கருவிகள்

**வினா எண் 18547—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சலவைத் தொழிலாளர், முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கு இலவச தொழிற்கருவிகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப சலவைப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு, மாவட்டவாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்டு பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த சலவைத் தொழிலாளர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் 4315 சலவைப் பெட்டிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. 2007-2008 ஆம் ஆண்டில் சலவைப் பெட்டிகள் வழங்குவதற்காக ரூ. 85 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முடி திருத்துவோர்க்கு இலவச முடி திருத்தும் கருவிகள் வழங்கும் திட்டம் பயனாளிகளிடம் போதிய வரவேற்பில்லாத காரணத்தால் 2002 ஆம் ஆண்டு முதல் கைவிடப்பட்டது.

**45—**

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 21996—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை இலங்கைத் தமிழ் அகதிகள் முகாமில் மின்சாரம், கழிப்பறை வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், மூங்கில் ஊரணியில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் மின்சாரம் மற்றும் கழிப்பறை வசதிகள் செய்யத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) இந்த முகாமில் உள்ள 303 குடிசைகளுக்கு ரூ. 11,50,000 செலவில் விரைவில் மின் வசதி செய்துதர செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், கழிப்பறை வசதி மற்றும் கழிப்பறைக்கு ரூ. 1,50,961/-ம் மற்றும் தண்ணீர் வசதி செய்துதர ரூ. 1,21,000/- ஆக மொத்தம் ரூ. 2,71,961/-க்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு விரைவில் பணிகளும் துவங்கப்படவுள்ளன.

**46—**

## பட்டா வழங்குதல்

**வினா எண் 18786—திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி, 15 வேலம்பாளையம் க.ச. எண் 554-ல் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலங்களைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில்,

[2007 அக்டோபர் 18

ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 ஜனவரித் திங்கள்முதல் ஆறு மாத காலத்திற்குள் வீட்டுமனை ஒப்படை செய்ய அரசாணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல், ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழாது.

**47—**

## மீனவர்களுக்கு வீடுகள்

**வினா எண் 29664—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, எடையூர் ஊராட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவ மக்களுக்கு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, எடையூர் ஊராட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வீடுகள் கட்ட எடையூர் ஊராட்சியில் அடங்கிய கொக்கிலமேடு கிராமத்தில் "யூத் வித் மிஷன்" என்ற தொண்டு நிறுவனத்தின்மூலம் 32 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும், வீடுகள் கட்டுவதற்கு, தகுதியான புறம்போக்கு நிலங்கள் மேற்படி கிராமத்தில் இல்லை. எனவே, தனியார் நிலத்தைக் கையகப்படுத்த வேண்டியுள்ளது. நிலம் வாங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் பெறப்பட்டவுடன் மற்ற நபர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.

**48—**

## செய்தித் துறைமூலம் திரைப்படம்

**வினா எண் 5276—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 அக்டோபர் 18]

கோயம்புத்தூர் மாவட்டத்தில் மனித நேயம் வளர்க்கவும், தேசபக்தியை உருவாக்கவும் செய்தித் துறைமூலம் திரைப்படமெடுத்து காட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:**

அரசிடம் செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

**49—**

## நெல் கொள்முதல் நிலையம்

**வினா எண் 9451—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரையில் நெல் கொள்முதல் நிலையம் ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தற்போது, மானாமதுரையில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு, 10-02-2007 வரை 771 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

**50—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 14015—திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, நாகை மாவட்டம், கெங்காதரபுரம் ஊராட்சி, ஆட்டூர் கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

[2007 அக்டோபர் 18

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

குத்தாலம் தொகுதி, நாகை மாவட்டம், கெங்காதரபுரம் ஊராட்சி, ஆட்டூர் கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர இதுவரை இனாம் நிலம் கிடைக்கப் பெறவில்லை. இடம் கிடைக்கப் பெற்றபின் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**51—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 14016—திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவாரூர் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், கண்டிரமாணிக்கம் கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* குத்தாலத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க இனாம் நிலம் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. இனாம் நிலம் கிடைக்கப்பெற்றால் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**52—**

## நெல் கொள்முதல் நிலையம்

**வினா எண் 14070—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, சேத்துப்பட்டு நகரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் அரசாங்க நெல் கொள்முதல் நிலையம் ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

இம்மாநிலத்தில் *1-10-2006* முதல் Khariff Marketing Season *2006-2007* பருவத்திற்கான நெல் கொள்முதல் நடைபெற்று வருகின்றது. இதன்படி, நெல் வரத்தினைப் பொறுத்து தேவைப்படும் இடங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆலோசித்து, நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநருக்கு அனுமதி வழங்கி தகுந்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், டெல்டா பகுதி அல்லாத இடங்களில் நெல் வரத்தினைப் பொறுத்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பதற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**53—**

## நெல் கொள்முதல் நிலையம்

**வினா எண் 16213—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதியில் நெல் கொள்முதல் நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* இம்மாநிலத்தில் *1-10-2006* முதல் Khariff Marketing Season *2006-2007* பருவத்திற்கான நெல் கொள்முதல் நடைபெற்று வருகின்றது. இதன்படி, நெல் வரத்தினைப் பொறுத்து தேவைப்படும் இடங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆலோசித்து, நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநருக்கு அனுமதி வழங்கி தகுந்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், டெல்டா பகுதி அல்லாத

இடங்களில் நெல் வரத்தினைப் பொறுத்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பதற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**54—**

### ஈட்டுறுதிக் காப்பீட்டுக் கழகத் திட்டம்

**வினா எண் 14265—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை வட்டத்தில் ஈட்டுறுதிக் காப்பீட்டுக் கழகத் திட்டத்தின்மூலம் பயன் அடைந்த தொழிலாளர்கள் எத்தனை நபர்கள்?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

மாநில அரசானது தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் மருத்துவ உதவி மட்டுமே அளிக்கிறது. நான்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் உடுமலைப்பேட்டை பகுதியில் உள்ளன. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், உடுமலைப்பேட்டை, நடமாடும் மருந்தகம், மடத்துக்குளம் மற்றும் பெத்தம்பட்டி ஆகியவை உடுமலைப்பேட்டை தாலுகாவில் உள்ளன. அவற்றில் காப்பீட்டாளர்களின் விவர அறிக்கை.

| ஆண்டு | காப்பீட்டாளர் | குடும்பத்தினர் | மொத்தம் |
|---|---|---|---|
| 2004 | 31,621 | 46,666 | 78,287 |
| 2005 | 25,463 | 42,583 | 68,046 |
| 2006 | 25,726 | 38,567 | 64,293 |

(நவம்பர் 2006 முடிய தகவல்)

தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் வருமான உச்சவரம்பை ரூ. 7,500/-லிருந்து ரூ. 10,000/-க்கு உயர்த்தி 1-10-2006 முதல் அமல்படுத்தி





உள்ளது. எனவே, இந்நிதியாண்டில் மேலும் கூடுதல் காப்பீட்டாளர்கள், பயன் பெறுபவர்களுக்கு மருத்துவ உதவி நீங்கலாக மற்ற உதவிகளை தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகமே வழங்கி வருகிறது.

**55—**

### பட்டு கொள்முதல்

**வினா எண் 11856—திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டு கூட்டுறவு நெசவாளர் சங்கம், அண்ணா பட்டு பரிமாற்றத்தின் மூலம் பட்டு கொள்முதல் செய்யப்படும் நடைமுறையைப் பின்பற்ற அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான பாவு மற்றும் ஊடு நூலை தமிழ்நாடு பட்டு கூட்டுறவு இணையத்திடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்துகொள்ள அரசு ஆணை (நிலை) எண் 110, கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர் (ஜி2) துறை, நாள் 8-10-2004-ல் ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, பட்டு கூட்டுறவு நெசவாளர் சங்கம், அண்ணா பட்டு பரிமாற்றத்தின்மூலம் பட்டு கொள்முதல் செய்யப்படும் நடைமுறையைப் பின்பற்றும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**56—**

### தொழிற்சாலை அமைத்தல்

**வினா எண் 17082—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பிலிசின்னம்பாளையம் பகுதியில் கட்டு கட்டும் (பேண்டேஜ்) துணிகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 அக்டோபர் 18

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதி, பிலி சின்னம்பாளையம் பகுதியில் கட்டு கட்டும் (பேண்டேஜ்) துணி தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்துவது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**57—**

## கைத்தறிச் சேலைகள் கொள்முதல்

**வினா எண் 18412—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெசவாளர்கள் தயாரிக்கும் கைத்தறிச் சேலைகள் அனைத்தையும் அரசே கொள்முதல் செய்ய முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) நெசவாளர்களால் தயாரிக்கப்படும் கைத்தறிச் சேலைகளை அரசு நேரடியாகக் கொள்முதல் செய்வதில்லை. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தினால் வழங்கப்படும் உற்பத்தித் திட்டத்தின் அடிப்படையில்தான் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து துணிவகைகள் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. மேலும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் வழங்கும் உற்பத்தித் திட்டத்திற்குமேல் உற்பத்தி செய்யும் இரகங்களை சம்பந்தப்பட்ட சங்கங்களே நேரடியாக விற்பனை செய்து வருகின்றன.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**58—**

## மானியம் வழங்குதல்

**வினா எண் 18414—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 அக்டோபர் 18]

(அ) புதிய கைத்தறிக் கூட்டுறவுச் சங்கம் துவக்குவதற்கு மானியம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்குவதற்கு மானியம் வழங்கப்படுவதில்லை. எனினும், புதிய சங்கங்கள் துவக்கப்பட்டால், அரசு மானியங்கள் நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்களுக்குட்பட்டு வழங்க வழிவகை உள்ளது. புதிய சங்கங்கள் துவக்க உரிய பிரேரணைகள் பெறப்படும் வேளையில் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

**59—**

## வீடு கட்டுவதற்கு கடன்

**வினா எண் 18430—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்ட நீண்ட காலக் கடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கைத்தறி நெசவாளர்களுக்கு கீழ்க்குறிப்பிடப் பட்டுள்ள நிதி விவரப்படி வீடு கட்டும் திட்டம் அமல்படுத்தப்பட்டு வந்தது.

| | | ஊரகம் | நகர்ப்புறம் |
|---|---|---|---|
| (1) | மத்திய அரசு மானியம் | ரூ. 18,000/- | ரூ. 20,000/- |
| (2) | மாநில அரசு மானியம் | ரூ. 7,000/- | ரூ. 7,000/- |
| (3) | ஹட்கோ அரசு மானியம் | ரூ. 40,000/- | ரூ. 40,000/- |
| (4) | பயனாளிகள் பங்கு | ரூ. 3,000/- | ரூ. 5,000/- |

[2007 அக்டோபர் 18

(2) நெசவாளர் வீடு கட்டும் திட்டத்தின்கீழ், பயனாளிகளுக்கு ஹட்கோ நிறுவனம் கடனுதவியாக ரூ. 40,000/-, 10% வட்டி விகிதத்தில் 14 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தத்தக்கவகையில் நீண்ட காலக் கடனாக அரசு பொறுப்புறுதியின் அடிப்படையில் வழங்கி வந்தது. தற்போது ஹட்கோ கடனுதவி வழங்குவதில்லை. அரசு மானியத் தொகை மட்டுமே தற்போது வழங்கப்பட்டு வருகிறது. 11-வது ஐந்தாண்டு திட்டத்தில் நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தில் ஹட்கோமூலம் வழங்கப்படும் கடன் தொகையை மானியமாக வழங்கிடக் கோரி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**60—**

## நிதியுதவி

**வினா எண் 25189—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, டி. கோணகாப்பாடி ஊராட்சி, கே.ஆர். பாளையம், சண்முகா கைத்தறி நெசவாளர் சங்கத்திற்கு நிதியுதவி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) டி. கோணகாப்பாடி ஊராட்சியிலுள்ள கே.கே. 129, சண்முகா கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 6-3-1958-ல் பதிவு செய்யப்பட்டு 7-3-1958 முதல் செயல்படத் துவங்கியது. மேற்படி சங்கத்தில் நட்டம் தொடர்ந்து அதிகரித்து வந்த நிலையில் சங்கம் 2001-2002 ஆம் ஆண்டு முதல் சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியில் காப்புக் குறைவின் காரணமாக வரவு-செலவு செய்ய இயலாமல் கடந்த 3 வருடங்களாக செயலிழந்த நிலையில் இருந்து வருகிறது. சங்கம் சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு 31-3-2006 தேதியில் செலுத்த வேண்டிய தொகை ரூ. 3.78 இலட்சம் ஆகும். இச்சங்கம் 2005-2006 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையின்படி ரூ. 11.95 இலட்சம் நட்டத்தில் உள்ளது. மேற்படி சங்கத்திற்கு காப்பு ஏதும் இல்லாத நிலையில் காப்புக் குறையோடு சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியில் காசுக் கடனை புதுப்பிக்க இயலாத நிலையில் சங்கம் இருந்து வருகிறது. எனவே, மேற்படி சங்கத்திற்கு நிதியுதவி வழங்க வழிவகை ஏதும் இல்லை.



2007 அக்டோபர் 18]

**61—**

## மராமத்துப் பணி

**வினா எண் 27998—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, எம். செட்டிப்பட்டி கைத்தறி சங்கத்தினைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் தாலுகா, எம். செட்டிப்பட்டி கிராமத்தில் எஸ்.ஏ. 130, எம். செட்டிப்பட்டி தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 5-8-1986-ல் பதிவு செய்யப்பட்டு 8-8-1986 முதல் செயல்படத் துவங்கியது. 1992-1993 ஆம் ஆண்டிற்குப் பின்னர் வரவு-செலவு இல்லாததால், உறுப்பினர் எவரும் நெசவு செய்ய முன்வராததாலும், அவர்கள் வேறு தொழிலுக்குச் சென்றுவிட்ட காரணத்தாலும் சங்கத்தினைத் தொடர்ந்து நடத்த இயலாத நிலை ஏற்பட்டு சங்கம் 30-12-2002-ல் கலைக்கப்பட்டுவிட்டது.

இச்சங்கத்திற்குக் கொடுபடவேண்டிய பொறுப்புகள் ரூ. 8.17 இலட்சமாகும். எனவே இச்சங்கத்தினை புத்துயிரூட்டி மீண்டும் செயல்படுத்திட இயலாத நிலை உள்ளது. சங்கத்தின் கட்டடம் தற்போது பயன்படுத்தப்படாமல் உள்ளது. மேற்படி சங்கம் செயலிழந்ததால் மராமத்து செய்ய சங்கத்தில் தற்சமயம் நிதி வசதி இல்லை. எனவே, சங்கத்தின் கட்டடத்தினைப் பழுதுபார்க்க வழிவகை ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**62—**

## பராமரிப்புப் பணி

**வினா எண் 28084—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், திருவள்ளுவர் நெசவாளர் குடியிருப்பைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 அக்டோபர் 18

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் திருவள்ளுவர் பட்டு கைத்தறி நெசவாளர் குடியிருப்புகளில் உள்ள 217 வீடுகள் நெசவாளர் வீடு கட்டும் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டவையாகும். நெசவாளர் குடியிருப்புகளைப் பழுதுபார்க்க / பராமரிக்க அரசின் நலத் திட்டங்களில் நிதி உதவிகள் ஏதும் வழங்கப்படவில்லை. எனினும், சம்பந்தப்பட்ட குடியிருப்புகளை அதன் உரிமையாளர்களே தங்கள் சொந்தச் செலவினத்தில் பராமரிப்புப் பணியினைச் செய்து வருகிறார்கள்.

**63—**

## பள்ளிக் கட்டடம்

**வினா எண் 1451—திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமானூர் ஒன்றியம், பார்ப்பனச்சேரி ஊராட்சி, மாரவனூர் கிராமத்திலுள்ள நடுநிலைப் பள்ளிக்கு கட்டடம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) திருமானூர் ஒன்றியம், மாரவனூர் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டத்தின்கீழ் கூடுதலாக இரு வகுப்பறைக் கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) தற்போது கட்டட வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்பணி முடிந்த பின் கட்டடங்கள் பயன்படுத்திக்கொள்ளப்படும்.

**64—**

## பழுதுநீக்கம்

**வினா எண் 11563—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 அக்டோபர் 18]

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் பேரூராட்சி, சன்னதித் தெரு, தொடக்கப் பள்ளிக் கட்டடத்தினைப் பழுது பார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் பேரூராட்சி, சன்னதித் தெரு பள்ளியில் உள்ள ஓட்டுக் கட்டடத்தினைப் பழுதுபார்க்க ரூ. 50,000/- செலவாகும் என அனைவருக்கும் கல்வி இயக்கக் கட்டடப் பொறியாளரால் மதிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) இதற்கான நிதி 2007-2008 ஆம் நிதியாண்டில் கட்டட நிதியில் இருந்து ஒதுக்கீடு பெறப்பட்டு பழுது பார்க்கப்படும்.

**65—**

## வேளாண் காடுகள் அமைத்தல்

**வினா எண் 9986—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியிலுள்ள அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களில் வனத் துறைமூலம் வேளாண் காடுகள் அமைத்துத் தரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியிலுள்ள அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களில் வனத் துறைமூலம் வேளாண் காடுகள் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

[2007 அக்டோபர் 18

66—

### தார்ச் சாலை

**வினா எண் 23808—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்-கரூர்-பிரதான சாலை-காட்டு சாலையூர், கரட்டூர் மாமரத்துப் பகுதி வரையுள்ள மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற வனத் துறைமூலம் பணி மேற்கொள்ள அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

திண்டுக்கல்-கரூர் பிரதான சாலையில், மாமரத்துப் பகுதி வரையுள்ள சாலையானது கடந்த 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.81,040/- செலவில் திருச்சி வனப் பொறியாளரால் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சாலையினைத் தார்ச் சாலையாக மாற்றத் தேவைப்படும் நிதி 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 2008-2009 ஆம் ஆண்டுக்கான நிதித் திட்டத்தில் சேர்க்கப்படும். நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெறுமேயானால் வனத் துறைமூலம் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

67—

### சாலையை விரிவுபடுத்துதல்

**வினா எண் 8012—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை பிரதான சாலையை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வால்பாறை பிரதான சாலை என்பது பொள்ளாச்சி (நெ.) கோட்டத்தின்கீழ் பராமரிக்கப்பட்டு வரும் மாநில நெடுஞ்சாலையான பொள்ளாச்சி-வால்பாறை சாலையில் கி.மீ. 7/4-64/0 ஆகும். இச்சாலையில் கி.மீ. 0/0-26/8 மற்றும் கி.மீ. 63/0-64/0 வரையிலும் 7 மீ. அகலம் உள்ளது. கி.மீ. 26/8-ல் இருந்து கி.மீ. 63/0 வரை அகலம் மாறுபட்டு இருந்தாலும்



2007 அக்டோபர் 18]

இப்பகுதி இந்திரா காந்தி வன உயிரினக் காப்பக எல்லைக்குள் செல்வதால் இப்பகுதியில் சாலை மேம்பாடு செய்வதற்கும் மற்றும் அகலப்படுத்துவதற்கும் புது டெல்லி, தேசிய வனவிலங்கு வாரியத்திடமிருந்து, அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது. எனவே, இச்சாலையைத் தற்போது விரிவுபடுத்தும் சாத்தியக்கூறுகள் இல்லை.

68—

### பாலத்தைச் சீரமைத்தல்

**வினா எண் 14531—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை, கெலமங்கலம் நெடுஞ்சாலையில் டி. புதூர் அருகே பழுதடைந்த பாலத்தைச் சீர் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை, கெலமங்கலம் நெடுஞ்சாலையில் டி. புதூர் அருகே பழுதடைந்த பாலத்தைச் சீரமைக்க ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2005-2006-ன்கீழ் ரூ.2.75 கோடி மதிப்பில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணி துவங்கும் நிலையில் உள்ளது.

69—

### பாலத்தைச் சீரமைத்தல்

**வினா எண் 14532—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, ஓசூர்-கெலமங்கலம் நெடுஞ்சாலையில் அக்கொண்டப்பள்ளி அருகில் பழுதடைந்துள்ள பாலத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி ஒசூர்-கெலமங்கலம் நெடுஞ்சாலையில் அக்கொண்டப்பள்ளி அருகில் பழுதடைந்துள்ள பாலத்தைப் புதுப்பித்துக் கட்டுவதற்கு ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2005-2006-ன்கீழ் ரூ.412.50 இலட்சம் மதிப்பீட்டில் அங்கீகரிக்கப்பட்டு ஒப்பந்தம் இறுதியாக்கப்பட்டு பணியை விரைவில் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**70—**

**சாலை மேம்பாடு**

**வினா எண் 14708—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை வட்டத்தில் தேசிய நெடுஞ்சாலை 209-ல் விபத்து நடைபெறும் பகுதியை சாலைப் பாதுகாப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் மேம்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

உடுமலைப்பேட்டை வட்டத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் (தே.நெ.209) விபத்து நடைபெறும் பகுதியில் சாலைப் பாதுகாப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்ய தற்போது எவ்விதத் திட்டமும் இல்லை.

**71—**

**சாலையைப் பழுதுபார்த்தல்**

**வினா எண் 14868—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியில் பழுதடைந்த சிறுகுன்றா சாலையை சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் உள்ள சிறுகுன்றா சாலை என்பது பொள்ளாச்சி (நெடுஞ்சாலை) கோட்டப் பராமரிப்பில் உள்ள மாவட்ட இதர சாலையான ஸ்டேன்மோர்-சிறுகுன்றா சாலையில் கி.மீ. 0/0-5/42 வரையுள்ள பகுதியாகும். இதன் மொத்த நீளம் 6.420 கி.மீ. ஆகும். இச்சாலையில் பழுதடைந்துள்ள கி.மீ. 0/0-3/6 மற்றும் கி.மீ. 4/4-5/8 வரையுள்ள பகுதிகள் 2006-07 ஆம் ஆண்டு சிறப்புப் பராமரிப்பு திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்வதற்கு முறையே ரூ.23.80 இலட்சத்திற்கும் மற்றும் ரூ.5.30 இலட்சத்திற்கும் மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டு இப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள கி.மீ. 3/6-4/4 மற்றும் கி.மீ. 5/2-6/2 வரையுள்ள பகுதிகள் நல்ல நிலையில் உள்ளன.

**72—**

**ஆராய்ச்சி மையம் நவீனப்படுத்துதல்**

**வினா எண் 12655—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், காட்டுப்பாக்கம் ஆட்டுப் பண்ணை மற்றும் கோழி வளர்க்கும் ஆராய்ச்சி மையம் நவீனப்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் உள்கட்டமைப்பு மற்றும் நவீன உபகரணங்கள் போன்ற வசதிகள் மேம்படுத்தப்பட்டு நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசின் நிதி உதவித் திட்டத்தின்கீழ் அங்குள்ள கோழிப் பண்ணையில் புதியதாக வன ராஜா கோழிகள் வாங்கி வளர்க்கப்பட்டு வருகின்றன. இங்கு கட்டடங்கள் கட்டப்பட உள்ளன.

**73—**

### புதிய அலுவலகம்

**வினா எண் 20651—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் பேரூராட்சி, ஆட்டுக்காரனூர் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் கோட்டம் ஏ.எச்.டி.205 ஆட்டுக்காரனூர் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் 2005-2006 ஆம் ஆண்டுவரை முடிக்கப்பட்ட இறுதித் தணிக்கை அறிக்கையின்படி இச்சங்கம் ரூ.2,297.10 நட்டம் அடைந்துள்ளது. 2006-2007 ஆம் ஆண்டின் நட்டம் ரூ.71,946.45 ஆகும். ஆக இரண்டும் சேர்த்து தணிக்கை ஆண்டின் இறுதியில் ரூ.74,243.55-க்கு நட்டம் அடைந்துள்ளது. மேலும், சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட இட வசதி இல்லாமையாலும் சங்கம் நட்டத்தில் உள்ளதாலும் இச்சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட போதிய சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழாது.

**74—**

### மேய்ச்சல் நிலத்தைப் பாதுகாத்தல்

**வினா எண் 23587—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதி, செய்களத்தூரில் கால்நடை மேய்ச்சல் நிலத்தைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

மானாமதுரை தொகுதி, செய்களத்தூரில் கால்நடை மேய்ச்சல் நிலம் உள்ளிட்ட தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மேய்ச்சல் நிலங்களையும் பாதுகாக்க ஏற்கெனவே அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 186, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை, நாள் 11-12-2001 மற்றும் அரசு கடித எண் 25787/கா.ப.2/2001, நாள் 15-2-2002-ல் கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

1. ஏற்கெனவே உள்ள மேய்ச்சல் நிலங்களை வேறு பணிக்காக மற்ற துறைகளுக்கு மாற்றம் செய்யக்கூடாது.

2. அப்படி வேறு துறைகளுக்கு மேய்ச்சல் நிலங்கள் மாற்றப்பட வேண்டிய அவசியம் ஏற்படின், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அதே மாவட்டத்தில் சமமான பரப்புள்ள மாற்று நிலம் மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்திக்கொள்ள தெரிவு செய்யப்பட வேண்டும்.

3. மாற்று நிலத்திலுள்ள புதர்களை நீக்கி, சனம் மற்றும் உழவு செய்து தொழு உரம் அடித்து, புல்விதைகளைத் தெளித்து மேய்ச்சல் நிலமாக உருவாக்க செலவினம் ஒரு ஏக்கருக்கு ரூ.6,000/- (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) அல்லது ஒரு ஹெக்டேருக்கு ரூ.15,000/-ஐ (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) மேய்ச்சல் நிலம் தேவைப்படும் துறைகள் அல்லது பொது நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

4. அச்செலவினத் தொகை உள்ளாட்சி அமைப்புகளின் கணக்கில் வைத்து மேய்ச்சல் நில மேம்பாட்டுப் பணிக்காகச் செலவிடப்பட வேண்டும். இதற்காகத் தேவைப்படும் அனைத்து ஆலோசனைகளும் சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள் அளிக்க வேண்டும்.

5. அவ்வாறு மேய்ச்சல் நிலமாக மாற்றப்படும் நிலத்தில் அப்பகுதியைச் சார்ந்த கால்நடைகள் இலவசமாக மேய்வதற்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் அனுமதி அளிக்க வேண்டும்.

[2007 அக்டோபர் 18

75—

## விடுதி கட்டுதல்

**வினா எண் 7390—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலிருந்து கோயம்புத்தூர் வந்து படிக்கும் ஆதி திராவிட மாணவிகளுக்கு கோயம்புத்தூரில் தங்கும் விடுதி கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 7-9-2006 அன்று வால்பாறையில் புதியதாக ஒரு கலைக் கல்லூரி துவங்கப்பட்டுள்ளது. இக்கல்லூரியில் 2006-07 கல்வியாண்டில் கோயம்புத்தூர் விடுதியில் தங்கியிருந்த மாணவியர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனவே, வால்பாறையிலேயே புதியதாக கல்லூரி துவங்கப்பட்டுள்ளதால், இனி வரும் கல்வியாண்டில் கோயம்புத்தூர் வந்து தங்கிப் படிக்கும் மாணவியர் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிடும். எனவே, வால்பாறையிலிருந்து கோயம்புத்தூர் வந்து பயிலும் ஆதி திராவிட மாணவியருக்கென தனியே விடுதி துவங்க வேண்டிய அவசியம் இல்லை.

76—

## ஆதி திராவிடர் நலப் பள்ளி

**வினா எண் 7533—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, காட்டுக்கடலூர் காலனியில் ஆதி திராவிடர் நலப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அனைவருக்கும் கல்வித் திட்டம் கல்வித் துறையின்கீழ் அமலாக்கப்படுகிறது. இது மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். இதன்மூலம் புதிய ஆரம்பப் பள்ளிகள் துவக்குதல், ஆரம்பப் பள்ளிகளை நிலை உயர்த்துதல், ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளுக்கு உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ஆசிரியர்களை நியமித்தல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

புதிய பள்ளிகள் துவங்க தொடக்கக் கல்வித் துறைமூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆதி திராவிடர் நலத் துறைமூலம் பரிந்துரை எதுவும் செய்யப்படுவதில்லை. புதிய பள்ளிகள் துவங்க பெறப்படும் கடிதங்கள் தொடக்கக் கல்வி இயக்கத்திற்கு அனுப்பப்படுகிறது. தேவைப்படும் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. குறைந்தபட்சம் 25 மாணவர்களுடன் இரண்டு ஆண்டுகள் செயல்படும் கல்வி உறுதியமைப்பு மையங்கள் தொடக்கப் பள்ளிகளாக மாற்றப்படுகின்றன. இதற்கான கருத்துரு மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்மூலம் மாவட்டக் கல்விக் குழுவில் வைத்து முடிவு செய்யப்படும்.

77—

## சமுதாயக் கூடம்

**வினா எண் 7564—திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, குட்டைமேடு காலனியில் சமுதாயக் கூடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பவானி தொகுதி, குட்டமேடு காலனியில் சமுதாயக் கூடம் கட்டிக்கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**78—**

**தெரு விளக்கு வசதி**

**வினா எண் 11756—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, தட்ரஅள்ளி ஊராட்சி, ஆதி திராவிடர் காலனிக்கு தெரு விளக்குகள் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, தட்ரஅள்ளி ஊராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்பில் தற்போது 4 தெரு விளக்குகள் பயன்பாட்டில் உள்ளன. இக்குடியிருப்பில் 45 குடும்பங்களே உள்ளன. இக்குடியிருப்புக்கு 4 தெரு விளக்குகளே போதுமானது. கூடுதல் தெரு விளக்குகள் ஏதும் தேவையில்லை.

**79—**

**சமுதாயக் கூடம்**

**வினா எண் 12217—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, விளத்தூர் ஆதி திராவிடர் காலனியில் தாட்கோமூலம் புதிய சமுதாயக் கூடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, விளத்தூர் ஆதி திராவிடர் காலனியில் தாட்கோமூலம் புதிய சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**80—**

**திருமண மண்டபம்**

**வினா எண் 12255—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், அ. வெள்ளக்கரை மற்றும் தூதை ஆதி திராவிடர் காலனிகளுக்குத் திருமண மண்டபம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், அ. வெள்ளக்கரை மற்றும் தூதை ஆதி திராவிடர் காலனிகளுக்குத் திருமண மண்டபம் கட்டிக்கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிலசீனையில் இல்லை.

**81—**

**சமுதாயக் கூடம்**

**வினா எண் 12264—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, விளத்தூர் ஆதி திராவிடர் காலனிக்குப் புதிதாக சமுதாயக் கூடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, விளத்தூர் ஆதி திராவிடர் காலனிக்குப் புதியதாக சமுதாயக் கூடம் கட்டிக்கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**82—**

### சமுதாயக் கூடம்

**வினா எண் 13237—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, கவுந்தம்பாடி கிராமம், வேலம்பாளையம் ஆதி திராவிடர் காலனியில் புதிய சமுதாயக் கூடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பவானி தொகுதி, கவுந்தம்பாடி கிராமம், வேலம்பாளையம் ஆதி திராவிடர் காலனியில் புதிய சமுதாயக் கூடம் கட்டிக்கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**83—**

### சமுதாயக் கூடம்

**வினா எண் 15414—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள ஊராட்சிகளில் ஆதி திராவிடர்களுக்கு அதிகமாக சமுதாயக் கூடங்கள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள ஊராட்சிகளில் ஆதி திராவிடர்களுக்கு அதிகமாக சமுதாயக் கூடங்கள் கட்டிக்கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**84—**

### சமுதாயக் கூடம்

**வினா எண் 16388—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில் தேவபட்டண ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில், தேவபட்டண ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் கட்டிக்கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**85—**

### சமுதாயக் கூடங்கள்

**வினா எண் 16389—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர், சேத்துமடை, கரியஞ்செட்டி பாளையம் மற்றும் பிலிசின்னம்பாளையம் முதலிய இடங்களிலுள்ள ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் சமுதாயக் கூடங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, கோட்டூர், சேத்துமடை, கரியஞ்செட்டிபாளையம் மற்றும் பிலிசின்னம்பாளையம் முதலிய இடங்களிலுள்ள ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் சமுதாயக் கூடங்கள் கட்டிக்கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**86—**

### சமுதாயக் கூடங்கள்

**வினா எண் 16393—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் காளியாபுரம், பெத்தநாய்க்கனூர், ரமணமுதலிப்புதூர், சோமந்துறை, தென்சங்கம்பாளையம், அர்த்தநாரிப் பாளையம், அங்கலக்குறிச்சி முதலிய ஊராட்சிகளில் உள்ள ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளுக்கு சமுதாயக் கூடங்கள் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில், காளியாபுரம், பெத்தநாய்க்கனூர், ரமணமுதலிப்புதூர், சோமந்துறை தென்சங்கம்பாளையம், அர்த்தநாரிப்பாளையம், அங்குலக்குறிச்சி முதலிய ஊராட்சிகளில் உள்ள ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளுக்கு சமுதாயக் கூடங்கள் கட்டிக்கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**87—**

### அறைகலன்கள் வழங்குதல்

**வினா எண் 16431—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆதி திராவிட மாணவ, மாணவிகள் தங்கும் விடுதியில் அனைவருக்கும் கட்டில், மெத்தை மற்றும் காலை, மாலையில் தேநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் அனைத்து கல்லூரி விடுதி மாணவர்களுக்கு மட்டும் அறைகலன்கள் (ஒரு கட்டில், ஒரு மேசை, ஒரு நாற்காலி மட்டும்) வழங்க அரசு ஆணை வெளியிடப்பட்டு அவ்வாறே அனைத்து ஆதி திராவிடர் நலக் கல்லூரி விடுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள அனைத்து ஆதி திராவிடர் நல விடுதிகளிலும் உணவுவகை மற்றும் பங்கீடு நிர்ணயிக்கப்பட்டு (Menu and Ration) அதன்படி மாணவர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது. ஆகையால், கோவை மாட்டத்தில் உள்ள விடுதிகளுக்கு மட்டுமெனத் தனியாக காலை; மாலை வேளைகளில் தேநீர் வழங்க வாய்ப்பில்லை.

**88—**

### தாட்கோமூலம் கடன் வசதி

**வினா எண் 16447—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவிகளுக்கு உயர் கல்வி படிப்பதற்கு தாட்கோமூலம் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவிகளுக்கு ஒரு மாதம், 3 மாதம், ஒரு வருடம் என தொழிற்பயிற்சி தாட்கோவினால் அளிக்கப்படுகின்றது. மாணவ,

[2007 அக்டோபர் 18

மாணவிகளுக்கு பயிற்சிக் காலத்தில் உதவித் தொகைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், அவர்கள் சொந்தத் தொழில் செய்திட தாட்கோமூலம் விண்ணப்பங்களும் அளிக்கப்படுகின்றன.

தாட்கோவினால் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்கள் சொந்தத் தொழில் செய்து வாழ்க்கையில் முன்னேற்றம் காணும் வகையில் மானியக் கடன் மட்டும் அளிக்கப்படுகின்றது. எனவே, ஆதி திராவிடர் பழங்குடியின மாணவ மாணவிகளுக்கு உயர் கல்வி படிக்க தாட்கோமூலம் கடன் வசதி ஏதும் செய்து தரப்படவில்லை.

**89—**

## ஆங்கில மொழிப் பயிற்சி

**வினா எண் 16453—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழகத்திலுள்ள ஆதி திராவிட மாணவர்களுக்கு ஆங்கில மொழிப் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாட்கோமூலம் சில தனியார் பயிற்சி நிறுவனங்களின் வாயிலாக ஆதி திராவிட மாணவ/மாணவியர்களுக்கு ஆங்கில மொழிப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**90—**

## மகளிர் கட்டடம்

**வினா எண் 23629—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கணக்கன்குடி ஆதி திராவிடர் காலனியில் தாட்கோமூலம் மகளிர் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கணக்கன்குடி ஆதி திராவிடர் காலனியில் தாட்கோமூலம் மகளிர் கட்டடம் கட்டிக்கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**91—**

## திருமண மண்டபம்

**வினா எண் 23630—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழகத்தில் அனைத்து ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு தாட்கோமூலம் கல்யாண மண்டபம் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் அனைத்து ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு தாட்கோமூலம் கல்யாண மண்டபம் கட்டிக் கொடுக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கப்பட்டு இடங்கள் தெரிவு செய்யப்பட்டு மண்டபங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த நிதியாண்டில் (2006-2007) நிதி நிலை அறிக்கையில் ரூ.14 இலட்சம் ஒதுக்கப்பட்டதுடன், அறிவிப்புகள்மூலம் ரூ.60 இலட்சம் ஒதுக்கப்பட்டு ஒவ்வொன்றும் ரூ.6 இலட்சம் செலவில் 12 சமுதாயக் கூடங்கள் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**92—**

## திருமண மண்டபம்

**வினா எண் 23641—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 அக்டோபர் 18

(அ) மானாமதுரை 13-வது வார்டில் தாட்கோமூலமாக திருமண மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை 13-வது வார்டில் தாட்கோமூலமாக திருமண மண்டபம் கட்டிக்கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**93—**

## திருமண மண்டபம்

**வினா எண் 23642—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், பள்ளபச்சேரி, உளுத்திமடையில் தாட்கோமூலம் திருமண மண்டபம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், பள்ளபச்சேரி, உளுத்திமடையில் தாட்கோமூலம் திருமண மண்டபம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**94—**

## திருமண மண்டபம்

**வினா எண் 23646—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 அக்டோபர் 18]

(அ) மானாமதுரை தொகுதி, சின்னக்கண்ணனூர் ஆதி திராவிடர் காலனி, பெரியகோட்டை ஆதி திராவிடர் காலனி, ஆலம்பச்சேரி தெற்கு சாந்தனூரில், தாட்கோமூலம் திருமண மண்டபம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, சின்னக்கண்ணனூர் ஆதி திராவிடர் காலனி, பெரியகோட்டை ஆதி திராவிடர் காலனி, ஆலம்பச்சேரி தெற்கு சாந்தனூரில், தாட்கோமூலம் திருமண மண்டபம் கட்டிக்கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**95—**

## மீன்பிடி வலை வழங்குதல்

**வினா எண் 16190—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் மீன் பிடிக்கும் தொழிலாளர்களுக்கு சலுகை விலையில் டீசல், மீன்பிடி வலை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) தற்போதுள்ள அரசின் திட்டத்தின்படி, கடலில் மீன்பிடித் தொழில் செய்யும் மீன்பிடி விசைப் படகுகளுக்கு மட்டும் வரி விலக்கு அளிக்கப்பட்ட டீசல் வழங்கப்படுகிறது. உள்நாட்டு மீனவர்களுக்கு மானிய விலையில் வழங்கும் திட்டம் எதுவும் இல்லை. அதேபோன்று, சலுகை விலையில் மீன்பிடி வலை வழங்கும் திட்டம் ஏதும் நடப்பில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**96—**

## மீன் வளர்ப்பு

**வினா எண் 23532—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சிவகங்கை மாவட்டத்தில் குளங்கள் மற்றும் சிறு கண்மாய்களில் மீன் வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சிவகங்கை மாவட்டத்தில் தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ் கோட்டக்கரையாறு, மணிமுத்தாறு மற்றும் பாம்பாறு நதிப் படுகைகள் ஆகியவற்றில் மீன் குஞ்சுப் பண்ணைகள் நிறுவப்படவுள்ளன. உலக வங்கியின் நிதியுதவியுடன், 2007-2008 முதல் ஐந்தாண்டுகளில், கண்மாய்களைச் சீரமைத்து, கால்வாய்களைச் செப்பனிட்டு, நீர்ப் பிடிப்புப் பகுதிகளை அதிகரிக்கவும், நீர்வளத்தினை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும்வகையில் மேற்கண்ட மீன் குஞ்சுப் பண்ணைகள் அமைக்கப்பட்டு அதிகரிக்கப்படவுள்ள நீர்வளத்திற்குத் தேவையான மீன் குஞ்சுகளை இருப்பு செய்வதன்மூலம் மீன்வளத்தை அதிகரிக்க இயலும்.

*(2)* மேலும், மிதவைக் கூடுகளை நிறுவி இருப்பு செய்வதற்கான மீன் குஞ்சுகள் தேவை பூர்த்தி செய்யப்படும். இதற்குத் தேவையான அனைத்து உதவிகளும் மீன் குஞ்சு வளர்ப்போருக்கு அளிக்கப்படும்.

*(3)* நதிப் படுகைகளில் உள்ள நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைத்து மீன் வளர்க்க நீர்வள, நிலவளத் திட்டத்தில் திட்டச் செயலாக்கம் மேற்கொள்ளப்படும்.

*(4)* புதிய கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் கிராமத்திற்கு ஒரு குளம் தேர்வு செய்யப்பட்டு, மேம்படுத்தி நவீன மீன் வளர்ப்பு முறை செயலாக்கப்படவுள்ளது.

*(5)* சொந்த நிலத்தில் மீன் வளர்ப்புக் குளம் அமைப்போருக்கு மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைமூலமாக தகுதியுள்ளோருக்கு மானியமும், அமைக்கப்படும் குளங்களில் கெண்டை ரக வளர்ப்பு





மீன்களோடு நன்னீர் இறால் வளர்ப்போருக்கு இடுபொருள் மானியமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ.1,875/- வீதம் நிதியுதவியும் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் நிதியுதவி செய்யப்படுவதால் மீன் வளர்ப்பு மேம்பாடு அடையும்.

*(6)* பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அரசுடைமையாக்கப்பட்ட நீர் நிலைகள் அரசு விதிகளின்படி உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாவட்ட நிர்வாகத்தால் குத்தகைக்கு விடப்பட்டு, மீன் குஞ்சுகளை இருப்பு செய்து வளர்த்து, மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் பயன்பெற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

**97—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 8062—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* காங்கேயம் தொகுதி, ஈங்கூர் கிராமத்தில் மகளிர் பால் உற்பத்தியாளர் சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* காங்கேயம் தொகுதி, ஈங்கூர் கிராமத்தில் மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான அடிமனை ஏதும் இல்லாததால் கட்டடம் கட்டுவதற்கான வாய்ப்பு இல்லை.

**98—**

## மானிய விலையில் நோய்த் தடுப்பு மருந்து

**வினா எண் 20617—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 அக்டோபர் 18

(அ) பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு மானிய விலையில் மாட்டுத் தீவனம், நோய்த் தடுப்பு மருந்து வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு மானிய விலையில் மாட்டுத் தீவனம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து வழங்கும் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை.

**99—**

**புதிய கட்டடம்**

**வினா எண் 20619—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதியில் முசரவாக்கம் கிராமத்தில் இயங்கிவரும் பால் உற்பத்தியாளர் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதியில் முசரவாக்கம் கிராமத்தில் இயங்கிவரும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமாக அடிமனை ஏதும் இல்லாத காரணத்தால் புதிதாகக் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.



2007 அக்டோபர் 18]

**100—**

**கறவை மாடுகள் வழங்குதல்**

**வினா எண் 21050—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் ஆதி திராவிடர்களுக்கு கறவை மாடுகள் வாங்கிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின்மூலம் ஆதி திராவிடர்களுக்கு கறவை மாடுகள் வழங்கும் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை.

[2007 அக்டோபர் 18

**பட்டியல் 4**

**1—**

## அலுவலகக் கட்டடம்

**வினா எண் 19487—திரு. வை. காவேரி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரியிலுள்ள மின்சார வாரிய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கன்னந்தேரி கிராமம், சங்ககிரி தாலுகா, சேலம் மாவட்டத்தில் உள்ள அரசுப் புறம்போக்கு நிலத்தில் புஎண் 24/10-ஏ-ல், 25 சென்ட் நிலத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கையகப்படுத்திடும் கருத்துரு மாவட்ட வருவாய் அலுவலகத்திற்கு 18-12-2006 அன்று அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி நிலம் கையகப்படுத்தப்பட்ட பிறகு கன்னந்தேரி கிராமத்தில், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமாகப் பிரிவு அலுவலகம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**2—**

## மின் கட்டணம் செலுத்தும் மையம்

**வினா எண் 22890—திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் தொகுதி, வேலப்பாளையம் நகராட்சியில் மின் கட்டணம் செலுத்தும் மையம் புதிதாகத் துவக்க அரசு முன்வருமா?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

வேலம்பாளையம் ஊராட்சிப் பகுதிகளை உள்ளடக்கிய அனுப்பர்பாளையம் மற்றும் கிராமியப் பிரிவுகளில் தற்போது மின் கட்டணம் செலுத்தும் வசூல் மையங்கள் இயங்கி வருகின்றன. எனவே, வேலம்பாளையம் நகராட்சியில் தனியாக வசூல் மையங்கள் அமைக்கும் அவசியம் தற்போது இல்லை.

**3—**

## சமுதாயக் கூடம்

**வினா எண் 6805—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதிக்குட்பட்ட பாலப்பாளையத்தில் சமுதாய நலக் கூடங்கள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், ஈங்கூர் ஊராட்சியில் ஏற்கெனவே சமுதாயக் கூடம் உள்ளது. பாலப்பாளையத்திலிருந்து இந்த சமுதாயக் கூடம் சுமார் 400 மீட்டர் தூரத்தில் உள்ளது. எனவே, இப்பகுதியில் ஏற்கெனவே சமுதாயக் கூடம் உள்ளதால் மேலும் ஒரு சமுதாயக் கூடம் கட்டத் தேவை எழவில்லை.

**4—**

## பூங்காக்களை மேம்படுத்துதல்

**வினா எண் 29256—திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 அக்டோபர் 18

(அ) தாம்பரம் தொகுதி, கொட்டிவாக்கம் ஊராட்சியின் பூங்காக்களுக்குச் சுற்றுச் சுவர் கட்டவும், பூங்காக்களை மேம்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, கொட்டிவாக்கம் ஊராட்சியில் உள்ள ஊராட்சிப் பொது நிதியின்மூலம் புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியமே அனைத்துப் பூங்காக்களுக்கும் சுற்றுச் சுவர் அமைப்பதுடன் மேம்பாடும் செய்ய இயலும்.

**5—**

### நிழற்கூடம் அமைத்தல்

**வினா எண் 29500—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், மானியாதஅள்ளி ஊராட்சி, கொம்புக்குட்டை கிராமத்தில் நிழற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், மானியாதஅள்ளி ஊராட்சி, கொம்புக்குட்டை கிராமத்தில் நிழற்கூடம் அமைக்க 2007-2008 ஆம் நிதியாண்டு சட்டமன்ற உறுப்பினர் (அல்லது) நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு பெற்று நிழற்கூடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.



2007 அக்டோபர் 18]

**6—**

### கல்விக் கடன்

**வினா எண் 6644—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் கூட்டுறவு வங்கிமூலம் வழங்கிய கல்விக் கடன் எவ்வளவு? அதில் வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்கு வழங்கியது எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மண்டலத்தில் செயல்பட்டுவரும் கூட்டுறவு வங்கிகள் மூலம் 2006-07 ஆம் ஆண்டில் ரூ.13.98 இலட்சம் கல்விக் கடன் வழங்கப்பட்டுள்ளது. வால்பாறை தொகுதிக்குட்பட்ட கூட்டுறவு வங்கிகளில் கல்விக் கடன் ஏதும் வழங்கப்படவில்லை.

**7—**

### வங்கிக் கடன் வசதி

**வினா எண் 10259—திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டத்தில் விவசாயிகள் மண் புழு வளர்க்க வங்கிக் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(1) தற்சமயம், இந்திய அளவில் மண் புழு வளர்க்க, வேளாண் மற்றும் ஊரக அபிவிருத்தி வங்கியின் (நபார்டு) ஒருங்கிணைப்பில் கீழ்க்கண்ட வங்கிகள் மூலமாக, மானியத்துடன்கூடிய கடன் வழங்கும் திட்டம் மத்திய அரசின் வேளாண்மை அமைச்சகத்தின்கீழ் உள்ள வேளாண்மை மற்றும் கூட்டுறவுத் துறையினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது:—

1. வர்த்தக வங்கிகள் (Commercial Banks)
2. பிராந்திய ஊரக வங்கிகள் (Regional Rural Banks)

[2007 அக்டோபர் 18

3. மாநில கூட்டுறவு வங்கிகள் (State Co-operative Banks)

4. மாநில விவசாயக் கூட்டுறவு மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் (State Co-operative Agricultural and Rural Development Banks)

5. பட்டியல் முதன்மை நகர கூட்டுறவு வங்கிகள் (Scheduled Primary Urban Co-operative Banks)

6. வேளாண்மை பொருளாதார அபிவிருத்தி நிறுவனங்கள் (Agricultural Development Finance Companies)

(2) இந்நிதி உதவி கீழ்க்கண்ட விகிதத்தில் வழங்கப்படுகிறது:—

1. முதலீட்டாளர் பங்கு 25%
2. மானியம் (மத்திய அரசின் வேளாண்மை மற்றும் கூட்டுறவுத் துறையினால் வழங்கப்படுவது) 25%
3. வங்கிக் கடன் 50%

(3) மேற்கண்ட 25% மானியத்துடன்கூடிய கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்தில் மட்டுமல்லாமல், மாநிலத்தில் உள்ள ஏனைய விவசாயிகளும் பயன் பெறலாம்.

(4) இது தொடர்பாக, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள் வாயிலாக விரிவான விளம்பரம் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**8—**

## தென்னங்கன்றுகள் உற்பத்தி

**வினா எண் 13631—திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயத் துறையில் அரசுப் பண்ணைகளில் தென்னங்கன்றுகளின் உற்பத்தியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வேளாண்மைத் துறையில் 22 தென்னை நாற்றுப் பண்ணைகள் உள்ளன. இப்பண்ணைகளில் 1999-2000 ஆம் ஆண்டுக்கு முன்னர்



2007 அக்டோபர் 18]

18 இலட்சம் கன்றுகள் வரை ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட்டு, பரப்பு விரிவாக்கம் அதிகரிக்கப்பட்டது. இடையில் ஏற்பட்ட வறட்சி காரணமாக இலக்குகள் குறைக்கப்பட்டது. தற்போது மழை பெய்து வரும் காரணத்தால் தென்னை பரப்பு விரிவாக்கம் அதிகரித்துள்ளதால் மீண்டும் உற்பத்தி அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. 1999-2000 முதல் 2006-2007 வரையிலான கன்றுகள் விநியோகம் கீழ்வருமாறு:

| வருடம் | கன்றுகள் விநியோகம் (இலட்சத்தில்) | | |
|---|---|---|---|
| | நெட்டை | நெட்டை x குட்டை | மொத்தம் |
| 1999-2000 | 12.11 | 6.12 | 18.23 |
| 2000-2001 | 10.47 | 4.79 | 15.26 |
| 2001-2002 | 9.16 | 5.81 | 14.97 |
| 2002-2003 | 6.84 | 4.40 | 11.24 |
| 2003-2004 | 4.77 | 4.18 | 8.95 |
| 2004-2005 | 2.71 | 2.31 | 5.02 |
| 2005-2006 | 4.84 | 2.48 | 7.32 |
| 2006-2007 | 4.14 | 3.25 | 7.39 |

2007-2008-ல் 9.00 இலட்சம் கன்றுகள் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல், 5 இலட்சம் கன்றுகள் தனியார் தென்னை நாற்றுப் பண்ணைகள்மூலம் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படும் குட்டை x நெட்டை ரகக் கன்றுகளை உற்பத்தி செய்ய 2007-2008-ல் 50,000 நாற்றுகள் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**9—**

## விவசாயக் கருவிகள் விற்பனை மையம்

**வினா எண் 20435—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 அக்டோபர் 18

(அ) வால்பாறை தொகுதியில் விவசாயக் கருவிகள் விற்பனை செய்யும் மையம் ஒன்று அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் விவசாயக் கருவிகள் விற்பனை மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. தற்போது வேளாண்மைப் பொறியியல் துறையில் மத்திய அரசின் உதவியுடன் செயல்பட்டுவரும் வேளாண்மைக் கருவிகள் இயந்திரமயமாக்குதல் திட்டத்தின்கீழ் விவசாயக் கருவிகள் அனைத்தும் வாங்குவதற்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.4.50 இலட்சங்கள் விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**10—**

## சிறப்பு ஊக்கத் தொகை

**வினா எண் 20903—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், வெற்றிலைச் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகை வழங்கவும் வெற்றிலைத் தொழிலாளர்களுக்குத் தனியாகக் கடன் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) வெற்றிலைச் சாகுபடிக்கென திட்டம் ஏதும் தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறையில் செயல்படாத நிலையில்,



2007 அக்டோபர் 18]

வெற்றிலைச் சாகுபடி விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகை வழங்குதல் மற்றும் வெற்றிலைத் தொழிலாளர்களுக்கு தனியாகக் கடன் வழங்குதல் சம்பந்தமான கருத்துருக்கள் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

**11—**

## உரக்கடை நிறுவுதல்

**வினா எண் 20906—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அரசு சார்பாக ஒவ்வொரு வட்டத்திலும் ஓர் உரக்கடை நிறுவ அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இரசாயன உரங்கள் வேளாண்மைத் துறைமூலம் விற்பனை செய்வது அரசு ஆணை எண் 150, வேளாண்மைத் துறை, நாள் 9-3-1993 மூலம் தடை செய்யப்பட்டுள்ளது. மேலும், அனைத்து தனியார் உர விற்பனை நிலையங்களிலும் மத்திய அரசினால் இரசாயன உரங்களுக்கு வழங்கப்படும் மானியம் கழிக்கப்பட்டு அதிகபட்ச சில்லறை விற்பனை விலைக்கு விற்கப்படுகிறது.

ஒவ்வொரு கட்டத்திலும் அரசு சார்பாக ஒரு உரக்கடை நிறுவ திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**12—**

## தேங்காய் கொள்முதல்

**வினா எண் 26550—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் தேங்காயை அரசே கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதியில் தேங்காயை அரசே நேரடியாகக் கொள்முதல் செய்யும் திட்டம் ஏதும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

**13—**

**கண்மாய், கால்வாய் சீரமைப்பு**

**வினா எண் 14601—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, கீழமேல்குடிக் கண்மாய் மற்றும் கால்வாயைத் தூர்வாரி மராமத்து செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், கீழமேல்குடிக் கண்மாய் பாசனப் பரப்பு 473.61 ஏக்கர், பூர்வீக வைகை ஆற்றுப் பாசனப் பகுதியாகும். கீழமேல்குடிக் கண்மாய் மற்றும் கால்வாய் சீரமைப்புப் பணியினை 2007-2008 ஆம் நிதியாண்டு பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள பொதுப் பணித் துறை, மதுரை மண்டல தலைமைப் பொறியாளரால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**14—**

**கண்மாய், கால்வாய் சீரமைப்பு**

**வினா எண் 14602—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) மானாமதுரை தொகுதி, குவளைவேலி கிராமக் கண்மாய், கால்வாயை மராமத்து செய்து கால்வாயின் முகப்பில் ஷட்டர்ஸ் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், குவளைவேலி கிராமக் கண்மாய் 498.44 ஏக்கர் பாசனப் பரப்புடையது. இக்கண்மாய் வைகை பூர்வீக பாசனப் பகுதியாகும். இக்கண்மாய் மற்றும் கால்வாய் சீரமைக்கும் பணியினை 2007-2008 ஆம் நிதியாண்டு பராமரிப்பு நிதியிலிருந்து பணி மேற்கொள்ளும்போது கால்வாய் முகப்பில் ஷட்டர்ஸ் அமைக்கும் பணிகளும் எடுத்துக்கொள்ளப்படும்.

**15—**

**தடுப்புச் சுவர் கட்டுதல்**

**வினா எண் 14605—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, வி. கரிசல்குளம் கிராமம், வைகை ஆற்றின் ஓரம் ஒரு தடுப்புச் சுவர் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், வி. கரிசல்குளம் கிராமம், வைகை ஆற்றின் இடது கரையில் அமைந்துள்ளது. வைகையாற்றில் அபரிமிதமான வெள்ளம்

[2007 அக்டோபர் 18

ஏற்படும்பொழுது கிராமத்துக்குள் நீர் புகுந்துகொள்ளும் சூழ்நிலையில் உள்ளது. இதனைத் தடுக்க சுமார் 200 மீட்டர் நீளத்திற்கு தடுப்புச் சுவர் கட்டப்பட வேண்டும். மேற்கண்ட பணியினை ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் 2008-2009 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தில் மேற்கொள்ள பொதுப் பணித் துறை, மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளரால் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

**16—**

**கால்வாயைத் தூர் வாருதல்**

**வினா எண் 14771—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, சேத்துப்பட்டு ஒன்றியம், ஒதலவாடி ஏரியின் ஆற்றுக் கால்வாயைத் தூர் வாரி சீர்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

இக்கால்வாயினைத் தூர் வாரிச் செப்பனிட ரூ.3.00 இலட்சம் தேவைப்படும். சிறப்பு நிதியுதவித் திட்டத்தின்கீழ் இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கி நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**17—**

**கால்வாயைத் தூர் வாருதல்**

**வினா எண் 14775—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, வம்பலூர் கிராமம், செய்யாற்றிலிருந்து வரும் ஆற்றுக் கால்வாயைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், வம்பலூர் ஏரிக்கு செய்யாற்றிலிருந்து கால்வாய்மூலம் தண்ணீர் வருகிறது. இந்தக் கால்வாயின் நீளம் 4.50 கி.மீ. ஆகும். இந்தக் கால்வாயின் பெரும் பகுதி மண் மேடிட்டுள்ளது. கால்வாய் தூர்ந்து ஆக்கிரமிப்புகள் உள்ளதாலும் கால்வாயைத் தூர் வாரி தரப்படுத்த ரூ.5.00 இலட்சம் தேவைப்படும். இதற்கு சிறப்புத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு பெற்றுப் பணிகள் மேற்கொள்ள நிதியொதுக்கத்தைப் பொறுத்து கருத்திற்கொள்ளப்படும்.

**18—**

**பாலம் கட்டுதல்**

**வினா எண் 17559—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கோட்டைக் கருங்குளம் ஊராட்சி, வடிவம்மன்பட்டி ஆதி திராவிடர் காலனி மயானப் பாதையில் நம்பியாறு வலப்புறக் கால்வாயின் குறுக்கே பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

வடிவம்மன்பட்டி ஆதி திராவிடர் காலனி மயானப் பாதையில் நம்பியாறு வலப்புறக் கால்வாயின் குறுக்கே பாலம் கட்ட ரூ. 3.00 இலட்சத்திற்கு பொதுப் பணித் துறை மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளரால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் (2007-2008) பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு என்ற தலைப்பின்கீழ் இப்பாலம் கட்டும் பணி பொதுப் பணித் துறை மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளரால் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

19—

## சுற்றுச் சுவரை உயர்த்துதல்

**வினா எண் 30035—திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் தொகுதி, பழங்கானத்தம், இ.எஸ்.ஐ. மருந்தக குடியிருப்புச் சுற்றுச் சுவரை உயர்த்திக் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இ.எஸ்.ஐ. கட்டடம் மற்றும் பராமரிப்புப் பணிகள் 1985 முதல் 31-3-2005 வரை பொதுப் பணித் துறைமூலம் செய்யப்பட்டு வந்தது. ஆனால் 1-4-2005 முதல் இ.எஸ்.ஐ. கட்டடம் மற்றும் பராமரிப்புப் பணிகள் அனைத்தும் தேசிய கட்டட கட்டுமானக் கழகம் மூலமாகச் செய்யப்பட்டு வருகின்றன. ஆகவே, இப்பணியினை தேசிய கட்டட கட்டுமானக் கழகத்தின் மூலமாக மேற்கொள்ளலாம் என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

20—

## கூடுதல் பேருந்து வசதி

**வினா எண் 8397—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மாளிகம்பட்டு கிராமத்தில் பள்ளி நேரங்களான காலை, மாலை வேளையில் கூடுதலாகப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டியிலிருந்து வடமேற்கே 6.8 கி.மீ. தொலைவில் மாளிகம்பட்டு கிராமம் உள்ளது. நகரப் பேருந்து தடம் எண் 26, காலையில் 7-15 மணிக்கு சேந்தநாடு கிராமத்தில் புறப்பட்டு பண்ருட்டி பேருந்து நிலையத்திற்கு காலை 8-33 மணிக்கும் தடம் எண் 5 மாலையில் 4-40 மணிக்கு பண்ருட்டி பேருந்து நிலையத்தில் புறப்பட்டு மேலிருப்பு கிராமத்திற்கு மாலை 5-15 மணிக்கும், பண்ருட்டி பள்ளி மாணவ, மாணவியர்கள் பள்ளிக் கூடங்களுக்கு வந்து செல்லும் வகையில் கால அட்டவணை அமைக்கப்பட்டுள்ளது.

நகரப் பேருந்து தடம் எண் 9 காலையில் பண்ருட்டியில் 7-30 மணிக்குப் புறப்பட்டு மாளிகம்பட்டு வழியாக 8-45 மணிக்கு நெய்வேலி மத்திய பேருந்து நிலையத்தையும் மாலை 4-05 மணிக்கு அதே பேருந்து நெய்வேலி மத்திய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு மாளிகம்பட்டு வழியாக பண்ருட்டிக்கு மாலை 5-30 மணி அளவில் வந்தடையும் நடையில், நெய்வேலியிலிருந்து பள்ளி மாணவ, மாணவியர் வந்து செல்ல வசதியாக உள்ளது.

பண்ருட்டியிலிருந்து-நன்னிக்குப்பம், மேலிருப்பு, நெய்வேலி மத்திய பேருந்து நிலையம், முத்தாண்டிகுப்பம், சேந்தநாடு, கருக்கை ஆகிய வழித் தடங்களில் இயங்கும் நகரப் பேருந்து தடம் எண் டி. 5, 9 மற்றும் 26 மாளிகம்பட்டு கிராமம் வழியாக முறையே தலா 4 நடைகள் (மொத்தம் 12 நடைகள்) இயக்கப்பட்டு வருகின்றன. பயணிகள் அடர்வு 55 விழுக்காட்டுக்குக் குறைவாகவே உள்ளது. இப்பேருந்து வசதிகளே அப்பகுதி மக்களுக்குப் போதுமானதாக கருதப்படுகிறது.

21—

## சொகுசுப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 9657—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு இயக்கப்பட்டு வந்த 332ஏ விரைவுப் பேருந்தை மீண்டும் இயக்கவும், மேற்படி வழித் தடத்தில் நவீன சொகுசுப் பேருந்து இயக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2007 அக்டோபர் 18

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட் மூலமாகத் தடம் எண் 332-ல் பட்டுக்கோட்டையிலிருந்து-சென்னைக்கு தினசரி 4 பேருந்துகள் 6 நடைகள் வீதம் தொடர்ந்து தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றது. மேற்படித் தடத்தில் இயக்கப்பட்ட பேருந்துகள் எதுவும் நிறுத்தப்படவில்லை. மேலும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு புதிய அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்து பெறப்படும்போது மேற்படித் தடத்தில் இயக்கப்பட்டுவரும் இரண்டு பழைய பேருந்துகளை அகற்றி அவற்றுக்குப் பதிலாக புதிய அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்து வருமானத்திற்கேற்ப இயக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**22—**

## புதிய பேருந்து இயக்குதல்

**வினா எண் 10298—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி முதல் நடுப்பட்டி, தாசம்பட்டி, கொல்லம்பட்டி, மோட்டுப்பட்டி வழியாக கம்பைநல்லூர் வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேருந்து வசதி கோரியுள்ள தருமபுரி-கம்பைநல்லூர் (வழி) நடுப்பட்டி, தாசம்பட்டி, கொல்லம்பட்டி, மோட்டுப்பட்டி தடத்தின் நீளம் 32 கி.மீ. ஆகும். இத்தடத்தில் நடுப்பட்டி பிரிவு சாலையிலிருந்து மோட்டுப்பட்டி வரை 6.3 கி.மீ. தூரத்திற்கு யாதொரு பேருந்து வசதியும் இல்லை. இச்சாலை மண் மற்றும் ஜல்லிச் சாலையாகவும், பேருந்து இயக்க வசதியற்ற சாலையாகவும் உள்ளது. மேலும், நடுப்பட்டி மற்றும் கொல்லம்பட்டி ஆகிய கிராமங்களினுள் பேருந்தை இயக்க, சாலையின் அகலம் போதுமானதாக இல்லை.



2007 அக்டோபர் 18]

மேற்படி சாலை பேருந்து இயக்க ஏற்றதாக அமைத்த பின்பு மேற்கண்ட தடத்தில் பேருந்தை இயக்கிட பரிசீலிக்கப்படும்.

**23—**

## வேலைப் பளுவைக் குறைத்தல்

**வினா எண் 15012—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்ட, மாநகர தெற்கு மற்றும் வடக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் உள்ள வேலைப் பளுவைக் குறைக்க அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், கோவை மாநகர் (தெற்கு) மற்றும் (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் கணினிமயமாக்கல் பணி மேற்கொள்ளப்பட்டு பூரணமாக முடிவடையும் தருவாயில் உள்ளது. கணினிமயமாக்கல் பணி நிறைவு பெற்றவுடன், அலுவலகப் பணியாளர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டபின், வேலைப் பளு குறைவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

**24—**

## புதிய பேருந்து இயக்குதல்

**வினா எண் 20531—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி–மேலூர் 45பி தேசிய நெடுஞ்சாலையில் இராசநாயக்கன்பட்டி–பூதக்குடி வரை புதிதாகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கையில் உள்ள பூதக்குடி கிராமம் திருச்சி–விராலிமலை பிரதான சாலையில் உள்ள இராசநாயக்கன்பட்டியில்

இருந்து 1.0 கி.மீ. தொலைவில் உள்ளது. அரசு விதிப்படி பேருந்து இயங்கும் பிரதான சாலையிலிருந்து 1.0 கி.மீ. தொலைவில் உள்ள கிராமங்கள் பேருந்து வசதி பெற்றவையாகக் கருத்தில் கொள்ளப்படும்.

**25—**

## நகரப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 20532—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, மணப்பாறை–இலுப்பூர் சாலையில் கோடாலிக்குடியில் பிரிந்து ஜெயமங்கலம், அத்திப்பள்ளம் வழியாக மீண்டும் மணப்பாறை இலுப்பூர் சாலையில் வந்து செல்லப் புதிதாக நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை வழித் தடம் மணப்பாறை–இலுப்பூர் தடத்தில் மணப்பாறையிலிருந்து (10 கி.மீ.) தொலைவில் உள்ள கோடாலிக்குடி கிராமத்தின் பிரிவு சாலையிலிருந்து ஆரம்பமாகிறது. இவ்வழித் தடம் புதிய வழித் தடம் ஆகும்.

கோடாலிக்குடி முதல் அத்திப்பள்ளம் வரை மெட்டல் மற்றும் குறுகிய சாலையாகவும் கற்கள் பெயர்ந்து, குண்டும் குழியுமாகவும் உள்ளதால் மழைக் காலங்களில் பேருந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட வழித் தடம் செப்பனிடப்பட்டதும் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**26—**

## பேருந்து வசதி

**வினா எண் 20720—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை வெள்ளமலையிலிருந்து பொள்ளாச்சிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை வெள்ளமலையிலிருந்து, பொள்ளாச்சிக்கு நேரடிப் பயணிகள் அடர்வு மிகக் குறைவாக உள்ளதால், கோயம்புத்தூர் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் வெள்ளமலை–வால்பாறை, வால்பாறை–பொள்ளாச்சி என பகுதி வாரியாகப் போதுமான பேருந்துகளை இயக்கி வருகிறது. எனவே, வால்பாறை வெள்ளமலையிலிருந்து பொள்ளாச்சிக்கு நேரடிப் பேருந்து இயக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை.

**27—**

## பேருந்து வசதி

**வினா எண் 21271—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை முதல் திருநெல்வேலி வரை பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை–திருநெல்வேலி ஒரு நீண்டதூர மலைப்பகுதி மற்றும் சமவெளிப் பகுதி சேர்ந்த வழித்தடமாகும். ஆழியாறு அணையிலிருந்து வால்பாறை செல்லும் சுமார் 4.0 கி.மீ. சாலை மிகவும் குறுகலானதும், அதிக கொண்டை ஊசி வளைவுகளையும் கொண்ட ஒரு மலைப் பிரதேசச் சாலையாகும். இச்சாலை வழியே குறைந்த சக்கர இடைவெளி (Short Wheel base) கொண்ட பேருந்துகளே இயக்கப்பட்டு வருகின்றன. சமவெளியுடன் மலைப் பகுதி இயக்கத்தை ஒப்பிடுகையில் மலைப் பகுதியில் பயணிகள் எண்ணிக்கை குறைவாகவும் இயக்கச் செலவு அதிகமாகவும் உள்ளது. எனவே இத்தகைய சூழ்நிலையில் குறைந்த இருக்கைகள் கொண்ட பேருந்துகளைக் கொண்டு, வால்பாறையிலிருந்து தொலைதூரப் பகுதியான திருநெல்வேலிக்குப் பேருந்து இயக்கிட சாத்தியமில்லை.

28—

## பேருந்து வசதி

**வினா எண் 21276—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருச்சி விராலிமலைவரை இயக்கப்படும் வி1 நகரப் பேருந்தை வடுகப்பட்டி பெண்கள் மேல்நிலைப் பள்ளி வரை இயக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வடுகப்பட்டி பெண்கள் மேல்நிலைப் பள்ளி விராலிமலை—இனாம்குளத்தூர் வழித் தடத்தில் அமைந்துள்ளது. இவ்வழித் தடத்தில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், திருச்சி நகரப் பேருந்துகள் 3-ன் மூலம் 14 நடைகள் நாள்தோறும் இயக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும், பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகக் கோரிக்கையின் அடிப்படையில் மாணவிகள் பள்ளி சென்றுவர விராலிமலையிலிருந்து வடுகப்பட்டி கிராமத்திற்கு காலையில் 4 நடைகளும், மாலையில் 2 நடைகளும், ஆக 6 நடைகள் கூடுதலாக 15-11-2006 முதல் இயக்கப்படுகின்றன.

29—

## பேருந்து வசதி

**வினா எண் 21909—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தாரமங்கலம் தொகுதி, தெத்திகிரிப்பட்டி ஊராட்சி கச்சராயனூரிலிருந்து காலை 8-00 மணிக்கும் மாலை 5-00 மணிக்கும் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டல நகரப் பேருந்துகள் தடம் எண் 10 மேச்சேரியில் 7-35 மணிக்குப் புறப்பட்டு எரகுண்டப்பட்டி சின்னேரி வழியாக 7-45 மணிக்கு கச்சராயனூரை வந்தடைந்து, பின்னர் அங்கிருந்து வேலம்பாளையம், வெள்ளார் வழியாக தொப்பூர்வரை இயங்கி வருகின்றது. மற்றும் தடம் எண் 27 மாலை 16-25 மணிக்கு வெள்ளாரில் புறப்பட்டு வேலம்பாளையம் வழியாக 16-40 மணிக்கு கச்சராயனூரை வந்தடைந்து சின்னேரி எரகுண்டப்பட்டி வழியாக மேச்சேரிவரை இயங்கி வருகின்றது.

30—

## பேருந்து நிறுத்தம்

**வினா எண் 23092—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பவானி தொகுதி, ஓடத்துறை கிராமம், கோப்பங்காடு மக்கள் வசதிக்கு, ஈரோடு சத்தி சாலையில் கோப்பங்காட்டில் பேருந்து நிறுத்தம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கோரிக்கைபடி ஈரோடு—சத்தி சாலையில் கோப்பங்காடு என்ற இடத்தில் நகரப் பேருந்துகள் நின்று செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

31—

## பேருந்துகளில் விளம்பரப் பலகைகள்

**வினா எண் 24154—திரு. வை. காவேரி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 அக்டோபர் 18

போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பின்புறம் விளம்பரப் பலகைகள் வைக்கப்படுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் பின்புறம் விளம்பரப் பலகைகள் வைக்கப்படுவது, போக்குவரத்துக் கழகங்களின் வருவாயை அதிகரிக்க உத்தேசித்து எடுக்கப்பட்ட அரசின் கொள்கை முடிவின்படி கடந்த 10 வருடங்களாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பேருந்துகளின் கீழ்ப்பகுதியில் பயணிகளுக்கு எவ்வித இடையூறும் இல்லாதவாறு விளம்பரப் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன. இவ்விளம்பரப் பலகைகள் மூலமாக போக்குவரத்துக் கழகங்கள் கணிசமான தொகையினை ஈட்டி வருவதால் பேருந்துகளின் பின்புறம் விளம்பரப் பலகைகள் வைக்கப்படுவதைத் தடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**32—**

## பேருந்து வசதி

**வினா எண் 25212—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, சேலம்–மேட்டூர் வழித் தடத்தில் மாணவ, மாணவிகளின் வசதிக்காக சாத்தபாடியில் அரசு மற்றும் தனியார் பேருந்துகள் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலம் மூலமாக சேலம்–மேட்டூர் வழித் தடத்தில் இயக்கப்படும் குறுகிய தூர புறநகர் பேருந்துகள் அனைத்தும் சாத்தப்பாடியில் நின்று பயணிகளை ஏற்றியும், இறக்கியும் செல்கின்றன.



2007 அக்டோபர் 18]

**33—**

## பேருந்து நிறுத்தம்

**வினா எண் 26346—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, புதுச்சத்திரம் ஒன்றியம் பொடங்கம் கிராமத்தில் பேருந்து நிறுத்தம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு நகரப் பேருந்து தடம் எண் 23 இயங்குகின்ற நாமக்கல்–சிங்களாந்தபுரம் வழித் தடத்தில் கோவிந்தம்பாளையத்திலிருந்து சுமார் 1.5 கி.மீ. தூரத்தில் பொடங்கம் பிரிவு என்னுமிடம் அமைந்துள்ளது. இவ்வழித் தடத்தில் இயங்கும் நகரப் பேருந்து பொடங்கம் பிரிவு ரோட்டில் நின்று பயணிகளை ஏற்றியும் இறக்கியும் செல்கிறது. எனினும், கோரிக்கை பெறப்பட்டதையடுத்து அவ்வழித் தடத்தில் பணிபுரியும் ஓட்டுனர், நடத்துநர்களுக்கு மீண்டும் தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**34—**

## கூடுதல் பேருந்து வசதி

**வினா எண் 26352—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் சேலம் முதல் நல்லூர்–தாசனூர் (அல்லது) சேலம் முதல் கொங்குப்பட்டிவரை கூடுதல் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டல நகரப் பேருந்துகள் தடம் எண் 99, ஓ13 மற்றும் எஸ்1 தடப் பேருந்துகள்

[2007 அக்டோபர் 18

சேலம்–ஓமலூர்–கொங்குப்பட்டி–நல்லூர்–தாசனூர் தடத்தில் கீழ்க்கண்டவாறு இயங்கி வருகின்றன:—

| தடம் எண் | தடம் | நடைகள் |
|---|---|---|
| 99 | ஓமலூர்–தாசனூர் (வழி) பூசாரிப்பட்டி, கொங்குப்பட்டி | 10 |
| | நல்லூர் தாசனூர்–சேலம் (வழி) நல்லூர், கொங்குப்பட்டி, பூசாரிப்பட்டி, ஓமலூர். | 2 |
| ஓ13 | சேலம்–தாசனூர் (வழி) ஓமலூர், சின்ன திருப்பதி, கொங்குப்பட்டி, நல்லூர் | 2 |
| | ஓமலூர்–தாசனூர் (வழி) சின்ன திருப்பதி, கொங்குப்பட்டி, நல்லூர். | 2 |
| எஸ்.1 | ஓமலூர்–நல்லூர் (வழி) காரவள்ளி, கொங்குப்பட்டி | 8 |
| | ஓமலூர்–தாசனூர் (வழி) காரவள்ளி, கொங்குப்பட்டி, நல்லூர் | 2 |
| | மொத்தம் | 26 |

மேற்கண்ட பேருந்துகளின் மூலமாக தாசனூரிலிருந்து நல்லூர் வழியாக ஓமலூர்வரை இயக்கப்படும் நடைகளை சேலம்வரை சென்று வருமாறு இயக்கிடும்போது தற்போதுள்ள நடைகள் குறைந்து கிராம மக்கள் பாதிப்படைவர். மேலும், சேலம்–ஓமலூர் தடத்தில் ஒவ்வொரு 5 நிமிட இடைவெளியிலும் பேருந்து வசதி உள்ளதால் தற்போதுள்ள இயக்கமே பொதுமக்கள் பயனடையும் வகையில் உள்ளது.

**35—**

## பேருந்து வசதி

**வினா எண் 30739—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, நத்தக்காடையூர் முள்ளிபுரம் மெயின் சாலையில் செல்லும் நகரப் பேருந்துகளை, முள்ளிபுரம் கிராமம்வரை நீட்டிக்கவும் ஈரோடு–தலவமலை செல்லும் 22 எண் பேருந்தை புதுவலசுப் பகுதிக்கு இயக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குறுகிய கால இடைவெளியில் பலமுனை வழித் தடங்களில் இயங்கும் நகரப் பேருந்துகள் முள்ளிபுரம் ஊருக்குள் சென்றுவரும் வகையில் இயக்கப்பட்டால் கால அட்டவணை மாறுபட்டு தற்சமயம் பயன்பெறும் பகுதி பள்ளிக் குழந்தைகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் கோரிக்கைப்படி இயக்க சாத்தியக்கூறுகள் இல்லாத நிலை உள்ளது. குறுகிய கால இடைவெளியில் பலமுனை வழித் தடங்களில் இயங்கும் தடம் எண் 22 நகரப் பேருந்துகள் இரண்டு 12 தனி நடைகளாக புதுவலசுப் பகுதிக்கு இயக்கப்படுகின்றன.

**36—**

## பேருந்து வசதி

**வினா எண் 30741—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காங்கேயம் தொகுதி, சங்கராண்டம்பாளையம் ஊராட்சி, தாராபுரம்–கம்பளியம்பட்டி செல்லும் தடம் எண் 10 பேருந்தினை ரங்கபாளையம்வரை நீட்டிக்கவும் புதுவலசுக்கு செல்லும் 22 ஆம் எண் பேருந்தை மருதுறைவரை நீட்டிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தாராபுரம்–கம்பளியம்பட்டி இயங்கும் தடம் எண் 10ஏ நகரப் பேருந்து குறுகிய கால இடைவெளியில் பலமுனை வழித் தடங்களில் இயக்கப்படுவதை ரங்கம்பாளையம்வரை நீட்டித்து இயக்கினால் கால அட்டவணை மாறுபட்டு தற்பொழுது பயன்பெறும் பகுதி பள்ளிக் குழந்தைகள் பாதிப்படைய நேரிடும் என்பதால் கோரிக்கைப்படி நீட்டித்து இயக்க இயலாத நிலை உள்ளது. குறுகிய கால இடைவெளியில் இயங்கும் இரண்டு தடம் எண் 22 நகரப் பேருந்துகள், மருதுறை வரை 8 தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், புதுவலசு வரை

[2007 அக்டோபர் 18

இயக்கப்படுவதை நீட்டிப்பு செய்தால் கால அட்டவணை மாறுபட்டு தனி நடைகள் துண்டிப்பு ஏற்பட்டு தற்பொழுது பயன்பெறும் பகுதியினர் பாதிப்படைய நேரிடும் என்பதால் கூடுதலாக கோரிக்கைப்படி இயக்க இயலாத நிலை உள்ளது.

**37—**

## பேருந்து வசதி

**வினா எண் 30745—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காங்கேயம் தொகுதி, சென்னிமலையிலிருந்து இயக்கப்படும் சி3 பேருந்தை இரவு 7-30 மணிக்கு புதுக்காடு, எடக்காடு, கே.ஜி. வலசு வழியாக இயக்கவும், தாராபுரம்–தாயம்பாளையம் வழித் தடத்தில் இயங்கும் எண் 7 பேருந்தை இராசிபாளையம்–ஓரம்புதூர் வழியாக மீண்டும் இயக்கிடவும் அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தடம் எண் சி3 மற்றும் தடம் எண் 7 ஆகிய நகரப் பேருந்துகள் குறுகிய கால இடைவெளியில் பலமுனை வழித் தடங்களில் இயங்குவதால் வழித் தடம் மாற்றி இயக்கப்பட்டால் தற்சமயம் பயன்பெறும் பகுதியினர் பாதிப்படைய நேரிடும் என்பதால் கோரிக்கைப்படி வழித் தடம் மாற்றி இயக்க இயலாத நிலை உள்ளது.

**38—**

## பேருந்து வசதி

**வினா எண் 30747—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஊராட்சி, 18, சி3 இவற்றில் ஒரு பேருந்தினை காலை 8 மணிக்கும், சென்னிமலையிலிருந்து புதுவலசு கே.ஜி. வலசுக்குச் செல்லும் 12 ஆம் எண் பேருந்தின் நேரத்தை மாலை 4-30 மணிக்கும் இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குறுகிய கால இடைவெளியில் பலமுனை வழித் தடங்களில் இயங்கும் 18, சி3, 12 ஆகிய நகரப் பேருந்துகளின் கால அட்டவணை மாற்றம் செய்யப்பட்டால், தற்பொழுது பயன்பெறும் பகுதி பள்ளிக் குழந்தைகள் பாதிப்படைய நேரிடும் என்பதால் கால அட்டவணை மாற்றம் செய்ய சாத்தியக்கூறுகள் இல்லாத நிலை உள்ளது.

**39—**

## புதிய பேருந்து நிறுத்தம்

**வினா எண் 30750—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர்–நத்தக்காடையூர் சாலையில் சின்னப் பரஞ்சேர் வழி தலவமலை அம்பேத்கர் நகர், பெருந்துறை R.S., தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு, குமரன் நகர் ஆகிய பகுதிகளில் புதிய பேருந்து நிறுத்தம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குறிப்பிடப்பட்டுள்ள சின்னப்பரஞ்சேர் வழி, அம்பேத்கர் நகர் மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு குமரன்நகர் பகுதிகளில் நகரப் பேருந்துகள் நின்று செல்லும் வகையில் இயக்கப்படுகின்றன.

**40—**

## புராதன நகரங்கள் திட்டம்

**வினா எண் 24092—திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 அக்டோபர் 18

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, திருவந்திபுரம் நகரை புராதன நகரங்கள் திட்டத்தின்கீழ் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (வாலாயம்) எண் 5, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (சி2), நாள்: 10-1-2007-ன்படி கடலூர் மாவட்டத்திலுள்ள திருவந்திபுரம் கிராமப் பஞ்சாயத்து பாரம்பரிய நகரம் என அறிவிக்கப்பட்டு நகர் மற்றும் ஊரமைப்புத் துறை நிதியிலிருந்து ரூ.50.00 இலட்சம் மானியம் பெற்றிடத் தகுதியுடையதெனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

**41—**

## உணவகம் அமைத்தல்

**வினா எண் 26533—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் தேசிய நெடுஞ்சாலை ஓரமாக உணவகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதியில் தேசிய நெடுஞ்சாலை ஓரமாக, உணவகம் அமைத்தல் குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

தற்போது சேலத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் மற்றும் தங்கும் விடுதி இயங்கி வருகிறது. அனைத்து வசதிகளுடன் ஓட்டல் துவங்க தனியார் எவரேனும் முன்வருவாரேயானால், அவர்களை இத்துறை ஊக்குவிக்கும்.



2007 அக்டோபர் 18]

**42—**

## உணவுப் பொருட்களின் தரத்தினை சோதித்தல்

**வினா எண் 16236—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் தரத்தினை அடிக்கடி சோதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிட்டங்கியில் இருந்து வழங்கப்படும் அனைத்துப் பொருட்களும் தரம் பரிசோதித்த பின்பு சமன்சீர் செய்யப்பட்டு, விநியோகம் செய்யப்படுகிறது. தலைமை அலுவலக உத்தரவு கியுசி1/56354/06, நாள்: 28-06-2006-ன்படி தரமான அரிசி மட்டுமே வழங்கவும், தர நிர்ணயப்படி பொது விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவும் சுற்றறிக்கை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஏதேனும் தரம் குறைந்த அரிசி வழங்கப்படின், சம்பந்தப்பட்ட அலுவலர்கள்மீது நடவடிக்கை எடுக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், மண்டல அலுவலகத்தில் இருந்து மேலாளர் (தரக் கட்டுப்பாடு) அவர்களும் ஆய்வின் சமயம் அனைத்து அட்டிகளிலும் மாதிரி எடுத்து தரம் பரிசோதிக்க வேண்டும் என்று உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

**43—**

## ஆய்வுக் குழு ஏற்படுத்துதல்

**வினா எண் 17774—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் தரத்தை ஆய்வு செய்ய குழு ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்கீழ் மைய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தர வரிசையின் அடிப்படையில், இந்திய உணவுக் கழகம் சார்பில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகளிலிருந்து பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி நகர்வு செய்யப்படும்பொழுது, தரமான அரிசி நகர்வு செய்வது உறுதிப்படுத்தப்படுகிறது. அதேபோன்று, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு அரிசி நகர்வு செய்யப்படும்பொழுதும் தரமான அரிசி நகர்வு செய்வது உறுதிப்படுத்தப்படுகிறது. இவற்றையும் மீறி நியாய விலைக் கடைகளில் தரமற்ற அரிசி இருப்பது தெரியவந்தால், அவை உடனுக்குடன் மாற்றப்பட்டு, தரமான அரிசி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அனைத்து விற்பனை நிலையங்களிலும் தரத்தினை சோதிக்க அலுவலர்கள் குழு தனியே அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**44—**

## பீடி தயாரிப்பை ஒழித்தல்

**வினா எண் 10458—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு புகையிலை மற்றும் பீடி தயாரிக்கும் தொழிலை ஒழிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

பொது இடங்களில் புகைப்பது முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு புகை பிடித்தல் மற்றும் எச்சில் துப்புதல் தடுப்புச் சட்டம், 2002 மற்றும் விதிமுறை 2003-ன்படி 14-5-2003 முதல் பொது இடங்களில் புகை பிடித்தல் மற்றும் எச்சில் 



துப்புதல் தடை செய்யப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம், புகை பிடிப்போர்களுக்கு அருகில் சுற்றுப்புறத்திலுள்ள புகைப் பழக்கம் இல்லாதவர்களை, குறிப்பாகக் குழந்தைகளைப் புகையிலைப் புகையிலிருந்து பாதுகாப்பதே ஆகும்.

இந்திய அரசும், பொது இடங்களில் புகைத்தல் மற்றும் புகையிலை அடங்கிய பொருட்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றை தடுத்திட 1-5-2004 முதல் சட்டம் கொண்டு வந்துள்ளது.

தடைச் சட்டங்களை உபயோகித்து மக்கள்மீது நடவடிக்கை எடுப்பது ஒருபுறமிருப்பினும், மக்களிடையே குறிப்பாக இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த கீழ்க்கண்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது:—

1. விளம்பரம் செய்தல்
2. மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல்
3. நலக்கல்வி அளித்தல் மற்றும்
4. சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல்/அபராதத் தொகை விதித்தல்.

**45—**

## ஒரே மாதிரியான தராசுகள்

**வினா எண் 13460—திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், அரசு மற்றும் தனியார் தேயிலைத் தொழிற்சாலைகள், தேயிலை முகவர்கள், ஒரே மாதிரியான தராசுகளைப் பயன்படுத்த அரசு உத்தரவிடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

1985 ஆம் வருடத்திய தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (அமலாக்கம்) சட்டத்தில் தரப்படுத்தப்பட்ட எடைகளை மட்டுமே வியாபாரத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும்

அளவைகள் (பொது) விதிகளின்படி கீழ்க்கண்ட வகையான தராசுகள் உள்ளன:—

| | |
|---|---|
| 1. விட்டத் தராசுகள் | (Beam Scales) |
| 2. மேசைத் தராசுகள் | (Counter Scales) |
| 3. மேடைத் தராசுகள் | (Platform Scales) |
| 4. வில் தராசுகள் | (Spring Balances) |
| 5. எடைப் பாலங்கள் | (Weigh Bridges) |
| 6. மின்னணு நிறுக்கும் கருவிகள் | (Electronic Weighing Machines) |

மேலும் தரப்படுத்தப்பட்ட மற்றும் முத்திரையிடப்படாத தராசுகளைப் பயன்படுத்தாமல் பிற தராசுகள்/அளவைகளைப் பயன்படுத்தினால் மட்டுமே நடவடிக்கை எடுக்க இயலும். இந்நிலையில் நீலகிரி மாவட்டம், அரசு மற்றும் தனியார் தேயிலைத் தொழிற்சாலைகள், தேயிலை முகவர்கள் ஒரே மாதிரியான தராசுகளைப் பயன்படுத்த வேண்டுமென அரசு உத்தரவிட இயலாது. வணிகர்கள் முத்திரையிடப்பட்ட எந்தத் தராசினையும் பயன்படுத்திக் கொள்ள, 1985 ஆம் வருட தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (அமலாக்கம்) சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. மேலும், இச்சட்டத்தின்கீழ் மத்திய அரசின் சட்டமுறை எடையளவு இயக்குநரால் மாதிரி ஒப்புதல் (Model Approval) அளிக்கப்பட்ட இனங்கள் (தராசுகள்) முத்திரையிடப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். இவ்வகையான தராசுகள் ஓராண்டு/ஈராண்டிற்கொருமுறை மறு பரிசீலனை செய்து முத்திரையிடப்பட்டு பயன்படுத்தப்படவேண்டும். எனவே, நீலகிரி மாவட்டம், அரசு மற்றும் தனியார் தேயிலைத் தொழிற்சாலைகள், தேயிலை முகவர்கள் ஒரே மாதிரியான தராசுகளைப் பயன்படுத்த வேண்டுமென அரசு உத்தரவிட இயலாது.

46—

## கோயில் விரிவாக்கம்

**வினா எண் 20978—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மாரநாடு கருப்பர் திருக்கோயிலை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மாரநாடு அருள்மிகு கருப்பர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் சுற்றுச்சுவருடன் அமைந்துள்ளது. சுற்றுச்சுவரும் பொருட்கள் வைப்பறையும் சிறிது பழுதுபட்டுள்ளன. இவற்றை விரைவில் மராமத்து செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் முன்புறம் உள்ள காலியிடமான அரசுப் புறம்போக்கு இடத்தை, மாசிகளரி திருவிழாவின்போது பெருவாரியான மக்கள் தங்குவதற்குப் பயன்படுத்தி வருகின்றனர். இத்திருக்கோயிலின் வடக்கு திசையில் விரிவுபடுத்தும் பணி உபயமாக நடைபெற்று வருகிறது.

47—

## கைத்தறிப் பொருட்காட்சி

**வினா எண் 18346—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை ஆழியாறில் கைத்தறிப் பொருட்காட்சி நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை ஆழியாறில் மக்கள்தொகை குறைவாக உள்ளதாலும், அப்பகுதி குளிர் பிரதேசமாகவும், மலைப் பிரதேசமாகவும் உள்ளபடியாலும், அவ்விடத்தில் கைத்தறிக் கண்காட்சி நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**48—**

## கொள்முதல் மையம்

**வினா எண் 18428—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நெசவாளர்களிடமிருந்து பட்டுத்துணிகளை கொள்முதல் செய்ய வால்பாறை தொகுதியில் மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

*(அ)* வால்பாறை பகுதியில் கைத்தறி பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் எதுவும் இல்லை. எனவே, அப்பகுதியில் பட்டுத் துணிகளுக்கான சேமிப்பு மையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

*(ஆ)* இவ்வினா எழவில்லை.

**49—**

## புதிய சேலை ரகங்கள்

**வினா எண் 18457—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கைத்தறிச் சேலைகளில் புதிய இரகத்தையும், உறுதிவாய்ந்த நூல்களையும் பயன்படுத்த அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

*(அ)* கைத்தறிச் சேலைகளில் சந்தையின் தேவைகளுக்கேற்ப புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்தி புதிய இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு அவை விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டில் சிறுமுகை ஸ்ரீராமலிங்க சௌடாம்பிகை நெசவாளர்





கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் 1,64,400 வண்ண வடிவமைப்புடன் கூடிய புதிய சேலை இரகம் தயார் செய்யப்பட்டு, அதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மயில் தோகை எனப் பெயரிட்டு, அந்த இரகம் கின்னஸ் சாதனைக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேலும், அரசு தரமான நூல்களைக் கூட்டுறவு நூற்பாலைகளில் தயார் செய்து, அதனைக் கோ-ஆப்டெக்ஸ் மூலமாக கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்து வருகிறது. மேற்படி தரமான நூல்களைக் கொண்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஜவுளி இரகங்களை நேர்த்தியாக உற்பத்தி செய்து விற்பனை மேற்கொண்டு வருகின்றன.

*(ஆ)* இவ்வினா எழவில்லை.

**50—**

## தறிக் கூடங்கள் கட்டுதல்

**வினா எண் 23920—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை வட்டத்தில் பாப்பாகுளம், மலையாண்டிப் பட்டிணம், உடுக்கம்பாளையம், சின்னபொம்மன் சாலை, வாளவாடி, ராமேசுவண்டன்புதூர், கீழக்கரை பகுதியில் உள்ள நெசவாளர்களுக்கு தறிக் கூடங்கள், வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

உடுமலைப்பேட்டை பகுதியில், மடத்துக்குளம் ஸ்ரீஇராமலிங்க சௌடேஸ்வரி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், பெரிய வாளவாடி கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், உடுமலைப்பேட்டை பேரறிஞர் அண்ணா நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் பூளவாடி ஸ்ரீஇராமலிங்க சௌடேஸ்வரி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய 4 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் பூளவாடி ஸ்ரீஇராமலிங்க சௌடேஸ்வரி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 1992-1993 ஆம் ஆண்டு பரவலாக வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 5 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசு மானியத்துடன் வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன. இப்பகுதியைச் சேர்ந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களிடமிருந்து வீடுகள் மற்றும்

[2007 அக்டோபர் 18

தறிக் கூடங்கள் அரசு மானியத்துடன் கட்டித் தரக் கோரி எவ்வித பிரேரணைகளும் பெறப்படவில்லை. அவ்வாறு பிரேரணைகள் பெறப்படின், வீடுகள் மற்றும் தறிக் கூடங்கள் கட்டி வழங்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**51—**

## இயக்குநர்கள் நியமனம்

**வினா எண் 25810—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு இயக்குநர்களை நியமிக்க செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு இயக்குநர்களை நியமிக்கும் செயற்குறிப்பு தற்போது இல்லை.

**52—**

## தட்டுப்பாடின்றி நூல் வழங்குதல்

**வினா எண் 30171—திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராஜபாளையம் தொகுதி, நெசவுத் தொழிலாளர்களுக்கு நூல் தட்டுப்பாடின்றி கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

ஆம். தமிழகத்தில் 2008-ம் ஆண்டின் பொங்கல் பண்டிகையின்போது வழங்கப்படவுள்ள இலவச வேட்டி (மற்றும்) சேலைகளில், 12,67,000 பாலிகாட் சேலைகளை உற்பத்தி செய்ய ராஜபாளையம் தொகுதியில்



2007 அக்டோபர் 18]

சத்திரப்பட்டி, புனல்வேலி, சமூசிகாபுரம், தளவாய்ப்புரம், முகவூர், முத்துச்சாமிபுரம், ராஜபாளையம் நகர், துரைச்சாமிபுரம் ஆகிய ஊர்களை உள்ளடக்கிய விருதுநகர் சரகத்தில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி மேற்கொள்வதற்கு உற்பத்தித் திட்டம் வழங்கப்பட்டு, அதற்கேற்ப உற்பத்தியும் சங்கங்களில் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இது தவிர, 2007-2008 ஆம் கல்வி ஆண்டில் மாணவ, மாணவியர்க்கு வழங்கப்படும் இலவசச் சீருடைகளில் 25,00,000 நீல நிறச் சீருடைத் துணிகளை உற்பத்தி செய்யவும் விருதுநகர் சரக கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநருக்கு உற்பத்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, உற்பத்தியும் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. அரசினால் செயல்படுத்தப்பட்டுவரும் இந்த இரண்டு திட்டங்களுக்கும் தேவைப்படும் துணி வகைகளை உற்பத்தி செய்வதற்கு தேவைப்படும் நூல் வகைகள் கூட்டுறவு நூற்பாலைகள், தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம் மற்றும் வெளிச்சந்தையில் கொள்முதல் செய்து நெசவாளர்களுக்கு தடையின்றி வழங்கப்பட்டு வருகின்றன.

**53—**

## நவீன பயிற்சியளித்தல்

**வினா எண் 30558—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விசைத்தறிப் பணியாளர்களுக்கு நவீன பயிற்சியளித்து ஊக்கத் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விசைத்தறிப் பணியாளர்களுக்கு நவீன பயிற்சி அளித்து ஊக்கத் தொகை வழங்குவது தொடர்பான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை. எனவே, இதுகுறித்து ஏதும் அரசின் விசைத்தறியாளர்களிடமிருந்து அரசுக்கு கோரிக்கை பெறப்படின், பரிசீலனை செய்து முடிவெடுக்கப்படும்.

[2007 அக்டோபர் 18

54—

### விசைத்தறிக் கூடம் நவீனமயமாக்கல்

**வினா எண் 31016—திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, சிவகிரி விசைத்தறிக் கூடத்தினை நவீனப்படுத்தி அதிக உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி தொகுதி, சிவகிரி விசைத்தறிக் கூடத்தினை நவீனப்படுத்தி அதிக உற்பத்தி செய்வது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை. எனினும், இதுகுறித்து மேற்படி விசைத்தறியாளர்களிடமிருந்து அரசுக்கு கோரிக்கை பெறப்படின், பரிசீலனை செய்து முடிவெடுக்கப்படும்.

55—

### வங்கிக் கடன் வசதி

**வினா எண் 31031—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அங்குசெட்டிப்பாளையம் கிராமத்தில் தறி நெசவு செய்யும் தொழிலாளர்களுக்கு கூட்டுறவு மத்திய வங்கியின்மூலம் கடன் அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், பண்ருட்டி வட்டம், அங்குசெட்டிப்பாளையத்தில் "அங்குசெட்டிப்பாளையம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்" 204 உறுப்பினர்களுடன் இயங்கி வருகிறது. இதில் 35 உறுப்பினர்கள் மட்டுமே வரவு-செலவு செய்து வருகின்றனர். இச்சங்கத்திற்கு கடலூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு



2007 அக்டோபர் 18]

வங்கி 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ. 13.65 இலட்சம் காசுக் கடன் அனுமதித்துள்ளது. இருந்தபோதிலும், சங்கத்தில் ஏற்பட்ட ஆதாரக் குறைவு ரூ.11.45 இலட்சம் காரணமாக சங்கம் மத்தியக் கூட்டுறவு வங்கியில் லேவாதேவி செய்வது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் சங்க உறுப்பினர்களின் நலன் கருதி, அருகிலுள்ள கோட்லாம்பாக்கம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தத்து அடிப்படையில், அங்குசெட்டிப்பாளையம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு தொடர் வேலை வாய்ப்பளித்து கூலி வழங்கி வருகிறது.

56—

### தமிழாசிரியர் நியமனம்

**வினா எண் 20862—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டையில் அமைந்துள்ள மகளிர் மேல்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியரை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) உடுமலைப்பேட்டையில் அமைந்துள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் காலியாக இருந்த தமிழாசிரியர் பணியிடத்தில் 3-03-2007 அன்று நடைபெற்ற கலந்தாய்வில் நியமனம் செய்யப்பட்டு, 15-03-2007 அன்று ஆசிரியர் பணியில் சேர்ந்துள்ளார்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

57—

### உளவியல் ஆசிரியர் நியமனம்

**வினா எண் 25793—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 அக்டோபர் 18

உளவியல் பாடங்களைச் சிறப்பாகப் பயிற்றுவிக்க ஆசிரியர்களை பணியமர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

இல்லை.

**58—**

**விளையாட்டு மைதானம்**

**வினா எண் 22139—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, செம்மண்கூடல் ஊராட்சி, எல்லாயூர் பகுதியில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தாரமங்கலம் தொகுதி, செம்மண்கூடல் ஊராட்சி, எல்லாயூர் பகுதியில் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**59—**

**குடியிருப்புகளைச் சீரமைத்தல்**

**வினா எண் 9991—திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், களியல் கிராமம், சித்தார் அரசு இரப்பர் கழகக் குடியிருப்புகளை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சித்தார் அரசு இரப்பர் கழகக் குடியிருப்புகளில் வருடாவருடம் வெள்ளை அடிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், சிறு சிறு பராமரிப்பு வேலைகள், கழிவறையிலுள்ள கழிவுகளை அகற்றும் பணிகளும் அவ்வப்போது செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாண்டில் மோசமான நிலையில் இருந்த வடிகட்டும் தொட்டியை (பில்டர் டேங்க்) பராமரித்து தற்போது அதிலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குடியிருப்புகளிலுள்ள ஓடுகளை மாற்ற சில தொழிலாளர்கள் விண்ணப்பித்துள்ளனர். சமீபத்தில் பெய்த தொடர் மழையின் காரணமாக இப்பணிகளைச் செய்ய இயலவில்லை. இப்பணிகள் 2007-08 நிதியாண்டில் செய்து முடிக்கப்படும்.

**60—**

**குடியிருப்புகளைச் செப்பனிடுதல்**

**வினா எண் 18644—திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், சித்தார் கோட்டம் அரசு இரப்பர் கழகத் தொழிலாளர்களின் குடியிருப்புகளைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், சித்தார் கோட்ட அரசு இரப்பர் கழகத் தொழிலாளர் குடியிருப்புகளில் வருடந்தோறும் பராமரிப்புப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. 2006-07 ஆம் ஆண்டில் ரூ. 1,48,568/- செலவில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அரசு இரப்பர் கழகத்தில் சித்தார் கோட்டத் தொழிலாளர் குடியிருப்புகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

[2007 அக்டோபர் 18

61—

## சிறு பாலம் கட்டுதல்

**வினா எண் 4910—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, பாலதொழுவு ஊராட்சி, ஓலப்பாளையத்தில் (கொடுமணல்–ஆலாம்மரம்) நடுவில் தார்ச் சாலையில் சிறு பாலம் உடைந்து உள்ளதை அரசு சரி செய்ய முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, பாலதொழுவு ஊராட்சி ஓலப்பாளையத்தில் (கொடுமணல்–ஆலாம்மரம்) நடுவில் தார்ச் சாலையில் அமைந்துள்ள பாலமானது கோபிசெட்டிப்பாளையம் (நெ. கோட்டத்தின் பராமரிப்பில் உள்ள இதர மாவட்டச் சாலையான சென்னிமலை-ஊத்துக்குளி சாலை கி.மீ. 9/8-ல் பிரிந்து நொய்யல் செல்லும் சாலை கி.மீ. 1/0-ல் உள்ளதாகும். பழுதடைந்த நிலையில் உள்ள சிறு பாலத்தினை திரும்பக் கட்டும் பணி ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு திட்டம் 2006-07-ன் மூலம் ரூ. 3.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது.

62—

## சாலை மேம்பாடு

**வினா எண் 11130—திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீராப்பள்ளி முதல் சிங்களாந்தபுரம்வரை சாலையை அகலப்படுத்தி மேம்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

சீராப்பள்ளி முதல் சிங்களாந்தபுரம் வரையிலான சாலையானது நாமக்கல் நெடுஞ்சாலை கோட்டப் பராமரிப்பில் உள்ள மாவட்ட இதர சாலையான சீராப்பள்ளி முதல் சிங்களாந்தபுரம்வரை கி.மீ. 0/0-7/6 வரை உள்ள சாலையாகும். இச்சாலையில் கி.மீ.0/0-4/0 வரை 2006-07-ல் சிறப்புப் பழுதுபார்த்தல் திட்டத்தின்கீழ் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், கி.மீ. 4/0-7/6 வரை நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டம் சேலம்மூலம் மேற்கொள்ளப்பட்டு பணி முடிவுற்றுள்ளது. பொதுவாக சாலையை ஒருவழிப் பாதையிலிருந்து இடைவழிப் பாதையாக அகலப்படுத்த வேண்டுமானால் (Indian Roads Congress 64 Table 4 Revised Service Volume-ன்படி) போக்குவரத்துச் செறிவு 6,000 இருக்க வேண்டும். ஆனால் தற்போது, இச்சாலையில் போக்குவரத்துச் செறிவு 1,900 மட்டுமே உள்ளது. எனவே, இச்சாலையை அகலப்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

63—

## சாலையை மேம்படுத்துதல்

**வினா எண் 11131—திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர். காட்டூர் சந்திரசேகரபுரம்–முருங்கப்பட்டு (காட்டூர் மற்றும் முருங்கப்பட்டு பகுதி) சாலையை அகலப்படுத்தி மேம்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

ஆர். காட்டூர்–சந்திரசேகரபுரம் முருங்கப்பட்டு சாலையில் போக்குவரத்துச் செறிவு 1,067 ஆகும். இந்திய சாலைகள் கட்டமைப்பினால் வகுக்கப்பட்ட தரத்தின்படி இதர மாவட்டச் சாலைகளை ஒரு வழித்தட அகலத்திலிருந்து இடைவழித்தட அகலத்திற்கு மாற்றுவதற்கு செறிவு (பி.சி.யு) 6,000-மும் ஒரு வழித்தட அகலத்திலிருந்து இரு வழித்தட அகலமாக மாற்றுவதற்கு

பி.சி.யு. 15,000-மும் இருக்க வேண்டும். மேற்குறிப்பிட்டுள்ள சாலையில் போதுமான போக்குவரத்துச் செறிவு இல்லாததால் இச்சாலையை அகலப்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

**64—**

**சிறு பாலம் கட்டுதல்**

**வினா எண் 11207—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், அகரம் ஊராட்சி, முத்தம்பட்டி வழியாக கரம்பூர் செல்லும் வழியில் பாம்பாற்றின் குறுக்கே சிறு பாலம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், முத்தம்பட்டி வழியாக கரம்பூர் செல்லும் சாலை அகரம் ஊராட்சிக்குட்பட்ட சாலையாகும். இச்சாலைக்குச் செல்லும் வழியில் பாம்பாற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கான செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**65—**

**பாலம் அமைத்தல்**

**வினா எண் 11211—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், மிட்டூர் ஊராட்சி, ஜல்திமுருகன் கோயில் அருகில் ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், மிட்டூர் ஊராட்சி, ஜல்திமுருகன் கோயில் அருகில் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.





**66—**

**பாலம் கட்டுதல்**

**வினா எண் 13499—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*மொரப்பூர் தொகுதி, அம்மாபாளையம் அருகே வாணியாற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

மொரப்பூர் தொகுதி, அம்மாபாளையம் அருகே வாணியாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்ட கோரப்படும் இடம் கிருஷ்ணகிரி கோட்டத்தின் பராமரிப்பில் உள்ள அ. பள்ளிப்பட்டி – மொரப்பூர் சாலை கி.மீ. 0/0-24/4 என்ற மாவட்ட இதர சாலையில் கி.மீ.3/8-ல் அமைந்துள்ளது. இவ்விடத்தில் ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் உயர் மட்டப் பாலம் கட்டுவதற்கு நபார்டு கடனுதவி (ஆர்.ஐ.டி.எப்.XI) பெற முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. நபார்டு வங்கியின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் பாலம் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**67—**

**பாலம் கட்டுதல்**

**வினா எண் 13500—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*மொரப்பூர் தொகுதி, மெணசியிலிருந்து ஜீவா நகர் செல்லும் சாலையில் கூட்டாற்றில் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

மொரப்பூர் தொகுதி, மெணசியிலிருந்து ஜீவா நகர் செல்லும் சாலையில் கூட்டாற்றில் உயர்மட்டப் பாலம் கட்டும் பணி நபார்டு திட்டத்தில் (ஆர்.ஐ.டி.எப். XII-ல்) மழையினால் சேதமடைந்த பாலத்தை ரூ.34.00 இலட்ச மதிப்பீட்டில் நிரந்தரமாகச் சீரமைக்கும் பொருட்டு, நபார்டு வங்கியின் ஒப்புதலுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஒப்புதல் கிடைக்கப்பெற்றபின் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

68—

## இருவழிச் சாலையாக மாற்றுதல்

**வினா எண் 13508—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூர்—தீர்த்தமலை—தண்டராம்பட்டு வழியாக திருவண்ணாமலை சாலையை இருவழிச் சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

அரூர்—தீர்த்தமலை—தண்டராம்பட்டு வழியாக திருவண்ணாமலை செல்லும் சாலையின் நீளம் 75.40 கி.மீ. ஆகும். மேற்படி சாலை பல வகைப்பட்ட சாலையாக பின்வருமாறு உள்ளது.

| | | கி.மீ. |
|---|---|---|
| 1. | அரூர்—கோட்டப்பட்டி சாலை (0/0/-26/8) மாவட்ட இதர சாலை | 26.80 |
| 2. | பையர்—நாயக்கன்பட்டி சாலை—நரிப்பள்ளி (0/0-8/6) மாவட்ட இதர சாலை | 8.60 |
| 3. | தானிப்பாடி மாவட்ட எல்லை (35/6-45/0) மாவட்ட இதர சாலை | 9.40 |
| 4. | திருவண்ணாமலை—தண்டராம்பட்டு சாலை (5/0-35/6) மாவட்ட முக்கிய சாலை ஆரூர் முதல் திருவண்ணாமலை | 30.60 |
| | ஆரூர் முதல் திருவண்ணாமலைவரை மொத்த நீளம் | 75.40 |





இச்சாலையினை இருவழிச் சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

69—

## நெடுஞ்சாலையைச் சீரமைத்தல்

**வினா எண் 14528—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி தேன்கனிக்கோட்டை பஞ்சப்பள்ளி நெடுஞ்சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை—பஞ்சப்பள்ளி நெடுஞ்சாலையானது 19.60 கி.மீ. நீளமுள்ள மாவட்ட இதர சாலையாகும். இச்சாலையில் கி.மீ.14/4-ல் உள்ள பாலத்தை ரூ.30.00 இலட்சம் மதிப்பில் புதுப்பிக்க நபார்டு வங்கியின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. நபார்டு வங்கியின் ஒப்புதல் கிடைத்தவுடன் பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

70—

## பாலம் கட்டுதல்

**வினா எண் 14533—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 அக்டோபர் 18

(அ) தளி தொகுதி, பேவநத்தம் ஊராட்சி, பாலேகுளி இடையே ஓடும் ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, பேவநத்தம் ஊராட்சி, பாலேகுளி இடையே ஓடும் ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட ரூ.10.00 இலட்சம் செலவில் பணியை மேற்கொள்ள நபார்டு வங்கியின் ஒப்புதலுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஒப்புதல் கிடைக்கப் பெற்றவுடன் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**71—**

**பயணியர் மாளிகை கட்டுதல்**

**வினா எண் 14629—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, கெலமங்கலம் மற்றும் தளியில் பயணியர் மாளிகை கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதியில் கெலமங்கலம் மற்றும் தளியில் புதியதாக பயணியர் மாளிகை கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**72—**

**புதிய தார்ச் சாலை அமைத்தல்**

**வினா எண் 14945—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 அக்டோபர் 18]

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆலங்குளம்
ஊராட்சி, எம்.கே.கே. ஆலங்குளம் இணைப்புச் சாலை, சீரமைக்கப்பட்டு
புதிய தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள
எம்.கே.கே. ஆலங்குளம் என்ற சாலையானது, ராதாபுரம் வட்டத்தில்
இல்லை. எம்.கே.கே. சாலையிலிருந்து சிவஞானபுரம் செல்லும்
சாலையில் கி.மீ.0/0-1/0 வரையுள்ள பகுதியானது நபார்டு மற்றும் கிராமச்
சாலைகள், நாகர்கோவில் கோட்டத்தின்மூலம் செப்டம்பர் 2006-ல்
தார்ச் சாலையாக மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சாலையில்
மீதமுள்ள கி.மீ.1/0-1/6 வரை உள்ள பகுதியானது வள்ளியூர் ஊராட்சி
ஒன்றியத்தின்மூலம் புதிய தார்ச் சாலையாக மேம்பாடு
செய்யப்பட்டுள்ளது. இச்சாலையைத் தவிர எம்.கே.கே. சாலையிலிருந்து
பிரிந்து செல்லும் அவரைக்குளம்-மதகனேரி சாலையில் கி.மீ. 0/0-1/0
வரையுள்ள பகுதியினை மேம்பாடு செய்வதற்கு மதிப்பீடுகள் தயார்
செய்யப்பட்டு 14-6-2007-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.
ஒப்பந்தம் இறுதியாக்கப்பட்டவுடன், இப்பணி விரைவில் துவங்கப்படும்.

**73—**

**தரைப்பாலம் கட்டுதல்**

**வினா எண் 18712—திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத்
துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், பேதாதம்பட்டி ஊராட்சி,
டி.புதூர் அருகில் காட்டாற்றிற்கு இடையில் பாலம் கட்ட அரசு ஆவன
செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 அக்டோபர் 18

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், பேதாதம்பட்டி ஊராட்சி, டி. புதூர் அருகில் காட்டாற்றிற்கு இடையில் தரைப்பாலம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**74—**

**பாலம் கட்டுதல்**

**வினா எண் 18800—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி–பேரையூர் சாலை, நல்லுத்தேவன்பட்டி விலக்கு அருகில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி–பேரையூர் சாலை, நல்லுத்தேவன்பட்டி விலக்கு அருகில் கட்டுமாறு கோரப்பட்டுள்ள பாலமானது மாநிலச் சாலையான வத்தலகுண்டு–பேரையூர்–கல்லுப்பட்டி சாலையில் கி.மீ.27-0-ல் அமைந்துள்ள தரைமட்டத் தாம்போகியாகும். இது தற்போது போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் நன்றாக உள்ளதால் இப்பாலத்தினை திரும்பக் கட்டும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**75—**

**தார்ச் சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 20660—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, புஞ்செய் பாலத்தொழுவு ஊராட்சி, ஓலப்பாளையம் கிழக்குப் பாலம் அருகிலுள்ள தார்ச் சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 அக்டோபர் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, புஞ்செய் பாலத்தொழுவு ஊராட்சி, ஓலப்பாளையம் கிழக்குப் பாலம் அருகிலுள்ள தார்ச் சாலையானது கோபி (நெ) கோட்டப் பராமரிப்பிலுள்ள மாவட்ட இதர சாலையான சென்னிமலை–ஊத்துக்குளி சாலை கி.மீ 9/8-ல் பிரிந்து நொய்யல் செல்லும் சாலை கி.மீ. 0/0-1/0 வரையுள்ள பகுதியாகும். இதன் மொத்த நீளம் 0/0-5/4 (5.40 கி.மீ.). இச்சாலைப் பகுதியில் 0/0-1/0 வரை புதுப்பிக்க 2007-08 ஆம் ஆண்டு காலமுறை புதுப்பித்தல் தலைப்பில் ரூ.5.00 இலட்சம் மதிப்பில் பணிகள் எடுத்துக் கொள்ளப்படும். மேலும், இச்சாலையில் கி.மீ. 1/10-ல் பழுதடைந்த பாலம் ஒன்று சி.ஆர்.ஐ.டி.பி. திட்டத்தின்மூலம் புதுப்பித்துக் கட்டப்பட்டுள்ளது. மீதமுள்ள 1/0-5/4 பகுதி தார் நொடிகள் பார்த்து நல்ல நிலையில் உள்ளது.

**76—**

**மாற்றுச் சாலை அமைத்தல்**

**வினா எண் 25944—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, அங்காடிப் பகுதியிலிருந்து வால்பாறை புதிய பேருந்து நிலையத்திற்கு மாற்றுச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் உள்ள அங்காடிப் பகுதி வால்பாறை மாநில நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இச்சாலையின் தொடர்ச்சியாக உள்ள நகராட்சி சாலை புதிய பேருந்து நிலையத்திற்குச் செல்கிறது. மேற்படி சாலைப் பகுதியில் குடியிருப்புகளும், கடைகளும் பெருமளவில் உள்ளன. எனவே இங்கு மாற்று வழிப் பாதை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

[2007 அக்டோபர் 18

77—

**மேம்பாலம் அமைத்தல்**

**வினா எண் 28369—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர்–சேலம் தேசிய நெடுஞ்சாலை-7-ல் முத்துநாயக்கன்பட்டி பிரிவில் மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

ஓமலூர் சேலம் தேசிய நெடுஞ்சாலை-7-ல் முத்துநாயக்கன்பட்டி பிரிவில் மேம்பாலம் அமைக்க திட்டப் பணிகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையகம்மூலம் M/s. MVR. Infrastructure and Tollways (P) Ltd., என்ற நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்நிறுவனமானது மேம்பாலப் பணிகளை விரைவில் தொடங்கவிருக்கிறது.

78—

**அரசு உதவித் தொகை**

**வினா எண் 4278—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், கரியஞ்செட்டிப்பாளையம் மற்றும் அங்கலக்குறிச்சி முதலிய ஊராட்சிகளில் அரசு உதவித் தொகை கிடைக்காத விதவைகளுக்கு அரசு உதவித் தொகை வழங்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதியில், கரியஞ்செட்டிப்பாளையம் ஊராட்சியில் 4 நபர்களும், அங்கலக்குறிச்சி ஊராட்சியில் 16 நபர்களும் ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பயன்பெற்று வருகின்றனர். பொள்ளாச்சி வட்டத்தில் மேற்காணும் கிராமங்களில்



2007 அக்டோபர் 18]

விதவை உதவித் தொகை கோரி வரப்பெற்ற மனுக்கள் விசாரணை செய்யப்பட்டு தகுதியின் அடிப்படையில் அவ்வப்போது உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. உதவித் தொகை கோரிக்கை மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

79—

**அரசு உதவித் தொகை**

**வினா எண் 4281—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், வேட்டைக்காரன்புதூர் மற்றும் கோட்டூர் சிறப்பு ஊராட்சிகளில் உள்ள அரசு உதவித் தொகை கிடைக்காத விதவைப் பெண்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதியில், வேட்டைக்காரன்புதூர் சிறப்பு ஊராட்சியில் 79 நபர்களுக்கும், கோட்டூர் சிறப்பு ஊராட்சியில் 59 நபர்களுக்கும் ஆதரவற்ற விதவை ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. பொள்ளாச்சி வட்டத்தில் மேற்காணும் கிராமங்களில் விதவை உதவித் தொகை கோரி வரப் பெற்ற மனுக்கள் விசாரணை செய்யப்பட்டு தகுதியின் அடிப்படையில் அவ்வப்போது உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

80—

**அரசு உதவித் தொகை**

**வினா எண் 4319—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 அக்டோபர் 18

(அ) வால்பாறை தொகுதியில் வேட்டைக்காரன்புதூர் மற்றும் கோட்டூர் சிறப்பு ஊராட்சிகளில் அரசு உதவித் தொகை கிடைக்காத வயது முதிர்ந்தவர்களுக்கு அரசு உதவித் தொகை வழங்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதியில், வேட்டைக்காரன்புதூர் சிறப்பு ஊராட்சியில் 99 முதியோர்களும், கோட்டூர் சிறப்பு ஊராட்சியில் 25 முதியோர்களும் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பயன்பெற்று வருகின்றனர். உதவித் தொகை கோரி வரப்பெற்ற மனுக்கள் விசாரணை செய்யப்பட்டு தகுதியின் அடிப்படையில் அவ்வப்போது உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தகுதியற்ற காரணத்தினால் உரிய விசாரணைக்குப் பின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன. உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**81—**

## துணிநூல் தையற்பயிற்சி மையம்

**வினா எண் 11544—திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் தொகுதி, கரூரில் நவீன தொழில்நுட்ப வசதியுடன் கூடிய துணிநூல் தையல் பயிற்சி மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

நவீன தொழில்நுட்ப வசதியுடன் கூடிய துணிநூல் மையங்கள், தமிழ்நாடு கைத்தறி மற்றும் துணிநூல் கழகத்தின்கீழ் செயல்படுகின்றன. சமூக நலத் துறையின்மூலம் ஏழை மகளிரின் முன்னேற்றத்திற்காக ரூ.12,000-க்குக்கீழ் வருட வருமானம் உள்ள மகளிர், தங்களுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள ஏதுவாக, சீருடைகள் தைத்து தையற்கூலி பெற்று வருகிறார்கள். சமூக நலத் துறையின்கீழ் நவீன தொழில்நுட்ப வசதியுடன் கூடிய துணிநூல் தையற் பயிற்சி மையம் எதுவும் செயல்படவில்லை. மேலும், நவீன தொழில்நுட்பம் வாய்ந்த துணிநூல் அறிந்த அலுவலர்கள் / பணியாளர்கள் / உறுப்பினர்கள் யாரும் இல்லை. நவீன தொழில்நுட்பத்தை சமூக நலத் துறையின்கீழ் செயல்படுத்தினால் ஏழை மகளிருக்கு வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார முன்னேற்றத்தில் தடை ஏற்படும். மேலும், நவீன இயந்திரங்கள்மூலம் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்ய தற்போது நிலவிவரும் போட்டியினால் மகளிரைக் கொண்டு நடத்துவது மிகவும் சிரமமாக இருக்கும். கரூர் நகரத்தில் மிகுந்த அளவில் துணிநூல் ஆலைகள் இயங்குவதால் அவர்களுடன் போட்டி போட்டு உற்பத்தி செய்து விற்பனை செய்வது மிகவும் கடினமான செயலாகும். எனவே, மேற்காண் விவரங்களின்மூலம் கரூர் தொகுதியில் நவீன துணிநூல் பயிற்சி நிலையம் அமைய போதிய சாத்தியக்கூறு ஏதும் இல்லை.



2007 அக்டோபர் 18]

**82—**

## சுய தொழில் வேலைவாய்ப்பு மையம்

**வினா எண் 14121—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோயிலில் விதவைகளுக்கான சுய தொழில் வேலைவாய்ப்பு மையம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சமூக நலத் துறையில் மகளிருக்கு சுய தொழில் செய்ய வங்கிகளின்மூலம் மானியமின்றி கடன் பெற சிபாரிசு செய்யப்படுகிறது. சுய தொழில் வேலைவாய்ப்பு மையம் ஏதும் இத்துறையின்கீழ் செயல்படவில்லை. இத்தகைய மையம் அமைக்கும் உத்தேசமும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[2007 அக்டோபர் 18

**83—**

**தொழிற்பயிற்சி**

**வினா எண் 23007—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*மதுரை காமராசர் சாலை சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் உள்ள சிறுவர்களுக்கு தொழில் பயிலும் வாய்ப்பை உருவாக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

தற்போது அரசு மானியத்துடன் தன்னார்வத் தொண்டு நிறுவனம் நடத்தும் மதுரை குழந்தைகள் உதவிச் சங்கத்தின் கீழியங்கும் கூர் நோக்கு இல்ல மாணவர்களுக்கு இயற்கை உரம் தயாரிக்க மண் புழு பயிற்சி மற்றும் கற்பூரம் தயாரித்தல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் மதுரை மக்கள் கல்வி நிறுவனம்மூலம் தையல் மற்றும் கணினி பயிற்சிக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**84—**

**கால்நடை மருத்துவ மையம்**

**வினா எண் 8646—திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*திருப்போரூர் தொகுதி, சிறுங்குன்றம் கிராமத்திலுள்ள கால்நடை மருத்துவ மையத்தை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

திருப்போரூர் தொகுதி, சிறுங்குன்றம் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் ஏதும் இயங்கவில்லை. திருப்போரூர் கால்நடை மருந்தகம், கரும்பாக்கம் மற்றும் செம்பாக்கம் கால்நடைக் கிளை நிலையங்கள்மூலம் சிறுங்குன்றம் கிராமத்திலுள்ள கால்நடைகளுக்கு சிகிச்சைப் பணி



2007 அக்டோபர் 18]

அளிக்கப்படுவது போதுமானதாக உள்ளது. திருப்போரூர் தொகுதி, சிறுங்குன்றம் கிராமத்தினைச் சுற்றியுள்ள முள்ளிப்பாக்கம், கொட்டமேடு, அனுமந்தபுரம் மற்றும் மயிலை ஆகிய கிராமங்களில் கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதால் சிறுங்குன்றம் கிராமத்தில் கால்நடை மருத்துவ மையம் அமைக்க தற்போது செயற்குறிப்பு இல்லை.

**85—**

**புதிய கட்டடம்**

**வினா எண் 13547—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியில் உள்ள மேலத்தாங்கல் கிராமத்தில் கால்நடை பராமரிப்பு மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, மேலத்தாங்கல் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. பெரணமல்லூர் கால்நடைக் கிளை நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட தற்போது அரசிடம் ஏதும் செயற்குறிப்பு இல்லை.

**86—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 14177—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, அண்மருதை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தரப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

அண்மருதை கிராமத்தில் கால்நடைகளின் **எண்ணிக்கை** குறைவாக உள்ளதாலும், ஏற்கெனவே அண்மருதை கிராமத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை செயல்பட்டு வருவதாலும், பெரணமல்லூர், கொழப்பலூர் ஆகிய கால்நடை மருந்தகங்கள்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுகிறது. எனவே திருவண்ணாமலை, பெரணமல்லூர் தொகுதி, அண்மருதை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**87—**

**பள்ளிக் கட்டடத்தைப் பழுதுபார்த்தல்**

**வினா எண் 7911—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை மாவட்டம், பூம்புகார் தொகுதி, திருவிடைக்கழி ஆதி திராவிடர் பள்ளிக் கட்டடத்தினைப் பழுதுபார்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட பள்ளியில் நல்ல நிலையில் உள்ள தளக் கட்டடம் ஒன்றும், சீமை ஓட்டுக் கட்டடம் ஒன்றும் உள்ளது. தளக் கட்டடமே போதுமானதாக உள்ளதால் சீமை ஓட்டுக் கட்டடத்தை இடிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**88—**

**சமுதாயக் கூடம்**

**வினா எண் 12991—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பரமத்தி ஒன்றியம், சித்தம்பூண்டி, இருக்கூர், ஜமீன் இளம்பள்ளித் தெரு ஊராட்சிகளில் அருந்ததியர் காலனிக்கு சமுதாயக் கூடங்கள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரமத்தி ஒன்றியம், சித்தம்பூண்டி, இருக்கூர், ஜமீன் இளம்பள்ளித் தெரு ஊராட்சிகளில் அருந்ததியர் காலனிக்கு சமுதாயக் கூடங்கள் கட்டிக்கொடுக்கும் முன்மொழிவு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

**89—**

**சமுதாயக் கூடம் கட்டுதல்**

**வினா எண் 12994—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமத்தி பேரூராட்சி, மாராபாளையம் அருந்ததியர் தெருவிற்கும், சோழசிராமணி ஊராட்சி, சக்திபாளையத்திற்கும் சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரமத்தி பேரூராட்சி, மாராபாளையம் அருந்ததியர் தெருவிற்கும் சோழசிராமணி ஊராட்சி, சக்திபாளையத்திற்கும் சமுதாயக் கூடம் கட்டிக்கொடுக்கும் முன்மொழிவு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

90—

### சமுதாயக் கூடம் கட்டுதல்

**வினா எண் 13521—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, ஆண்டியூர் (தேவனூர்புதூர் ஊராட்சி) கிராமத்தில் ஆதி திராவிடர் காலனியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, ஆண்டியூர் (தேவனூர்புதூர் ஊராட்சி) கிராமத்தில் ஆதி திராவிடர் காலனியில் சமுதாயக் கூடம் கட்டிக்கொடுக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

91—

### கறவை மாடுகள்

**வினா எண் 16403—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஜல்லிப்பட்டி, கம்பலாப்பட்டி, அங்கலக்குறிச்சி, கரியாஞ்செட்டிப்பாளையம், பிலிசின்னம்பாளையம், அர்த்தநாரிப்பாளையம், தென்சங்கம்பாளையம், சோமந்துறை ரமணமுதலிப்புதூர், பெத்தநாயக்கனூர், காளியாபுரம் முதலிய ஊராட்சிகளில் உள்ள ஆதி திராவிடர் மக்களுக்கு கறவை மாடுகளும் ஆடுகளும் இலவசமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாட்கோவில் ஆதி திராவிடர் மக்கள் சுய தொழில் செய்து வாழ்க்கையில் முன்னேற்றம் காண அதிகபட்சம் ரூ.25,000 வரை தாட்கோ மானியத்துடன் வங்கிகள்மூலம் கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், மாவட்ட ஆட்சியரின் சுய விருப்பு நிதி (Collector's Discretionary Fund) மூலம் மிகவும் நலிவடைந்த ஆதரவற்ற ஆதி திராவிடர்களுக்கு 100% மானியத்துடன் உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.

92—

### தாட்கோ கடன் வசதி

**வினா எண் 16460—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் நிலம் வாங்க 50 சதவிகிதம் மானியத்துடன் தாட்கோ கடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் நிலம் வாங்க 50% மானியத்துடன்கூடிய கடன் வழங்கும் திட்டம் தாட்கோவில் 2004-05 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தாட்கோ மகளிர் நிலம் வாங்கும் திட்டத்தின்கீழ் ஆண்டுவாரியாகப் பயன் அடைந்த பயனாளிகளின் விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:—

[2007 அக்டோபர் 18

| வருடம் | தாட்கோ மகளிர் நிலம் வாங்கும் திட்டத்தில் பயன் அடைந்தவர்கள் எண்ணிக்கை | விடுவிக்கப்பட்ட தொகை | |
|---|---|---|---|
| | | வங்கிக் கடன் (ரூபாய் இலட்சத்தில்) | தாட்கோ மானியம் (ரூபாய் இலட்சத்தில்) |
| 2004-2005 | 1221 | 850.05 | 724.50 |
| 2005-2006 | 1754 | 1050.86 | 951.70 |
| 2006-2007 | 2785 | 770.84 | 808.58 |

93—

## நெசவுத் தொழிற்பயிற்சி

**வினா எண் 23715—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர்களுக்கு கைவினைப் பொருட்கள், நெசவுத் தொழிற்பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாட்கோமூலம் வேலைவாய்ப்புகள் அதிகப்படியாகக் கிடைக்கும் பயிற்சிகளான விமானப் பணிப் பெண், பிளாஸ்டிக் மோல்டிங், காலணி உற்பத்தி, கணினி மென்பொருள், கணினி வன்பொருள் போன்ற பயிற்சிகளும், NIFT, ATDC பயிற்சி



2007 அக்டோபர் 18]

நிறுவனங்கள்மூலம் ஆடை வடிவமைப்பும், ஆயத்த ஆடை வடிவமைப்பும் நவீன இயந்திரங்களைக் கையாண்டு துரித முறையில் குறித்த கால அவகாசத்திற்குள் நடத்தப்படுகின்றன. இந்த நவீன காலத்தில் கைவினைப் பொருட்கள் மற்றும் நெசவுத் தொழிற்பயிற்சிக்கு வரவேற்பு குறைவு என்பதாலும் அப்படியே அப்பயிற்சி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் அதனுடைய முடிவுகள் திருப்திகரமாக இருக்க வாய்ப்பில்லை என்பதாலும், கைவினை மற்றும் நெசவுத் தொழில் பயிற்சி வழங்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

94—

## இலவச தொகுப்பு வீடுகள்

**வினா எண் 18504—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, பண்ணவாடி பரிசல்துறைப் பகுதியிலுள்ள மீனவர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மீனவர் இலவச வீடு கட்டும் திட்டத்தின்கீழ், 2005-06 ஆம் ஆண்டில் இவ்வரசின் சார்பில் 2,000 வீடுகளும், மைய அரசின் சார்பில் 2,000 வீடுகளும், ஆக மொத்தம் 4,000 வீடுகளும் 2006-2007 ஆம் ஆண்டில் இவ்வரசின் சார்பில் 2,000 வீடுகளும் கட்டிக் கொடுக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேற்கண்ட பகுதி மீனவர்கள், தாங்கள் சார்ந்துள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் முறையாக தீர்மானம் இயற்றி, சம்பந்தப்பட்ட மீன் துறை உதவி இயக்குநர் வழியாக விதிமுறைகளின்படி விண்ணப்பித்தால், அவை பரிசீலிக்கப்பட்டு தகுதிகளின் அடிப்படையில் இலவச வீடுகள் பெற்று மீனவர்கள் பயனடையலாம்.

[2007 அக்டோபர் 18

95—

### மீன் குஞ்சுகள் வளர்ப்பு

**வினா எண் 20468—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் கூடுதலாக மீன் குஞ்சு விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

96—

### அரசுக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 6960—திரு. வை. காவேரி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கரையானூரில் தனியார் கட்டடத்தில் இயங்கும் பால் கூட்டுறவுச் சங்கத்திற்கு அரசுக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கரையானூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமாக அடிமனையும், போதிய நிதியாதாரமும் இல்லாததால் இச்சங்கத்திற்கு கட்டடம் கட்டிக்கொடுக்க வாய்ப்பு இல்லை.



2007 அக்டோபர் 18]

97—

### கட்டடம் கட்டுதல்

**வினா எண் 29376—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, கீழக்குப்பம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கீழக்குப்பம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான காலிமனை ஏதும் இல்லை. எனவே, இச்சங்கத்திற்கு கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

98—

### தானியங்கி பால் விற்பனை நிலையம்

**வினா எண் 34840—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் தானியங்கி பால் விற்பனை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியப் பகுதிகளில் போதுமான அளவில் பால் விற்பனை செய்யப்படுவதால் அருகிலுள்ள மானாமதுரையில் தானியங்கி பால் விற்பனை நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**99—**

## ஐஸ் கிரீம் தயாரித்தல்

**வினா எண் 34842—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மானாமதுரையில் சர்க்கரை இல்லாத ஐஸ் கிரீம் தயாரிக்கும் தொழிற்சாலை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காரைக்குடியில் சாதாரண ஐஸ் கிரீம் தயாரிப்பு துவங்கியுள்ள நிலையில் மானாமதுரையில் சர்க்கரை இல்லாத ஐஸ் கிரீம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**100—**

## கூட்டுறவுச் சங்கத்தினை செயல்படுத்துதல்

**வினா எண் 30668—திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, சூலூர், காடம்பாடி, காடுவெட்டிப் பாளையத்திலுள்ள கதர் வாரிய கூட்டுறவுச் சங்கத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

(அ) சூலூர்-கோவை நீலகிரி மாவட்ட எண்ணெய் உற்பத்தியாளர் மற்றும் கைக்குத்தலரிசி கூட்டுறவு சம்மேளனத்தில் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களாக உள்ளன. தொடக்கக்





கூட்டுறவுச் சங்கங்கள் செயலிழந்த நிலையில் உள்ளதால் சம்மேளனமும் செயலிழந்த நிலையில் உள்ளது.

மேலும் சூலூர் தச்சு, கொல்லு கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகிறது.

காடம்பாடி எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் சில முறைகேடுகளால் வணிக குற்றப் புலனாய்வுத் துறையில் வழக்கு நடைபெற்று வழக்கு முடிக்கப்பட்டுள்ளது. சங்க ஆவணங்கள் திரும்பப் பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. எனவே, தற்பொழுது சங்கம் செயலிழந்து உள்ளது.

காடுவெட்டிப்பாளையம் எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் தொடர்ந்து பல ஆண்டுகளாகச் செயல்படாத காரணத்தினால் கலைக்கப்பட்ட சங்கமாக உள்ளது.

(ஆ) மேற்குறிப்பிட்ட சங்கங்கள் செயல்பட ஆரம்பித்ததும் உறுப்பினர்கள் சங்கத்தின் நடவடிக்கையில் பங்குகொள்ளும்போது மட்டுமே சங்கத்தினை செயல்படுத்த இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

*(குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

# 2. உரிமைப் பிரச்சினை

## எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெ ஜெயலலிதா, மக்கள் குரல், நமது எம்.ஜி.ஆர். நாளிதழ்கள் மற்றும் ஜெயா டி.வி. மீது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், சொல்கிறேன். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், ஓர் உரிமைப் பிரச்சினை குறித்து அறிவிப்பு ஒன்றினைக் கொடுத்துள்ளார்கள். இப்பிரச்சினை குறித்து சுருக்கமாகச் சொல்லும்படி மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 219-ன்கீழ், தங்களிடத்திலே ஓர் உரிமைப் பிரச்சினை குறித்து அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். சட்டமன்றப் பேரவை விதி 220-ன்கீழ், அந்த உரிமைப் பிரச்சினையை எடுத்துக்கொண்டு, அதிலே சில கருத்துகளை எடுத்துச் சொல்வதற்கு அனுமதி கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி அளிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான அம்மையார் அவர்கள், நேற்றையதினம் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளிக்கின்ற நேரத்தில், அவரைக் கொல்ல சதி நடைபெறுவதாகவும், அதுகுறித்து நானும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இரகசியப் பேச்சு நடத்தியதாகவும், அதுபற்றி அவருக்கு வேண்டியவர்கள்மூலமாகத் தகவல் கிடைத்திருப்பதாகவும், 'அடுத்த தேர்தல் வரை அவர் உயிரோடு இருந்தால்தானே' என்று நான் கூறியதாகவும் செய்தியாளர்கள் மத்தியில் கூறி, அது 'மக்கள் குரல்', 'Indian Express', 'நமது எம்.ஜி.ஆர்.', அதாவது, அ.தி.மு.க.-வினுடைய அதிகாரபூர்வமான ஏடு, 'Trinity Mirror' போன்ற பல்வேறு ஏடுகளில் அந்தச் செய்திகள் எல்லாம் வந்திருக்கின்றன. இந்த ஆதாரங்களை ஏற்கெனவே தங்களிடத்திலே நான் ஒப்படைத்திருக்கிறேன்.

*(மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நாளேடுகளை மீண்டும் மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் கொடுத்தார்கள்)*

அ.தி.மு.க.-வைப் பொறுத்தவரையில், எப்பொழுதெல்லாம் எதிர்க்கட்சியாக அவர்கள் ஆகின்றார்களோ, அப்பொழுதெல்லாம் இதுபோலச் சொல்லிக் கொண்டிருப்பது அவர்களுடைய வாடிக்கையாக இருந்து கொண்டிருக்கிறது. *(கூச்சல்-குழப்பம்)*

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார், உட்காருங்கள். *(கூச்சல்-குழப்பம்)* எல்லோரும் உட்காருங்கள். உரிமைப் பிரச்சினைக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** உட்காருங்கள், நான் சொல்வதைக் கேட்டுக்கொண்டு பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(கூச்சல்-குழப்பம்)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் இதைக் கேட்டுக்கொள்ளுங்கள். முதலில் கேட்டுவிட்டு, அதற்குப்பிறகு பதில் சொல்லலாம், உட்காருங்கள். *(கூச்சல்-குழப்பம்)* உட்காருங்கள், உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். *(கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... *(கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். *(கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** அவர்களைப் பொறுத்தவரையில், *(கூச்சல்-குழப்பம்)* எப்பொழுதுமே தவறாகச் சொல்வது வாடிக்கையாக இருந்து கொண்டிருக்கிறது. *(கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார். எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். *(கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** உட்காருங்கள். *(கூச்சல்-குழப்பம்)* நான் நடந்ததைத்தான் சொல்கிறேன். உட்காருங்கள், சொல்கிறேன். *(கூச்சல்-குழப்பம்)* காரில் லாரியை விட்டு என்னைக் கொலை செய்யப் பார்த்தார்கள் என்று சொல்வார்கள்; *(கூச்சல்-குழப்பம்)* யாராவது ஒரு தலைவர் பெயரைச் சொல்லி, தன்னைக் கொல்ல முயற்சி செய்தார்கள் என்றும் சொல்வார்கள். *(கூச்சல்-குழப்பம்)* அதுமட்டுமல்ல. கவர்னராக இருந்த திரு. சென்னா ரெட்டி அவர்களையே, தவறாக நடந்துகொண்டார் என்று சொன்னவர்கள். *(கூச்சல்-குழப்பம்)* அது மட்டுமா? *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், முதலில் உங்கள் உறுப்பினர்களை உட்காரச் சொல்லுங்கள். *(கூச்சல்-குழப்பம்)* உட்கார்ந்துவிட்டு, நீங்கள் மட்டும் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** என் வீட்டிற்கு மேலேயே சந்தேகத்திற்குரிய வகையில் விமானம் பறந்தது என்றும் சொன்னார்கள். இதெல்லாம் அவர்களுக்குரிய phobia என்று சொல்வார்களே, அதைப்போலத்தான் அவர்கள் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி) (கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர், உரிமை பாதிக்கப்பட்டிருப்பதாக உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறார். அதனால் எந்த வகையில் உரிமை மீறப்பட்டிருக்கிறது என்பது குறித்து முடிவெடுக்கவேண்டும். *(கூச்சல்-குழப்பம்)* நீங்கள் உட்காருங்கள். உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* No.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன செய்தி எந்த அளவிற்கு உண்மை என்பதை அவர் ஆதாரபூர்வமாக நிரூபிக்க முன்வரவேண்டும். *(கூச்சல்-குழப்பம்)* இந்தப் பிரச்சினை அவைக்கு வெளியிலே, செய்தியாளர்கள் மத்தியிலே கூறப்பட்ட ஒன்றாக இருக்கிற காரணத்தினால்,... *(கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? *(கூச்சல்-குழப்பம்)* உரிமைப் பிரச்சினை அவர் கொடுத்திருக்கிறார். முடிவு எடுக்க வேண்டியது உரிமைக் குழு.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** நான் நீதிமன்றத்தின்மூலமாக இதைச் சந்திக்கத் தயாராக இருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரிமை மீறல் இருக்கிறதா, இல்லையா என்பதை அப்புறம் பார்ப்போம். நீங்கள் உட்காருங்கள் முதலில்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** எனவே, இந்தப் பிரச்சினை குறித்து முன்னாள் முதலமைச்சர்மீதும், *(கூச்சல்-குழப்பம்)* அதேபோல இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கக்கூடிய "மக்கள் குரல்" பத்திரிகைமீதும், *(கூச்சல்-குழப்பம்)* அ.தி.மு.க.வினுடைய அதிகாரபூர்வமான ஏடாக இருக்கக்கூடிய "நமது எம்.ஜி.ஆர்." பத்திரிகைமீதும், அதேபோல அவர்களுடைய தொலைக்காட்சியாக இருக்கக்கூடிய ஜெயா டி.வி.மீதும், நான் உரிமைப் பிரச்சினை கொண்டு வருகிறேன். எனவே, நம்முடைய சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் இதை உடனடியாக உரிமைக் குழுவிற்கு அனுப்பிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் என்னுடைய rulings-ஐக் கேட்டுக்கொள்ளுங்கள். உட்காருங்கள் முதலில் எல்லோரும். என்னுடைய findings-ஐ முதலில் கேளுங்கள், உட்காருங்கள். *(கூச்சல்-குழப்பம்)* No. உட்காருங்கள். *(கூச்சல்-குழப்பம்)* நானும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விடுத்த அறிக்கையை பத்திரிகையில் படித்தேன். இப்பிரச்சினையை மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது,





இதில் உரிமை மீறல் இருப்பதால் இப்பிரச்சினை குறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக, பேரவை விதி 226-ன்கீழ், அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன். *(கூச்சல்-குழப்பம்)*

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திருவாளர்கள் கோ. அரி, பொள்ளாச்சி வி. ஜெயராமன், ஆ அருண்மொழிதேவன், வே. செந்தில் டி. ஜெயக்குமார், பி. தங்கமணி, அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், எல். பாலாஜி, போ. சின்னப்பன், சி. துரைராஜ் ஆகியோர் மாண்புமிகு ரவிச்சந்திரன், மு. பரஞ்சோதி, இருக்கைக்கு எதிரில் கீழே அமர்ந்து பேரவைத் தலைவரின் கோஷமிட்டனர்)*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** Sir, Speaker Sir, ஓர் உறுப்பினர் உரிமைப் பிரச்சினை எழுப்பி, அதை நீங்கள் உரிமைக் குழுவிற்கு அனுப்பி, தீர்ப்பு அளித்தபிறகு, அத்துமீறி நடந்துகொள்வது உங்களுடைய உரிமையை மீறியதாகக் கருதுகிறேன். *(கூச்சல்-குழப்பம்)* இதுகுறித்துத் தெளிவாகத் தீர்ப்பு வழங்க வேண்டும். *(கூச்சல்-குழப்பம்)* அவர்களுக்குத் தண்டனை அளிக்க வேண்டும். *(கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓர் உறுப்பினர் உரிமைப் பிரச்சினையை அவையில் சொல்லும்போது, அவர் உரிமைப் பிரச்சினையைப் பேசும்பொழுது குறுக்கிட்டு, அவரைப் பேசவிடாமல் செய்தது அவையை அவமதிப்பதாகும். அதனால், அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அத்தனைபேரையும் வெளியேற்ற உத்தரவிடுகிறேன். *(கூச்சல்-குழப்பம்)* எல்லோரையும் வெளியேற்றுங்கள். வெளியேற்றுங்கள் எல்லோரையும். *(கூச்சல்-குழப்பம்)*

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்)*

போங்கள். போங்கள். *(குறுக்கீடுகள்)* போங்கள், போங்கள். அதெல்லாம் வரும். *(குறுக்கீடுகள்)* உரிமைப் பிரச்சினை வருமா, வராதா என்பதை நான் முடிவெடுத்துக்கொள்கிறேன். நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள். *(கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடுகள்)* அதைக் குழுவில் முடிவெடுத்துக்கொள்வார்கள்; உரிமைப் பிரச்சினை வருமா, வராதா என்பதை அங்கு முடிவெடுப்பார்கள். நீங்கள் போங்கள். *(கூச்சல்-குழப்பம்)* Clear them up.

*(கோஷமிட்டுக்கொண்டிருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்)*

[பேரவைத் தலைவர்] [2007 அக்டோபர் 18

*முற்பகல் 10-50*

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை வெளியேற்றும்போது அவைக் காவலர் ஒருவரின் தொப்பி பேரவைத் தலைவரை நோக்கி வீசப்பட்டது)*

யாருடைய தொப்பி இது? உங்களுக்கு உள்ளதா? இருக்கட்டும். (கூச்சல்-குழப்பம்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் அவர்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, அவர் என்ன சொன்னார் என்பதே எங்களுக்கு எல்லாம் தெரியவில்லை. ஒரே கூச்சலும் குழப்பமும் விளைவித்துக்கொண்டிருந்தார்கள். அவர் என்ன சொன்னார் என்பதைத் திரும்பவும் ஒரு முறை இந்த அவையிலே பதிவு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதியளிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) திரு. வை. சிவபுண்ணியம், திரு. மணி சொல்லி முடித்துவிடட்டுமே. (குறுக்கீடு) திரு. வை. சிவபுண்ணியம்.

## 3. அரசினர் தீர்மானம்

### அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவைப் பணிகளினின்றும் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு நீக்கிவைத்தல்

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினையை இங்கே கொண்டு வந்தார்கள். அந்த உரிமைப் பிரச்சினை பற்றிய செய்தியை பத்திரிகைகளிலே இன்றைக்கு காலையிலே நாங்கள் எல்லாம் படித்தோம். முன்னாள்



2007 அக்டோபர் 18] [திரு. வை. சிவபுண்ணியம்]

முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறவர், பத்திரிகையாளர்களை அழைத்து ஒரு பேட்டியின்மூலமாக தன்னைக் கொலை செய்வதற்காக, மாண்புமிகு முதல்வர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் திட்டம் தீட்டுவதாகவும், அதுபற்றித் தனக்கு வேண்டிய நபர்கள் மூலமாகத் தகவல் வந்ததாகவும் செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது. முன்னாள் முதலமைச்சராக இருந்தவரே இப்படிப்பட்ட ஒரு செய்தியை வெளியிட்டு இந்த நாட்டிலே மிகப் பெரிய பதட்டத்தை உருவாக்குவதற்கான முயற்சியை, ஒரு தவறான முயற்சியை முன்னாள் முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் இன்றைக்கு அவர் தெளிவுபடுத்தி இருக்கின்ற செய்தி. ஆகவே, இதை உரிமைப் பிரச்சினையாக இங்கே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருப்பது என்பது மிகச் சரியானது என்று நாங்கள் கருதுகிறோம். ஆகவே, இதன்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக அ.இ.அ.தி.மு.க.வைப் பொறுத்தவரையிலும், சட்டமன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுவதைத் தடுக்க வேண்டுமென்று அதே நோக்கத்தோடு இங்கே வருகைதந்து இப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். வேறுவிதமான செய்திகளைச் சொல்லி—நாட்டு மக்களுடைய பிரச்சினைகளைப் பேசுவதற்கு அவர்களுக்கு எந்தவிதமான அருகதையும் இல்லை என்பதை இரண்டு நாட்களாக அவர்கள் இங்கே நிரூபித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மக்கள் பிரச்சினைகளைப் பேசுவதற்குப் பதிலாக, வேறுவிதமாகத் திசைதிருப்புவதற்கு முயற்சி எடுக்கின்ற நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். உரிய நடவடிக்கை எடுத்து இந்தச் சபையிலே அமைதியை நிலைநாட்டவும், உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கான முயற்சியை மேற்கொள்ளவும் வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*(அவையிலிருந்து வெளியேற்றப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து லாபியில் கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்)*

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காவலர்கள், வெளியேற்றப்பட்ட உறுப்பினர்களை இந்த வளாகத்திலிருந்து வெளியேற்றுங்கள். வளாகத்திலிருந்து வெளியேற்றுங்கள். அவைக் காவலர்கள், உடனடியாக அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்துங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.

[2007 அக்டோபர் 18

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள், சுமார் இரண்டிலிருந்து மூன்று இலட்சம் வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்தத் தொகுதியிலே இருக்கின்ற பிரச்சினைகளைப்பற்றிப் பேசுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே அனுப்பப்படுகிறார்கள். ஆனால், எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள், கடந்த இரண்டு நாட்களாக தங்களுடைய தொகுதிப் பிரச்சினைகளைப்பற்றி, மக்கள் பிரச்சினைகளைப்பற்றி எதுவுமே பேசாமல், தங்களுடைய சொந்தப் பிரச்சினைகளைப்பற்றி மட்டுமே பேசி, இந்த அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிப்பதைப்போன்று தகாத செயல்களிலே ஈடுபடுகிறார்கள்.

அதுமட்டுமல்ல, வெளிநடப்புச் செய்வதென்பது சட்டமன்றத்திற்குட்பட்ட ஒரு விஷயமாக இருந்தாலும்கூட, சபாநாயகர் எதிரிலே அமர்ந்துகொண்டும், அவர்களை அழைத்துச் செல்கின்ற காவல் துறையினரைத் தாக்க முற்படுவதும் மிகவும் வேதனைக்குரிய ஒரு செயலாக நாங்கள் கருதுகிறோம்.

அதுமட்டுமல்ல, இப்படி இந்தச் சட்டமன்றத்தை அவமதிக்கின்ற செயலாக அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காவலர்கள், அங்கே இருக்கக்கூடியவர்களை சட்டமன்ற வளாகத்திற்கு வெளியிலே கொண்டுபோய் விட்டுவிட்டு வரவேண்டும். முதலில், அவர்கள் அனைவரையும் வெளியேற்றுங்கள். தொடர்ந்து அவர்கள் இடையூறு செய்துகொண்டிருக்கிறார்கள். அங்கு லாபியிலேயிருந்து சத்தம் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். சபையை நடத்த முடியாமல் இடைஞ்சல் செய்துகொண்டிருக்கிறார்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** அதனாலே, மீதமுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கடமையை ஆற்றுவதற்குக் குந்தகம் விளைவிக்கின்ற அந்த எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள்மீது நீங்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து, இன்னும் இரண்டு, மூன்று நாட்கள் நடைபெற இருக்கின்ற இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் அமைதியான முறையிலே நடைபெறுவதற்கு தாங்கள் வழிவகை செய்யவேண்டும். அதற்கான தீர்மானத்தை இங்கே இருக்கின்ற ஆளுங்கட்சி முன்மொழிய வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



2007 அக்டோபர் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினையை தங்களுடைய அனுமதியோடு இந்த அவையில் எடுத்துக்கூறி, அதை விளக்கி உரைக்கிறபோது, எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள், குறிப்பாக, அ.தி.மு.க.வைச் சார்ந்தவர்கள், அவர் தொடர்ந்து பேசி—தங்களுடைய தலைவருடைய தவறான பேச்சை, முறைகேடான பேச்சை, சட்டவிரோதமான பேச்சை, உண்மைக்கு மாறான பேச்சை, அவதூறான பேச்சை, சட்டமன்றத்தில் பேசினால் மறுப்பு வரக்கூடிய அந்தப் பேச்சை வெளியிலே பேசி, பத்திரிகையிலே வெளியிட்டு, ஒரு மலிவான பிரச்சாரம், மிக மிக இழிவான ஒரு பிரச்சாரம், தவறான ஒரு பிரச்சாரம் (மேசையைத் தட்டும் ஒலி) செய்யும் அந்தக் காரியத்திலே அவர்களுடைய கட்சித் தலைவர் ஈடுபட்டிருப்பதை இங்கே எடுத்துச்சொல்கிறபோது, அதை எடுத்துச்சொல்ல விடாமல் தடுக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு, பேச்சுரிமையைத் தடுக்கிற அந்த நோக்கத்தோடு, அமைச்சருடைய உரிமையைத் தடுக்கிற அந்த நோக்கத்தோடு, உரிமைப் பிரச்சினை என்ற உண்மையை மறைக்கிற அந்த நோக்கத்தோடு திட்டமிட்டு அத்தனைபேருமாக எழுந்து கூச்சல் எழுப்பி, பேசுவதைத் தடை செய்து, பேரவைத் தலைவருடைய வேண்டுகோளையும் ஏற்காமல், வெளியேறுமாறு தலைவர் ஆணையிட்டதற்குப் பின்னரும், முறையாக வெளியேறாமல் முறைகேடாக நடந்து, இந்த அவை தொடர்ந்து நடைபெறுவதற்கு இடையூறு செய்யும் நோக்கத்தோடு திட்டமிட்டு நடந்துகொண்ட காரணத்தால், நேற்றும் அப்படி நடந்த காரணத்தாலும், இன்றும் நடந்துள்ள நிலையில், நாளைக்கும் அப்படித்தான் நடப்பார்கள் என்பதை ஊகிக்க முடிகிற காரணத்தால், சட்டப்பேரவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள இந்தத் தொடர் முடிகிறவரையில் அவர்கள் இந்த அவைக்குள் அனுமதிக்கப்படக்கூடாது என்பதற்காக, இந்த அவையின் சார்பாக இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"பேரவையின் அலுவல்கள் நடைபெறாது இடைமறித்தும், பேரவையின் விதிகளைத் தொடர்ந்து முறையற்றுப் பயன்படுத்துவதாலும், சட்டமன்றப் பேரவை விதி *121*, உள் விதி 2-ன்கீழ் இன்று அவைக்கு வருகை தந்திருக்கும் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களை இக்கூட்டத் தொடர் முழுவதும், அதாவது

[பேராசிரியர் க. அன்பழகன்] [2007 அக்டோபர் 18

*22-10-2007* வரை பேரவைப் பணிகளினின்றும் தற்காலிக நீக்கம் செய்ய வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

இக்கூட்டத் தொடர் முடிகின்றவரையில், எஞ்சிய நாட்களுக்கு அ.இ.அ.தி.மு.க.-வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அவையைவிட்டு நீக்கிவைக்கப்படுகிறார்கள். *(குறுக்கீடுகள்)*

## 4. தகவல் கோரல்

### (அ) அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவையிலிருந்து வெளியேற்றும்போது பேரவைக் காவலரின் தொப்பியைப் பேரவைத் தலைவரை நோக்கி விசிய உறுப்பினர்மீது நடவடிக்கை

***மாண்புமிகு திரு. வி.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள், பேரவைத் தலைவருடைய நாற்காலியிலே அமர்ந்துகொண்டு கடமையாற்றுகின்றபொழுது, அ.இ.அ.தி.மு.க.-வினுடைய உறுப்பினர்களில் ஒருவர், என்னால் அடையாளம் காட்ட முடியும், பெயர் தெரியவில்லை, ஆக்ரோஷமாக காவலர் ஒருவரின் தலையில் இருந்த தொப்பியை எடுத்து உங்களை அடித்திருக்கிறார். அவர்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள் என்பதை இந்த அவைக்குத் தெரியப்படுத்திட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே, அ.இ.அ.தி.மு.க.-வைச் சேர்ந்த உறுப்பினர்கள், சட்டமன்றம் நல்லமுறையில் நடந்துகொண்டிருக்கின்ற நேரத்தில், இடையூறு செய்ய வேண்டும், சட்டமன்றம் நடைபெறாத



07 அக்டோபர் 18] [பேரவைத் தலைவர்]

லையினை உருவாக்க வேண்டும் என்ற நிலையில், இங்கே ாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உரிமை மீறல் ரச்சினை சம்பந்தமாக அவர்களுடைய கருத்தைச் சொல்லிக் காண்டிருக்கின்றபோது, அவர் பேசக்கூடாது என்று இடைமறித்தும், ப்படி இடைமறித்து சத்தம்போட்டு பின்பு, பேரவைத் தலைவருடைய ருக்கைக்கு முன்னால் வந்து அமர்ந்துகொண்டு கோஷம் ழுப்பினார்கள். அவர்களை வெளியேற்ற வேண்டுமென்று ணையிட்டவுடன், அவர்களை வெளியேற்றுவதற்காகச் சென்ற ாவலர்களைத் தாக்கியதோடு, காவலர் தலையில் வைத்திருந்த தாப்பியைத் தூக்கி, பேரவைத் தலைவர் மீதே வீசியதை, ங்கே இருக்கக்கூடிய அத்தனை பேரும் பார்த்தீர்கள். ஆகவே, ன்றையதினம் அவர்களுடைய நடவடிக்கை நாகரிகமான முறையில் ல்லை. இந்த சபை நல்லமுறையில் நடக்க வேண்டுமென்ற ண்ணம் இல்லாமல், மக்கள் பணியாற்றுவதற்காக அவர்கள் தர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை மறந்து, அவர்கள் மக்கள் ணியாற்றுவதற்கு மறந்து, இன்றையதினம் அநாகரிகமான முறையில் ந்த அவையில் நடந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் ங்களைத்தாங்களே இனி திருத்திக்கொள்ள வேண்டும். மக்களுக்கு னி, வருங்காலத்தில், இந்த மாதிரியான அநாகரிகமான முறையில் டந்துகொண்டதற்கு அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டிய நிலை ற்படும். இன்றையதினம் அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த ந்தத் தீர்மானம் நிறைவேறியதையொட்டி, வருகின்ற 22 ஆம் தேதி ரை, அந்த அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அத்தனை பேரையும், பையை விட்டு நீக்கி வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் வர்களே, ஒரு முக்கியமான செய்தி, இந்த அவையில் எத்தனையோ றை அமளிகள் நடந்திருக்கின்றன. ஆனால், சபாநாயகருடைய மஜையின்மீது பொருட்களை வீசுவதோ—உங்களுடைய மேஜையே ாதியளவிற்கு இந்தப் பக்கம் வந்துவிட்டது—அந்த மேஜையைத் ள்ளுகிற அளவிற்கோ நடைபெற்றதில்லை. எவ்வளவுதான் ஆளுங்கட்சி ற்றும் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் காரசாரமாக வாதித்துக்கொண்டாலும், சண்டை போட்டுக்கொண்டாலும், இந்த வையில் சபாநாயகருக்குரிய அந்த அந்தஸ்து குறையாமல்தான் துவரைக்கும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இன்று நடந்தது வமானமிக்க ஒரு செயல். செய்தவர் யார் என்பதும் தெரியும். ரென்று கேட்டால், இந்த அவையிலே இப்போது படம் டுத்துக்கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக அதில் அவர் யார் என்பது

தெரியும். எனவே, ஓடிக்கொண்டிருக்கின்ற அந்தக் கேமராவிலிருந்து, அந்தக் குறிப்பிட்ட உறுப்பினர் யார் என்பதையறிந்து, இந்த அவையிலிருந்து அவரை நீக்குகிற அளவிற்கு ஒரு கடுமையான தண்டனையை நீங்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், அப்போதுதான் இந்த சபாநாயகர் ஆசனத்திற்குரிய—சபாநாயகரே இல்லாவிட்டால் சபையே நடத்த முடியாது. எனவே, இந்த மன்றத்தினுடைய மரபைக் காப்பதற்கு தாங்கள் இதிலே கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## 5. எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு—முதலமைச்சரின் விளக்கம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, விரும்பத்தகாத, நேரடியாகச் சொல்ல வேண்டுமேயானால், வெறுக்கத்தக்க ஒரு நிகழ்ச்சி, அவையிலே எதிர்பாராமல் நடைபெற்றது என்று சொல்லமாட்டேன்—எதிர்பார்த்ததற்கு இணங்க நடைபெற்று, அது இன்று மாலையும் நாளை காலையும் பத்திரிகைகளிலே செய்தியாக வர இருக்கிறது.

*முற்பகல் 11-05*

அமைச்சர் ஸ்டாலின் அவர்கள் இங்கே பேசியதையொட்டி எழுந்த தகராறு; அந்தத் தகராறின் விளைவாக கூச்சல்-குழப்பம்; அதன் விளைவாக இத்தகைய நடவடிக்கை என்று பத்திரிகைகளிலே செய்தி வரப்போகிறது என்பதை நாம் முன்கூட்டியே அறிகிறோம். உண்மை என்னவென்றால், இந்த உரிமை மீறல் பிரச்சினையின்மீது அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இங்கே பேசி, இந்தக் கருத்துகளைச் சொல்லியிராவிட்டாலும்கூட இது நடந்திருக்கும். இந்தக் குழப்பமும், கூச்சலும், இந்தத் தகராறும், பரபரப்பும் பத்திரிகைகளிலே வருகின்ற அளவிற்கு நடந்தேயிருக்கும். காரணம், திட்டமிட்டு நடத்தப்பட்ட செயல் இது. என்றைக்கு அவையின் மழைக்காலத் தொடர் கூடும் என்று அறிவிக்கப்பட்டதோ, அன்றைக்கே எப்படி இந்தச் சபையிலே நடந்துகொள்ள வேண்டுமென்ற அறிவுறுத்தல்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டு, அதற்குத் தயாராகிவிட்டார்கள். அதற்கு அவர்கள்





எடுத்துக்கொண்ட ஆயுதம் என்னவென்றால், பாதுகாப்பு இல்லை; ஒரு முன்னாள் முதலமைச்சருக்குத் தரவேண்டிய பாதுகாப்பு தரப்படவில்லை என்பது. இந்த முகாரி இராகத்தைக் கடந்த இரண்டு ஆண்டுக் காலமாகவே அவர்கள் பாடி வருகிறார்கள். அது உண்மையா என்பதை நடுநிலையிலே உள்ளவர்கள் சிந்திக்க வேண்டும். காவல் துறையிலே உள்ளவர்கள் அறிவார்கள்; அரசுத் துறையிலே உள்ளவர்களுக்குத் தெளிவாகவே புரியும். இருந்தாலும், அவ்வப்பொழுது நம்முடைய மக்களுக்கு மறதி என்று ஒன்று இருந்துவிடுகிற காரணத்தால் இதை நினைவூட்ட வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. ஆகவே, நினைவூட்ட விரும்புகின்றேன்.

உள்ளபடியே முன்னாள் முதலமைச்சருக்கு, இன்றைய எதிர்க்கட்சித் தலைவருக்கு, உரிய பாதுகாப்பு வழங்கப்படவில்லையா என்றால், ஏற்கெனவே இதே அவையில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் தெரிவிக்க வேண்டும் என்ற அடிப்படையில், அந்தப் பட்டியலை அறிவித்திருக்கிறேன். அவருக்குரிய எந்தப் பாதுகாப்பும் அவர் முன்னாள் முதலமைச்சராகிவிட்ட காரணத்தாலோ, இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர்தான் என்ற நிலையினாலோ குறைக்கப்படவில்லை என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவர் 'Z plus' மற்றும் தேசியப் பாதுகாப்புப் படை (NSG) பாதுகாப்புக்கு உரியவர் என்பதால், அவருக்கு நிர்ணயிக்கப்பட்ட விதிகளின்படி போதிய பாதுகாப்பு பின்வருமாறு வழங்கப்பட்டு வருகிறது:

அவரது மெய்க்காவல் அலுவலில் 3 காவல் ஆய்வாளர்கள், என்.பி. விஜயகுமார், 44 வயது உள்ள ஒரு காவலர், ஜி. முத்துமாணிக்கம், 37 வயது கொண்ட இன்னொரு அதிகாரி, வி. குப்புராஜ், 48 வயது கொண்ட இன்னொரு போலீஸ் அதிகாரி முதலியோர் உள்ளார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், இவர்கள் கடந்த ஆட்சியின்போது முன்னாள் முதல்வர் அம்மையார் அவர்களுடைய பாதுகாப்புப் பணியிலே இருந்தவர்கள். தற்போது முன்னாள் முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய விருப்பப்படியே அவர்களது மெய்க்காவல் பணியிலே தொடர்ந்து இருக்கிறார்கள். ஆட்சி மாறி, அவர்களுடைய பாதுகாப்புப் பணி பற்றிப் பரிசீலித்தபோது, அதே பாதுகாவலர்கள்தான் எனக்குத் தொடர்ந்து இருக்க வேண்டுமென்று அம்மையார் ஜெயலலிதா அவர்கள் சொன்னதன்பேரில், அவர்களே அந்தப் பாதுகாப்புப் பணியிலே தொடர்ந்து பணியாற்றி வருகின்றார்கள். இவர்கள் 9 mm Pistol வகை துப்பாக்கிகளோடு பாதுகாப்புப் பணி புரிகிறார்கள்.

முற்பகல் *11-10*

இந்த மூவரில் வி. குப்புராஜ் என்பவர்தான், அன்றையதினம் வீட்டுக்குள்ளே ஒருவர் நுழைந்ததாக பத்திரிகையிலே செய்தி வந்து, வந்தவர் ஊமையாக நடித்தார் என்றெல்லாம் செய்தி வந்து, பிறகு பார்த்தால் வேலை கேட்க வந்தார் என்றெல்லாம் செய்தி வந்து, அவர்களுடைய அ.தி.மு.க. கட்சியினுடைய அனுதாபிதான் அவர் என்றெல்லாம் செய்தி வந்ததே, அவர் அந்த வீட்டிற்குள்ளே நுழைந்த அந்த நேரத்தில் இருந்ததாகச் சொல்லப்படுகிறவர் பெயர் குப்புராஜ் என்பவர்; அவர் பாதுகாப்புப் பணியிலே இருந்திருக்கிறார். எதிர்க்கட்சித் தலைவருடைய வீட்டுப் பாதுகாப்புப் பணியில் ஏதாவது குறை இருக்குமேயானால் அதற்கு அந்த அதிகாரிதான் முழுப் பொறுப்பாவார். அந்த முழுப் பொறுப்புக்கு உரிய அதிகாரி, எந்த முறையிலே விசாரிக்கப்பட வேண்டுமோ அந்த முறையிலே விசாரிக்கப்படுவார் என்பதையும், ஏன் அந்தப் பாதுகாப்பிலே இந்த வழுக்கல் ஏற்பட்டது என்பது தெளிவாக்கப்படும் என்பதையும் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுமாத்திரமல்ல. கூடுதல் மெய்க்காவல் பணியில் இரண்டு தலைமைக் காவலர்கள்; எஸ். கிருஷ்ணராஜ், *46* வயது கொண்ட கிருஷ்ணராஜ் என்பவர், அசோகன், *39* வயது கொண்ட அசோகன் மற்றும் ஒரு காவலர் கோதண்டபாணி, *33* வயது கொண்ட ஒருவர், இவர்களெல்லாம்கூட முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்களுடைய விருப்பப்படியே அந்தப் பணியிலே தொடர்ந்து இப்போதும் இருந்து வருகின்றார்கள். இவர்கள் ஏ.கே. *47* துப்பாக்கிகளோடு பாதுகாப்புப் பணி புரிந்து வருகிறார்கள் என்பதையும் நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில், நான் 'Z Plus' மற்றும் தேசிய பாதுகாப்புப் படை பாதுகாப்புக்கு உரியவனாக இருந்திருக்கின்றேன். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா அவர்கள் அளித்த பேட்டியில் "கருணாநிதிக்கு 'Z Plus' பிரிவிற்கான பாதுகாப்பு என்றைக்குமே இருந்தது இல்லை" என்று சொல்கின்றார். அது என்னுடைய மதிப்புக்குக் குறைவாக இருக்கட்டும் என்று அவர் சொல்லியிருக்கிறார். அந்த மதிப்புக் குறைவு எனக்கு ஏற்படுவதைப் பற்றி நான் என்றைக்கும் கவலைப்படுபவன் அல்ல என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். தற்போது அவருக்கு அளித்திருப்பதைப் போலத்தான் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எனக்கு மெய்க்காப்பாளர்களாக, மூன்று ஆய்வாளர்களும், கூடுதல் மெய்க்



காவல் பணியிலே மூன்று பேரும் நியமிக்கப்பட்டிருந்தார்கள், மத்திய அரசால். நீங்கள் தப்பாக நினைக்கக் கூடாது, இவர்கள் நியமித்தார்கள் என்று. மத்திய அரசால் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவர் ஆட்சி புரிந்த *5* ஆண்டுகளில்கூட என் வீட்டிற்கு, கோபாலபுரத்திற்கு — இன்னும் எத்தனையோ தடவை—அல்லது அறிவாலயத்திற்கு அல்லது நான் பணியாற்றுகின்ற கோட்டை அலுவலகத்திற்கு எத்தனையோ முறை என்னைப் பார்ப்பதற்கும், கோரிக்கை வைப்பதற்கும் தனியாக வந்திருக்கிறார்கள்; *4* பேர், *5* பேர் சேர்ந்தும் வந்திருக்கிறார்கள். நான் அவர்களையெல்லாம் என்னைக் கொலை செய்ய வந்திருப்பார்கள் என்று ஊகித்து அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது அரசு என்று குற்றஞ்சாட்ட என்றைக்கும் நான் முன்வரவில்லை. அதுவும் உங்களுக்குத் தெரியும். இப்படி வருகிறவர்கள் எல்லாம் கொலை செய்யத்தான் வருகிறார்கள் என்கின்ற இந்தப் பயம் இருக்கக்கூடாது. அப்படிப்பட்ட ஒரு பயம் அரசியலிலே இருப்பவர்களுக்கு இருந்தால் அதை ஏதோ ஒரு நோய் என்று சொல்வார்கள். நான் அதையெல்லாம் விவரிக்க விரும்பவில்லை. தேசிய பாதுகாப்புப் படை, *12* பேர் கொண்ட படை — இதைப்போல பல பேர், ஒரு ஷிப்டுக்கு இத்தனை பேர் என்று மூன்று ஷிப்டுக்கும் சேர்த்து சுமார் *55* பேர் அந்த அம்மையார் அவர்களுக்காக காவல் புரிந்திருக்கிறார்கள், புரிந்துகொண்டும் இருக்கிறார்கள். இதற்கிடையிலே இன்னும் பாதுகாப்பு தேவையென்றால் நான் இப்போதுகூட இந்த அவையிலே சொல்ல விரும்புகின்றேன், இன்னும் பாதுகாப்பு தேவையென்றால் கொடுக்கக்கூடத் தயாராக இருக்கிறோம். பாதுகாப்பை எவ்வளவு வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளுங்கள். பாராளுமன்ற ஜனநாயகத்தைக் காப்பாற்றுங்கள் என்றுதான் நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் *11-15*

இதற்கிடையிலே நேற்று பத்திரிகைகளிலே, 'மக்கள் குரல்', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை, இன்னும் 'நமது எம்.ஜி.ஆர்.' என்கிற அவர்களுடைய கட்சிப் பத்திரிகை, இத்தனை பத்திரிகைகளிலும் நானும் உள்ளாட்சித் துறை அமைச்சரும் ஏதோ பேசிக் கொண்டோம், இவரைக் கொலை செய்ய வேண்டுமென்று, இவருக்கு ஒரு முடிவை ஏற்படுத்திட வேண்டுமென்பதைப் பற்றி பேசிக் கொண்டிருந்ததாக பத்திரிகையிலே செய்தி வந்து, அதைப்பற்றித்தான் ஸ்டாலின் இங்கே உரிமைப் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார். அவரும் ஓர் அமைச்சராக இங்கே இருக்கின்றார். அமைச்சராக இருக்கின்றாரோ இல்லையோ, ஓர் உறுப்பினராக இருந்தால்கூட, அவரைப் பற்றி இப்படிப்பட்ட ஒரு

பயங்கரமான செய்தி வெளியிடுகிறபொழுது, இந்த அவையிலே இருக்கின்ற ஒவ்வோர் உறுப்பினருக்கும் பாதுகாப்பு தேவை. பாராளுமன்றத்திலே, அவர்களுக்கு இப்படிப்பட்ட ஒரு இழுக்கும், பழியும் ஓர் அமைச்சர்மீது சொல்லப்பட்டால், இப்படித்தான் தங்களைப் பாதுகாத்துக்கொள்வார்கள். அவைத் தலைவராகிய தங்களுடைய அரவணைப்பும், அவையிலே இருக்கின்ற ஜனநாயகத்திலே நம்பிக்கையுள்ள மற்ற கட்சி உறுப்பினர்களுடைய நம்பிக்கையும், அவர்களுடைய அரவணைப்பும், ஆறுதலும் இல்லாமல் எப்படி நாங்கள் இங்கே இயங்க முடியும் என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இங்கேயிருக்கின்ற உறுப்பினர்கள் மாத்திரமல்ல, பத்திரிகையாளர்களும் இதை எண்ணிப் பார்க்கவேண்டும். அவர்களும் நேரடியாக இந்தக் காட்சியைப் பார்த்திருக்கின்றார்கள். பார்த்தவர்கள், என்ன நடந்தது என்பதை அறிவார்கள். ஸ்டாலின் என்ன பேசினார்? "இது உங்களுக்கு வாடிக்கையாகப் போய்விட்டது" என்று ஒரு வார்த்தை சொன்னார். வாடிக்கையாகப் போய்விட்டது என்றால், இதேபோலக் கொலைக் குற்றம் சாட்டுவது; விஷம் மோரில் கலந்ததா, பாலில் கலந்ததா என்று, இது இன்றைக்கு நேற்றா நடக்கிறது? ரொம்ப காலமாக நடக்கிறது; எதில் கலந்து, யாரைக் கொன்றார்கள் என்று, வீட்டு வாசலில் பிரேதம் கிடக்கும்போதே, என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் இறந்தபோது, அவருடைய சவத்தை எடுப்பதற்கு முன்பாகவே, அவருக்கு விஷமிட்டுக் கொன்றது யார்; அந்த விஷத்தை மோரில் கலந்தார்களா அல்லது பாலில் கலந்தார்களா என்று பட்டிமன்றமே நடந்துகொண்டிருந்ததை நீங்கள் யாரும் மறந்திருக்க முடியாது. அந்தப் பழக்கதோஷம்தான் இப்பொழுதும் எதிர்க்கட்சியின்மீது பழிபோடுவதற்காகச் செய்கிறார்கள்.

மனுஷன் என்றால் ஒரு குணம் உண்டு. எல்லோருக்கும் பொறாமை வருவது சகஜம். திடீரென்று பெரிய பெரிய விழா நடக்கிறது. மக்களெல்லாம் வருகின்றார்கள். சேது சமுத்திரத் திட்டத்திற்காக உண்ணாவிரதம் என்று நாம் சொல்லாமல் இருக்கும்போதே, உண்ணாவிரதம் இருக்கப் போகிறோம் என்று செய்தி கேள்விப்பட்டு, அவர்களாகவே இலட்சக்கணக்கில் வந்து கூடுகின்றார்கள். சென்னையில் மாத்திரமல்ல, ஒவ்வோர் ஊரிலும் கூடுகின்றார்கள். சேது சமுத்திரத் திட்டம் வேண்டுமென்று சொன்னவர்கள், வேண்டாமென்று சொல்கின்றார்கள், இது என்ன வேடிக்கை என்று பார்க்கின்றார்கள். வேண்டுமென்று தேர்தல் அறிக்கையிலேயே வெளியிட்டுவிட்டு, சேது சமுத்திரத் திட்டம் வராவிட்டால், ஒரு கை பார்ப்பேன் என்றெல்லாம்



சூளுரைத்தவர்கள், வந்தால் ஒரு கை பார்ப்பேன் என்று சொல்கின்ற அளவுக்கு இன்றைக்கு மாறியிருக்கின்றார்கள். அதற்குக் காரணம், அதை நாம் செய்யக் கூடாது; மத்தியிலே இருக்கின்ற காங்கிரஸ் அரசும், இங்கே இருக்கின்ற நம்முடைய அரசும் இணைந்து இந்தப் பெயரை வாங்கிக் கொள்ளக்கூடாது என்பதற்காக இந்தத் திட்டத்தையே சீர்குலைக்க, தேவையில்லாமல் இராமரைப் பிடித்து இழுத்து, ஏதோ இராமர் என்றால், எனக்கோ, பேராசிரியருக்கோ, மற்றவர்களுக்கெல்லாம் பிடிக்காது என்பதைப்போல — இராமரைப் பிடிக்காது என்பது வேறு விஷயம். நான் அன்றைக்குக்கூட நண்பர் ரஜனிகாந்த் அவர்களுடன் ஒரு விழாவில் பேசும்போது 'இராமரை உங்களுக்குப் பிடிக்காது என்று சொல்கின்றார்கள்; ஊரெல்லாம் பிரச்சாரம் செய்கின்றார்கள்; வடக்கே நான் போனால் அங்கே கூடப் பிரச்சாரம் செய்கின்றார்கள்' என்று சொன்னார். 'நீங்கள் அவர்களிடம் சொல்லுங்கள், உங்களுக்குத்தான் சாமியாரெல்லாம் பழக்கமாயிற்றே, அவர்களிடம் சொல்லுங்கள், அப்படியெல்லாம் எங்களுக்கு ஒன்றும் இராமர்மீது விரோதம் கிடையாது' என்று நான் அவரிடம்கூடச் சொன்னேன். மேடையிலேயே சொன்னேன்.

எங்களுக்கு இராமர்மீது ஒன்றும் கிடையாது. சேதுத் திட்டத்தை சேதுராமர் திட்டம் என்று வையுங்கள், வேண்டாமென்றா சொல்கிறோம்? சேதுராம் திட்டம் என்று வையுங்கள். எங்களுக்கு வேண்டியது திட்டம். எங்களுக்கு வேண்டியது அந்த வழி. எங்களுக்கு வேண்டியது அந்த வாய்க்கால். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்கு வேண்டியது தமிழ்நாட்டினுடைய வளம். எங்களுக்கு வேண்டியது தமிழன் அந்தக் காலத்தில் அயல் நாடுகளுக்குச் சென்று பிச்சை எடுத்தானே, வேலை தேடிச் சென்றானே, அந்த நிலைமையில்லாமல், தமிழன் இங்கேயே வாழவேண்டும் என்ற அந்த நிலை பிறக்கவேண்டுமென்பதுதான். அதற்காகத்தான் இந்தத் திட்டங்களை இன்றைக்கு நாங்கள் செய்கின்றோமே தவிர, ஏதோ வீண் பிடிவாதத்திற்காக இராமரை இழிவுபடுத்துவதற்காக யாரும் சொல்லவில்லை. எங்களுக்கு இராமன் என்றாலும் ஒன்றுதான், இயேசு என்றாலும் ஒன்றுதான், நபி என்றாலும் ஒன்றுதான். எல்லாம் ஒரே கடவுள்தான். எனவே ஒன்றே குலம், ஒருவனே தேவன் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற அறிஞர் அண்ணா அவர்களுடைய அந்தப் பொன்மொழியை மனதிலே பதிய வைத்துக்கொண்டு நடைபோடுகின்ற இந்த அரசு யாரையும் புண்படுத்த விரும்புகின்ற அரசல்ல, எதிர்க்கட்சிக்காரர்களை கொன்று தீர்த்துவிட்டு வாழவேண்டுமென்று எண்ணுகின்ற அரசல்ல.

முற்பகல் 11-20

தாம் எதிர்க்கட்சியாக இருப்பதை மாற்றிக்கொள்ளவேண்டும் என்று யாராவது விரும்பினால், அதற்கு ஆளுகிற கட்சியாக இருக்கிற எங்கள்மீது அவர்கள் பாய்கிறார்கள் என்று சொன்னால், அதிலே எவ்வளவு உண்மை இருக்கிறது என்பதை நீங்கள்தான் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அணு அளவும் யாருக்கும் ஒரு துன்பமும் விளைவிக்காமல், ஜனநாயகத்திற்கு ரணம் ஏற்படாமல், பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இந்த மாமன்றத்திலே வீற்றிருக்கின்ற ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது. எனவே, அனைவரும் ஒத்துழைத்து இப்படிப்பட்ட உண்மைக்கு மாறான செய்திகளைப் பரப்புகின்றவர்களுக்கெல்லாம் நீங்கள்தான் அறிவுரை கூறவேண்டும், உங்கள் செயல்மூலமாக என்று கேட்டுக்கொண்டு, இன்றையதினம் நடைபெற்ற இந்தச் சம்பவங்கள் இனிமேல் தொடராமல் இனியாவது ஜனநாயகத்தை அனைவரும் சேர்ந்து காப்பாற்ற ஒரு சபதம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த விளக்கத்தை, ஏன் இந்த உரிமைப் பிரச்சினை வந்தது, என்ன காரணத்தால் வந்தது, வரவேண்டிய அவசியம் என்ன என்பதற்கான விளக்கத்தையும், பாதுகாப்பு கொடுக்கப்படவில்லை என்கின்ற ஒரு பயங்கரமான குற்றச்சாட்டு, இன்றைய ஆளும் கட்சிமீது பழிபோடுவதுபோல் போடப்படுவது எவ்வளவு தவறான கூற்று, உண்மைக்கு மாறான கூற்று என்பதை விளக்கவும் இதைப் பயன்படுத்திக்கொண்டேன் என்பதைக் கூறி இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழகத்தில் குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு குடும்ப அட்டை வழங்காதது குறித்து விதி எண் 55-ன்கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்துச் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் குடும்ப அட்டை இல்லாதவர்கள் மனுச் செய்தால், சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்து கொடுத்தால், உடனே அவர்களுக்குப் புதிதாகக் குடும்ப அட்டை வழங்கப்படும் என்று அரசு அறிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பலமுறை இதே கருத்தை வலியுறுத்தி, மனுக்கள் அந்தந்த மாவட்டங்களில், மாவட்ட வழங்கல் அலுவலரிடமோ, வட்ட வழங்கல் அலுவலரிடமோ கொடுக்கப்பட்டு சில பேருக்குத்தான் இப்பொழுது கார்டு வந்திருக்கிறது. முன்பு ஒருமுறை அது சென்னைக்கு வந்து, ELCOT-ல் அவர்கள் லேமினேஷன் செய்யவேண்டுமென்ற ஒரு காரணத்தைச் சொல்லி, பல மாதங்கள் அவர்கள் எடுத்துக்கொண்ட காரணத்தினாலே, சரியாக அட்டை வரவில்லை. பிறகு இதே மன்றத்திலே நாங்கள் மீண்டும் மீண்டும் குரல்கொடுத்து, மாவட்ட அளவிலேயே, அந்தக் குடும்ப அட்டைகளை, நீங்கள் அப்பொழுதே பரிசீலனை, விசாரணை முடித்து உடனடியாக வழங்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கூறிய பிறகு, அரசு அந்தத் திட்டத்தையும் ஏற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதே அவையில் அறிவித்து, ரேஷன் கார்டு இல்லாதவர்களுக்கு உடனடியாக மனுக்களைப் பெற்று விசாரணை செய்து ரேஷன் கார்டுகள் மாவட்டத்திலேயே தயாரித்து வழங்கப்படும் என்கிற அறிவிப்பை அமைச்சர் அவர்கள் தந்தார்கள். ஆனால், தந்தபிறகும்கூட இன்னும் பொதுவாக 10 மாதங்களுக்கு முன்னாலே மனுச் செய்த கார்டுகள்கூட எங்கள் வேலூர் மாவட்டத்திலும், வேலூர் வட்டத்திலும் சரி, தமிழகத்தில் வால்பாறை போன்ற பல பகுதிகளிலும் சரி, ரேஷன் கார்டு கேட்டு மனுச் செய்தவர்களுக்கு இன்னும் விசாரணை என்கிற பெயரில் காலம் கடத்திக்கொண்டிருக்கிறார்கள். சில நேரங்களில், அதிலேகூட சில முறைகேடுகள் நடந்து, பணம் தந்தால்தான் கார்டு கொடுக்கப்படும் என்ற நிலையும் பல இடங்களில் இருந்துகொண்டிருக்கிறது. கடந்த 15 ஆம் தேதி வேலூரில், ரேஷன் கார்டு கொடுக்கக்கூடிய ஒரு விழாவை, அங்கு இருக்கக்கூடிய வட்ட வழங்கல் அலுவலர், சட்டமன்ற உறுப்பினராகிய எனக்குத் தெரிவிக்காமலேயே நடத்தி, பந்தல்போட்டு அங்கே ஒரு விழாவில் கொடுக்கிறார்கள். அப்படிச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியாமல் இப்படிப்பட்ட ரேஷன் கார்டுகள் கொஞ்சநஞ்சம் அச்சிட்டுக் கொடுக்கின்ற நிலை ஏன் வருகிறது என்று எங்களுக்குத் தெரியவில்லை.

போலி கார்டுகள் 40 இலட்சம் முதலிலே இருப்பதாக அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள், இந்த அவையிலே. அடுத்த

கூட்டத்திலே 19 இலட்சம் போலி ரேஷன் கார்டுகள் இருப்பதாகவும் சொன்னார்கள். நீங்கள் போலி ரேஷன் கார்டுகள் எல்லாவற்றையும் கண்டுபிடித்து அவற்றையெல்லாம் அறவே அழித்துவிட்டு உண்மையாக மனுச் செய்பவர்களுக்கு, மனுச் செய்த ஒரு வார காலம், 10 நாட்களுக்குள் வழங்கவேண்டும் என்று காலக்கெடுவைக் கொடுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருவண்ணாமலையில் ஒரு பேட்டியிலே இரண்டு வாரங்களுக்குள் கார்டுகள் வழங்கப்படும் என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருந்தார்கள். அந்தக் கால கெடுவுக்குள், மனுச் செய்த 10 நாட்கள், 15 நாட்களுக்குள் விசாரணையை முடித்து அந்த மாவட்டத்திலேயே ரேஷன் கார்டுகள் அச்சிட்டுக் கொடுப்பதற்கான நடவடிக்கையை அமைச்சர் உடனே எடுப்பாரா?

*முற்பகல் 11-25*

வேலூர் மாவட்டத்தில் இதுவரை மனுச் செய்தவர்களுக்கு இன்னும் எத்தனை பேருக்கு ரேஷன் கார்டுகள் கொடுக்கப்படாமல் இருக்கிறது? அதேபோல, கோவை மாவட்டம் மற்றும் இருக்கக்கூடிய மாவட்டங்களிலே மனுச் செய்தவர்கள் எத்தனை பேர் ரேஷன் கார்டுகள் பெறாமல் இருக்கிறார்கள்.

இன்றைய 'இந்து' நாளிதழை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்த்திருப்பார் என்று கருதுகிறேன். மேற்குத் தாம்பரம் பகுதியிலே ரெங்கநாதபுரத்தில் ரேஷன் கார்டுகளுக்குக் கொடுக்கப்படக்கூடிய மண்ணெண்ணெய் கறுப்புக் கலரிலே கொடுக்கப்படுகிற காரணத்தினால் அதில் adulteration, கலப்படம் நடைபெற்று அதைக் கட்டைமீது ஊற்றினாலும் எரியவில்லை, நெருப்புக் குச்சி கொளுத்தி வைத்தாலும் எரியவில்லை. ஆகவே, கலப்படமான மண்ணெண்ணெய்யை இன்று ரேஷன் கடைகளிலே மேற்குத் தாம்பரத்தில் ரெங்கநாதபுரத்தில் கொடுத்துக் கொண்டிருக்கிற அந்தச் செய்தி இன்றைய 'இந்து' நாளிதழிலேகூட அதை வெளியிட்டிருக்கிறார்கள். மற்ற பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. இப்படி முறைகேடுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதையும், ரேஷன் பொருட்கள் கடத்தப்படுவதையும் அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தடுத்து ரேஷன் கார்டுகளை வழங்கி மக்களுக்கு உரிய அளவில் ரேஷன் பொருட்களை வழங்குவதற்கு ஆவன செய்வாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.





**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பாக குடும்ப அட்டைகள் வழங்குகின்ற திட்டத்தில், குடும்ப அட்டைகள் வேண்டும் என்று மனுச் செய்கின்ற மக்களுக்கு, உடனடியாக அந்த அட்டைகள் கிடைப்பதற்காக தமிழக அரசால் அந்தந்த மாவட்டங்களிலே அச்சிட்டு வழங்கப்படும் என்று சமீபத்தில் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த அறிவிப்புக்கிணங்க இந்தக் குடும்ப அட்டைகள் எல்லாம் அந்தந்த மாவட்டங்களில் இருக்கின்ற அரசு அச்சகத்தின்மூலம் அச்சிட்டு வெளியிடப்படுமா அல்லது ஒப்பந்தத்தின் அடிப்படையில் தனியார்களுக்குக் கொடுத்து அச்சிட்டு வழங்கப்படுமா? இரண்டாவது, இன்றைக்கு இன்னும் பல்வேறு மாவட்டங்களில் இப்பிரச்சினை உள்ளது. நான்கூட அரசு உறுதிமொழிக் குழுத் தலைவராக இருந்து நீலகிரி மாவட்டத்தில் ஆய்வு செய்தபோது அப்பகுதியிலே வாழ்கின்ற மலைவாழ் மக்கள் தங்களுக்குக் குடும்ப அட்டை கிடைக்கப்பெறவில்லை என்கிற கருத்தைக்கூறி எங்கள் குழு முன் ஆஜராகி நூற்றுக்கணக்கான மக்கள் மனுக் கொடுத்தார்கள். அப்படி இருக்கின்ற அந்தப் பிரச்சினைகளையெல்லாம் களைவதற்கு மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்வருவார்களா?

குடும்ப அட்டையைக் கொண்டுபோய் அரிசி வாங்குகின்றபோது, மக்கள் எதிர்பார்க்கின்ற அளவிற்கு அந்த அரிசியை அவர்கள் தர மறுக்கிறார்கள். அதிலே பாதி, அதாவது 50 சதவிகிதம் மட்டுமே தருவதற்கு சில விற்பனையாளர்கள் முன்வருகிறார்கள். இவற்றுக்கெல்லாம் ஒரு நிரந்தரத் தீர்வாக நமது அரசின் சார்பில் நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்கள், அந்த உணவு அட்டையின்கீழ் வழங்கப்படுகின்ற அந்தப் பொருட்கள் பல்வேறு நிலையில் பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்டுத் தரப்படும், கேன்களிலே அடைத்துத் தரப்படும் என்றெல்லாம் ஏற்கெனவே ஒரு முறை சொல்லியிருந்தார்கள். (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள் அப்படிச் சொல்லவில்லையென்றாலும்கூட, எதிர்வரும் காலங்களில் எடைக் குறைவில்லாமல் அந்த உணவுப் பண்டங்களை எல்லாம் அப்படி பாக்கெட்டுகளிலும், கேன்களிலும் அடைத்துத் தருவதற்கு இந்த அரசு வழிவகை காணுமா? அதேபோல், கூட்டுறவு நிறுவனங்களிலிருந்து மூட்டைகளை ஏற்றுகின்றபோது, அங்கே அந்த இடத்தில் எடை சரிபார்க்கின்றபோது நிச்சயமாக எடை சரியாக இருப்பதாகவும், விற்பனையாளர்களுக்கு அந்த அரிசி செல்கின்றபோது, பருப்பு செல்கின்றபோது, சர்க்கரை செல்கின்றபோது ஒரு மூட்டைக்கு

ஐந்திலிருந்து எட்டு கிலோ வரை குறைவதாகவும், அதை ஈடுசெய்வதற்காக, பொதுமக்கள் குடும்ப அட்டைகளைக் கொண்டுபோய் ரேஷன் கடைகளிலே வாங்குகின்றபோது இந்த 8 கிலோவை ஒரு மூட்டைக்கு சரிசெய்வதற்கு அவர்களிடத்திலே கை வைப்பதாகவும் பரவலாகப் பத்திரிகைகளிலும் செய்தி வந்து கொண்டிருக்கிறது. அந்த இடங்களில் அந்த pack செய்யப்பட்ட மூட்டைகளிலிருந்து குத்தூசி மூலமாக எடுக்கின்ற முறையிலோ அல்லது வேறுவிதமாக எடையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளில் சில ஒப்பந்தத் தொழிலாளர்கள் ஈடுபடுகின்றபோது அதைத் தடுத்து நிறுத்தி, எடைக் குறைவில்லாது அரிசி, சர்க்கரை, பருப்பு வகைகள் போன்றவற்றை அனுப்ப இந்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா? இதற்கெல்லாம் விரிவான திட்டங்களை நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்கள் வகுத்திருக்கிறார்களா என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

## (அ) அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவையிலிருந்து வெளியேற்றும்போது பேரவைக் காவலரின் தொப்பியைப் பேரவைத் தலைவரை நோக்கி விசிய உறுப்பினர்மீது நடவடிக்கை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றையதினம் இங்கே நடைபெற்ற, அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் செய்த அந்தக் கலவரத்தில், சபையில் காவலர் தாக்கப்பட்டு, காவலர் அணிந்திருந்த அந்தத் தொப்பியை எடுத்து என்மீது வீசிய அந்தச் சம்பவம் சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் எழுப்பிய அந்தப் பிரச்சினைக்கு இங்கே சபை நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து கொண்டிருக்கும் வீடியோவைப் பார்த்துவிட்டு தக்க தீர்ப்பை நாளை வழங்குகின்றேன்.

## (ஆ) புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு வேலூர் சட்டமன்ற உறுப்பினர் ஞானசேகரன் அவர்களும், பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் வேல்முருகன் அவர்களும், பொது விநியோக குடும்ப அட்டைகள்



வழங்குவதிலே இருக்கிற சில பிரச்சினைகளைப் பற்றி இங்கே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறார்கள். இந்த அரசு பொறுப்பேற்றவுடனேயே அனைவருக்கும் அட்டை வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் 8-8-2007 அன்று அரசு ஆணை எண் 130-ல் ஓர் ஆணை வழங்கப்பட்டது. குடும்ப அட்டை வேண்டுவோரிடமிருந்து மனுக்களைப் பெற்று மீண்டும் இந்த அரசு குடும்ப அட்டைகளை வழங்கும்; நிறுத்தப்பட்டிருக்கிற குடும்ப அட்டைகள் மீண்டும் வழங்கும் என்று அரசு ஆணை வெளியிடப்பட்டது. அப்படி வெளியிடப்பட்டதிலே 19,11,501 மனுக்கள் 2-10-2007 வரை பெறப்பட்டன. மீண்டும் தலத் தணிக்கை, மேல் தணிக்கை என இரண்டுவிதமான தணிக்கைகள் செய்தபோது, உரியவர்களுக்கு அட்டைகள் வழங்கலாம் என்று, 9,94,584 மனுக்களுக்கு அட்டைகள் கொடுக்கலாம் என்று பரிந்துரை செய்யப்பட்டது. அப்படி அட்டைகள் கொடுக்கலாம் என்று பரிந்துரை செய்யப்பட்டதில் அட்டைகள் எல்லாம் அச்சடிக்கப்பட்டு வேலூர், விழுப்புரம், கடலூர் உட்பட அனைத்து மாவட்டங்களுக்கும், 7,89,005 அட்டைகள் வழங்கப்பட்டுவிட்டன. இதிலே 'pending paper' என்ற அடிப்படையிலே இன்னும் 4,910 மனுக்கள்தான் மீண்டும் தலத் தணிக்கை செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டிலே இப்போது இருந்துகொண்டிருக்கின்றன. இன்றுகூட நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அதுபற்றிச் சொன்னார்கள். 30 மாவட்டங்களிலும் எந்தெந்த மாவட்டங்களுக்குக் கொடுக்கப்பட்டது என்று காலத்தை அதிகமாக எடுத்துக்கொள்வதைவிட சென்னையை எடுத்துக்கொண்டால், சென்னை வடக்கில் 38,900 அட்டைகள் வழங்கிவிட்டோம். சென்னை தெற்குப் பகுதியை எடுத்துக்கொண்டால் 31,313 அட்டைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சேலம் ஒரு மாநகராட்சி, அந்த மாநகராட்சிக்கு, இந்த ஆணைக்குப் பின்னால் 20,918 அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. திருச்சி ஒரு மாநகராட்சி, அந்த மாநகராட்சிக்கு இப்போது 30,182 அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மதுரை ஒரு மாநகராட்சி, இந்த மாநகராட்சிக்கு இப்போது 37,499 அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. திருநெல்வேலி ஒரு மாநகராட்சி, இந்த மாநகராட்சிக்கு இப்போது 15,758 அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இப்படி அனைத்து மாவட்டங்களிலும் இந்த அட்டைகள் முறைப்படி வழங்கப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. எப்போதிலிருந்து என்று சொல்வதைவிட எப்போதும் வழங்கிக்கொண்டிருக்கிறோம், இப்போதும் வழங்கிக்கொண்டுதான் இருக்கிறோம். ஏன் என்று சொன்னால் இது ஒரு தொடர் நடவடிக்கை.

அதேநேரத்திலே, இன்னொன்றையும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். பொதுவாக மனுக்களை அதிகமாகப் பெறுகிறார்கள். 30 நாள் என்று சொன்னால் ஒரு மாவட்டத்திலே, அங்கே சட்டமன்ற உறுப்பினரிடத்திலே ஒருவர் மனு கொடுக்கிறார். அதற்கடுத்தபடி நாடாளுமன்ற உறுப்பினரிடத்திலே அவரே மனு கொடுக்கிறார். அந்த மாவட்டத்தின் அமைச்சரிடத்திலே அவரே மனு கொடுக்கிறார். அல்லது வெளியிலே இருந்து உள்ளாட்சித் துறை அமைச்சர் அந்த மாவட்டத்திற்குப் போகிறார் என்று சொன்னால் சீக்கிரம் கிடைக்கும் என்ற அந்த நம்பிக்கையிலே அவரிடத்திலும் மனு கொடுக்கிறார்கள். ஏன், சமீபத்திலே முதலமைச்சர் அவர்கள் போகிறபோதுகூட மனு கொடுக்கிறார்கள். இப்படி ஒருவரே திரும்பத் திரும்ப 5 மனுக்கள் 6 மனுக்கள் கொடுப்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அவர் ஒரு அறிவுரை சொன்னார். மனுக்களைக் கொடுத்து ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் அட்டை வழங்கப்பட்டுவிட்டால் இந்தப் பிரச்சினை வராது; எனவே, ஒருவரே தொடர்ந்து மனு கொடுப்பதைவிடக் கால அளவை நீங்கள் முடிவு செய்யுங்கள் என்று அறிவுறுத்தினார். முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையின் பேரில், ஒருவர் மனு கொடுத்தால் 60 நாட்களுக்குள் அட்டை வழங்க வேண்டும் என்று அனைத்து மாவட்ட வழங்கல் அதிகாரிக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் இப்போது அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது.

அதோடு மட்டுமல்ல, 60 நாட்களில் அட்டைகள் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் அந்த மனுக்கள் எதற்காகத் தள்ளுபடி செய்யப்படுகின்றன என்பதையும், அவர்களுக்கு உரிய பதிலாக வழங்க வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையை ஏற்று, இப்போது அரசின் சார்பாக ஆணைகளை நாங்கள் வழங்கிக்கொண்டு இருக்கிறோம். எனவே, நம்முடைய வேலூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் குறிப்பிட்டார்கள். அவருடைய வேலூர் தொகுதியை மட்டும் எடுத்துக்கொண்டால் எங்களிடத்திலே வந்த மனுக்களிலே 8,746 மனுக்கள் பரிந்துரை செய்யப்பட்டன. அதைப்பொறுத்த அளவிற்கு நேற்றுவரை 8,746 பேருக்கு வேலூரிலே நாங்கள் அட்டைகள் வழங்கிவிட்டோம். அதனால் நாளைக்கு கொடுக்க முடியாது என்று சொல்ல முடியாது. நாளைக்கு சட்டமன்ற உறுப்பினரிடத்திலே மனுக்கள் வரலாம், பரிந்துரை செய்யலாம். அவற்றுக்கெல்லாம்



60 நாட்களுக்குள் குடும்ப அட்டை கட்டாயம் கிடைத்துவிடும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-35

நம்முடைய மாண்புமிகு வேல்முருகன் அவர்கள் ஒன்று சொன்னார்கள். ஏற்கெனவே என்ன குளறுபடி என்று சொன்னால், ஒரு மனு கொடுத்தோம் என்று சொன்னால் அந்த மனுவினுடைய அட்டை இங்கே ஆணையரிடத்திலே பதிவு செய்யப்பட்டு அது பின்பு அட்டை அச்சிட்டுப் போனால், அதில் இருக்கிற initial விட்டுப்போனால்கூட திருத்த வேண்டுமென்று சொன்னால் இங்கே வரவேண்டிய நிலைப்பாடு இருந்தது. அதைத்தான் முதலமைச்சர் அவர்களிடத்தில் சொன்ன உடனே, இவற்றை நீங்கள் பரவலாக்க வேண்டுமென்று அவர்கள்தான் சொன்னார்கள். அப்படிச் சொல்லி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே அவையெல்லாம் வழங்கப்பட வேண்டும் என்று முடிவு செய்து, இன்றைக்கு மாவட்ட அலுவலகங்களிலேயே இவையெல்லாம் அச்சடிக்கப்பட்டு இந்த மனுக்களுக்கு அங்கேயே Data entry பண்ணி விடுகிறோம். உதாரணமாக, ஒரு மனு கொடுக்கிறோம் என்று சொன்னால் அங்கே தலத் தணிக்கை செய்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே இருக்கிற கணினியிலேயே அது பதிவு செய்யப்படுகிறது, Data entry பண்ணப்படுகிறது. அதன்மூலமாக இங்கே எல்காட்டுக்கு வந்து கார்டுகள் எல்லாம் அச்சடிக்கப்பட்டு இப்போது வேகமாக, விரைந்து செயல்படுகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 28-8-2007 அன்றுதான் புதிதாக ஒரு ஆணை பிறப்பித்தோம். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே இவற்றையெல்லாம் பதிவு செய்து அங்கேயே கொடுக்கப்பட வேண்டுமென்று. அது வந்த பின்பு, கிட்டத்தட்ட நம்முடைய புதிய முயற்சியின் காரணத்தினால் 4 லட்சத்து 40 ஆயிரத்து 541 மனுக்கள் பதிவு செய்யப்பட்டன. அவற்றிலே அட்டைகள் எவ்வளவு வேகமாக வழங்கியிருக்கிறோம் என்று சொன்னால் 3 லட்சத்து 62 ஆயிரத்து 933. எட்டாவது மாதம் பதிவு பண்ணி மொத்த கார்டுகளையும் இப்போது கொடுத்து விட்டோம். மாவட்ட அலுவலகத்திலே இவையெல்லாம் பதிவு செய்யப்பட்டு முறையாக இப்போது அட்டைகள் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

திரு. வேல்முருகன் கேட்டார்; அட்டைகள் அச்சடிக்கிறோம் என்று சொன்னீர்களே, அதற்கு அங்கே தனியார் மூலமாக டெண்டர் விடப்போகிறீர்களா என்று கேட்டார். அப்படியல்ல. மாவட்ட ஆட்சித்

[திரு. எ.வ. வேலு] [2007 அக்டோபர் 18

தலைவர் அலுவலகத்திலே மனுக்களைப் பெற்று தலத் தணிக்கை செய்து, கம்ப்யூட்டரிலே அங்கே feed செய்து விடுகிறார்கள் கணினியிலே அங்கே பதிவு செய்து விடுகிறார்கள். Data entry பண்ணி விடுகிறார்கள். அவை எல்காட்டுக்கு வருகின்றன. எல்காட்டிலே அட்டைகள் எல்லாம் அச்சடிக்கப்பட்டு மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு வருகின்றன. இந்த முறைதான் இப்போது இருக்கிறது. ஆனால் நீங்கள் சொல்வதை அரசு ஏற்கெனவே கவனத்தில் கொண்டு அதற்காக ஒரு தொழில்நுட்பக் குழுவை அமைத்து இருக்கிறோம். அதன் பரிந்துரையைப் பெற்று அதை அங்கேயே அச்சடித்துக் கொடுக்கலாமா அல்லது மாநில அளவிலே எல்காட்டிலேயே அச்சடித்து கொடுக்கலாமா என்பதற்கு குழுவினுடைய பரிந்துரையை இந்த அரசு பெற்ற பின்பு அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ளும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உறுப்பினர் பேசுகிறபோது மூன்று விஷயங்களை இங்கே குறிப்பிட்டார்கள். ஒன்று, 50 சதவிகித அரிசிதான் சில அட்டைகளுக்கு எல்லாம் கிடைக்கிறது என்று சொன்னார். அப்படியல்ல. இந்த 3 மாத காலங்களிலே முதலமைச்சருடைய அறிவுரையைப் பெற்று கிட்டத்தட்ட 6 மாவட்டங்களைத் தவிர, மீதம் உள்ள 24 மாவட்டங்களிலே நான் நேரடியாகச் சென்று தலத் தணிக்கைச் செய்திருக்கிறேன். நேரிலே ஆய்வு செய்தேன். 1 ஆம் தேதியிலிருந்து 30 ஆம் தேதி வரை—இந்த 1 கிலோ அரிசி 2 ரூபாய்க்கு ஏழைகளுக்காகப் போடப்படுகிற முதலமைச்சருடைய திட்டம் செம்மையாக நடைபெற வேண்டும் என்று ஒவ்வொரு பொது விநியோகக் கடையிலும் 1 ஆம் தேதியிலிருந்து 30 ஆம் தேதி வரை உங்களுக்கு உரிய அரிசி கிடைக்கும் என்று பெயர்ப்பலகை வைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அப்படித்தான் கொடுக்கப்படுகிறது. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் எங்கேயாவது குறைபாடு இருக்கிறது என்று கருதுவாரேயானால் அதை என்னிடத்திலே புகாராகக் கொடுத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எடைக் குறைவு பற்றிச் சொன்னார். அதாவது குடோனிலிருந்து போகிறபோது, கிடங்கிலிருந்து போகிறபோது அரிசி எடை சரியாக இருக்கிறது; ஆனால் கடைக்குப் போகிறபோது எடை குறைகிறது; அதனால் குறைகிற அரிசியை பயனாளிகளிடத்திலே விற்பனையாளர்கள் குறைத்துக் கொள்கிறார்கள் என்கின்ற ஒரு செய்தியை இங்கே சொன்னார். இதை நான்கூட ஆய்வுக்குட்



2007 அக்டோபர் 18] [திரு. எ.வ. வேலு]

போகிறபோது அங்கே சொன்ன காரணத்தினால்தான் இப்போது route chart என்கின்ற முறையைக் கொண்டு வந்திருக்கிறோம். அது என்னவென்று சொன்னால், அந்த மூட்டைகள் எல்லாம் ஒரு வண்டியில் ஏற்றப்பட்டுவிட்டால் அது கடைக்குப் போகிறபோது, அது எந்த வழியாகப் போகிறது என்று அந்த லாரியிலே route chart தொங்க வேண்டும். வேறு வழியிலே லாரி போனால் மக்கள் பிரதிநிதியாக இருப்பவர்கள், அது யாராக இருந்தாலும் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தாலும், ஒன்றியக் குழுத் தலைவராக இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினராக, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் ஏன் மாவட்ட நிர்வாகத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் உட்பட அந்தப் பகுதியிலே போகிறபோது இந்த லாரி இந்தப் பகுதியிலே ஏன் போகிறது என்று அவர்களே கேட்க வேண்டுமென்ற அடிப்படையிலேதான், இந்த route chart என்கின்ற முறையைப் புதிதாக புகுத்தி அனைத்து லாரிகளிலும் இதை வைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். பல மாவட்டங்களில் இது வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி இல்லையென்று சொன்னால் அதைக்கூட அரசினுடைய கவனத்திற்கு நீங்கள் கொண்டு வந்தீர்கள் என்று சொன்னால், இந்த route chart முறையை நூற்றுக்கு நூறு சதவிகிதம் சரி செய்ய முடியும்.

கடைகளிலே எடைக் குறைவு இருக்கிறது என்று சொன்னார்களே, அதை முதலமைச்சரிடம் சொன்ன காரணத்தினாலேதான் என்னுடைய துறையின் மானியக் கோரிக்கையிலே பதில் சொல்கிறபோது ஒவ்வொரு கடையிலும் எடை எவ்வளவு என்பதை மின்னணு இயந்திரத்தின் மூலமாக நிறுத்துக் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். ஏனென்று சொன்னால், அது பயனாளிகளுக்கு நேரடியாகத் தெரியும். எவ்வளவு கிலோ நமக்குப் போடுகிறார்கள் 20 கிலோ, 15 கிலோ என்பது display ஆகும். நேரடியாகத் தெரியும். எனவே, அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் மின்னணு இயந்திரம் வாங்கித்தர வேண்டுமென்று முதலமைச்சர் அதற்காகப் பணம் ஒதுக்கியிருக்கிறார். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்து இப்போது சில கடைகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கேயிருக்கிற நம்முடைய திருப்பூர் சட்டமன்ற உறுப்பினருக்குக்கூடத் தெரியும். 5 தினங்களுக்கு முன்னால் திருப்பூருக்கு 2 பேரும் போனோம்; அங்கே 10 கடைகளைத் திறந்தோம். அனைத்துக் கடைகளிலும் அந்த மின்னணு இயந்திரங்கள் மூலமாகத்தான் இப்போது வழங்கப்படுகிறது.

எனவே, பரவலாக இந்த உணவுத் துறையை பொறுத்தளவிற்கு எந்தவிதத் தவறும் நடக்காமல் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கிங்கு தவறு ஏதாவது நடக்கிறது என்கின்ற

புகார் கொடுத்தால் அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொண்டு, அட்டைகள் வழங்குவது என்பது எப்போதும் போல, இப்போதும் வழங்கிக் கொண்டிருக்கிறோம். இது தொடர் நடவடிக்கை. எங்கேயாவது வழங்கவில்லை என்று சொன்னால், அந்த விவரத்தை என்னிடத்தில் கொடுத்தால் கட்டாயம் இந்த அரசு வழங்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து என்னுடைய பதில் அனேகமாக அனைவருக்கும் திருப்தி அளித்திருக்கும் என்று நம்புகின்றேன். நன்றி. வணக்கம்.

*முற்பகல் 11-40*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மேற்குத் தாம்பரம் பகுதியில் adulterated kerosene விற்று, அந்த kerosene-லே நெருப்பு வைத்தாலும் எரியவில்லை, கட்டையிலே ஊற்றினாலும் எரியவில்லை என்றுகூட இன்று 'இந்து' பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது என்ற கருத்தை நான் சொன்னேன். புதிதாக அட்டை வழங்குபவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படாமல் இருக்கிறது. மத்தியத் தொகுப்பிலே அரசு கேட்டிருக்கிறது என்று சொன்னீர்கள். ஏற்கெனவே ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து வழங்கப்பட்ட புதிய ரேஷன் கார்டுகளுக்கு மண்ணெண்ணெய் வழங்குவதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், கொஞ்சம் இருங்கள். திரு. வேல்முருகன், உங்கள் கருத்து ஏதேனும் இருந்தால் சொல்லிவிடுங்கள். (குறுக்கீடு) ஒன்றும் இல்லையே? சரி. அமைச்சர் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கூடக் காலையிலே இதை 'இந்து' பத்திரிகையில் பார்த்தேன். 'தினமலர்' பத்திரிகையிலும் செய்தி வந்தது. உரிய அதிகாரிகளிடத்திலே தொடர்பு கொண்டோம். அந்த மாவட்ட நுகர்வோர் பண்டக சாலையில் புதிதாக 250 பாரல்கள் வாங்கியிருக்கிறார்கள். அதிலே ஒரு பாரல் ஏற்கெனவே ஆயில் பாரல், எஞ்ஜினுக்கு ஊற்றுகிற ஆயில் பாரல். அந்த பாரலில் ஏதோ



கொஞ்சம் எண்ணெய் இருந்திருக்கிறது. அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள் காலையிலேயே அந்தப் பகுதிக்குப் போய்விட்டார்கள். போய் விசாரித்த அளவிலே அப்படி ஒன்றும் இல்லை. அனைத்து மண்ணெண்ணெய்யும் நல்ல மண்ணெண்ணெய்தான், அந்த ஒரு பாரலில் பிடித்த மண்ணெண்ணெய் மட்டும் கொஞ்சம் கறுப்பாக இருக்கிறது, ஆனால் எரிகிற தன்மை உள்ளதாக இருக்கிறது என்று சொன்னார்கள். உடனே அந்த பாரலைக்கூட மாற்ற வேண்டுமென்று ஆணை பிறப்பித்துவிட்டுத்தான் நான் சட்டமன்றத்திற்கு வந்தேன். எனவே, அனைத்து மண்ணெண்ணெய்யும் அப்படி ஆகவில்லை என்பது ஒன்று.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

புதிய அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுமா என்று கேட்டார்கள். அதற்கு அவரும்தான் சிபாரிசு செய்ய வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு முறை அதற்காகக் கடிதம் கொடுத்தார்கள், நானும் கொடுத்தேன். ஏனென்றால், subsidy அதிகமாகிறது என்று மத்திய அரசாங்கம் சொல்லிக்கொண்டிக்கிறது. 10 தினங்களுக்கு முன்னால்கூட சம்பந்தப்பட்ட அமைச்சர் மாண்புமிகு முரளி தியோரா அவர்களைச் சந்தித்துக் கேட்டிருக்கிறேன். பார்ப்போம் என்று சொல்லியிருக்கிறார். மீண்டும் தொடர்ந்து முயற்சி நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. வருகிறபோது அந்தப் புதிய அட்டைகளுக்கு இந்த அரசு மண்ணெண்ணெய் வழங்கும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிறகு எடுத்துக்கொள்கிறோம். எடுக்கும்போது உங்களைக் கூப்பிடுகிறோம்.

### (இ) நெல்லிக்குப்பம் தொகுதி, அக்கடவள்ளியிலுள்ள சண்முகாநந்தா அரசு உதவி பெறும் துவக்கப் பள்ளியை அரசே ஏற்று நடத்துதல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, நெல்லிக்குப்பம் தொகுதி, அக்கடவள்ளி கிராமத்தில் உள்ள ஆரம்பப் பள்ளி, ஸ்ரீ சண்முகாநந்தா நிதி உதவி பெறும் துவக்கப் பள்ளி, தனியாரால் நடத்த இயலாததால் பள்ளிக் குழந்தைகள் படிப்பு பாதிக்கப்படாமல் இருக்க அப்பள்ளியை அரசே ஏற்று நடத்த வேண்டியது குறித்து. மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன்.

[2007 அக்டோபர் 18

**திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் தொகுதி, அக்கடவள்ளி கிராமத்திலுள்ள ஆரம்பப் பள்ளி, சண்முகாநந்தா நிதி உதவி பெறும் துவக்கப் பள்ளி தனியாரால் நடத்த இயலாததால் பள்ளிக் குழந்தைகள் படிப்பு பாதிக்காமல் இருக்க அப்பள்ளியை அரசே ஏற்று நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்டிருக்கக்கூடிய அண்ணா கிராமம் சரகத்தில், அக்கடவள்ளி கிராமத்திலே நடைபெறக்கூடிய சண்முகாநந்தா பள்ளி அரசின் நிதி உதவி பெறக்கூடிய ஒரு பள்ளி. இந்தப் பள்ளியிலே 3 ஆசிரியர்களின்கீழ் பல மாணவர்கள் பயின்று வரக்கூடிய சூழ்நிலையில், இந்தப் பள்ளி இயங்கி வரக்கூடிய கட்டடம் அரசுக்கு உட்பட்ட புறம்போக்கு நிலத்திலே இயங்கி வருகிறது. கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலைமையிலே இருக்கிறது. தற்காலிக ஏற்பாடாக இப்போது ஒரு கோயிலிலே அந்தப் பள்ளி இயங்கிக் கொண்டிருக்கிறது. அரசைப் பொறுத்தமட்டிலே அரசு நிதி உதவி பெறக்கூடிய ஒரு பள்ளியினை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று சொன்னால், அந்தப் பள்ளி இயங்கிவரக்கூடிய நிலம், அதில் இருக்கக்கூடிய கட்டடம் மற்றும் இருக்கைகள் போன்ற தளவாடச் சாமான்கள் ஆகிய அனைத்தையுமே அரசுக்கு ஒப்படைக்க அந்தப் பள்ளியினுடைய நிர்வாகம் ஒப்புதல் அளித்தால் அந்தப் பள்ளியை ஏற்று நடத்துவதற்கு வழிவகை இருக்கிறது. இந்த நிகழ்விலே பள்ளிக் கட்டடம் மிகவும் பழுதடைந்து இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலே, மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரும், உதவி தொடக்கக் கல்வி அலுவலரும் அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு ஊராட்சி மன்றத் தலைவரிடத்திலும் விவாதித்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை குறித்து நம்முடைய மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன் அவர்கள் பலமுறை என்னிடத்திலும் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அரசு இதிலே முழுமையாக ஆய்வு மேற்கொண்டு அவரிடத்திலும் விவாதித்திருக்கிறது. எனவே, அந்தப் பள்ளிக்கு ஒரு புதிய கட்டடம் நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற



2007 அக்டோபர் 18] [திரு. தங்கம் தென்னரசு]

உறுப்பினர் அவர்களுடைய முயற்சியோடு, ஊராட்சி மன்றத்தினுடைய முயற்சியோடு கட்டித்தரப்படும் என்று சொன்னால், அரசு அந்தப் பள்ளியை ஏற்று நடத்துவதற்கு நிச்சயமாக ஆவன செய்யப்படும்.

## (ஈ) கடலூர் அருகே தனியார் மின் உற்பத்தி நிலையத்திற்கு நிலங்களை வழங்குதல் குறித்த அரசாணை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன், என்ன சொல்லுங்கள்.

*முற்பகல் 11-45*

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், கடலூர் அருகே தியாகவள்ளி, நொச்சிக்காடு, நடுத்திட்டு, சித்திரப்பேட்டை, சாமியார்பேட்டை, லல்லி நகர், அம்பேத்கர் நகர், குடிகாடு உள்ளிட்ட பல்வேறு கிராமங்களை உள்ளடக்கி பதினைந்திற்கும் மேற்பட்ட கிராமத்து மக்களுடைய விளை நிலங்களையும், முந்திரிக் காடுகளையும், சவுக்குத் தோப்புகளையும், நெல் விளையும், பயிர் விளையும் பூமிகளையும் அங்கு மின் உற்பத்தியைத் தொடங்க வருகின்ற ஒரு தனியார் நிறுவனத்திற்கு மட்டுமே ரெஜிஸ்திரார் அலுவலகங்களில் ரெஜிஸ்டிரேஷன் செய்ய வேண்டும், வேறு யாருக்கும் அந்த நிலங்களை ரெஜிஸ்டிரேஷன் செய்யக் கூடாது என்கின்ற ஓர் அரசு ஆணையை 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பிறப்பித்ததாகவும், அதன்மூலம் தமிழகத்தினுடைய ரெஜிஸ்திரார் ஜெனரல்—ஐ.ஜி. அவர்களும் வாய்மொழி உத்தரவாக அந்த சம்பந்தப்பட்ட ரெஜிஸ்திரார் அவர்களுக்குத் தெரிவித்து அந்த நிலங்களை அந்த மக்கள் தங்களுடைய உறவுகளுக்கு, தங்களுடைய பிள்ளைகளுக்குக்கூடப் பங்கு பிரித்து, பாகம் பிரித்து எழுதித்தர முடியாமல் ஓர் அவல நிலையில் இருக்கிறார்கள். மேலும், அந்த நிறுவனம் இந்த ஒரு அரசாணையைத் தனக்குச் சாதகமாக ஆக்கிக்கொண்டு ஏக்கர் ஒன்றுக்கு 50,000 ரூபாய் 30,000 ரூபாய், 20,000 ரூபாய் என்று அடிமாட்டு விலைக்கு கேட்கிற ஒரு நிலைமை அங்கு இருந்துகொண்டிருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களும், தமிழக அரசும், பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்களும் உண்மையிலேயே அரசின் மூலமாக அப்படியொரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா, பத்திரப் பதிவுத் துறைத் தலைவர் மூலமாக அந்த மாவட்டத்திலேயிருக்கிற ரெஜிஸ்திரார் அவர்களுக்கு அப்படித் தகவல் பெறப்பட்டிருக்கிறதா என்று விசாரிக்க

வேண்டும். அதை எதிர்த்த, அந்த மக்களை வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு கருத்துக் கேட்புக் கூட்டத்தைக் கூட்டியபோது தங்களுடைய நிலங்களையெல்லாம் நாங்கள் வேறு யாருக்கும் விற்க முடியவில்லையே, இப்படித் தனி நபர் அநியாயமாக அடிமாட்டு விலைக்குக் கேட்கிறாரே என்று தங்களுடைய ஆதங்கத்தை வெளிக்காட்டியபோது, மாவட்ட ஆட்சித் தலைவரையே அந்த மக்கள் தாக்க முயற்சித்தார்கள் என்று 600-க்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பதாக 'இந்து' உள்ளிட்ட அனைத்துப் பத்திரிகைகளிலும் தலைப்புச் செய்திகள் வந்து, அந்த மாவட்டத்தில் இதுநாள்வரையில் காவல் துறையினர் பல்வேறு நிலைகளில் சென்று அச்சுறுத்தி அவர்களைப் பிடிப்பதற்கு முற்பட்ட காரணத்தினால், என்றைக்கு நம்மைக் காவல் துறை கைது செய்துவிடுமோ என்கிற அச்சத்திலும், பீதியிலும் வாழ்கின்ற அந்த மக்களுக்கு இவை எதுவும் அங்கு நடைபெறாது, இதுபோன்ற சம்பவங்கள் எதுவும் அங்கே இல்லை என்கிற அடிப்படையிலேயும், உண்மையிலேயே நம்முடைய தமிழக அரசு, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல நிலத்தை மிக . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும்? விஷயத்தைச் சொல்லி இதுகுறித்து அரசு என்ன சொல்கிறது என்று கேட்பதோடு விட்டுவிடவேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. என்ன prayer?

**திரு. தி. வேல்முருகன்:** என்ன prayer என்று எனக்குத் தெரிந்துதானே பேசுகிறேன்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எவ்வளவு நேரம் prayer-ஐச் சொல்வீர்கள்?

**திரு. தி. வேல்முருகன்:** Zero hour-லே எடுத்துக்கொள்வது மிகவும் முக்கியமான பிரச்சினைதான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ரைட்.

**திரு. தி. வேல்முருகன்:** அப்புறம் என்ன?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, நீங்கள், இதுகுறித்து அரசாங்கம் என்ன சொல்கிறது என்றுதான் கேட்க வேண்டும்.





**திரு. தி. வேல்முருகன்:** அப்படி ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படித்தான் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து ஏதாவது சொல்கிறீர்களா?

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** இது மக்களுடைய ஜீவாதாரப் பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எவ்வளவு நேரம், Sir? ங்கள் ஒரு விஷயத்தைச் சொல்லி, இதுகுறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்றுதான் சொல்ல வேண்டும். அவ்வளவுதான் வண்டும். ** என்பதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கவேண்டும். றுக்கீடு) சுருக்கமாகச் சொல்லி இதுகுறித்து அரசாங்கம் என்ன சால்கிறது என்ற ஒரு வார்த்தைதானே நீங்கள் கேட்க வேண்டும்?

**திரு. தி. வேல்முருகன்:** அப்படி இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன அப்படி இல்லை?

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வர்களே. இந்த விஷயம் மிகவும் முக்கியமான ஒரு பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருக்கட்டும் Sir. தனால்தானே கூப்பிடுகிறோம்.

**திரு. தி. வேல்முருகன்:** இது கிட்டத்தட்ட 4,000 கோடி ரூபாய்க்கான ந திட்டம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, மைக் கொடுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வர்களே, சம்பந்தப்பட்ட துறையின் அமைச்சர் அவர்களுடைய புதலைப் பெற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய னத்திற்கும் எடுத்துச் செல்லப்பட்டு, அவர்களுடைய அனுமதியைப் ற்றுத்தான் நான் இன்றைக்கு இந்த விவாதத்தை எடுத்து வைக்கிறேன். தனால் தயவு செய்து அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

---

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இந்தத் திட்டம் சுமார் 4,000 கோடி ரூபாயில் வரவிருப்பதாகவும், நாங்கள் எங்களுடைய விளை நிலங்களை, எங்களுடைய விவசாய பூமியை, நிலத்தைத் தரமாட்டோம் என்று விவசாயிகளும் இன்னும் சொல்லப் போனால், அந்த மீனவ மக்கள் நாங்கள் அங்கு மீன் பிடித்துத்தான் வாழ்கிறோம், அதனால் வேற்று இடத்தைப் பார்க்க வேண்டும் என்றும் தினமும் ஆர்ப்பாட்டம், போராட்டம் என்று இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் கடந்த வாரம் எங்கள் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்கள்கூட அங்கு ஆயிரக்கணக்கான மக்களிடத்திலே கருத்துக் கேட்டு, தாயுள்ளத்தோடு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதைப் பரிசீலிப்பார் என்ற கருத்தைச் சொல்லி, அதை முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்கின்றார்கள். தனிப்பட்ட முறையில் எங்கள் மருத்துவர் அய்யா அவர்கள் முதலமைச்சருக்குக் கடிதம் எழுதித் தந்து அனுப்பியிருக்கிறார்கள். இது ஒரு மிக முக்கியமான பிரச்சினை என்கிற காரணத்தினால் 1986 ஆம் ஆண்டு போடப்பட்ட ஓர் அரசாணையைப் பயன்படுத்தி அந்த மக்களுடைய விளை நிலங்களை அரசு அல்ல, ஒரு தனி நபர் குறைந்த விலைக்கு வாங்குகின்ற முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதைத் தடுத்து நிறுத்துவதற்கு நமது மாண்புமிகு துறையினுடைய அமைச்சர் அவர்களும், மாண்புமிகு பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய அரசும் முன் வருவார்களா என்று இங்கே அறியக்கூடிய வகையிலேதான் இந்தப் பின்புலமான செய்திகளையெல்லாம் நான் இந்த அவைக்கு எடுத்து வைக்க விரும்புகிறேன். அந்த அடிப்படையில், துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் அளிக்குமாறு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

*(முற்பகல் 11-50)*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் கடலூர் மாவட்டத்திலே Cuddalore Power Corporation என்ற மின் உற்பத்தி நிறுவனம் நிலம் வாங்குவது சம்பந்தமாக மிகக் குறைந்த விலைக்கு, ஏக்கர் ஒன்றுக்கு 50 ஆயிரம் ரூபாய்க்கு அவர்கள் வாங்குகிறார்கள், மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்; ஏற்கெனவே அரசாங்கம் ஒரு உத்தரவு போட்டு இருக்கிறது, அதை வைத்துக்கொண்டு குறைந்த விலைக்கு வாங்குகிறார்கள் என்ற



ஒரு குற்றச்சாட்டை எடுத்துச் சொன்னார்கள். ஏற்கெனவே அரசாங்கம் ஒரு அரசாணை பிறப்பித்தது உண்மை. திரு. நரசிம்மராவ் அவர்கள் பிரதமராக இருந்தபோது M.O.U. route என்று சொல்கிற Memorandum of Understanding அடிப்படையிலே அனுமதிக்கப்பட்ட மின் உற்பத்தி நிலையங்களிலே Cuddalore Power Corporation-னும் ஒன்று. ஆகவே, முன்னாள் முதலமைச்சர், அம்மையார் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபொழுது அதற்கு அவர்கள் அங்கீகாரமும் அளித்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு காலதாமதம் ஆன காரணத்தினால் கலைஞர் அவர்கள் மீண்டும் ஐந்தாவது முறை, ஆட்சிக்கு வந்த பிறகு Power Purchase Agreement ஒப்பந்தம் செய்யப்பட்டு அவர்கள் அந்த நிலத்தை வாங்குவதற்கு அனுமதியை அரசு தந்திருக்கிறது. அப்படித் தருகின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல், அங்கே இருக்கின்ற விவசாயிகள் எந்த அளவிற்கு நியாயமான விலை வேண்டுகிறார்களோ அந்த விலை கொடுத்துதான் வாங்கவேண்டும் என்று அந்த நிறுவனத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. நேற்று மாலைவரையிலே எனக்குக் கிடைத்த தகவல், ஏக்கர் ஒன்றுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் கேட்கிறார்கள் என்றும், அந்த இரண்டு இலட்சம் ரூபாய் கொடுத்து அவர்கள் அந்த நிலத்தை வாங்குகிறார்கள் என்றும், எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அதற்குக் குறைவாக அவர்கள் பணம் கொடுத்து வாங்குகிறார்கள் என்ற தகவல் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கிடைக்குமேயானால் அதைத் தெரிவித்தால் அந்த Power Corporation -னுடைய உரிமையாளரை அழைத்துப் பேசி ஒரு ஏக்கர் இரண்டு இலட்சம் ரூபாய் கொடுத்துதான் நிலம் வாங்கவேண்டும் என்று அறிவுரை வ்ழங்கப்படும். *(குறுக்கீடு)*

### (இ) நெல்லிக்குப்பம் தொகுதி, அக்கடவள்ளியிலுள்ள சண்முகாநந்தா அரசு உதவி பெறும் துவக்கப் பள்ளியை அரசே ஏற்று நடத்துதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, *(குறுக்கீடு)* இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் சபா. இராஜேந்திரன். ஒரு clarification கேட்கிறார்.

**திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் தொகுதி, அக்கடவள்ளி கிராமத்திலுள்ள சண்முகாநந்தா அரசு நிதியுதவி பெறும் துவக்கப் பள்ளியில் 115 மாணவ, மாணவிகள் பயின்று வருகிறார்கள். இரண்டு நிரந்தர

[திரு. சபா. இராஜேந்திரன்][2007 அக்டோபர் 18

ஆசிரியர்களும், கிராமக் கல்விக் குழுவின் சார்பாக இரண்டு ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார்கள். அந்தப் பள்ளியை நிர்வகித்துவந்த திரு. ஏ.எம். ராஜவேலுக் கவுண்டர் அவர்களுக்கு 80 வயது ஆகிவிட்ட காரணத்தினால் அவரால் பள்ளியை நிர்வகிக்க முடியவில்லை. எனவே, இந்தப் பள்ளியில் கல்வி கற்கின்ற மாணவர்கள் மற்றும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது. தற்போதுகூட அமைச்சர் அவர்கள் பேசும்போது பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கான முயற்சியை நான் எடுத்தால் அதை அரசு ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்து இருக்கின்றார்கள். அரசு பள்ளியை எடுத்துக்கொள்ளும்பட்சத்தில் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்வதற்கான முயற்சியைச் செய்கிறேன் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, கல்விக்கு முக்கியத்துவமும், முன்னுரிமையும் தந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், அந்த கிராம மக்களின் கோரிக்கையை ஏற்று அவசியம் அப்பள்ளியை அரசு ஏற்று நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்..

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சபா. இராஜேந்திரன் அவர்கள் இந்த மன்றத்திலே தெரிவித்திருக்கக்கூடிய கருத்துகளின் அடிப்படையில் அந்தக் கட்டடம் அங்கே எழுப்பப்படுவதற்கு அவர்கள் உறுதுணையாக இருக்கக்கூடியபட்சத்தில் நிச்சயமாக அரசு அவருடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அந்தப் பள்ளியை அரசுப் பொறுப்பிலே ஏற்றுக்கொண்டு தொடர்ந்து அரசே அந்தப் பள்ளியை நடத்தும் என்ற உறுதியை நான் இந்த அவையிலே அவருக்கு வழங்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

### (ஈ) கடலூர் அருகே தனியார் மின் உற்பத்தி நிலையத்திற்கு நிலங்களை வழங்குதல் குறித்த அரசாணை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வேல்முருகன் ஏதோ சுருக்கமாகச் சொல்கிறேன் என்கிறார். அதைக் கேட்டுக்கொள்வோம். திரு. தி. வேல்முருகன்.



2007 அக்டோபர் 18]

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அந்த நிலங்களை இரண்டு இலட்சம் ரூபாய் வரையில் விலை கொடுத்து வாங்கும்படி இந்த அரசு பார்த்துக்கொள்ளும், அதைவிடக் குறைத்து வாங்கினால் மாண்புமிகு உறுப்பினர் முறையிடலாம் என்று சொன்னார்கள். அந்தப் பகுதி, தமிழகத்திலேயே, இந்தியாவிலேயே மூன்று பக்கம் கடலும், ஒரு பக்கம் ஆறும் அமைந்த ஒரு நடுத்திட்டு. ஒரு அற்புதமான சூழல் கொண்டது. 'தினமணி'யில் அற்புதமான அளவிலே கடந்த வாரம் ஒரு கட்டுரைகூட வெளியிட்டு இருக்கிறார்கள். அந்த மக்கள் அந்த இடத்தைக்கூட நாங்கள் தர விரும்பவில்லை என்று சொல்கிறார்கள். கடற்கரை ஓரமாக அரசுக்குச் சொந்தமான வேறு இடம் இருக்கிறது. நாகார்ஜுனா ஆயில் நிறுவனம் இப்போது ஒரு திட்டம் தொடங்கி பல ஏக்கர்களை வாங்கிக் கையகப்படுத்தி பணி தொடங்கப்படாமல் இருந்துவருகிறது. ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்ட இடத்திலேயே பத்து ஆண்டுகளாக நிறுவனம் அங்கு வராமல் அந்த நிலங்கள் வீணாக இருப்பதாகவும், தற்போது ஒரு பகுதியினை மட்டும் அவர்கள் பயன்படுத்திக்கொண்டு இருப்பதாகவும் தகவல் சொல்கிறார்கள்.

*முற்பகல் 11-55*

இப்பொழுது இன்னொரு Power Plant அங்கு வரவிருப்பதாகவும், அவர்கள் ஒரு ஏக்கருக்கு தற்போது 5 இலட்சம் ரூபாய் கொடுத்து, இதே இடத்தை இவர்கள் வாங்குகின்ற இதே சர்வே எண்ணில், அருகில் இருப்பதை வாங்குகின்றார்கள். எனவே, இவர்கள் 2 இலட்சம் ரூபாய்க்கு முன்வந்தால்கூட அந்த மக்கள் தரத் தயாராக இல்லை. இருந்தாலும்கூட, நம்முடைய மின் துறை அமைச்சரிடத்தில் நாங்கள் வேண்டுவது, இப்போது நீங்கள் ஒன்று கடலூர் அல்லது தூத்துக்குடியில் பரிசீலிக்கலாம் என்று கேள்வி நேரத்தின்போது சொன்னீர்கள். அது இந்தியாவிலேயே, தமிழகத்திலேயே அற்புதமான ஒரு பூமி. அற்புதமான ஒரு இடம். அதனால்தான் எங்களுடைய மருத்துவர் அய்யாகூடத் தனிப்பட்ட முறையில் நம்முடைய முதல்வருடைய கவனத்திற்கு ஒரு கடிதம் எழுதித் தந்திருக்கிறார். இப்போது அந்த இடத்தை, அந்த விவசாய மக்கள் பயன்படுத்துகின்ற விளைநிலங்கள், அந்த ஊர்களையெல்லாம் காலி செய்ய வேண்டிய ஒரு நிர்ப்பந்தம், அவர்களுடைய விவசாயத் தோட்டம், துரவுகள், கோயில், குளங்கள் அனைத்தையும் அவர்கள் தனியாருக்குக் கொடுக்கவேண்டிய ஒரு நிர்ப்பந்தம். இன்றைய அரசியல் சூழ்நிலையில் ஒரு ஜனநாயக நாட்டில்,

ஒரு தனியார் நிறுவனத்திற்கு நாமே ஒரு அரசாணையை வெளியிட்டு, இவருக்குத்தான் உங்களுடைய சொந்த நிலங்களைக் கொடுக்க வேண்டும், உங்கள் தம்பிகளுக்கும், உங்கள் தங்கைகளுக்கும்கூட நீங்கள் பாகம் பிரித்துக் கொடுப்பதற்கு உரிமை இல்லை என்று சொல்கிற ஒரு ஆணையை நிறைவேற்றி அதன்மூலமாக சில தனியார்கள் இலாபம் அடைவதற்கு நம் அரசு ஏன் வழிவகை காண வேண்டும்?

எந்தக் காலத்திலேயோ கொண்டு வரப்பட்ட ஒரு அரசாணையை— பலமுறை இங்கு விவசாயிகளுக்குப் பாதிப்பு வருகின்ற வகையில் விளைநிலங்களை கையகப்படுத்த மாட்டோம், தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று சொல்லி வருகின்ற முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசில், அவருக்கு நிகராக இருக்கின்ற நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இதுபோன்ற ஒரு அரசாணையை — தங்கள் துறையின் மூலமாக வெளியிட்டிருப்பதை இரத்து செய்து அந்த மக்கள் தங்களுடைய நிலங்களைப் பயன்படுத்திக்கொள்வதற்குத் தொடர்ந்து அனுமதி அளிக்குமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளுக்கு முன்னாலே வெளியிடப்பட்ட ஒரு அரசு ஆணை. அந்த ஆணையின்கீழ் அவர்கள் ஏறக்குறைய 75 சதவிகிதம் நிலத்தை ஏற்கெனவே வாங்கிவிட்டார்கள். அங்கு இருக்கக்கூடிய விவசாயிகள் கட்டாயமாக அந்த நிலத்தைக் கொடுத்துத்தான் தீரவேண்டும் என்ற அவசியம் இல்லை. அவர்கள் எங்களுடைய நிலத்தைக் கொடுக்க முடியாது, பக்கத்திலே இருக்கக்கூடிய நிலத்தை வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னால், அவர்கள் வாங்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், நாம் எப்படி விவசாயிகளுக்கு நிலம் அவசியம் என்று நினைக்கிறோமோ, அதைப்போல மின்சாரமும் அவசியம். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் மின்சாரத் துறையிலே ஓரளவிற்கு தன்னிறைவுப் பெற்றிருக்கிறோம். நம்முடைய இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களேகூட முதலமைச்சர்கள் மாநாடு நடந்தபோது, இன்னமும் ஒரு இலட்சம் மெகா வாட் நம்முடைய நாட்டிற்குத் தேவைப்படுகிறது. எங்கெல்லாம் மாநில அரசுகள் மின்சாரத்தை அதிகமாக உற்பத்தி செய்ய முடியுமோ அதை உற்பத்தி செய்து, இந்தியாவிற்கு உதவுங்கள்



என்று கேட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே கிழக்குக் கடற்கரையோரத்தில், எங்கெல்லாம் நிலம் ஓரளவிற்கு மக்களாக விரும்பி வந்து கொடுக்கிறார்களோ, அந்த நிலத்தை வாங்கி மின்சாரம் உற்பத்தி செய்வது என்று முடிவு செய்திருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் ஏதாவது ஒரு நிலத்திற்கு விதிவிலக்கு வேண்டும் என்று சொல்வாரேயானால், அந்த நிலத்தை விட்டு விட்டு, வேறு நிலத்தை வாங்குவதற்கு இந்த அரசு அவர்களுக்கு அறிவுரை வழங்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. ரவிக்குமார், இது சம்பந்தமாக ஏதாவது எழுப்புகிறீர்களா?

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தியாகவல்லி பகுதியிலே அமைகின்ற அந்த அனல் மின் நிலையத்தையொட்டி நிலங்கள் இன்று பெருமளவிற்கு வாங்கப்பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நிலம் உள்ளவர்களுடைய பிரச்சினை என்பது, அதற்கு விலை கூடுதலாகக் கொடுப்பதா, குறைவாகக் கொடுப்பதா என்றிருக்கிறது. அங்கே நிலமற்ற கூலி விவசாயிகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த நிலங்கள் எல்லாம் அந்த நிறுவனத்திற்கு விற்கப்படுமேயானால், அந்த நிலங்களை நம்பி வாழ்கின்ற அந்தக் கூலி விவசாய மக்கள் அந்தப் பகுதியிலிருந்து வெளியேறவேண்டிய ஒரு நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள். அப்படி அங்கே வாழ்கின்ற நிலமற்ற கூலி விவசாயிகள், அந்த நிலங்களை நம்பி வாழ்கின்ற பெரும் பகுதி ஆதி திராவிட சமூகத்தைச் சார்ந்தவர்களாக இருக்கின்ற கூலி விவசாய மக்களுடைய மறுவாழ்வு குறித்து அந்தத் திட்டத்திலே ஏதேனும் குறிப்பிடப்பட்டிருக்கின்றதா, அதற்கு நம்முடைய அரசு வழிவகை காணுமா என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் வருவதற்கு முன்னாலே அங்கே ஒரு ஏக்கர் நிலம் 10 ஆயிரம் ரூபாய் கொடுத்து வாங்குவதற்குக்கூட யாரும் தயாராக இல்லை. இந்தத் திட்டம் வந்த காரணத்தினால்தான், விவசாயிகளுக்கு இந்த அளவிற்காவது பணம் கிடைக்கிறது. ஒரு இரண்டு கிலோ மீட்டர் அல்லது மூன்று கிலோ மீட்டர் தூரம் சென்றால், அங்கேயே ஒரு ஏக்கர் நிலம் 40,000 ரூபாய், 50,000 ரூபாய்க்கு இன்றைக்கும் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. கடலோரமாக இருக்கின்ற காரணத்தினால், இந்த நிலத்தை அங்கே அவர்கள் வாங்குகிறார்களே தவிர, அவர்களே தேவைப்பட்டால்

இன்னும் ஒரு இரண்டு கிலோ மீட்டர் தூரம் சென்றால், ரூ.40,000, 50,000 கொடுத்து ஒரு ஏக்கர் நிலம் வாங்க முடியும்.

நண்பகல் 12-00

அப்படி யாராவது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே பாதிக்கப்பட்டிருக்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை. அப்படிப் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு ஏக்கருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் பணம் கொடுக்கச் சொல்லி, பக்கத்திலேயே ஒரு கிலோ மீட்டர், இரண்டு கிலோ மீட்டர் தூரத்திலே ஒரு ஏக்கர் நிலம் 50 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கிக்கொள்வதற்கு இந்த அரசு துணையாக இருக்கும்.

## (உ) வேலூரிலே மின் தடையைப் போக்குதல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நம்முடைய மாநிலம் மின் உற்பத்தியிலே ஓரளவுக்குத் தன்னிறைவு பெற்ற மாநிலம் என்றுகூட இப்பொழுது அறிவித்தார்கள். இன்னும் கொஞ்ச நாளைக்கு முன்னால் பட்ஜெட் announcement-ல் பார்த்தோம் என்று சொன்னால் அப்போது உபரியாகவே நம்முடைய மாநிலத்தில் மின்சாரம் இருந்தது. இவ்வளவு உபரியாக மின்சாரம் இருக்கிற அல்லது தன்னிறைவு பெற்றிருக்கக்கூடிய இந்த தமிழகத்தில் எங்களுடைய வேலூர் பகுதியிலே ஒரு நாளைக்கு 15 முறை current cut ஆகிறது. இப்படி current cut ஆகிறதை நான் அமைச்சருடைய கவனத்திற்குக்கூட கொண்டு வந்தேன். ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், எங்களுடைய வேலூர் பகுதியிலே எட்டு மணி நேரம் சில நேரங்களில் current இல்லாமல் போய் விடுகிறது ஒரு நாளைக்கு; அதற்காக மாண்புமிகு அமைச்சர் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்? தொடர்ந்து மின்சாரத்தை வழங்கி எங்களுடைய பகுதியை அவர்கள் பாதிப்பு இல்லாமல் பார்த்துக்கொள்வதற்கு துணை நிற்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

சத்துவாச்சாரியிலே ஒரு sub-station போட்டால்தான் current-ஐ நாங்கள் ஒழுங்காகக் கொடுக்க முடியும் என்று C.E. என்னிடம் தெரிவித்தார். அங்கே சத்துவாச்சாரியிலே sub-station போட வேண்டும் என்று சொன்னால், சத்துவாச்சாரியில் நகராட்சியினுடைய இடத்தைக்





கொடுப்பதற்கு முன்மொழிவினை ஏற்கெனவே அனுப்பி இருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே சென்னையில் இருக்கக்கூடிய நம்முடைய Commissioner of Municipal Administration-க்குச் சொல்லி, enter upon permission-ஐ உடனே கொடுத்துவிட்டால் ஒரு sub-station உடனடியாக வந்துவிடும். அதற்கான கட்டணத்தை மின் துறை கட்டிவிடுவதற்குத் தயாராக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் எங்களுடைய சத்துவாச்சாரி பகுதியிலே ஒரு sub-station அமைவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா? தடையில்லாத மின்சாரத்தை வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், அவர் இருக்கிற வேலூர் மாவட்டத்திலே அடிக்கடி மின் தடை ஏற்படுகிறது என்று சொன்னார். நான் ஏற்கெனவே காலையிலே கேள்விக்குப் பதில் சொல்கிற நேரத்திலே குறிப்பிட்டேன். எப்போதும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு அக்டோபர் திங்களில், காற்றின்மூலம் இந்த ஆண்டு கிடைக்கக்கூடிய மின்சாரமான 1600 மெகா வாட் உற்பத்தி திடீரென்று காற்று வீசாத காரணத்தினாலே பாதிக்கப்பட்டிருக்கிறது. நெய்வேலியிலே ஒரு அனல் மின் நிலையம் இயங்கவில்லை. தூத்துக்குடியிலே ஒரு அனல் மின் நிலையம் இயங்கவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தற்காலிகமாக 3, 4 நாட்களுக்கு இந்த நிலை நீடிக்கும். காற்று வீசவில்லையென்றால்கூட நெய்வேலி அனல் மின் நிலையத்தையும், தூத்துக்குடி அனல் மின் நிலையத்தையும் உடனடியாக இயக்கச் செய்து எந்த இடத்திலேயும் மின்சாரத் தடை இல்லாத அளவுக்கு மின்சார இலாகா பார்த்துக்கொள்ளும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். Sub-station-ஐப் பற்றிச் சொன்னார். நிச்சயமாக எங்களுக்கு இடம் கொடுத்தால் sub-station கட்டுவதற்கு மின் வாரியம் தயாராக இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** காற்று உங்கள் பக்கம் வீசுகிறது. இல்லையென்றால் ஐந்து தடவை பேசுவீர்களா?

## 6. அறிக்கைகள் அளித்தல்

### பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, குழுக்களின் அறிக்கை அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் *2007-2008* ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இரண்டாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு கல்வி நிறுவனங்களில் (கட்டாய நன்கொடை வசூலித்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி நிறுவனங்களில் (கட்டாய நன்கொடை வசூலித்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி நிறுவனங்களில் (கட்டாய நன்கொடை வசூலித்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (இ) தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.





## (ஈ) தமிழ்நாடு நகர்-ஊர் அமைப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்-ஊர் அமைப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்-ஊர் அமைப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

# 8. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2007–2008, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2007-2008 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

2007-2008 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை@ இம்மாமன்றத்தின்முன் வைக்கிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக்கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் ரூபாய் 1,959.63 கோடி அளவிலான நிதியை ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில் ரூபாய் 1,253.99 கோடி வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூபாய் 705.64 கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2. 2007 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாளன்று 2007-2008 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணங்கள் பெற்று 'புதுப் பணிகள்' குறித்து செய்யப்பட்ட செலவுகளுக்குச் சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறவும், எதிர்பாராச் செலவு நிதியை ஈடுசெய்யும் பொருட்டும், இந்தத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன. 2007-2008 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த பின்னர், தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக இவ்வரசு மேற்கொண்ட சில புதிய செலவுப் பொறுப்புகளுக்காக, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறும்பொருட்டும் இவை தாக்கல் செய்யப்படுகின்றன. மாநில வரி வருவாயில் ஏற்படும் உயர் வளர்ச்சி மற்றும் வருவாய்க் கணக்கில் செலவினங்களை சிறந்த முறையில் நிருவாகம் செய்தல் ஆகியவற்றின்மூலம் இந்த மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்ட கூடுதல் செலவு ஈடு செய்யப்படும்.

3. ஏழைக் குடும்பங்களுக்கு 2007-2008 ஆம் ஆண்டில் கூடுதலாக மூன்று இலட்சம் இலவச எரிவாயு இணைப்புகளுடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகள் வழங்குவதற்காக அரசு ரூபாய் 60.00 கோடி அனுமதித்துள்ளது. இத்தொகை 'மானியக் கோரிக்கை எண் 13—உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-10

4. புதிய மின் உற்பத்தித் திட்டங்களுக்காக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூபாய் 140.00 கோடி பங்கு மூலதன உதவி வழங்குவதற்கு

@ 378 முதல் 381 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.





அரசு கருதியுள்ளது. இத்தொகை 'மானியக் கோரிக்கை எண் 14—எரிசக்தித் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் மகப்பேறு உதவிக்கான கூடுதல் நிதியொதுக்கமாக ரூபாய் 80.00 கோடி வழங்க அரசு அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 19—மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 80.00 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

6. இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 2007-2008 ஆம் ஆண்டுக்கு அரசு ரூபாய் 109.00 கோடி அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை' என்பதன்கீழ் ரூபாய் 109.00 கோடி துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

7. நமக்கு நாமே திட்டத்தை 2007-2008 ஆம் ஆண்டில் மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) அரசு ரூபாய் 50.00 கோடி அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை' என்பதன்கீழ் ரூபாய் 50.00 கோடி துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

8. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ், ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களின் திருமண நிதி உதவிக்கான கூடுதல் ஒதுக்கீடாக, மானியக் கோரிக்கை எண் 45—சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் கூடுதலாக ரூபாய் 40.00 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

9. அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பணியாளர்கள் ஆகியோருக்கு மீதமிருந்த 60 சதவிகித ஊதியக் குழுவின் நிலுவைத் தொகைக்கு, பொது வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளுக்கு வழங்கப்படுவதுபோல வட்டித் தொகை அளிப்பதற்கு அரசு அனுமதித்துள்ளது. அதற்காக 'கடன் செலவுகள்' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 358.00 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

10. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை, இம்மாமன்றம் ஏற்று, இசைவளிக்க வேண்டுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

[2007 அக்டோபர் 18

## 2007-2008 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

| | கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 3 | நீதி நிருவாகம் | 9 | — | — |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 21,05,80 | 18,05,00 | — |
| 5 | வேளாண்மைத் துறை | 37,34,32 | 48,10 | 30,00,00 |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | 2,04,71 | 2 | — |
| 7 | மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | 68,01 | 2,00,00 | — |
| 8 | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | — | 30,20,34 | — |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 17,42,80 | 2,00,00 | — |
| 11 | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 1,83,40 | — | — |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 73,32 | — | — |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 60,00,01 | 3,00,00 | — |
| 14 | எரிசக்தித் துறை | — | 140,00,00 | — |



2007 அக்டோபர் 18]

(ரூபாய் ஆயிரத்தில்)

| | கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 15 | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 5 | 5,00,03 | — |
| 16 | நிதித் துறை | 1 | — | — |
| 17 | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 12,66 | — | 12,18,24 |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 140,01,69 | 50,94,37 | — |
| 20 | உயர் கல்வித் துறை | 20,57,55 | 1 | — |
| 21 | நெடுஞ்சாலைகள் துறை | 85,00 | 21,04 | — |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 16 | 3 | — |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 15,20 | — | — |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 3,24,52 | 95,78 | — |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 7 | — | — |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 1,39,69 | — | — |
| 27 | தொழில் துறை | 6,16,45 | 25,00 | 141,97,23 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 2,12,05 | — | — |

[2007 அக்டோபர் 18

(ரூபாய் ஆயிரத்தில்)

| | கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 29 | சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) | 1,13,61 | 2,41,75 | — |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 53,39 | 1,01,50 | — |
| 33 | சட்டத் துறை | 40,93 | — | — |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 8,84,50 | 134,00,00 | — |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 30,61 | — | — |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 50,01 | 2,99,66 | — |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 28,24 | — | — |
| 38 | பொதுத் துறை | 15,17,38 | — | — |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 50,01 | 51,12 | — |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | 21,58 | 49,33 | — |
| 41 | வருவாய்த் துறை | 7 | — | — |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 400,79,17 | 80,43,12 | — |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 4,95,01 | — | — |
| 44 | சிறு தொழில்கள் துறை | — | 1,21,00 | — |
| 45 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 136,21,80 | — | — |



2007 அக்டோபர் 18]

(ரூபாய் ஆயிரத்தில்)

| | கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 1,38,54 | — | — |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 5,00,00 | — | — |
| 48 | போக்குவரத்துத் துறை | — | 27,20,00 | — |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 1,18,61 | — | — |
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 2,63,99 | — | — |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 13,84 | — | — |
| | **பெருமொத்தம்** | **895,98,85** | **503,37,20** | **184,15,47** |

## 9. அறிவிப்பு

### முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2007-2008—மானியக் கோரிக்கைகளின்மீது வெட்டுத் தீர்மானங்கள் அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 17-10-2007 ஆம் நாளன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க, 2007-2008 ஆம் ஆண்டு செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படும் மானியக் கோரிக்கைகளின்மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் அவற்றை இன்று (18-10-2007) மாலை 3-00 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் சேர்ப்பிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[2007 அக்டோபர் 18

## 10. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்). *2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2007).* அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானம் குறித்து அறிவிப்புக் கொடுத்துள்ள அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவைப் பணிகளினின்றும் இக்கூட்டத்தொடர் முழுவதற்கும் நீக்கப்பட்டுள்ளதால், அவர்களால் கொடுக்கப்பட்ட இவ்வறிவிப்பு அவையில் எடுக்கப்படவில்லை. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

*பிற்பகல் 12-15*

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2007)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யாராவது பேசுகிறீர்களா? (குறுக்கீடுகள்) திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவே நாட்டுயர்வு என்றும், கூடி வாழ்ந்தால், கோடி நன்மை என்றும் சொல்லுகின்ற இந்த வேளையில், உயர்ந்த நோக்கத்திற்காகத் தொடங்கப்பட்ட கூட்டுறவுத் துறை, நாளடைவில் நலிந்து வருவதாகச் செய்திகள் வருவது கவலையளிக்கிறது. பல கூட்டுறவுச் சங்கங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் செயலிழந்து விட்டன. இப்படிப்பட்ட நிலையில், கூட்டுறவுத் துறைக்குத் தனி அலுவலர்களை நியமித்து, பணிக் காலத்தை நீட்டித்துச் செல்லக்கூடாது; விரைவாகத் தேர்தல் நடத்தவேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகப் பல ஆண்டுகளாக இம்மாமன்றத்தில்

@ 17-10-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



வாதாடி வருகின்றோம். எங்களின் வரைவு நிதிநிலை அறிக்கையிலும் தொடர்ந்து கூறி வருகிறோம். அதாவது, கூட்டுறவுத் தேர்தல் நடத்த, கூட்டுறவுத் தேர்தல் ஆணையம் அமைக்க வேண்டுமென்பதை, நமது மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஏற்றுக்கொண்டு, கூட்டுறவுத் தேர்தல் ஆணையம் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள். அதை பா.ம.க. வரவேற்கிறது. எனவே, உடனடியாகக் கூட்டுறவுத் தேர்தல் ஆணையம் அமைத்து, விரும்புகிறவர்கள் அனைவரும் பங்கேற்கக்கூடிய வகையில், வெளிப்படையாக எவ்விதத்திலும் நேரடியாகவும், மறைமுகமாகவும் அரசியல் தலையீடு இல்லாமல், தேர்தல் சுதந்திரமாக நடக்க ஆவன செய்யவேண்டும் என பா.ம.க. சார்பில் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

தற்போது தனி அலுவலர் பதவிக் காலத்தை, 6 மாதங்கள் நீட்டிப்பதை இனி வரும் காலங்களில் தவிர்த்திடும் வகையில், எதிர்வரும் 6 மாதத்திற்குள்ளாகத் தேர்தலை நடத்தி முடித்திட வேண்டும். இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்திட வேண்டுமென்று அன்புடன் வேண்டுகிறேன். தனி அலுவலர்களின் பதவிக் காலம் நீட்டிப்பு என்பது தங்கள் ஆட்சிக் காலத்தில் இதுவே இம்மாமன்றத்தில் கடைசியாக இருக்கவேண்டும் என பணிவுடன் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் ஏதாவது கூற விரும்புகிறீர்களா? (குறுக்கீடு) திரு. கே. மகேந்திரன்.

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்கான தனி அலுவலர் பதவிக் கால நீட்டிப்பை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க்கிறது. கடந்த ஜூலை மாதம் இரண்டு கட்டங்களாக நடைபெற்ற கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களில், கூட்டுறவுத் தத்துவத்திற்கு எதிராக, முறைகேடுகள் நடைபெற்றக் காரணத்தினால், அந்தத் தேர்தல் இரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் தேர்தலை நடத்துவதற்கு, இந்த அவையின் இருக்கின்ற அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களைக் கலந்தாலோசித்த பின்னர், புதிய தேர்தலுக்கான கால அட்டவணை உரிய முறையில் அறிவிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஜூலை மாதத்திற்குப் பின்பாக, இந்த அறிவிப்பு வந்து மூன்று மாதங்கள் ஆகியிருக்கக்கூடிய சூழ்நிலையில், உடனடியாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்தவேண்டுமென்ற வேண்டுகோளை வைப்பதோடு, கூட்டுறவுச்

[திரு. கே. மகேந்திரன்] [2007 அக்டோபர் 18

சங்கங்களுக்கான தேர்தலை நடத்தும்போது, உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்துவதற்கு எப்படிப்பட்ட தனித் தேர்தல் ஆணையம் இருக்கிறதோ, அதேபோன்று, கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கும், தனித் தேர்தல் ஆணையம் அமைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறோம்.

கூட்டுறவுச் சங்கங்களில் கடந்த 2001 ஆம் ஆண்டிலிருந்து, புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்படாத சூழ்நிலையில், வைப்பு நிதிகள் வராத காரணத்தினால், இன்றைக்குக் கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய கூட்டுறவு அமைப்புகளில் பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கு ஊதியம் பல மாத காலம் வழங்கப்படாத நிலைமையும் இருக்கிறது. ஆகவே, அதைச் சரி செய்வதற்கும், உடனடியாகக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலை முறையாக நடத்துவதற்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கான தனி அலுவலர்களது பதவிக் காலத்தை இப்போது நீட்டிப்பதை இறுதியாக வைத்து, கூட்டுறவுத் தேர்தலை நடத்த வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. ராஜசேகரன்.

*பிற்பகல் 12-20*

***திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் தனி அலுவலர்களுடைய பதவிக் காலத்தை ஆறு மாத காலத்திற்கு நீட்டிக்கும் சட்டத்தை முன்வைத்துப் பேசிய அமைச்சர் அவர்களின் தீர்மானத்தை வரவேற்றுப் பேச விழைகிறேன். கூட்டுறவுத் துறையானது மக்களிடம் நேரடியாகத் தொடர்புள்ள ஒரு துறை. அதிலே, விவசாயிகளும் நெசவாளர்களும் கலந்திருக்கிறார்கள். இந்தத் துறையிலிருந்த கடன்களை தமிழக அரசு தள்ளுபடி செய்தது மட்டுமல்லாமல், மீண்டும் சிறப்பாகப் பணியாற்றுவதற்கு இந்தக் கூட்டுறவுத் துறைக்கு அதிக நிதிகளை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். நெசவாளர்கள் கூட்டுறவுத் துறையின்மூலமாக ரூ.5,000, ரூ.10,000 எனக் கடன்களைப் பெற்றிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வேளாண் துறையிலே கடன்கள் ரூ.7,800 கோடியைத் தள்ளுபடி செய்து அவர்களின் எதிர்காலத்திலே ஒளி ஏற்றிவைத்ததுபோல, நெசவுத் தொழிலிலே ஈடுபட்டு, கைத் தொழிலிலே ஈடுபட்டு, நலிவடைந்திருக்கின்ற அந்த நெசவாளர்கள் பெற்றிருக்கின்ற கடன் தமிழகம் முழுவதும் குறைந்தது ரூ.25 கோடி அளவில்தான் இருக்கும். ஆகவே, மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களும்,



2007 அக்டோபர் 18] [திரு. மா. ராஜசேகரன்]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அவர்களது கடனையும் தள்ளுபடி செய்து அவர்களுடைய எதிர்காலத்திலே விளக்கேற்றக் கேட்டுக்கொள்வதோடு மட்டுமல்லாமல், இந்த 6 மாத கால அவகாசத்தோடு எப்படி உள்ளாட்சித் துறைக்கு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் வருகிறதோ, அதேபோல கூட்டுறவுத் துறைக்கும் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் வருவதற்கு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும். அப்படிக் கொண்டு வரும்பொழுதுதான் வறுமைக்கோட்டுக்குக்கீழ் உள்ள மக்களுடைய எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடிய ஒரு நிரந்தர அமைப்பாக கூட்டுறவுத் துறை இயங்கும். ஏனென்று சொன்னால், கூட்டுறவுத் துறையிலே தொடர்பு கொள்பவர்கள் அனைவருமே வறுமைக் கோட்டுக்குக்கீழ் உள்ளவர்கள். அவர்கள் நேரடியாகத் தேசிய வங்கியிலோ அல்லது அங்கீகாரம் பெற்ற வங்கிகளிலோ தொடர்பு கொள்ளும்பொழுது அவர்களிடம் செக்யூரிட்டி கேட்கிறார்கள். அந்த செக்யூரிட்டி கொடுக்க முடியாத நபர்களுக்கு தமிழக அரசு கூட்டுறவுத் துறை மூலம்தான் வாழ்வளிக்க முடியும் என்பதைக் கூறிக்கொண்டு இந்தச் சட்டத்தை வரவேற்று இடம் அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, அவர் பேசட்டும். மாண்புமிகு திரு. தி. இராமசாமி அவர்கள்.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கான மசோதாவைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். தேவையையொட்டி இப்படிப்பட்ட மசோதா வந்திருக்கிறது என்று நினைக்கிறேன். ஏற்கெனவே, நமது தமிழக முதல்வர் அவர்கள் தேர்தல் காலத்தில் சொன்ன வாக்குறுதியின்படி, கூட்டுறவுத் தேர்தல் நடைபெறும் என்று அறிவித்து, தேர்தல் நடப்பதற்கான அறிவிப்பு நடைபெற்றது. தேர்தல் நடைபெறும்போது ஆங்காங்கு ஏற்பட்ட சில முறைகேடுகளின் காரணமாக, ஒட்டுமொத்தமாகவே அந்தத் தேர்தல் இப்போது தமிழகத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே சில குறிப்பிட்ட எதிர்க்கட்சிகள் தேர்தலைப் புறக்கணித்துவிட்ட காரணத்தினாலும்,

அனைவரும் ஜனநாயகத்தில் முழுமையாகப் பங்கெடுக்கவேண்டும் என்ற முறையிலும் இப்படிப்பட்ட அறிவிப்பு நமது அரசால் வெளியிடப்பட்டிருக்கிறது. இருந்தாலும், அதில் இருக்கின்ற குறைபாடுகளைப் போக்கி, முறையாகத் தேர்தலை நடத்தி ஜனநாயக முறைப்படி கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுவதற்கான ஒரு வாய்ப்பை அரசு உருவாக்கித்தர வேண்டும்.

பொதுவாக இன்றைக்கு கூட்டுறவு என்பது, கிராமப்புறங்களில் ஓர் அடிப்படையான அமைப்பாக இருந்துகொண்டிருக்கின்றது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், கிட்டத்தட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட வங்கிகள் செயல்படாமல் அங்கு பணியாற்றியவர்களுக்கு ஊதியம் கொடுக்க முடியாதது மட்டுமல்ல; அவை என்ன நோக்கத்திற்காகத் தொடங்கப்பட்டனவோ அது நிறைவேறாமல், அவற்றினால் கிராமப்புற விவசாயிகளுக்கு எந்தவிதமான பயன்பாடும் இல்லாமல் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட அமைப்புகளை மீண்டும் செயல்படுத்துவதற்கு ஏற்கெனவே வைத்தியநாதன் குழு பரிந்துரையின் அடிப்படையில் மத்திய அரசிடம் கேட்டுப்பெற வேண்டிய தொகையையும் பெற்று அந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை நாம் சிறப்பான முறையில் செயல்படுத்த வேண்டும். இந்தியாவில் எந்த அரசும் செய்யாத ஒரு பெரிய சாதனையை நமது தமிழக அரசு விவசாயிகளுக்குச் செய்திருக்கிறது. இருந்தாலும், அதற்கு அடுத்த கட்டமாக விவசாயிகளுக்குக் கடன்கள் வழங்கப்படுவது என்பதில் இப்போது காலதாமதமும், குறைபாடுகளும் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. எனவே, இப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் போக்குவதற்கு, தேர்தலை நடத்தி ஜனநாயக பூர்வமான ஓர் அமைப்பை ஏற்படுத்தி அதன்மூலம் அரசு சரியான முறையில் கூட்டுறவு அமைப்பைச் செயல்படுத்த வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நலிவுற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கான சில ஏற்பாடுகளை இந்த அரசு செய்திருக்கிறது. விரைவில் அது அமலுக்கு வரவுமிருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலை நடத்துவதற்கான திட்டங்களை வகுக்கச் சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் தாயுள்ளத்தோடு இந்தத்





தேர்தலை நடத்துவதற்கு ஒரு முடிவு எடுத்தார்கள். ஆனால், அந்தத் தேர்தல் நடத்தும்போது, முதற்கட்டத்தில் முதல் மற்றும் இரண்டாம் நிலைகளின் தேர்தல்களின்போது சில அசம்பாவிதங்கள் நடந்து, பத்திரிகைகளிலும் செய்திகள் வந்து, அவற்றை ஜீரணிக்க முடியாத நிலை எல்லோருக்கும் ஏற்பட்ட காரணத்தினால்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் அனைவரையும் சேர்த்து, அவர்களை வைத்துப் பேசி ஒரு நல்ல முடிவெடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அது நிச்சயமாக நடைபெறும்.

*பிற்பகல் 12-25*

நலிவுற்ற சங்கங்களுடைய நிலையைப்பற்றி கவனித்துப் பார்க்கும்போது உள்ளபடியே வருந்தத்தக்கதாகத்தான் இருக்கிறது. ஆனால், Special Officer போடுவது என்பதும், தனி அலுவலர் போடுவது என்பதும், பதவிக் காலத்தை நீட்டிப்பது என்பதும் புதிது அல்ல. ஏறத்தாழ 31 ஆண்டுகளுக்கு முன்னாலேயே இந்த நிலை இருந்து வந்திருக்கிறது. ஏற்கெனவே தேர்தல் நடத்தப்பட்டு, அது முந்தைய ஆட்சியில் கலைக்கப்பட்டு, அதற்குப் பிறகு, தேர்தல் நடைபெறாமலே இருந்து இப்போதுதான் நாம் அந்த நடவடிக்கைகளிலே ஈடுபட்டிருக்கிறோம். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு ஏற்கெனவே இதைக் கவனிக்க வேண்டுமென்று விரும்பித்தான் ஒரு தேர்தல் ஆணையம் அமைத்து அவர்கள்மூலமாகத்தான் நடத்தப்பட வேண்டுமென்பது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். நிச்சயமாகத் தேர்தல் நடைபெறும். அதிலே எந்தவிதமான சந்தேகமும் யாருக்கும் தேவையிருக்காது என்று நான் கருதுகிறேன். எனவே, எது எப்படி இருந்தாலும்கூட இச்சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு பணிவன்போடு கேட்டு அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் துணைத் தலைவர்] [2007 அக்டோபர் 18

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2007 அக்டோபர் 18]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (19-10-2007) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 12-27 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

21. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டம் 6-7-2007 ஆம் நாள் முதற்கொண்டு செயலுக்கு வருமென அறிவித்தது குறித்து பள்ளிக் கல்வித் (என்) துறையின் 6-7-2007 ஆம் நாளிட்ட 158 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டம், 2006 (தமிழ்நாடு சட்டம் 26/2006) 9(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

22. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டத்தின்கீழ் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளை அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான தகுதிவாய்ந்த அதிகாரிகளாக நியமித்தது குறித்து பள்ளிக் கல்வித் (என்) துறையின் 6-7-2007 ஆம் நாளிட்ட 159 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

[2007 அக்டோபர் 18

[2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டம், 2006 (தமிழ்நாடு சட்டம் 26/2006) 9(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

23. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜே.1) துறையின் 7-8-2007 ஆம் நாளிட்ட 251 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

24. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் இருபத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

25. இந்திய எல்லை மறுவரையறை ஆணையத்தினால் தமிழ்நாட்டில் உள்ள மக்களவை மற்றும் சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் எல்லை மறுவரையறையின் விவரங்கள் குறித்து முறையே 5-4-2007 மற்றும் 13-8-2007 ஆம் நாளிட்ட 87 மற்றும் 236 ஆகிய எண்களில் தமிழ்நாடு அரசிதழ்களின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட வரைவு மற்றும் இறுதியான அறிவிக்கைகள். [2002 ஆம் ஆண்டு எல்லை மறுவரையறைச் சட்டம் (மத்தியச் சட்டம் 33/2002) 10 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

6. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இரண்டாவது அறிக்கை. (2007-2008)

7. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

8. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

9. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

10. [illegible] வினாக்கள்-விடைகள் பட்டியல் (நான்காவது [illegible] 1 முதல் 100 வரை)

228091

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.